# முன்னேஸ்வரம் ஸ்ரீ வடிவாம்பிகா மீதும் ஸ்ரீ முன்னைநாதர் மீதும் பாடப்பட்ட தமிழ்ப் பிரபந்தங்கள்




தொகுப்பாசிரியர் :

**பிரம்மஸ்ரீ ச.பத்மநாபன்**

தலைவர், சிரேஷ்ட விரிவுரையாளர்,
சம்ஸ்கிருதத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



ஸ்ரீ முன்னேஸ்வரம் தேவஸ்தானம்
சிலாபம், இலங்கை.

உ

சிவமயம்

# முன்னேஸ்வரம் ஸ்ரீவடிவாம்பிகா மீதும் ஸ்ரீ முன்னைநாதர் மீதும் பாடப்பட்ட தமிழ்ப் பிரபந்தங்கள்


தொகுப்பாசிரியர்

**பிரம்மஸ்ரீ ச. பத்மநாபன்**

தலைவர், சிரேஷ்ட விரிவுரையாளர்,

சமஸ்கிருதத்துறை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்



வெளியீடு

ஸ்ரீ முன்னேஸ்வரம் தேவஸ்தானம்,

சிலாபம், இலங்கை.

25.03.2018

## நூல் விபரம்

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | முன்னேஸ்வரம் ஶ்ரீ வடிவாம்பிகா மீதும்<br>ஶ்ரீ முன்னைநாதர் மீதும் பாடப்பட்ட தமிழ்ப் பிரபந்தங்கள் |
| முதற்பதிப்பு | : | 25.03.2018 |
| தொகுப்பு | : | பிரம்மஶ்ரீ ச.பத்மநாபன்<br>தலைவர், சமஸ்கிருதத்துறை,<br>யாழ் பல்கலைக்கழகம். |
| பக்கங்கள் | : | Vi + 291 |
| ISBN | : | 978-955-0877-05-08 |
| அச்சுப்பதிப்பு | : | மதி கலர்ஸ் பிறிண்டர்ஸ்<br>இல 10, முருகேசர் லேன்,<br>முத்திரைச்சந்தி, நல்லூர்.<br>021 2229285 |

# பதிப்புரை

முன்னேஸ்வரம் இலங்கையில் புராதன சிவாலயங்களுள் ஒன்றாகவும், சக்திபீடங்களுள் ஒன்றாகவும் விளங்குகின்றது. இவ்வாலயம் இலங்கையின் மேற்குப்பதியில் வடமேல் மாகாணத்தில் புத்தளம் மாவட்டத்தில், சிலாபம் நகரிற்கு கிழக்காக முன்னேஸ்வரம் எனும் கிராமத்தில் முன்னேஸ்வரம் தேவஸ்தானம் எனப்பெயருடன் விளங்குகின்றது. இவ்வாலயத்தில் சிவன் முன்னநாத சுவாமி என்றும் அம்பிகை வடிவாம்பிகை என்னும் சிவசக்தி ஐக்கிய வடிவமாக விளங்குகின்றனர். பிரமாண்டமான கற்பகிருகத்தில் மஹாமேரு ஸ்ரீ சக்ரமும் சிவசக்தி ஐக்கிய வடிவமாக விளங்குவதும் இவ்வாலயத்தின் சிறப்பாகும்.

வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதல் பல்வேறு உரிமைகளுடனும் வரலாற்றுத் தொடர்புகளுடனும் இவ்வாலய வரலாறு தொடர்பு பெறும் சிறப்புடையது. வியாசர் சாபவிமோசனம் பெற்றமையும், இராமர் பிரம்மஹத்திதோஷம் நீங்கப் பெற்றமையும், சிறப்புற தக்ஷிணகைலாய மாஹாத்மியத்தில் பேசப்படுகின்றன. ஆறாம் பராக்கிரமபாகு மன்னனின் சாசனத்தினூடான திருநாமக்காணிக்கையும், ஒன்பதாம் பராக்கிரமபாகு மன்னன், கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்க மன்னனின் செப்புப் பட்டயங்களும் இவ்வாலய மரபுகளை சுட்டிநிற்கின்றன. குளக்கோட்டு மன்னனின் திருப்பணியும் குடியேற்றம் தொடர்பான செய்திகளும் இவ்வாலயம் சூழ்ந்த பாரம்பரியத்தையும் மரபையும் சுட்டிக்காட்டும் தன்மையில் இடப்பெயர்கள் இன்றும் விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்

இவ்வாலயத்தில் இவ்வாலய வரலாறு தொடர்பாகவும், முன்னநாதசுவாமி மீதும் காலம் தோறும் பல்வேறு தமிழ்ப் பிரபந்தங்கள் எழுந்துள்ளன. அவையனைத்தும் ஒன்று தொகுத்து பாதுகாத்து வைக்க வேண்டியது காலத்தின் தேவையாக அமைகின்றது. தொன்று தொட்டு பேணப்பட்டு வரும் பிரபந்த வகைகளில் சில கிடைக்காது போயின. அவ் வகையில் காலத்தால் அழியாது பாதுகாக்கும் நோக்குடன் தனித்தனியாக வெளிவந்ததும் வெளிவராததுமான பிரபந்த வகைகளை ஒரே தொகுப்பாக வெளியிட்டு வைக்க வேண்டும் எனும் முயற்சியிலேயே இந்நூல் வெளிவருகின்றது.

"முன்னேஸ்வரம் ஸ்ரீ வடிவாம்பிகாதேவி மீதும் ஸ்ரீ முன்னநாதர் மீதும் பாடப்பட்ட தமிழ்ப் பிரபந்தங்கள்" என்ற ஒருதொகுதி நூலாக இந்நூல் ஒன்று தொகுக்கப்பட்டுள்ளது. இந்நூல் தொகுதி ஒன்று, தொகுதி இரண்டு என இரண்டாக பிரிக்கப்பட்டுள்ளது.

பகுதி ஒன்றில் முன்னேஸ்வரப் பிரபந்தங்களின் தொடர்பான ஆய்வுகள் என "பலவகை இலக்கிய வளங்கள் பெற்று விளங்கும் புராதன சிவஸ்தலம் ஸ்ரீ முன்னேஸ்வரம்" என பிரம்மஸ்ரீ ச.பத்மநாபனால் எழுதப்பட்ட கட்டுரையும், "முன்னேஸ்வரம் மீது எழுந்த தமிழ்ப் பிரபந்தங்கள் – ஓர் ஆய்வு" என பிரம்மஸ்ரீ க.ஆனந்தகுமாரசர்மா B.A (Hons) அவர்களால் எழுதப்பட்ட ஆய்வுக் கட்டுரையும் இடம்பெறுகின்றன. பகுதி இரண்டில் முன்னேஸ்வரத்தின் தலப்பெருமை கூறும் சிறப்புடனும் முன்னேஸ்வரரது முன்னநாதர் மீதும் வடிவாம்பிகை மீதும் எழுந்த தமிழ்ப் பிரபந்தங்கள் கிடைக்கப்பெற்றவையமைத்து ஒன்று தொகுக்கப்பட்டு எழுத்துருவில் பதிக்கப்படுகின்றது.

முன்னேஸ்வர பிரபந்தங்கள் பற்றிய சிந்தனைகள் காலத்திற்கு காலம் தோன்றிவந்தாலும் அவைகளை ஆய்வு நோக்கில் நோக்கிய ஓர் ஆய்வுப்பார்வையை எமக்கு எழுதித்தந்த பிரம்மஸ்ரீ க. ஆனந்தகுமாரசர்மா அவர்களுக்கு ஸ்ரீ வடிவாம்பிகை சமேத ஸ்ரீ முன்னநாதசுவாமி திருவருள் கிட்ட வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேன்.

முன்னேஸ்வரம் பற்றி அறியப்பட்டவைகளும், கிடைக்கப்பெற்றவைகளுமான பிரபந்தங்களும் ஒன்று தொகுக்கப்பட்டு வெளியிடப்படுகின்றது. மேலும் பிரபந்தங்கள் பற்றி அறிஞர் அறிந்திருந்தால் அவைகளை வெளிப்படுத்த வேண்டுகின்றோம். இந்நூலினூடாக தமிழ்ப் பிரபந்தமரபுகள் பேணப்படுகின்றமை காலத்தால் செய்யும் கைம்மாறாகும்.

தொன்று தொட்டு நடைபெற்று வரும் வசந்த நவராத்திரி காலத்தில் ராமநவமி நாளில் இந்நூலை ஸ்ரீ வடிவாம்பிகா சமேத ஸ்ரீ முன்ன நாதசுவாமி திருவடிகளில் சமர்ப்பிக்கின்றோம்.

| | |
|---|---|
| | **பிரம்மஸ்ரீ ச. பத்மநாபன்** |
| பிரதம குருவும் தர்மகர்த்தாவும் | தலைவர், சிரேஷ்ட விரிவுரையாளர், |
| ஸ்ரீ முன்னேஸ்வரம் தேவஸ்தானம் | சம்ஸ்கிருதத்துறை |
| முன்னேஸ்வரம் | யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் |
| சிலாபம் | 25. 03. 2018 |

# பொருளடக்கம்


**பகுதி ஒன்று முன்னேஸ்வர பிரபந்தங்கள் தொடர்பான ஆய்வுகள்**

1. பலவகை இலக்கிய வளங்கள் பெற்று விளங்கும் புராதன சிவஸ்தலம் ஸ்ரீ முன்னேஸ்வரம் **02–06**

**பிரம்மஸ்ரீ ச.பத்மநாபன்**

2. முன்னேஸ்வரம் மீது எழுந்த தமிழ்ப்பிரபந்தங்கள் – ஓர் ஆய்வு **07–69**

**(பிரம்மஸ்ரீ க.ஆனந்தகுமாரசர்மா)**

**பகுதி இரண்டு முன்னேஸ்வர தமிழ்ப் பிரபந்தங்கள்**

1. முன்னைநாதேஸ்வரர் திருவூஞ்சல் **71–74**

**(நவாலியூர் திரு.க.சோமசுந்தரப்புலவர் பாடியது)**

2. ஸ்ரீமுன்னநாதஸ்வாமி வடிவழகி அம்பாள் திருவூஞ்சல் **75–78**

**(முன்னேஸ்வரம் பிரம்மஸ்ரீ சி.பாலசுப்பிரமண்யகுருக்கள் பாடியது)**

3. முனீஸ்வரரூஞ்சல் **79–83**

**(கொக்குவில் சி.சிலம்புநாதபிள்ளை பாடியது)**

4. முன்னேஸ்வர மான்மியம் **84–146**

**(பிரம்மஸ்ரீ நா.சிவசுப்பிரமணிய சிவாச்சாரியார் பாடியது)**

5. ஸ்ரீவடிவாம்பிகா சமேத முன்னைநாதஸ்வாமி நவதுதி **147–148**

**(உடுவில் பண்டிதர் சி.மாணிக்கதியாராஜகுருக்கள் பாடியது)**

6. முனீசுரத்திற் கோவிலல் கொண்டெழுந்தருளி இருக்கும் சிவபெருமான் தோத்திரப் பாமாலை **149–152**

**(கொக்குவில் சி.சிலம்புநாதபிள்ளை பாடியது)**

7. திருத்தாண்டகப் பண் **153–155**

**(கொக்குவில் சி.சிலம்புநாதபிள்ளை பாடியது)**

8. திருக்குறுந்தொகைப் பண் **156–157**

**(கொக்குவில் சி.சிலம்புநாதபிள்ளை பாடியது)**

9. முனீசுவர அந்தாதி **158–176**

**(திரு.அ.வயித்திலிங்கம்)**

10. ஸ்ரீ வடிவாம்பிகா சமேத ஸ்ரீமுன்னைநாதஸ்வாமி பதிகம் **177–182**

**(நாயன்மார்கட்டு க.சொக்கலிங்கம் (சொக்கன்)**

11. முன்னேஸ்வரப் பெருமான் **183**

**(திரு.த.மனோகரன்)**

12. முன்னைநாதனே காத்தருள்வாய் **184**

**(மாத்தளை ர.பி.பொன்னழகன்)**

13. அருள்புரி ஈஸ்வரா முன்னேஸ்வரா 185

(மாவை விசுசுந்தரம்)

14. வரம் தரும் முன்னேஸ்வரா 185

15. அருள் புரிந்திடும் ஈஸ்வரம் 186

16. ஈஸ்வரா சரணம் முன்னேஸ்வரா 187

17. சிலாபம் ஸ்ரீ வடிவாம்பிகா ஸமேத முன்னைநாதசுவாமி அந்தாதிக் கீர்த்தனைகள் 188-193

(யாழ்ப்பாணம் பிரம்மஸ்ரீ மா.த.ந.வீரமணி ஐயர் M.A)

18. ஐயா முன்னேஸ்வரா

19. முன்னேச்சரத்து ஸ்ரீ வடிவாம்பிகை பிள்ளைத்தமிழ் 194-247

(திரு.க.சொக்கலிங்கம் (சொக்கன்)

20. முனீஸ்வரம் வடிவழகியம்மை ஆசிரிய விருத்தம் 248

(கொக்குவில் சி.சபாரத்தினமுதலியார் பாடியது)

21. முனீச்சரம் வடிவழகியம்மை பதிற்றந்தாதி 249-250

(கொக்குவில் சி.சிலம்புநாதபிள்ளை பாடியது)

22. முனீஸ்வர வடிவழகி பதிகம் 251-253

(புழுதிவயல் ஆர் எஸ்.தம்பு பாடியது)

23. ஸ்ரீமுன்னேஸ்வர க்ஷேத்திர ஸ்ரீ வடிவாம்பிகாதேவி அந்தாதி 254-261

(நாயன்மார்கட்டு திரு.க.சொக்கலிங்கம் (சொக்கன்) பாடியது)

24. முன்னேஸ்வரம் ஸ்ரீ வடிவாம்பாள் கும்மி 262-265

(திரு.கா.பெரியசாமிப்பிள்ளை பாடியது)

25. முன்னேஸ்வரம் வடிவழகி 266-268

26. முன்னைநாதர் வடிவாம்பாள் திருக்கோலக்காட்சி திருக்கோலக் காப்பு விருத்தம் 269-273

(ஹிக்கொட, உந்துகொட திரு.பெரியசாமிப்பிள்ளை பாடியது)

27. ஸ்ரீவடிவாம்பிகா நவரத்ன மாலிகை 274-275

(கோப்பாய் பிரம்மஸ்ரீ ப.சிவானந்தசர்மா பாடியது)

28. அருள்நிறை வடிவாம்பிகை திருப்பதிகம் 276-278

(முன்னேஸ்வரம் திரு.வெ.நடராஜா பாடியது)

29. முன்னேஸ்வரம் வல்ல வடிவாம்பிகை மாலை 279-291

(திருமதி செல்வம் கல்யாணசுந்தரம் பாடியது)

# பகுதி ஒன்று
# முன்னேஸ்வர பிரபந்தங்கள் தொடர்பான ஆய்வுகள்

## பலவகை இலக்கிய வளங்கள் பெற்று விளங்கும் புராதன சிவஸ்தலம் ஸ்ரீ முன்னேஸ்வரம்

பிரம்மஸ்ரீ ச.பத்மநாபன்

ஈழத்திருநாடு சிவபூமியெனவும் விராட்புருடனுடைய இடைநாடிஸ்தானம் எனவும் போற்றப்படும் சிறப்புமிக்கது. குபேரபுரி, மரகதத்தீவு என்று போற்றப்படும் இவ் இலங்கைத்தீவின் மேற்குப் பகுதியில் வடமேல் மாகாணத்தில் புத்தளம் மாவட்டத்தில் சிலாபம் நகரிற்கு கிழக்காக சிலாபம்-குருணாகல் பிரதான வீதியில் இரண்டு கிலோமீற்றர் தொலைவில் முன்னேஸ்வரம் எனும் கிராமத்தில் புராதனம் மிக்க சிவஸ்தலம் விளங்குகின்றது. ஸ்ரீ வடிவாம்பிகா சமேத ஸ்ரீ முன்னைநாத சுவாமி தேவஸ்தானம் எனும் சிவக்ஷேத்திரம் வரலாற்றுச் சிறப்புக்களுடனும் இலக்கிய வளங்களுடனும் சிறப்புப் பெற்று மங்காச் சிறப்புடன் திகழ்கின்றது.

பஞ்ச ஈஸ்வரங்கள் எனப் போற்றப்படுகின்றதான இராமேஸ்வரம், திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம், முன்னே ஸ்வரம், நகுலேஸ்வரம் எனும் ஈஸ்வரங்களுள் முன்னேஸ்வரம் காலத்தால் முற்பட்டது.

முன்னேச்சரம், முனீஸ்வரம், முனீசுவரம், முன்னேஸ்வரம், முன்னைநாதேஸ்வரம், மொண்ணீஸ்வரம் எனத் தமிழ் மரபிலும் இதனையொட்டியே முனுசரயோ, முனேசரயோ, மொனோசரயோ என்றெல்லாம் பிறநாட்டவர்களாலும் அழைக்கப்படும் இத்தலத் தினை முன்னேஸ்வர கிராமத்தைச் சேர்ந்தவர்கள் பெரிய கோவில் எனவும், மஹாதேவாலயம் எனவும் அழைப்பர்.

இதிஹாச புராணங்களில் இலக்கியத் தொடர்புகள் நிறைந் ததும் வரலாற்றுக்கு முற்பட்ட பல ஐதீகங்களைக் கொண்டதுமாக இம்முன்னேஸ்வர புராதன சிவஸ்தலம் விளங்குகின்றது.

இதிஹாசங்களுள் இராமாயணம் சிறப்பிடம் பெறும் இலக் கியமாகும். இராமாயணத்தின் படி குபேரபூமியாகிய இலங்கையை ஆட்சி செய்தவன் விஸ்ரவசு முனிவனின் மகனும், சிறந்த சிவ பக்தனுமான இராவணன் ஆவான். இராவணனை சம்ஹாரம் செய்த ராமனுக்கு பிரம்மஹத்தி தோஷம் தொடர்ந்து வந்ததும், அச்சாயை நீங்கப்பெற்றதுமான சிறப்புடைய சிவஸ்தலம் முன்னேஸ்வரம் ஆகும்.

வேதங்களைத் தொகுத்த மஹாமுனிவர் வியாசர் ஆவார். இவ்வியாசர் காசியில் செய்த பாவத்திற்கு பிராயச்சித்தம் செய்து பாபவிமோசனம் பெற்ற தலம் முன்னேஸ்வரம் ஆகும்.

இவ்வாறாக வரலாற்றின் முற்பட்ட காலத்து பல்வேறு வகையான ஐதீகங்களையும் விபரங்களையும் ஸ்கந்த மஹா புராணத்தின் உத்தர காண்டத்தில் அடங்குகின்ற ஸ்ரீமத் தக்ஷிண கைலாச மஹாத்மியத்தின் 16ம், 17ம் அத்தியாயங்கள் தெளிவு படுத்தி நிற்கின்றன.

ஸ்ரீமத் தக்ஷிணகைலாச மஹாத்மியத்தினூடாக முன்னே ஸ்வர ஸ்தலத்தின் சிறப்புக்களை நோக்குகையில்; பரிபூரணரான சிவசங்கர் எல்லோருக்கும் இஷ்ட சித்தியை அளிப்பதன் பொருட்டு எப்பொழுதும் சாந்நித்தியமாகி மிக நீண்டகாலமாக விளங்கும் ஸ்தலமாகையாலும், பிரம்மாவினால் முன்பு பூஜிக்கப் பட்டதாலும் இத்தலம் ஸ்ரீமுன்னேஸ்வரம் என அழைக்கப் படுகின்றது என விபரிக்கின்றது. மேலும் கேள்வியுற்றாலே எல்லா சித்திகளையும் அளிக்கவல்ல இம்முன்னேஸ்வர மஹாக்ஷேத் திரத்தில் முன்னைநாதர் என்றழைக்கப்படும் மேலான சுயம்பு லிங்கம் உள்ளது. பிரம்மா, விஷ்ணு, மஹேந்திரன் முதலியோரால் பூஜிக்கப்பட்டு சித்தி கைவரப்பெற்றது. அதனால் முன்னேஸ்வர க்ஷேத்திரம் மேலானவற்றுள் மேலானது. வாரணாசி [காசி] முதலிய தேசங்களில் தேக வியோகத்தின் பின்னர் முக்தியெனக் கூறப்படுகின்றது. முன்னேஸ்வர க்ஷேத்திரத்திலே எப்பொழுதுமே மனிதர்கள் ஜீவன் முக்தர்கள் ஆகின்றார்கள். எனவே, முன்னே ஸ்வரத்தை ஒத்த க்ஷேத்திரம் மூவுலகிலும் இல்லை. என முன்னேஸ்வர ஆதி வரலாற்றுக் கதை கூறும் 16ம் அத்தியாய த்தில் கூறப்படுகின்றது. இவ்வாறு வேறு பல விடயங்களும் இடம்பெறுகின்றமை மனம் கொள்ளத்தக்கது.

இலங்கையில் புராதனம் மிக்க சிவத்தலங்கள் பல உள்ளன. அவற்றுள் பஞ்ச ஈஸ்வரங்கள் புராதனமானவை. இவற்றுள் ஈழத்தில் பிரசித்தி பெற்ற தலமாக விளங்கும் முன்னே ஸ்வரம் தேவார முதலிகளால் தேவாரப் பாடல் பெறாத தலமாக விளங்கினாலும் முன்னேஸ்வர ஆலயம் எனும் சிறப்பு, வரலாறு [ஸ்தல மஹாத்மியம்], முன்னைநாதர் வடிவழகி அம்மையின்

மகிமைகள் பற்றி இவ்வாலயம் சார்ந்த பல இலக்கியங்கள் வளம்படுத்திய வண்ணம் உள்ளன.

இலக்கியம் என்பது காலத்தின் கண்ணாடி, சொல்லும் பொருளும் சேர்ந்து விளங்குவது பதங்களின் இடைவிடாத வரிசை என்றெல்லாம் சிறப்புப் பெறுவது. இதனை அடித்தளமாகக் கொண்டு சொல்லுக்கும் பொருளுக்கும் பேதமில்லாத தன்மையில் முன்னைநாதருக்கும் வடிவழகி அம்மைக்குமாக இணைந்த தன்மையில் சொல்லோவியமாகவும், இலக்கியங்களுள் கரந்து றையும் உயிர்களைக் கொண்டு முன்னேஸ்வரத்தின் சிறப்பு வரலாறு [மஹாத்மியம்] முன்னைநாதர், வடிவழகம்மை, திருக் கோயிற்சிறப்பு என கிராமியம் சார்ந்ததும் மரபியல் சார்ந்ததுமான பாடல்கள் வடமொழி, தென்மொழி ஆகிய இரு இலக்கியப் பரப்புக்களிலும் திகழும் சிறப்பும், சிங்கள தூது இலக்கியங்களில் சிறப்பித்துக் கூறப்படும் தனித்துவமும் இவ்வாலயம் சார்ந்த இலக்கிய வரலாற்றைப் பறைசாற்றுகின்றன.

இலக்கிய மரபில் தனி இலக்கியச் சிறப்பம்சங்கள் பலவும் தோற்றம் பெற்ற தன்மையில் ஆலய வரலாறு சார்ந்தும் ஆலயப் பெருமை சார்ந்ததுமான சிறப்போடு திருக்கோயிற் சிறப்பும் பேசும் தன்மையில் வடமொழியில் வடமொழி ஸ்கந்த புராணத்தின் தக்ஷிணகைலாச மஹாத்தியத்தின் 16ம் 17ம் அத்தியாயங்கள் தொடர்நிலைச் செய்யுட்களாகக் கூறுகின்றன. இதே போன்று பன்னிரண்டாயிரம் பாக்களையுடைய இலங்கா மஹாத்மியத்தில் ஸ்ரீமுன்னேஸ்வர மான்மியம் எனும் 401 விருத்தப் பாக்களை யுடைய நூல் கூறுகின்றது. மேலும் தனிச் செய்யுட்களாக ஈழ மண்டல சதகத்தின் [அல்வை கணபதிப்பிள்ளை] 6ம் பாடல், அச்சுவேலி வைத்தீஸ்வரக் குருக்களின் திருக்கேதீஸ்வரப் புராணத்தின் 17ம் பாடல், சக்தி சிவனின் அருளாட்சி எனும் ஆ. கதிர்காமத்தம்பியின் ஈழத்தில் அருளாட்சிச் சருக்கத்தில் 61ம் 66ம் 67ம் 68ம் பாடல்கள், கவிஞர் ஞானமணியத்தின் பதிக்கொருபாடல் எனும் நூலில் ஒரு பாடலும் ஆலயப்பெருமையென நான்கு பாடல்களும் முன்னேஸ்வரத் தலத்தின் பெருமையைக் கூறி நிற்கின்றன.

முன்னைநாதேஸ்வரப் பெருமைகளைக் கூறும் தன்மையில் வடமொழியின் தக்ஷிணகைலாச மஹாத்மியத்தில் வியாசகர் துதி [16.113-132], ஸ்ரீராமர் துதி [17.16-18] என்பன இடம் பெறுகின்றன. தமிழ் மொழியில் காரைநகர் பிரம்மஸ்ரீ கா.சிவசிதம்பர ஐயர் முனீசுரர் நவமணிமாலை, முனீசுரர் விண்ணப்பப்பத்து, முனீசுரர் தனிச்செய்யுட் கோவை என்பவற்றையும், கொக்குவில் ச.சபாரத்தின முதலியார் முன்னைநாத சுவாமி வடிவழகம்மை ஆசிரியவிருத்தம் என்பனையும், கொழும்பு அ. வைத்தியலிங்கம் முனீசுவர வந்தாதி எனும் நூலையும், உடுவில் பண்டிதர் சி. மாணிக்கத் தியாகராசா முன்னைநாத சுவாமி நவதுதி எனும் நூலையும், கொக்குவில் சி.சிலம்புநாதப் பிள்ளை முன்னைநாதசுவாமி திருத்தாண்டகப்பண், முன்னைநாத சுவாமி திருக்குறுந் தொகைப்பண், முனீச்சரத்தில் கோயில் கொண்டெழுந்தருளி யிருக்கும் சிவபெருமான் தோத்திரப் பாமாலை, முனீஸ்வ-ரூஞ்சல் எனும் நூலையும், நவாலியூர் க. சோமசுந்தரப் புலவர் முன்னைநாதேஸ்வரர் திருவூஞ்சல் எனும் நூலையும் மேலும் முனீஸ்வரன் கப்பல், முனீசுரக்கும்மி எனும் நூல்களும், கவிஞர் கா. சி. ரெங்கநாதன் முனீசுரம் முன்னைநாதர் வடிவாம்பாள் தேர்த்தப் பாடல்கள், முன்னேஸ்வரம் க்ஷேத்திர முன்னைநாத சுவாமி பதிகம் என நாயன்மார்கட்டு க. இ. சொக்கலிங்கம் [சொக்கன்] ஆகியோரும் தனிச்செய்யுட்களாக செல்வி சந்திரா முன்னைநாதீஸ்வரன் எனவும் த. மனோகரன் முன்னேஸ்வரப் பெருமான் எனவும் மாத்தளை ஏ.பி. பொன்னழகன் முன்னைநாதனே காத்தருள்வாய் எனவும், முன்னைநாதர் வடிவாம்பாள் திருக்கோலக்காட்சி எனவும் மாவை விசுசுந்தரம் அருள்புரி ஈஸ்வரா முன்னேஸ்வரா எனவும் மேலும் தனிப் பாடல்களாக ஈஸ்வரா சரணம் முன்னேஸ்வரா எனவும் இலக்கியங் களாக பாடல் வடிவில் விளங்குகின்றன. ஸ்ரீவடிவாம்பிகை சமேத முன்னீஸ்வர அந்தாதிக் கீர்த்தனைகள் என பத்துக் கீர்த்தனைகள் யாழ்ப்பாணம் பிரம்மஸ்ரீ மா. த. ந. வீரமணி ஐயரால் இயற்றப்பட்டுள்ளது.

இவ்வாறாக பல்வேறு இலக்கிய வகைகளைத் தன்னுட் தாங்கிய தன்மையில் மரபு நிலைச் செய்யுட்களையும் நவீன கவிதை வடிவங்களையும் தாங்கியதாக முன்னீஸ்வர முன்னை நாதசுவாமி மீதான பாடல்கள் காணப்படுகின்றன.

முன்னேஸ்வரத்தில் சிவனுக்கு நிகராக விளங்கும் வசீகரணத் தோற்றமுடையவள் வடிவாம்பிகாதேவி சௌந்தர்யநாயகி எனும் அம்பிகை வடிவழகி என அழைக்கப்படுபவள். யார்க்கும் தோறும் தெவிட்டாத அழகு பொழிபவள். புதுமை பொழிபவள், சிதம்பரத்து நடராஜர் திருவுருவை ஒத்த நிகரான தனிச்சிறப்பு இவ்வடிவழகிக்கு உண்டு. சிவசக்தி ஐக்கியமாக கருவறையில் விளங்கும் தனிச்சிறப்பு முன்னேஸ்வரத்திற்கே உண்டு. இவ் வடிவழகி மீது கவிமலர் சமர்ப்பித்தோர் பலர். அவ்வகையில் வட மொழியில் வியாசரது துதி [த.கை.மா 16.94-101], கா. கைலாச நாதகுருக்களது ஸ்ரீவடிவாம்பிகா சத்யாவளி, ஸ்ரீவடிவாம்பிகா தசகம், என்பன குறிப்பிடத்தக்கன. தமிழ் மொழியில் கொக்குவில் சி. சிலம்புநாதப்பிள்ளையின் முனீசுரத்து வடிவழகியம்மை ஆசிரிய விருத்தம், வடிவழகி யம்மை பதிற்றந்தாதி, புழுதிவயல் ஆர். எஸ்.தம்புவின் முனீஸ்வர வடிவழகி பதிகம், எஸ்.எம். ராஜப்பா வின் முன்னேஸ்வரம் வடிவழகியம்மன் விருத்தம், முன்னேஸ்வரம் சிவஸ்ரீ சி. பாலசுப்பிரமணியக்குருக்களின் ஸ்ரீமுன்னேஸ்வரம் வடிவழகி அம்பாள் திருவூஞ்சல், கா. பெரியசாமிப்பிள்ளையின் முனீஸ்வரம் ஸ்ரீவடிவாம்பாள் கும்மி, கி.வா. ஜெகந்நாதனின் வடிவழகி அம்மையின் அழகு குறித்த தனிப்பாடல்கள், நாயன்மார்கட்டு க. சொக்கலிங்கத்தின் [சொக்கன்] ஸ்ரீ முன்னே ஸ்வர க்ஷேத்திர ஸ்ரீ வடிவாம்பிகாதேவி அந்தாதி, முன்னீச்சுரம் வடிவாம்பிகை பிள்ளைத்தமிழ், திருமதி செல்வம் கல்யாண சுந்தரத்தின் வல்லவடிவாம்பிகா மாலை, ஆனந்தபைரவி எனும் புனைப்பெயர்ப்பூண்ட ப. சிவானந்த சர்மாவின் ஸ்ரீவடிவாம்பிகா நவரத்ன மாலிகை என்பன அறியக்கூடியதாக உள்ளன.

முன்னேச்சரத்து பிரபந்தங்களை காலத்திற்கு காலம் தோற்றுவித்தும் பதிப்பித்தும் விளங்கும் இவ்விலக்கியங்கள். இறைவனின் பெருமை போற்றும் பேரிலக்கியங்களாகும். இவ்விலக்கியங்களை காலத்தால் அழிவடையா வண்ணம் பழமை மாறாது பாதுகாத்து வைக்க வேண்டியதும், ஒன்று தொகுத்து மீள்பதிப்பு செய்ய வேண்டியதும் இன்றியமையாதது.

முன்னேஸ்வரத்து இறைவன், இறைவி மீது சூட்டப்பட்ட பாமாலைகளின் பிரதிகள் மற்றும் வெளியிடப்படாது கையெழுத்துப்

பிரதிகளாக விளங்கும் ஆக்கங்கள் என்பன பற்றிய விபரங்களை அறிந்தவர்கள் அவற்றினை வெளிப்படுத்துவார்கள் என ஆவலுடன் எதிர்ப்பார்ப்பதோடு அவ்வன்பர்களை அறிந்து கொள்ளவும் ஆவலுடையவர்களாக இருக்கிறோம்.

பல்வேறுபட்ட இலக்கிய வளங்களைப் பெற்று விளங்கும் முன்னேஸ்வரத்தலத்தின் இலக்கிய வளங்களை மீண்டும் பாதுகாத்து ஸ்ரீ வடிவாம்பிகா சமேத ஸ்ரீ முன்னைநாதப் பெருமானின் எல்லையற்ற கருணை கூர்ந்த திருவருளுக்கு பாத்திரராவோம் என பிரார்த்தித்து பெருமையும், மகிமையும் மிக்க சிவசக்தியின் திருவருள் அனைவருக்கும் கிடைப்பதாக!

★★★

# முன்னேஸ்வரம் மீது எழுந்த தமிழ் பிரபந்தங்கள் ஓர் ஆய்வு

ஆக்கம்
பிரம்மஸ்ரீ க.ஆனந்தகுமாரசர்மா
(B.A Hons)

## இயல் ஒன்று
## முன்னேஸ்வரக் கோவில் வரலாறு

சிவசம்பந்தமுடையது சைவம் எனப்படும். சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடும் சமயம் சைவ சமயமாகும். வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலேயே இலங்கையில் சைவம் செல்வாக்குடன் திகழ்ந்தது. கிறிஸ்துவுக்கு முற்பட்ட மூன்றாம் நூற்றாண்டு காலப்பகுதியில் புத்த சமயத்தின் அறிமுகத்திற்கு முன்பாகவே சைவப் பண்பாடு இலங்கையில் விளங்கியிருந்தது. அனுராத மன்னனாகிய பண்டுகாபயன் பிராமணர்கள் உடைய சமய நடவடிக்கைகளுக்காக கல்விக் கூடங்களையும், சிவிகசாலா என்பதையும் அமைத்தான் எனவும், இந்த சிவிகசாலா பற்றி மஹாவம்சம் விவரிக்கையில் சிவனின் அடையாளமாக விளங்கும் சிவலிங்கத்தின் இருப்பிடம் எனவும் குறிப்பிடுகிறது. இவற்றை விட, இலங்கையின் புராதன பிராமிக்கல் வெட்டுக்கள் சிவ எனும் அடைமொழியைக் கொண்டு பலர் தமக்குப் பெயர்களை இட்டிருந்ததாகத் தெரிவிக்கிறது. இவை, கிறிஸ்துக்கு முற்பட்ட காலத்திலேயே சிவன் என அழைக்கப்படும் இந்து சமய மரபில் வழி வந்த தெய்வம் இலங்கையில் செல்வாக்குடன் திகழ்ந்திருந்தது என்பதைக் காட்டுகின்றன மேலும், திருமூலரது திருமந்திரம் இலங்கையைச் சிவபூமி என சிறப்பித்துக் கூறுகிறது.

*"மேரு நடுநாடி மிக்கிடை பிங்கலை*
*கூருமிவ் வானினிலங்கைக் குறியுறுஞ்*
*சாருந் திலைவனத் தண்மா மலயத்தூ*
*டேறுஞ் சுழுனை யிவை யிவைசிவ பூமியே"*

இவ்வாறு சிவபூமி என விதந்துரைக்கப்படும் இலங்கையிலே பல சிவத் தலங்கள் சிறப்புடையனவாக விளங்குகின்றன. அவையாவன திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம், முன்னேஸ்வரம், நகுலேஸ்வரம், சந்திரமௌலீஸ்வரம் என்பனவாகும். இவற்றுள் திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம், என்பன சைவ நாயன்மார்களால் பாடல் பெற்ற தலங்களாகும். மேற்கூறியவற்றுள், இலங்கையின் வடமேல் மாகாணத்தில் அமைந்திருக்கும் முன்னேஸ்வரம் பழம் பெருமையும், வரலாற்றுச் சிறப்பும் மிக்க சிவத்தலமாகும்.

# முன்னேஸ்வரத்தின் அமைவிடம்

## முன்னேஸ்வரம் எனும் பெயர்

முன்னேஸ்வரம் கோயிலானது, புத்தளம் மாவட்டத்தில சிலாபம் நகரி லிருந்து கிழக்குத் திசையாக சுமார் மூன்று மைல் தொலைவில் அமைந்துள்ளது.

முன்னேஸ்வரம் கோயிலின் எல்லைகள் மன்னர்கள் தாம் செய்யும் தானங்களின் படி தாமிரசாசனமும், கல்வெட்டும் சுட்டி நிற்பவனாய் அமைகின்றன. இதன்படி ஒன்பதாம்பராக்கிரமபாகுவின் (கி.பி 1572) இளவரசனுக்கு மின்னலால் உண்டான நோயை நீக்கும் பொருட்டு முன்னேஸ்வரம் வந்து தலத்தில் ஸ்ரீ மஹா விஷ்ணு மூர்த்தியை வழிபாடு செய்து நோய் நீங்கப் பெற்று செய்த தாமிரசாசனத்தில் முன்னேஸ்வரத்தை மையமாகக் கொண்டு கிழக்கெல்லை கரவிட்ட குளத்துக்குப் பாயும் மலஎல் என்ற நீரோட்டத்தையும், தெற்கெல்லையாக மாதம்பையின் மூன்று திக்குகளிலும் நிறுத்தப்பட்ட எல்லைக் கற்களையும், மேற்கு எல்லையாக களுதிய பொக்கணையின் மானமான்தொட்ட என்ற துறையையும், வடக்கெல்லையாக முன்னேஸ்வரத்துட் பாயும் நீரோட்டத்தையும் உடையதாக விளங்கியது.

தற்காலத்தில் முன்னேஸ்வரத்துக்குக் கிழக்கே வீரபாண்டியம், பிராமண புரம், கழுவாமடு, தெற்கில் காக்காப்பள்ளி, இரட்டைக்குளம், மணற்குளம், பூக்குளம், தாமரைக்குளம், பொத்துவில், மேற்கே இரணவில், சிலாபம், வடக்கில், கருக் குப்பனை, மாம்புரி, கோட்டைகாட்டி, குசலை, மானாவரி, ஆனைவிழுந்தான், தரங் கட்டு, பாலாவி, பூஞ்சோலை, ஆணை இறக்கம், தொங்கற்காடு, உடப்பு, வண்ணத் திவில்லு, பிரபங்குளம், புளிச்சாக்குளம், ஆண்டிமுனை, பூனைப்பிட்டி, ஒற்றைப்பனை, கட்டைக்காடு, கொத் தாந்தீவு, முந்தல், மங்கலவெளி, மதுரங்குளி, பொன்பரப்பிப் பற்று, தேத்தாப்பனை, கற்பிட்டி, சுரிவில், பனையடிபுளம், மண்டைகொண்டான், தித்தக்கரை, கழுவாமடு, முத் துப்பந்தி, கரைவெட்டி, மருதஞ்சோலை, எனப் பலவாறு வரையறை செய்யப்படுகின்றன.

முன்னேஸ்வரம் எனும் பெயர் மற்றைய ஈஸ்வரங்களுக்கு முன்பதாகவே இக்கோயில் தோன்றியதென்பதைத் தெரிவிக்கிறது. அதாவது "முன்னைய ஈஸ்வரம்," என்பது முன்னேஸ்வரமாயிற்று எனலாம். சில நூல்களில் "முந்தைய ஈஸ்வரம்" என்பது முன்னேஸ்வரம் எனவும் குறிக்கப்படுகிறது. ஸ்ரீ சிவபுராணத்தில் சனத்குமார சம்ஹிதையில் அலகேஸ்வரம் எனவும் முன்னேஸ்வரம் குறிப்பிடப்படுகிறது. அறுபத்து நான்கு ஸ்ரீ தேவி பீடங்களில் ஒன்றாகவும் இத்தலம் விளங்குகிறது. கோயிலில் காணப்படும் கல்வெட்டில் "மொண்ணீஸ்வரம்" என முன்னேஸ்வரம் குறிப்பிடப்பட்டிருக் கிறது. இலக்கியங்களில் முன்னீச்சரம், முனீசுரம், எனப்பலவாறு கூறப்பட்டிருக்கிறது. இன்று புத்தசமயம் சார்ந்த சிங்களவர் சிலர் "முன்னேஸ்ராமய" எனவும் அழைக் கின்றனர். இது இத்தலம் தங்கள் மதத்தோடு தொடர்புடையது என்பதைத் தெரிவிக்க எழுந்த உந்துதலேயன்றி வேறொன்றுமில்லை. இங்குள்ள இறைவன் பெயர் முன்னைநாதர் இறைவி பெயர் வடிவாம்பிகை.

## முன்னேஸ்வர மான்மியம்

வரலாற்றுச் சிறப்பு மிக்க தலங்களின் தோற்றங்களையும், பெருமைகளையும் எமக்குத் தெரிவிப்பவை தலபுராணங்களும், மான்மியங்களுமாகும். அந்த வகையில் முன்னேஸ்வரத்தலத்தின் தோற்றத்தையும், பெருமைகளையும் தெரிவிக்கும் நூலாக முன்னேஸ்வர மான்மியம் விளங்குகிறது. இதன் முதல் பதிப்பு 1927 இல் வெளி வந்தது. இது ஒரு மொழி பெயர்ப்பு நூலாகும். இம்மொழி பெயர்ப்புக்குரிய மூலநூல் பற்றி முன்னேஸ்வர மான்மியத்தில் குறிப்பிடப்படவில்லை. இம் முன்னேஸ்வர மான்மியம், ஸ்ரீராமஸ்வாமி அருச்சித்தபடலம், வியாள் அருச்சித்தப்படலம் குளக் கோட்டு மகாராசன் வழிபாட்டுப்படலம், ஆறாவது ஸ்ரீ பராக்கிரமபாகு வழிபாட்டுப் படலம், கீர்த்திராஜசிங்க மகா ராசன் வழிபாட்டுப்படலம், பிரம்மஸ்ரீ குமாரசுவாமிக் குருக்கள் பூசித்தபடலம் என்ற படலங்களை உள்ளடக்கியது. இவற்றுள் ராமஸ்வாமி அருச்சித்தபடலமும், வியாசர் அருட்சித்தபடலமும் தட்சிண கைலாச புராணத்து பதினைந்தாம், பதினாறாம் அத்தியாய மொழி பெயர்ப்புக்கள் என குறிக்கப்பட்டிருக் கின்றன. தட்சிண கைலாச புராணமானது, இருவகையாகக் காணப்படுகின்றது. ஒன்று ஆரியச்சக்கரவர்த்திகள் காலத்து தலையாய நூல்களில் ஒன்றாக விளங்குவது. இது திருகோணமலையில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் கோணேஸ்வரப் பெருமானையும், மாதுமையம்மையையும் பற்றிக் கூறும் தலபுராணமாகும். வடமொழி யில் உள்ள மச்சேந்திர புராணத்தைத் தழுவியே இந்நூல் செய்யப்பட்டுள்ளது என் பதை அதன் பாயிரச் செய்யுள் காட்டுவதாக க.செ.நடராசா அவர்கள் குறிப்பிடுகிறார்."

மற்றையது, வடமொழி தட்சிண கைலாச புராணமாகும். இது பதினெண் புராணங்களுள் ஒன்றாகிய வடஇந்திய ஸ்காந்தத்தில் இடம் பெறுகிறது. இது இருபத் தேழு அத்தியாயங்களும் சுமார் இரண்டாயிரத்து ஐந்நூறு கிரந்தங்களுமுடையது. இலங்கையில் புராதன கோயில்களின் வரலாறுகளையும், தோற்றங்களையும், சிறப்புக்களையும் எடுத்து இயம்புகிறது.

இங்கு கூறப்படும் தட்சிண கைலாச புராணம் தனிச்சிறப்பு உடையது. முன்னேஸ்வர மான்மியத்தில் கூறப்படும் பதினைந்தாம் பதினாறாம் அத்தியாயங் களின் மொழி பெயர்ப்பு ம.முத்ததம்பியார் என்பவர் 1927ம் ஆண்டு அப்போதைய ஆதீனகர்த்தாவாக விளங்கிய மு.சோமஸ்கந்தக் குருக்கள் அவர்களிடம் விடுத்த வேண்டுகோளின்படி பிரபவ வருடம் சித்திரை மாதம் சோமஸ்கந்தக் குருக் களாலேயே எழுதி வெளியிடப்பட்டது.அது. மீண்டும் இரண்டாம் பதிப்பாக 1949ம் ஆண்டு அப்போதைய ஆதீனகர்த்தா பாலசுப்பிரமணியக்குருக்களால் வெளியிடப் பட்டது.

இம் மொழி பெயர்ப்பே மேற்படி கோயிலால் 1961ம் ஆண்டு வெளியிடப் பட்ட கோடியர்ச்சனை மலரிலும் காணப்படுகின்றது. தற்போது எமக்குக் கிடைத்துள்ள மூல வடமொழி தட்சிண கைலாச புராணத்திற்கும், மேற்படி மொழி பெயர்ப்புக்கும் அத்தியாய ரீதியான வித்தியாசம் காணப்படுகின்றது. முன்னேஸ்வர மான்மியத்தின் பதினைந்தாம், பதினாறாம் அத்தியாயங்கள் இங்கு பதினாறாம், பதினேழாம் அத்தி யாயங்களாகக் காணப்படுகின்றன. எனினும் இத் தலத்தின் மகிமையைக் கூறும்

தலபுராணம் என்ற வகையில் முன்னேஸ்வர மான்மியம் பெரும் நிதியாகவே விளங்கு கின்றது.

மேலும் முன்னேஸ்வர மான்மியத்தில் காணப்படும் குளக்கோட்டு மகாராசன் வழிபாட்டுப்படலமும், குமாரஸ்வாமிக் குருக்கள் பூசித்தபடலமும் கோயிலில் காணப் பட்ட ஏட்டுக்களை அடிப்படையாகக் கொண்டவை. ஆறாவது ஸ்ரீ பராக்கிரமபாகு வழிபாட்டுப்படலம் ஆலய கர்ப்பக்கிருகத்தில் காணப்படும் சிலாசாசனங்களை அடிப் படையாகக் கொண்டது. கீர்த்திராஜசிங்கத்தின் வழிபாட்டுப்படலம் தாமிர சாசனத்தை அடிப்படையாகக் கொண்டது.

**முன்னேஸ்வர மான்மியம் உரைக்கும் முன்னேஸ்வரப் பெருமைகள்**

முன்னேஸ்வரம் இராமயணம், மகாபாரதம், போன்ற இதிகாசங்களுடன் தொடர்புடையதாக விளங்குகின்றது.

இராமயணக்கதை நாயகனான இராமன், இலங்கைக்கு வந்து இராவணனை வதம் செய்த போது அவரை பிரம்மஹத்தி தோஷம் பீடித்தது.மீள அவர் பாரதத்திற்கு திரும்புகையில் முன்னேஸ்வரத்தைக் கடக்க நேர்ந்தது. அவ்வாறு கடந்து செல்லு கையில் தன்னைப் பீடித்திருந்த பிரம்மஹத்தி தோஷம் நீங்கியதை உணர்ந்தார். பின்னர், இத்தலத்தின் மகிமையை வியந்து, சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து பூசை செய்தார் எனப்பகர்கிறது தட்சிணகைலாச புராணத்தின் பதினைந்தாம் அத்தியாயம்.

இராமன் இராவணனை சம்ஹாரம் செய்யச் சென்ற போது இந்தத் தலத்தை வழிபட்டதாகக் கூறுகின்றார் C. இராசநாயகம்.

மேலும், பாரதம் கூறிய வியாசர், முன்னேஸ்வரர் ஆலயத்தில் வழிபாடு செய்ததை விரிவாகக் கூறுகிறது தட்சிணகைலாச புராணத்தின் பதினாறாம் அத்தியாயம்.

மனுநீதி கண்டசோழவம்சத்தவனான குளக்கோட்டன், கோணேஸ்வரத்தில் மட்டுமன்றி இவ்வாலயத்திலும் சிறப்பான திருப்பணிகளைச் செய்து கும்பாபிசேஷத்தை நடத்துவித்தான் எனக் கூறுகின்றது. முன்னேஸ்வர மான்மியம்.

தொடர்ந்து ஆலயத்தில் பூசைகள், திருவிழாக்கள் என்பன நடைபெறுவதற் காக பலதரப்பட்ட பணியாளர்களை சோழநாட்டிலிருந்து கொண்டு வந்தான். பிராமணர், சைவர், செட்டிமார், வேளாளர், வீரமுட்டி, சங்கமர், தாதர், கொல்லர், தட்டார், யாழ்ப் பாடி, எண்ணைவாணிபர், அகம்படியார், முல்லை மடப்பளியார், சங்குமடப்பளியார், சருகுமடப்பளியார், கைக்கோளர், சேணியர், இளவணியர், விறகு வெட்டி, நாவிதர், வண்ணார், திமிலர், வலைஞர், வருணகுலத்தார், குயவர், மறவர், பள்ளர், கணார், கத்திக்காரர், மற்றும் பறையர், போன்றோரை மதுரை, மருங்கூர்,காரைக்கால், குற்றலூர், திருச்சிராப்பள்ளி, தொண்டை மண்டலம் போன்ற இடங்களிலிருந்து கூட்டி வந்து முன்னேஸ்வரத்தைச்சூழ உள்ள பகுதிகளில் குடியேற்றி அவர்களுக்கு

தானமாக விவசாய நிலங்களையும் அளித்து அதன் மூலம் அவர்கள் கோயிலுக்கு ஆற்ற வேண்டிய சேவைகளையும் வரையறை செய்தான். "தனியண்ணாப் பூபாலன்" என்பவனை அதிகாரியாக நியமித்து ஆலய கைங்கரியங்கள் செவ்வனவே நடைபெற ஏற்பாடுகளைச் செய்தான்.

குளக்கோட்டன் கட்டளைப்படி, முன்னேஸ்வர ஆலயத்தைச் சேர்ந்த பூமி அறுபத்துநான்கு கிராமங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொன்றிற்கும் பெயர்கள் அவ்விடத்தில் வாழும் பணியாளர்களின் தொழில்களிற்கேற்ப இடப்பட்டன. உதாரண மாக, பிராமாணர்கள் வாழும் பகுதி "பிராஹ்மணயாகமம்" எனவும், தேர் சகடை வாகனம், கதவு போன்ற மரவேலைகளைச் செய்யும் தச்சர் வாழும் பகுதி "வங் காதனி" எனவும் வழங்கப்பட்டன. காலப்போக்கில் இப்பெயர்கள் பல உருமாறி விட்டன. வங்காதனி என்பது இன்று பங்கதெனியா என வழங்கப்படுகிறது. என்றாலும் சில பெயர்கள் இன்றும் அவ்வாறே விளங்குகின்றன. உதாரணமாக, திமிலர் வசிக்கும் பகுதியான திமிலை என்பது இன்றும் அவ்வாறே வழங்கப்பெற்று வருகின்றது.

சிவஸ்ரீகுமாரஸ்வாமிக் குருக்கள் (கி.பி 1816-1912) இவ்வாலயத்தின் ஆதீன கர்த்தாவாகவும், சிறப்பான திருப்பணிகளைச் செய்து விளங்கியவராகவும் காணப் படுகின்றார். இவர் இக்கோயிலின் கர்ப்பக்கிரகம், மகாமண்டபம், அர்த்த மண்டபம் முதலானவற்றைச் சீர்திருத்தி 1875ல் மகாகும்பாபிஷேகத்தைச் சிறப்பாக நடாத்தி வைத்தார். இவரது பரம்பரை வழிவந்தவர்களே இன்றும் ஆலய ஆதீனகர்த்தாக் களாக விளங்குகின்றனர் மனுநீதிகண்ட சோழவம்சத்தவனான குளக்கோட்டன், கோணேஸ்வரத்தில் மட்டுமன்றி, இவ்வாலயத்திலும் சிறப்பான திருப்பணிகளைச் செய்து கும்பாபிஷேகத்தை நடத்துவித்தான் எனக் கூறுகிறது முன்னேஸ்வர மான்மியம்.

**சிலாசாசனமும், தாமிரசாசனமும்**

சாசனம் என்பது கல்வெட்டு எனவும் அழைக்கப்படும். இது ஒரு குறிப்பிட்ட நிகழ்வானது யாரால் எக்காரணத்திற்காக எப்பொழுது யாருக்கு வழங்கப்பட்டது. எனும் விடயங்களைத்தாங்கி சரித்திரஅம்சமாகத் திகழும் ஓர் ஆவணமாகும்.

முன்னேஸ்வரம் கோயிலில் காணப்படும் மிக நீண்டசாசனம் ஈழத்தில்வேறு எங்கும் காணமுடியாததாகும்.

இச்சாசனம் கர்ப்பக்கிரகத்தின் கீழ் வரிசையிலே சுமார் ஒன்றரையடி உயரத்தில் தெற்கு வீதியில் அக்கினி திக்கு முதல் ஈசான திக்குவரைமிக நீண்டதாக விளங்குகிறது. அவற்றின் முழுமையான பகுதியை நாம் இன்று காணமுடியாது. தட்சிணாமூர்த்தி, லிங்கோற்பவர், துர்க்கை, ஆகிய கோஷ்ட தேவைகளின் ஆலய அமைப்புக்களின் பொருட்டு இது மறைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சாசனம் கி.பி. 1448ம் ஆண்டு ஆறாவது பராக்கிரமபாகு மன்னன் இம் முன்னேஸ்வர தேவாலயத்தின் இடிந்து பழுதுபட்ட பகுதிகளைத் திருத்தித்

திருப்பணிகள் யாவற்றையும் குற்றமறச் செய்வித்து பல கிராமங்களை மானியமாக அளித்தான் எனும் செய்திகளைத் தெரிவிக்கிறது. பௌலர் என்பவர் இதனை ஆங் கிலத்தில் மொழி பெயர்த்து உள்ளார்.

சிலாபத்திலுள்ள முன்னேஸ்வரம் கோயிலுள்ள சாசனம் (2181 of 1950) கோட்டையை ஆண்ட பராக்கிரமபாகு மன்னன் அக்கோயிலுக்குச் செய்த தானங் களை எடுத்துக் கூறுகிறது. கோவிற் பூசைக்காக எவ்வெவ்வளவு நிலங்கள் விடப் பட்டன எனவும் பூசகருக்கு எவ்வெவ்வாறு பண(மும், பொருளும் கொடுக்கப் பட்டன வென்றும் இச் சாசனத்திற் கூறப்பட்டுள்ளன. நிலம் சர்வமானியமாக விடப்பட்டது. இவ்வொழுங்கு சந்திராதித்யருள்ளவரை நிலைபெற வேண்டியது என முன்னேஸ்வரம் கல்வெட்டினை புத்தளம் மாவட்டக்கல் வெட்டுக்களில் இடம் பெற்ற பகுதியால் ஆராய்ந்த ஆ. வேலுப்பிள்ளை தமது சாசனமும் தமிழும் எனும் நூலில் குறிப்பிட் டுள்ளார்.

ஆ.வேலுப்பிள்ளையின் இச்சாசனக் கருத்து பூரணத்துவமற்றது, தவறுகள் உடையது எனக் கூறும் வரலாற்றாய்வாளார் சி. பத்மநாதன் மொண்ணீஸ்வரர் கோயிலிற் பதிவாகியிருக்கின்ற சமஸ்கிருதமும்தமிழும் கலப்பான சாசனவாசகத்தின் அட்டவணையைப் பின்வருமாறு தருகிறார்.

நன்மை பொருந்திய புத்தருடைய பாதத்திலுண்டானவராயும் இராசாதி ராசனாகியும் அன்னியராஜாக்களுக்கு நாயகராகியும் சிறிசங்கபோதி என்ற நாம தேயத்தையுடையவராகிய ஸ்ரீபராக்கிரமபாகு இராசனுடைய 38ஆவது ஆண்டு ஐப்பசி பூருவபக்கம் 10ம் திகதி முன்னீஸ்வரமுடைய தம்பிரானாரைப் பூசிக்கப்பட்ட குருக்கள் மாரை ஐயவர்த்தன கோட்டைக்கு அழைத்து......... முன்னீஸ்வரனாருடைய தலத்தின் செய்தி கேட்டு முன்பு குருக்கள்மாருக்கு நின்ற முன்னீஸ்வரத்தின் எல்லைக்குட்பட்ட தம்பிரானாருக்குத் திருநாமத்துக்கு காணியாகவும் இலுப்பத்தெணியில் அவணம் 22 கோட்டைப் புட்டியில் அவணம் 30 முதன்மைக்கு கற்பித்து தித்தக்கடையில் அவணம் 8 இதுக்குள்ள குடியிருப்பும் காடும் ஆகவும் முன்னேஸ்வரத்தில் குருக்கள்மாருக்கு கற்பித்த மனையுள்ளதும் முன்னாழி அரசியில் அமுது கறியமுது இலையமுது சுகந்தம் முதலானவையும் குருக்கள்மாருக்கு மாதமொன்றுக்கு பணம் முப்பதும் முதன்மைக்கு உடமைப்பணம் மாசமொன்றுக்கு ஒவ்வொருவருக்குப் பதினொன்றும் இவர்களுக்கு பாரம்பரியமாக சந்திராதித்யர் வரைக்கும் சருவமான்யமாக நடக்கும்படி முன்னீஸ்வரமுடைய தம்பிரானார்..........அபமதி மேலே யொருவராலும் விக்கினமே யின்றி இருக்கக் கற்பித்தருளின. இந்தக்காணிக்கும் தீமை செய்தவர்கள் பஞ்சமாபாதங் களைச் செய்தவராயும் நன்மை செய்தவர்கள் சூரிய பதவியைப் பெறக் கடவராகவும்

இப்படிக்கு தேவகணங்களுக்கெல்லாம் நாதனாயிருக்கப்பட்ட, சிவஞானசமுத் திரரான மொண்ணீஸ்வரருடைய கிருபையினால் பராக்கிரமனாற் பதிதற்பண் ணப்பட்டன.

கலிகால சர்வக்ஞ பண்டிதன் எனும் பட்டத்தையுடைய ஒன்பதாம் பராக்கிரம பாகு (கி.பி. 1509-1528) முன்னேஸ்வரத்திற்கு வந்து ஸ்ரீமகாவிஷ்ணுவை வழிபட்டு கோயிலுக்குப் பல கிராமங்களை கி.பி. 1517ம் வருடம் சர்வமானியமாகத் தாமிரசாசனம் செய்தான் என முன்னேஸ்வர மான்மியம் உரைக்கிறது.

பதினாறாம் நூற்றாண்டிலேயே போர்த்துக்கேயரால் ஏனைய தலங்களைப் போல அழிவுக்குள்ளாக்கப்பட்ட இம்முன்னேஸ்வரதிருத்தலத்தை கீர்த்தி ஸ்ரீராஜசிங்க மன்னர் (கி.பி.1747-1782) இந்தியாவிலிருந்து சிற்பாசாரியர்களை அழைப்பித்து திருப்பணிகளைக் குறைவற நிறைவேற்றி, 1753ம் ஆண்டு மகாகும்பாபிஷேகத்தை நடாத்தி வைத்தான்.

கோயிலின் நித்திய, நைமித்திய கடமைகள் குறைவின்றி நடைபெற ஏற்பாடு களைச் செய்து, குருக்கள்மாருக்கு முப்பத்திரண்டு அவண நெல்விளை நிலங்களைச் சாலிவாகனசகாப்தம் ஆயிரத்தறுநூற்றெழுபத்தைந்து செல்லாநின்ற ஸ்ரீமுக வருஷம் ஆவணி மாதம் பதினான்காம் திகதி கி.பி. 1753ம் ஆண்டில் தாமிரசாசனம் பண்ணிச் சொந்தமாக கொடுத்தான் எனவும் முன்னேஸ்வர மான்மியம் மேலும் உரைக்கிறது.

மேற்குறிப்பிட்ட சிலாசாசனம், தாமிரசாசனம் மூலம் முன்னேஸ்வரத்தின் பெருமைகளையும், இலங்கை அரசர்களில் சிலர் அதற்களித்திருந்த ஆதரவினையும் அறியக் கூடியதாக உள்ளது. இவ்வாறு முன்னேஸ்வர மான்மியம் முன்னேஸ்வரப் பெருமைகளை விரித்துக்கூறுகிறது. இதைவிட, ஈழநாட்டின் முக்கியமான கோயில் களைப் பற்றிக் கூறும் "கோகில சந்தேசய" (குயில் விடுதூது) எனும் சிங்கள இலக் கிய நூல், இலங்கையின் தென்பகுதியாகிய மாத்தறையில் இருந்து மேற்குக் கரை யோரப் பகுதியினூடாக யாழ்ப்பாணத்தில் உள்ள கோயில்களைப் பற்றிக் குறிப்பிடு கையில் முன்னேஸ்வரம் கோயில் முக்கியமானதொன்று என விளம்புகிறது.

முன்னேஸ்வர ஆலயத்தின் அம்பிகையின் பெயரால் நாணயங்கள் அச்சிட்டு உபயோகித்து வந்தார்கள் எனக் கூறப்படுகிறது. நீண்டு, வளைந்த உருவத்தினைக் கொண்ட இந்த நாணயத்தை தமிழில் "குறட்டுக்காசு" என்பர். இதன் நீண்டு வளைந்த பகுதியின் வெளிப்புறத்தில் "பரஸ்ராம" என்ற சோழகிரந்த எழுத்துக்கள் காணப்படு கின்றன.

## கோயில் அமைப்பு

பெரிய கோயிலெனப்படும் முன்னேஸ்வரம் கோயிலைச் சுற்றிப் பல சிறிய கோயில்கள் அமையப் பெற்றுள்ளன. கோயிலின் தென்கிழக்குத் திசையில், வேட டைத் திருமடமெனப்படும் விநாயகர் ஆலயமும், கோயிலின் மூன்றாம் வீதியின் வடமேற்கு மூலையில் ஐயனார் கோயிலும், வடக்குத்திசையில் காளி கோயிலும், தென் திசையில் இருக்கும் வயல்களுக்கு நடுவில்களத்துப் பிள்ளையார் ஆலயமும் காணப்படுகின்றன. இவ்வாறு கோயிலின் புறத்தோற்றவமைப்பு காணப்படுகிறது.

முன்னேஸ்வரத்தீர்த்தமாக விளங்கும் மாயவனாறு (தெதுறுஓய) கோயிலின் வடக்கெல்லையாக மத்திய மலைநாட்டின் மேற்கே குருணாகலில் குன்று ஒன்றி லிருந்து உருவாகி சுமார் 72.கி.மீ தூரம் மேற்கு நோக்கி பிரவாஹித்துக் கொண்டு மேற்கு கடற்கரையிலே இந்துமாசமுத்திரத்தில் சங்கமிக்கிறது.

முன்னேஸ்வரக்கோயிலில் பெரியராஜ கோபுரங்கள் எதனையும் காண முடியா விட்டாலும் அதற்குரிய அடித்தளங்களை கிழக்கு வாயிலும், தெற்கு வாயிலிலும் கொண்டு விளங்குகிறது. மத்திய பகுதியில் கர்ப்பக்கிருஹம், அர்த்தமண்டகும், மஹா மண்டபம் என்பன ஏனைய ஆலயங்கள் போலவே ஆகமவிதிக்கமைய அமைக்கப்பட் டுள்ளன. இவை யாவும் கருங்கற்களால் ஆனவை இவற்றின் அமைப்பைக் கூர்ந்து நோக்கும் போது இவை பதினான்காம், பதினைந்தாம் நூற்றாண்டுக்குரியவையாக இருக்கலாம் (விஜய நகரபாணி) என அறிஞர் கருதுவர்.

இலங்கையில் காணப்படும் ஏனைய சிவத்தலங்களில் பிற்கால கோபுர அமைப்பு சிறந்து காணப்பட இங்கு விமானம் முக்கியம் பெறுகிறது. தற்போது காட்சியளிக்கும் விமானம் 46 அடி உயரமானதாகவும் முழுவதும் செங்கல்லினால் ஆனதாகவும் விளங்குகிறது. மூன்று தளங்களைக் கொண்ட இவ் விமானம் கண்டி மன்னர் காலத்தில் கட்டப்பட்டது. பின்வந்த காலங்களில் புனருத்தாரணம் செய்யப்பட்டது. மூலஸ்தானத்தைச் சுற்றி தெற்குப் புறக் கோஷ்டங்களில் முறையே நிருத்த கணபதி, தட்சிணா மூர்த்தி விக்கிரகங்களும், வடக்குப்புறக் கோஷ்டங்களில் துர்க்கை, பிரமன் முதலிய விக்கிரகங்களும், பின்புறத்தே இலிங்கோற்பவமூர்த்தியும் காட்சி தருகின்றன. இவ்லிங்கோற்பவ மூர்த்தியின் பின் புறம் உடைந்த நிலை யிலேயே இன்று இருப்பதை காணலாம். இலிங்கோற்பவமூர்த்திக்கு முன்புறமாக உள்ள ஆறு அடி உயரமான கற்குத்து விளக்கு உடைந்த நிலையிலிருந்தாலும் கூட சிவராத்திரி போன்ற விசேட தினங்களில் நெய்யூற்றி விளக்கேற்றப்படுவதைக் காணலாம். இவற்றை விட பரிவார தெய்வங்கள் ஆக விநாயகர், சுப்பிரமணியர் மஹாவிஷ்ணு, நவக்கிரகம், பைரவர், சண்டேஸ்வரர், துர்க்கை, லட்சுமி, சரஸ்வதி, நரசிம்மமூர்த்தி, சரபமூர்த்தி, விஸ்வரூபம் ஆகியவையும் காணப்படுகின்றன. இவற்றில் துர்க்கை, லட்சுமி, சரஸ்வதி, நரசிம்ம மூர்த்தி, சரபமூர்த்தி, அனந்தசயன மூர்த்தி இதைவிட உற்சவகாலத்தின் பொருட்டு விநாயகர், சுப்பிரமணியர், ஆறுமுக சாமி, சோமஸ்கந்தர், சந்திரசேகரர், மஹாமாரி, பிரதோஷமூர்த்தி சண்டேஸ்வரர், நடராச மூர்த்தி முதலிய தாமிரவிக்கிரகங்களும் காணப்படகின்றன.

மேலும் 63 நாயன்மார்களின் திருவுருங்கள் காணப்படும் கோயிலாகவும் முன்னேஸ்வரம் விளங்குகிறது. இங்கு காணப்படும் பிச்சாடனமூர்த்தி அளவில் பெரியதாகவும், கலையம்சம் பொருந்தியதாகவும் விளங்குகிறது.

கற்களாலமைந்து பிரம்மாண்டமாகக் காட்சியளிக்கும் மூலஸ்தானத்திலே சிவலிங்கத்திற்கு இடது புறமாக வடிவாம்பிகையின் தாமிரவிக்கிரகமும் அதன் முன் ஸ்ரீசக்ரயந்திரமும் காணப்படுகின்றன. இந்த அம்மன் விக்கிரகத்தைப் பற்றிய கர்ண பரம்பரைக் கதை ஒன்றுள்ளது. அது பின்வருமாறு.

முன்னொரு காலத்தில் செம்படவன் ஒருவன், முன்னேஸ்வரத்தில் இருந்து சிலமைல் தொலைவில் மீன்பிடிக்கச் சென்ற போது சிறுவன் ஒருவனும், அழகான சிறுமியும் விளையாடிக் கொண்டிருந்தனர். செம்படவனைக் கண்ட அவர்கள் மாயமாக மறைந்து போனார்கள். மறுநாள், அவர்களில் சிறுமியை மட்டுமே செம்படவனால் பிடிக்க முடிந்தது. செம்படவனால் கைப்பற்றப்பட்ட சிறுமியோ தங்கமயமானதொரு சிறுவிக்கிரகமாக மாறிவிட்டாள். செய்தி அறிந்த அக்கால அரசன் குறிப்பிட்ட விக்கிரகத்தைப் போன்ற பல விக்கிரகங்களைச் செய்வித்து செம்படவன் கைப்பற்றிய மாயவிக்கிரகத்தை அடையாளம் காட்டுமாறு பணித்தான். செம்படவனும் கலங்கி நிற்க, இரவே அவன் கனவில் அம்மன் உருவம் தோன்றி "நீ அடையாளம் காட்டும் போது எந்த விக்கிரகத்தின் வலது கால் சிறிது அசைகிறதோ அதுவே அடையாளம் காட்டப்பட வேண்டிய விக்கிரகம்" எனக்கூறியது.மறுநாள் செம்படவன்அடையாளம் காட்ட அரசன் அவ்விக்கிரகத்தை பல்வேறு உபசாரங்களோடு கோயிலுக்கு கொண்டு வந்து வழிபட்டான். அந்த அம்மன் விக்கிரகமே கர்ப்பக்கிருஹத்தில் இருப்பதாக கூறுவர். அம்மன் விக்கிரகம் போக சத்தி என அழைக்கப்படுகிறாள்.

அர்த்தமண்டபத்திற்கு அடுத்ததாகக் காணப்படும் மஹாமண்டபத்தில் மேற் கூரையில் கீழ் நோக்கியவாறு பல சிற்பங்கள் காணப்படுகின்றன. இதில் நடுவே காணப்படும் ராசிச் சக்கரம் போன்ற சிற்பத்தில் மீன் அல்லது இரட்டைமகரம் போன்ற வடிவம் காணப்படுகின்றது. இச்சின்னம் பாண்டியர் ஆட்சிக்குரியது. இச்சிற்பம் இக்கோயிலோடு பாண்டிய மன்னர்களுக்குள்ள தொடர்பைக் காட்டுவதாக விளங்கு கின்றது. எனினும் இவ்வாய்வு தொடரப்பட வேண்டிய ஒன்றாகும். மஹாமண்டபத்தில் காணப்படும் தூண்களில் சிற்பவேலைப்பாடுகள் குறைவாக இருந்த போதும், தூண் கள் பிரமாண்டதாகவும் பழைமையைப் பறைசாற்றுவனவாகவும் காணப்படுகின்றன.

தெற்கு நோக்கி அம்பாள் சந்நிதியும் (சிலாவடிவம்), மூலஸ்தானத்திற்கு நேரே நந்தியும், பலிபீடமும், கொடி மரமும் காணப்படுகின்றன. இங்குள்ள விக்கிர கங்களில் நந்தி விக்கிரகமும் சிறப்பான கலையம்சங்கள் பொருந்தியது. உற்சவகால வசந்த மண்டபம் கோயிலின் உட்புறமாக தென்மேற்கு மூலையிலே அமைந் திருக்கிறது.

## முன்னேஸ்வரமும் அந்தணர்களும்.

முன்னேஸ்வர வரலாற்றை கூர்ந்து நோக்குகையில், அக்கோயிலுக்கும் அந்தணர்களுக்குமிடையில் நெருக்கமான வரலாற்றுத் தொடர்பு இருப்பதைக் காண முடிகிறது.

ஆறாம் பராக்கிரமபாகு கல்வெட்டச்சாசனத்தை கோயிலுக்கு கையளித்த போது, நீலகண்டர் என்பவர் இங்கு பிரதான குருவாகவும், அவருடைய சகோதரர் பரி பாலன கர்த்தாவாகவும் விளங்கினர் என்று கோயிலில் உள்ளபழைய ஏடு ஒன்று சான்று பகிர்கின்றது. ஆனால், இவ்வேடு இன்று காணக்கிடைத்திலது. கல்வெட்டுச் சாசன அடிப்படையில் நோக்குகையில் ஆறாம் பராக்கிரமபாகு முன்னேஸ்வரத்துடன் நெருங்கிய தொடர்புடையவனாகக் காணப்படுகின்றான்.இவன் கோயில் பூசைகளில்

ஈடுபட்டிருந்த நம்பிமார்களாகிய பிராமணர்களை ஜயவர்த்தன கோட்டைக்கு அழைத்து கோயில் விவகாரங்கள் தொடர்பாக விஜசமகாவ பண்டிதர் புரோகிதர் என்பவரை விசாரித்தான்.

விஜசமகாவபண்டிதர் என்பது தனிப்பட்ட ஒருவரின் பெயர் எனத் தெரிகிறது. புரோகிதர் எனப்படுபவர் தனிப்பட்ட ஒருவரின் சமய நடவடிக்கைகளுக்காக நியமிக்கப் பட்டவர். விஜசமகாவ பண்டிதர் பராக்கிரமபாகுவின் புரோகிதராக இருந்தவர். இவர் முன்னேஸ்வர நம்பிமார்களோடு எவ்வாறான உறவைக் கொண்டிருந்தார் என்பது தெரியவில்லை. ஒன்றில் இவர் அரசனின் புரோகிதராக இருந்து கொண்டு நம்பிமார் களின் தலைமைக் குருவாக இருந்திருக்கலாம். அல்லது புரோகிதராக இருந்து பின் நம்பிமார்களில் ஒருவராகியிருக்கலாம். எவ்வாறெனினும் கல்வெட்டுச்சாசனப்பிரகாரம் நீலகண்டர் என்பாரும் அவர் சகோதரரும் இவ் நம்பிமார் வழிவந்தவர்கள் என்பது நிருபணமாகிறது.

கீர்த்தி ராஜசிங்க மன்னன் திருப்பணியைக் கூறும் செப்புப்பட்டயத்திலும் நம்பிமாருக்கு விளைநிலங்களை அளித்தான் எனும் செய்தி இடம் பெற்றிருத்தல் இங்கு நோக்கற்பாலது. இதன் பின் முன்னேஸ்வர அந்தணர் மரபில் முக்கியமான வராக விளங்குபவர் குமாரஸ்வாமிக் குருக்கள். இவர் தமிழ் நாட்டின் காஞ்சிபுரத் தைச் சேர்ந்தவர். இவர் மரபில் வந்த மு.சோமஸ்கந்த குருக்களே முன்னேஸ்வர மான்மியத்தை முதல் பதிப்புச் செய்தவர். இவர் குமாரஸ்வாமிக் குருக்களின் பேரனா வார். இவர்கள் மரபில் வந்த அந்தணர்களே இன்றும் ஆதீனகர்த்தாக்களாகவும், பூசகர்களாகவும் விளங்குகின்றனர்.

## நித்தியபூசைகளும், உற்சவங்களும்.

தினமும். உஷாக்காலப் பூசை, காலைச்சந்தி பூசை, உச்சிக்காலப்பூசை, சாயரட்டைப்பூசை, இரண்டாம் காலப்பூசை, அர்த்தசாமம், ஆகிய ஆறுகாலப்பூசைகள் நடைபெறுகின்றன. ஒவ்வொரு மாதமும் பௌர்ணமியன்று பர்வயந்திர பூசைசிறப்பாக நடைபெறுகிறது. இதைவிட சித்திரை மாத வசந்த நவராத்திரி, சிவராத்திரி, திரு வெம்பாவை, லட்சார்ச்சனை போன்ற உற்சவங்களும் நடைபெறுகின்றன.

இலங்கையில் கோடியர்ச்சனை நடைபெறும் ஒரேயொரு ஆலயம் முன்னேஸ் வரமாகும். இங்கு மஹோற்சவம் ஆவணிமாத பௌர்ணமியை முடிவாகக் கொண்டு முதல் இருபத்தேழு அல்லது இருபத்தெட்டுத் தினங்கள் நடைபெறும். இக்காலங்களில் விசேட உற்சவங்களாக தீமிதிப்பு, விஷ்ணுதிருவிழா, பக்தோற்சவம்(அறுபத்து மூன்று நாயன்மார் திருவிழா), பிச்சாடனோற்சவம், நடராச உற்சவம், வேட்டைத் திருவிழா, தேர் உற்சவம், தீர்த்த உற்சவம் என்பன நடைபெறுகின்றன. இதைவிட மாசி மாதத் தில் பத்து நாட்கள் பிரம்மோற்சவம் நடைபெறுகிறது. ஏனைய சிவத் தலங்களில் சிவனுக்கு ஓர் உற்சவம், அம்மனுக்கு ஓர் உற்சவம் எனும் முறைமையில் நடைபெற இங்கு இரு உற்சவங்களும் சிவனுக்கே நடைபெறுகின்றன. மஹோற்சவ தீர்த்த உற்சவம் மாயவனாற்றிலே நடைபெறுவது குறிப்பித்தக்கது. இவ்விழாக் காலங்களில் இன, மத வேறுபாடுகளின்றி பல தரப்பட்ட மக்களும் இதில் கலந்து கொள்கிறார்கள்.

## கோயிலைச்சுற்றியுள்ள மடங்கள்.

கோயிலைச்சுற்றி நான்கு பெரிய மடங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளதாகக் கூறுகிறார் முன்னேஸ்வர வரலாற்று நூலாசிரியர். ஆனால் இன்று இரு மடங்களே காணப்படுகினறன. அவை கொழும்பார் மடமும், திருக்குறிப்பு நாயன்மார் மடமும் ஆகும். இவை இன்று தனிப்பட்டவர்களால் நிர்வகிக்கப்படுகின்றன. விழாக்காலங் களில் மட்டுமன்றி இங்கு வாழும் இந்துக்கள் தங்கள் திருமணம் போன்ற நிகழ்ச்சி களையும் நடாத்த இம்மடங்களை உபயோகிப்பதைக் காணமுடிகிறது.

எண்ணிக்கையடிப்படையில் இங்கு வரும் சைவ அடியார்களை விட, பௌத் தர்களே அதிகம். எனினும், சைவமுறைமை வழுவாது ஆகமம் சார்ந்தகிரியை முறை களையும், வழிபாட்டு முறைகளையும் பேணும் ஆலயமாக முன்னேஸ்வரம் விளங்கு கிறது. இலங்கையிலேயே கதிர்காமத்துக்கு அடுத்தபடியாக யாத்திரிகர்கள் பெரு மளவு வந்து கூடுகின்ற தலமாகவும் முன்னேஸ்வரம் விளங்குகிறது.

## அடிக்குறிப்புக்கள்

1. Pathmanathan, S.(1999) TEMPLES OF SIVA IN SRILANKA, CHINMAYA MISSION PUBLICATION SRI LANKA, INTRODUCTION P.XI
2. திருமூலர் : திருமந்திரம், ப.476
3. முன்னேஸ்வரமான்மியம் (1949), முன்னேஸ்வரம் தேவஸ்தானம், முன்னேஸ் வரம், ப.36
4. கதிர் தணிகாசலம் (1992) தமிழர் வரலாறும் இலங்கை இடம் பெயர் ஆய்வும், சரவணா பதிப்பகம், சென்னை
5. THE ANCIENT PAGODA OF MUNUCARAO - Dequeyros P.427 (பார்க்க முன்னேஸ்வர வரலாறு பக்கம் 2)
6. சிவராமகிஷ்ணசர்மா, பா.( 1968), முன்னேஸ்வர வரலாறு ப.2
7. கைலாச நாதக்குருக்கள் கா (1963) சைவத்திருக்கோயிற் கிரியை நெறி, இந்து கலாபிவிருத்திச் சங்கம் ப.X
8. நடராசா க.செ.(1987), ஈழத்துத் தமிழ் இலக்கியவளர்ச்சி, காந்தளகம், சென்னை, ப.14
9. பதினெட்டுப் புராணச் சருக்கம், நான்காம் பாகம் ப.570
10. பாலசுப்பிரமணியக்குருக்கள் (1961), முன்னேஸ்வரமான்மியம் பதினைந்தாம் அத்தியாயம், முன்னேஸ்வரம் தேவஸ்தானம். பக். 3-4
11. Rasanayakam.C ,(1926) Ancient Jaffna, C.C.S,P.83
12. பாலசுப்பிரமணியக் குருக்கள் (1961), மு.கு.நூல் பதினாறாம் அத்தியாயம், முன்னேஸ்வரம் தேவஸ்தானம்.பக்.5-6
13. பாலசுப்பிரமணியக் குருக்கள் (1961), மு.கு.நூல் குமாரஸ்வாமிக் குருக்கள் வழிபாட்டுப்படலம், முன்னேஸ்வரம் தேவஸ்தானம்.ப.13
14. சிவராமகிருஷ்ணசர்மா, பா(1968), மு.கு.நூல் ப.9
15. VELLUPILLAI,A. (1970) ஏப்ரல், சாசனமும் தமிழும் ப.349
16. pathmanathan.S (1974) The Munneswaram Tamil Inscription of Parakaramabahu VI, Journal R.A.S.(Srilanakan) vol XVIII.P.P.68-69
17. சிவராமகிருஷ்ணசர்மா, பா.(1968) , மு.கு நூல் ப.9
18. மேலது ப.10
19. சிவராமகிருஷ்ணசர்மா, பா. (1968) மு.கு.நூல் ப.10
20. மேலது ப.2
21. சிவராமகிருஷ்ணசர்மா, பா.(1968)மு.கு.நூல் ப.11
22. Somakandhan P.(1999) Munneeswaram Temples of Siva in Srilanka, Chinmaya Mission Publication srilanka, P.58
23. Ibid P.59
24. சிவராமகிருஷ்ணசர்மா, பா. (1968), மு.கு.நூல் ப.9
25. கோயிலில் உள்ள பெரும்பாலான ஏடுகள் இன்று கறையானுக்கு இலக்காகி விட்டன. அவற்றில் இதுவும் ஒன்றாக இருக்கலாம்.
26. Somakandhan P.(1999) Munneswaram Temples of siva in sri lanka, chinmaya mission publication sri lanka,p.51
27. சிவராமகிருஷ்ணசர்மா, பா. (1968), மு.கு.நூல் ப.10

# இயல் இரண்டு

# முன்னேஸ்வரப் பிரபந்தங்கள் ஓர் அறிமுகம்

தமிழ் இலக்கியப் பரப்பில் பிரபந்தங்கள் முக்கிய இடம்பெற்று விளங்குகின்றன. பிரபந்தம் எனும் வடசொல் நூல் அல்லது இலக்கியம் எனும் பொருள்களை உடையது. இப் பொருளிலேயே நாலாயிர திவ்வியப்பிரபந்தம் பெயர் பெறுகின்றது. நம்பியாண்டார் நம்பி தொகுத்த, பதினோராம் திருமுறைக்கும் பிரபந்தமாலை என்று பெயரிட்டுள்ளார். தமிழிலக்கிய மரபில் சிற்றிலக்கியம், பேரிலக்கியம் என்ற பாகுபாடு உண்டு. இவற்றில் சிற்றிலக்கியத்தை பிரபந்தம் எனவும், பேரிலக்கியத்தை காவியம் எனவும் குறிப்பிடலாம்.

தமிழில்செய்யுள் வகை கூறும் இலக்கண நூல்களாக பாட்டியல் நூல்கள் விளங்குகின்றன. பிரபந்தங்களின்இலக்கணம் கூறும் இப்பாட்டியல் நூல்கள் பிரபந் தத்தை "பாட்டு" எனும் பொருளிலேயே வழங்குகின்றன. ஆகவே, பல்வேறு செய்யுள் வகைகளான இலக்கியங்களைச் சுட்டி நிற்கும் இலக்கியச்சட்டகமே பிரபந்தம் எனலாம். பாட்டியல் நூல்களின் தோற்றத்தின் பின்னரே பிரபந்தம் என்ற பெயரும் அவை தொண்ணூற்றாறு எனும் வகையும், அவற்றின் இலக்கணங்களும் இயற்றப் பட்டன.

சங்ககாலத்தே தனிநிலைப்பாடலும் பின்னர்க் காப்பியங்களும் தோன்றியதை யடுத்து பக்தி இலக்கியம் தோன்றியது. பக்தி இயக்கத்தின் போது நாயன்மார்களும், ஆழ்வார்களும் சமயத்தை மக்களிடையே எழுச்சியோடு பரப்ப முற்பட்டனர். அவ்வாறு மக்களிடையே சென்று பரப்ப இலக்கியம் மிகச் சிறந்த சாதனமாகப் பயன்பட்டது. எனவே இலக்கியத்தில் பல்வேறு வகைகளைக் காணும் முயற்சி ஏற்பட்டது. இலக்கியத்தால் மக்களைக் கவர்ந்து சமயத்தைப் பரப்ப நினைத்த போது இலக்கியம் எனும் கருவி மக்களைக் கவரத்தக்க வகையில் மாற்றத்திற்குள்ளாகியது. இசை யோடு இணைதல், நாட்டுப்புற வடிவங்களை ஏற்றல், பல வடிவங்கள் உருவாதல் போன்ற மாற்றங்கள் அதனால் ஏற்பட்டன. ஆகவே, பக்தி இயக்கமே பிரபந்தங்கள் பெருக்கக் காரணமாக இருந்தது எனலாம்.

முதலில் பக்திப்பதிகம் பாடியவரான காரைக்காலம்மையார் பாடிய இரட்டை மணிமாலை பிரபந்த வகையுள் ஒன்றாக வளர்ந்தது. கண்ணனது பிள்ளைப்பரு வத்தில் பெரிதும் ஈடுபாடுடைய பெரியாழ்வார் பாடிய பாடல்கள் பிள்ளைத்தமிழ் உருவாகக் காரணமாக இருந்தன. அம்மானை, ஊசல், தூது, சதகம், கேசாதிபாதம், உலா முதலியன அவ்வாறே பக்திப் பாடல்களிலிருந்து தோற்றம் கொண்டன. இவ்வாறு பக்தி இலக்கிய பிரபந்தங்களின் தோற்றத்திற்கு காரணமாக இருந்தது. மேற்கூறியவற்றின் தொடர்ச்சியாக பிற்காலத்தில் பிரபந்தங்களில் பெரும்பான்மை சமயச்சார்புடையனவாக விளங்குகின்றன.

சங்ககாலத்தை அடுத்து தமிழில் "தொடர்நிலைச் செய்யுள் மரபு" ஒன்று உரு வாகிறது. தொடர்நிலைச் செய்யுள் என்பது செய்யுளில் ஒரு கதை தொடர்ச்சியாக

வருவதைக் குறிப்பதாகும். சங்க இலக்கியப் பாடல்களை இதனோடு ஒப்பிடுகையில் தொடர்நிலையின் எதிரான தொகைநிலையாகக் காணப்படுகிறது. அதாவது தனித் தனிப் பாடல்களின் தொகுதியாக அமைந்துள்ளன. அதில் ஒரு கதை தொடர்ச்சியாக கிடையாது.

செய்யுட்கு உரிய அணியிலக்கணம் வகுத்துரைத்த தண்டியாசிரியர் தம் நூலின் தொடக்கத்தே செய்யுள்வகைகளை

"செய்யுள் என்பதை தெரிவுற விரிப்பின்
முத்தகம் குளகம் தொகை தொடர்நிலையென
எத்திறத் தனவும் ஈரிரண்டாகும்"

என நான்கு வகைப்படுத்தி விவரித்திருக்கிறார். இவற்றுள் இறுதியில் குறிக்கப்பட்ட தொடர்நிலைச் செய்யுள் என்பது பெருங்காப்பியமும் சிறுகாப்பியமுமாக உள்ள இலக்கியங்களே சிறுகாப்பியமும் சிற்றிலக்கியமும் ஒன்றெனத் தண்டியலங் கார உரை கருதுகிறது.

சங்ககாலத்து தனிநிலைச் செய்யுள் மரபு தொடர்நிலைச் செய்யுள் மரபாக மாற்றமற்று வளர்கின்ற காலப்பகுதிகளிலேயே பிரபந்தங்கள் தோன்ற ஆரம்பிக் கின்றன. பிரபந்தங்கள் தொடர்நிலைச்செய்யுள் மரபைப் பேணி வருகின்றன.

பிரபந்தங்கள் சொற்றொடர் நிலைச் செய்யுள், பொருட்டொடர் நிலைச் செய்யுள் என இருவகையாக ஆக்கப்படுகின்றன. அந்தாதி சொற்றொடர் நிலைச் செய்யுள் வகையாகும். கோவை, புராணம் என்பன பொருட்தொடர் நிலைச்செய்யுள் வகைகளாகும். பதிகம், பிள்ளைத்தமிழ் போன்றவை புறப்பொருள் தழுவி இயற்றப் படுவன. இப் பிரபந்தங்கள் ஒரு பொருளை பலபட புனைந்தும்,.......... ஒரு பொருளை பல உபதலைப்புகளிற் புகழ்ந்து பாடுபவையாகவும் காணப்படுகின்றன. ஒரு பொருளை பல உபதலைப்புகளிற் பாடுதற்கு பிள்ளைத்தமிழ் உதாரணமாகும்.

தொல்காப்பியம் கூறும் எண்வகை வனப்புக்களான அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைவு. என்பவற்றைப் பிரபந்தங்கள் தத்தம் பண்புகளுக்கேற்ற வனப்புகளைக் கொண்டு விளங்குகின்றன.

**தமிழிலக்கிய வரலாற்றில் பிரபந்தம்.**

தமிழ் இலக்கியம் சங்க காலத்திய எட்டுத் தொகை, பத்துப்பாட்டு தொடக்கம் இன்று வரை தொடர்ச்சியான வளர்ச்சிப்போக்கைக் கொண்டதாக விளங்குகிறது. கைக்கிளை, கையறுநிலை, இயன்மொழி, வாழ்த்து, பெருமங்கலம், ஆற்றுப்படை, வாயுறை, வாழ்த்து, செவியறிவுறா, புறநிலைவாழ்த்து என்பன சங்ககாலத்தில் தோன்றி யவை எனினும் அக்காலத்தில் பிரபந்தம் எனும் பெயரை அவை பெற்றிருக்கவில்லை.

அறநெறிக்காலமாகிய சங்கமருவிய காலத்தில் அறநூல்கள் பெருந்தொகை யாகத் தோன்றிய போதும் பக்தி இலக்கியத்திற்கு வித்திட்ட காரைக்காலம்மையார்

திருவிரட்டைமணிமாலை, அற்புதத்திருவந்தாதி, திருவாலங்காட்டு மூத்ததிருப்பதிகம் போன்ற நூல்களையும், முதலாழ்வார்கள் மூவரும் மூன்று திருவந்தாதிகளையும் இயற்றினர். இவை கட்டளைக்கலித்துறை, விருத்தப்பா, வெண்பா போன்ற யாப்புக் களைப் பயன்படுத்திப் பாடப்பட்ட பிரபந்தவகைகளாகும்.

தெய்வத்தை பாடுபொருளாகக் கொண்ட பக்தி இலக்கியங்கள் பல்லவர் காலத்தில் பெருமளவு எழுந்தன. தேவாரத் திருமுறைகள், திருவாசகம், திருக் கோவையர், திவ்ய பிரபந்தப் பாசுரங்கள், போன்றன தோன்றின. சிற்றளவில் அரசர் களின் வீரச்செயல்களைப் போற்றும் ''பொன்வண்ணத்தந்தாதி'' ''திருக்கைலாய ஞானவுலா'' போன்றவையும் இக் காலத்திலே தோன்றின.

சோழர் காலத்தில் கம்பராமாயணம் போன்ற பேரிலக்கியம் மாத்திரமின்றி பெரியபுராயம், கந்தபுராணம் போன்ற புராண நூல்களும் கலிங்கத்துப்பரணி, தக்க யாகப்பரணி, குலோத்துங்கசோழன் பிள்ளைத்தமிழ் போன்ற பிரபந்த வகைகளும் இயற்றப்பட்டன. இக்காலத்திலேயே பிரபந்தம் எனும் சொல்லாட்சி தமிழ் இலக்கியத் தில் செல்வாக்கு பெறத் தொடங்குகிறது.

சமயச் சார்பும், தத்துவச்சார்பும், வித்துவத் திறனும் காட்டுவனவாக விஜய நகர நாயக்கர் காலத்திற் பல இலக்கிய வடிவங்கள் கையாளப்பட்டன. உலகியல் பாட முன்பு கையாளப்பட்ட வடிவங்களுக்குட் கருத்துக்களைப் புகுத்திக்காட்ட இக் காலப்புலவர்கள் முனைந்தனர் என்ற சி.தில்லைநாதனின் கூற்று விஜய நகரநாயக்கர் காலத்தில் பிரபந்தங்கள் பெருவாரியாக எழுந்தமையும், அவை சமயச் சார்புடைய வனாக விளங்கியதையும் காட்டுகின்றன. இக் காலகட்டம் "பிரபந்த காலம்" எனும் பெயருடன் விளங்குவது இங்கு நோக்கத்தக்கது.

இதற்கு அக் காலத்து அரசியல், சமுதாய, பண்பாட்டு சூழ்நிலைகளே காரணமாக இருந்திருக்கிறது எனலாம். பரணி, உலா, பள்ளு முதலிய பிரபந்த இலக்கியங்கள் இக்காலத்தில் பெருமளவில் எழுந்தன.

ஐரோப்பியர் காலத்திலே இஸ்லாமிய சமயநூல்களும் வைதீக சமய நூல்களைப் பின்பற்றி எழுந்துள்ளமைக்கு முகையதீன் புராணம், நாகையந்தாதி ஆகிய பிரபந்தங்கள் உதாரணங்கள் ஆகும்.

இருபதாம் நூற்றாண்டு தமிழ்க் கவிஞரான பாரதியும் நான்மணிமாலை எனும் பிரபந்த வகையைப் பயன்படுத்தி விநாயகர் நான்மணிமாலை எனும் பிரபந்தத்தைப் பாடியுள்ளார். பாரதியாரின் இந் நான்மணிமாலை பற்றிக் கூற வந்த வ.மகேஸ்வரன்,

"எனவே தனது மனதில் ஏற்பட்ட சஞ்சலம், சலிப்பு. துன்பம், முதலியவை நீங்க மணக்குள விநாயகர் மீடு அவர்மனம் ஆற்றுப்படுத்தப்பட்டு. இந்த இலக்கிய வடிவத்தை எழுதியிருக்க வேண்டும்." என்கிறார். இதனை இருபதாம் நூற்றாண்டில் மட்டுமன்றி தற்காலத்திலும் சமயச் சார்பு கொண்ட பிரபந்தம் தோன்றுவதற்கான

காரணமாகவும் கொள்ளலாம். புறச் சூழலின் எதிரான தாக்கத்தினால் உந்தப்பட்ட புலவர்களினதும், கவிஞர்களினதும் கற்பனைகள் இறைவன் மாட்டுச் செல்லும். அவ்வாறான நிலையில் பிரபந்த வடிவங்களை கையாண்டு அவர்கள் இலக்கியம் படைப்பர் என்பது. இதன் மூலம் புலனாகிறது.

## தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்கள் பற்றிய கருத்து நிலைகள்

தமிழில் உள்ள பிரபந்தங்கள் தொண்ணூற்றாறு என்பதை பத்தொன்பதாம் நூற்றாண்டில் எழுந்த பிரபந்த தீபிகை,

"பதினாறை யாறிற் பெருக்கி பிரபந்தாதி
பல வகை எடுத்துரைக்கின்.........."[7] எனவும்

பதினெட்டாம் நூற்றாண்டு நூலான பிரபந்த மரபியல்,

"பிள்ளைக் கவிமுதல் புராணம் ஈறாத்
தொண்ணூற்றாறு எனும் தொகையதாம்" எனவும் குறிப்பிடுகின்றன.

இவை தவிர, வேறு பாட்டியல்நூல்களில் தொண்ணூற்றாறு எனும் வரையறை காணப்படவில்லை. இத் தொண்ணூற்றாறு பிரபந்தங்கள் எவை எவை, அவற்றின் இலக்கணம் என்ன என்பதை தெளிவாக முதலாவதாக வீரமாமுனிவர் சதுரகராதி தரு கிறது. படிக்காசுப் புலவர் என்பவர் பாடிய சிவந்தெழுந்த பல்லவராயன் உலா நூலில் "தொண்ணூற்றாறு கோல பிரபந்தங்கள் கொண்ட பிரான்" என்ற தொடர் பிரபந்தங் கள் தொண்ணூற்றாறு என்பதை தெரிவிக்கின்றது.

பல்வேறு காலகட்டங்களில் தோன்றிய பாட்டியல் நூல்களில் கூறப்படும் பிரபந்தங்களின் வகைகள்.

1. பன்னிரு பாட்டியல் (கி.பி பன்னிரண்டாம் நூற்றாண்டுக்கு முற்பட்டது)
61 பிரபந்தங்கள்.
2. வெண்பா பாட்டியல் (கி.பி பன்னிரண்டாம் நூற்றாண்டு)
55 பிரபந்தங்கள்.
3. நவநீத பாட்டியல் (கி.பி பதினான்காம் நூற்றாண்டு)
44 பிரபந்தங்கள்.
4. சிதம்பர பாட்டியல் (கி.பி பதினாறாம் நூற்றாண்டு)
63 பிரபந்தங்கள்.
5. இலக்கண விளக்கப் பாட்டியல் (கி.பி பதினேழாம் நூற்றாண்டின் பிற்பகுதி)
63 பிரபந்தங்கள்.

மேற்கூறிய தகவல்களைக் கொண்டு ஒரு முடிவுக்கு வரமுடியும் பல்வேறு காலங்களில் எழுந்த பாட்டியல் நூல்களில் பிரபந்த இலக்கணம் கூறப்பட்டாலும், அவற்றின் எண்ணிக்கையில் ஒரொழுங்கு இல்லை. ஆக, பாட்டியல் நூல்கள் கூறும் இலக்கிய வகையெல்லாம் தொகுத்து நோக்கினால் தொண்ணூற்றாறு வகை யென்பது பொருந்துமாறு இல்லை.

இத் தொண்ணூற்றாறு என்ற வரையறுக்குள் அடங்கிக் கூறப்படும் இலக்கியங்கள் யாவை என்பதிலும் பாட்டியல் நூல்களிடையே கருத்து வேறுபாடு இருக்கின்றது. சதகம் முதல் காப்பியம் ஈறாகப் பிரபந்தம் தொண்ணூற்றாறு எனவும் பிள்ளைக் கவிமுதல் புராணம் ஈறாகத் தொண்ணூற்றாறு எனக் கூறுவதும் வழக்காகக் காணப்படுகின்றது. இந்த இரு வகைகளிலும் அடங்காதுள்ள குடை, மங்கலம், தேவபாணி, மறம், யானைத்தொழில், இன்னிசைத் தொகை முதலிய பிரபந்தங்களுக்கும் சில பாட்டியல் நூல்களில் இலக்கணம் கூறப்பட்டுள்ளது.

ஆகவே, தொண்ணூற்றாறு என்ற எண் வரையறை பெரும்பாலான பாட்டியல் நூல்களில் காணப்படாததாலும், இவற்றில் குறிப்பிடப் பெறும் இலக்கியப் பெயர்களில் பாட்டியல் நூல்களிடையே காணப்படும் ஒற்றுமையின்மையும், குறிப்பிடப்படாத சில பிரபந்தங்களுக்கு பாட்டியல் நூல்களில் இலக்கணம் கூறப்படுவதாலும் பிரபந்தங்கள் தொண்ணூற்றாறு எனும் வரையறை ஏற்றுக் கொள்ள முடியாததாகும். மேலும், பல புதிய வகைப் பிரபந்தங்கள் இன்றும் ஆக்கப்பட்டு கொண்டிருக்கின்றன என்பதால், வளர்ந்து வரும் இலக்கிய வகையை இத்துணை எனக் கூறிவிடுதல் பொருத்தமன்று.

## முன்னேஸ்வரப் பிரபந்தங்கள் – அறிமுகம்

1) முனீச்சரத்தில் கோவில் கொண்டெழுந்தருளியிருக்கும் சிவபெருமான் தோத்திரப் பாமாலை.

   இதனை இயற்றியவர் யாழ்ப்பாணத்து கொக்குவிலைச் சேர்ந்த சி. சிலம்புநாத புள்ளை என்பவர். இதில் தோத்திரப் பாமாலை, திருத்தாண்டகப் பண், முனீஸ்வர ரூஞ்சல், பதிற்றந்தாதி என்பவை காணப்படுகின்றன. இந்நூல் வெளியிடப்பட்ட ஆண்டு, திகதி முதலியவை நூலில் குறிபிடப்படவில்லை. இந் நூலுக்கு ஸ்ரீவை குண்டம் சைவப் பிரகாசர் ஸ்ரீமத் கோவிந்த பிள்ளை என வழங்கும் சுந்தரமூர்த்திபிள்ளை அவர்கள் சிறப்புக்கவி வழங்கியுள்ளார்.

2) முனீஸ்வர வடிவழகி பதிகம்

   இது புழுதிவயல் எனுமிடத்தைச் சேர்ந்த S.R. தம்பு என்பவராற் பாடப்பட்டது. 1938 இல் யாழ்ப்பாணம் சைவப் பிரகாசயந்திர சாலையில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. இந் நூலின் முகப்பில் இந்நூலாசிரியரைப் பற்றி பின்வருமாறு குறிப்பிடப் பட்டுள்ளது.

   "புழுதிவயல் அரசாட்சியார் பாடசாலை தலைமை ஆசிரியரும், இயற்கையில் கவி பாடும் புலவரும், சோதிடப்பயிற்சியுடையாரும், இலங்கையின் இயற்கை மான் மியம், நயினை நாகபூஷணியந்தாதி, நெழுவினி விறியகரந்தாதி, இலங்கைத் தமிழ் தேசியவந்தாதி, நாகபூஷணியருள் நயத்தல், திரைமலைக் காதல் வெண்பா முதலியவற்றின் ஆசிரியருமாகிய தம்பு அவர்களாற் பாடபெற்றது.

3) முன்னைநாத சுவாமி நவதுதி

   இதனை இயற்றியவர் பண்டிதர் சி. மாணிக்கத்தியாகராசா. ஈழத்து ஆங்கிலேய காலத்துப் புலவர் என ஈழத்துத் தமிழ்க்கவிதை களஞ்சியம் இவரைக் குறிப்பிடு கிறது.

4) முனீசுவரந்தாதி

இந்நூற்தொகுப்பில் கதிரையந்தாதி, கதிரைப்பதிகம், கதிரைகண்ணிகள், கதிரைய கவல் போன்றனவும் காணப்படுகின்றன. இவற்றை இயற்றியவர் கொழும்பு அ.வைத்தியலிங்கம் என்பவர். இவை 1962இல் வெளியிடப்பெற்றன.

5) முன்னேஸ்வரர் திருவூஞ்சல்

இதனை இயற்றியவர் நாவலியூர் சோமசுந்தரப்புலவர். ஈழத்தின் தேசிய எழுச்சிக் கால புலவர்களுள் சிறப்பானவர். யாழ்ப்பாணப் பண்பாட்டின் உயர்வு குறித்து பல பாடல்களைப் பாடியவர்.

இதன் முதல் வெளியீடு 1878- 1953 இடைப்பட்ட காலப்பகுதியில் இடம் பெற்றது. இரண்டாவது பதிப்பு 1965 இல் வெளிவந்தது.

6) முன்னைநாதஸ்வாமி வடிவழகி அம்பாள் திருவூஞ்சல்

இதனைப் பாடியவர் சி.பாலசுப்பிரமணியக் குருக்கள். இது 1965 இல் வெளிவந்தது.

7) முன்னீஸ்வரம் ஸ்ரீ வடிவாம்பாள் கும்மி

முன்னைநாதர் வடிவாம்பாள் திருக்கோலக் காட்சி

இதனை இயற்றிவர் கா.பெரியசாமிப்பிள்ளை என்பவர் இவர் ஹிக்கொடை, உந்து கொடை எனும் ஊரைச் சேர்ந்தவர். இதன் முதல் பதிப்பு 1970இல் வெளி வந்தது. 1999 இல் இரண்டாவது பதிப்பாக வெளிவந்தது.

8) ஸ்ரீமுன்னைநாதஸ்வாமி பதிகம், ஸ்ரீவடிவாம்பிகாதேவி அந்தாதி

இதனை இயற்றியவர் யாரென்று தெரியவில்லை. நூலிலும் குறிப்பிடப்பட வில்லை. இது இரத்தினபூபதி பாலசுப்பிரமணியம் என்பவரால் வெளியிடப்பட்டது.

9) வல்ல வடிவாம்பிகை மாலை

இதனை இயற்றியவர் திருமதி. செல்வம் கல்யாணசுந்தரம். இந்நூல் கொழும்பு திருமூலா சங்கத்தால் 1994 இல்வெளியிடப்பட்டது.

10) ஸ்ரீவடிவாம்பிகை பிளளைத்தமிழ்

காலத்தால் மிகவும் பிற்பட்டது. இதனை இயற்றியவர் சொக்கலிங்கம் (சொக்கன்) இது 1999 இல் முன்னேஸ்வர ஆலய வெளியீடாக வெளியிடப்பட்டது.

## அடிக்குறிப்புக்கள்

1) சுப்பிரமணியன் ச. வே, (1980), <u>பிரபந்ததீபம்</u> , தமிழ்ப்பதிகம் சென்னை ப.V
2) செயராமன். நா,(1988), <u>"சிற்றிலக்கியங்களின் தோற்றம்"</u> அரங்கேறிய ஆய்வுகள், ஐந்திணைப் பதிப்பகம், சென்னை, ப.138
3) சண்முகம்பிள்ளை.மு, <u>"சிறுபிரபந்தங்கள்"</u>, இலக்கியக்கொள்கை ப.68
4) செயராமன். நா,(1988), மு.கு.நூல் ப.136
5) தில்லைநாதன்.சி(1979), <u>"தமிழ் இலக்கியவடிவங்கள்"</u> இளங்கதிர், தமிழ்ச்சங்கம் பேராதனை ப.23
6) மகேஸ்வரன்.வ, (2000), <u>"பாரதியாரின் விநாயகர் நான்மணிமாலை"</u> அகிலம் பதிப்பகம். கண்டி.ப.14.
7) செயராமன் ந.வீ,(1967) <u>சிற்றிலக்கியச் செல்வங்கள்</u> மணிவாசகர் நூலகம், சிதம்பரம், ப.16.
8) மேலது ப.16.
9) சுப்பிரமணியன் ச.வே,(1980) மு.கு.நூல் ப.VII
10) செயராமன் ந.வீ, (1967) மு.கு.நூல் ப.16
11) நடராசா க.செ, (1987) <u>ஈழத்துத் தமிழ் இலக்கியவளர்ச்சி</u>, காந்தளகம், சென்னை ப.160.
12) வேலுப்பிள்ளை.க, (1918) <u>யாழ்ப்பாணவைபவ கௌமுதி</u>, ஜயசிறிசாரதா பீடேந்திர சாலை, வயவிளான் ப.82.
13) ஸ்ரீமுன்னேஸ்வர மான்மியம்(1963), <u>முன்னேஸ்வர ஆலய கும்பாபிஷேக மலர்</u>, முன்னேஸ்வரம். ப.31

# இயல் மூன்று

## முன்னேஸ்வரப் பிரபந்தங்களின் உள்ளீடும் பக்தி வெளிப்பாடும்

# சிவபெருமானின் தோத்திரப்பாமாலை

தோத்திரம் என்பது "ஸ்தோத்திரம்" எனும் சமஸ்கிருதச் சொல்லின் மருவுஉ ஆகும். "ஸ்தோத்திரம்" என்பது "ஸ்துதி" எனும் வினையடியாகப் பிறந்தது. இதற்குப் புகழ்தல் என்பது பொருளாகும். இதன்படி முன்னேஸ்வரத்தில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் சிவபெருமனை புகழ்வதாக எண்சீர் ஆசிரியவிருத்தத்தால் பத்துப் பாடல்கள் கொண்டதாகஇப்பிரபந்தத்தை ஆசிரியர் இயற்றியள்ளார். ஒவ்வொரு பாடலும் "ரட்சியே" என்பதை முடிப்புச் சொல்லாகக் கொண்டு முடிவடைகின்றது.

ஒவ்வொரு பாடலிலும் முன்னேஸ்வரத்தானை விளிக்கும் போது முன்னீசரத்தின் இயற்கைச் சூழலையும் பின்னணியாகக் கொண்டே விளிப்பதைக் காணலாம். குவளைமாலர் குலவு மோடைச்சூழ் கோதிலாத நன் முனீசுரத்துளாய், முல்லை கொன்றைவாள் முட்டுதண்டலை முணீசுரத்துனை முக்கண் மூர்த்தியே, கற்றை வெண்ணிலநமிழு மாரத்தைக் கரும்புகக்கு நன் முனீசுரத்தனே, சங்கமுடுசெல் சாலி வேலி சூழ் சாற்றரும் முனீசுரத்தில் வாசனே, புற்றில் வாளரவீன்ற பொன்மணி பொங்குதல் முனீசுரத்துப் புங்கவா, நித்திலந்திரையோடு சிந்திடு நேரிலா முனீசுரத்தினீதனே, மங்கையர் குடைந்தாவொவி சூழ் மன்னுநன் முனீசுரத்தில் வைகிய வங்கண் மூன்றுள வெந்த னண்ணலே, துன்று மாயவனாறு சூழ்தரு தூயமாமுனீசுரத்திற் தோன்றலே, ஓவில் காவிலே ஒப்பில் மஞ்ஞைகள் உலவு நன் முனீசுரத்திலுற்றவா, எனப் பலவாறு போற்றுகிறார்.

பிறவிப் பெருங்கடல் கடந்து தான் உய்வதற்கு இறைவனாகிய முனீசுரத்தான் அருள்புரிய வேண்டும் என இரந்து கேட்கும் பாங்கில் பின்வரும் பாடல் அமைந்துள்ளது.

"தில்லையின் னட மாடுசித்தனே
சிந்தையா லுணர் வரிய சோதிய
எல்லை யில்பிற விப் பெருங்கட
லைமையே னுறைந் தேங்க வீதியோ
முல்லைகொண் றைவான முட்டு தண்டலை
முனீசுரத் துறை முக்கண் மூர்த்தியே
நல்லவா வுனை நாளும் போற்றுவேன்
நாத வுன் னடி தந்தி ரட்சியே"

இவ்வாறு பிறவிப் பெருங்கட் நீந்த இறைவன் திருவடிகள் தந்து ரட்சிக்க வேண்டும் என்பதனை பண்டு நான் செய்த வினைகள் பாறிடப் பாத மென்மலர் தந்து ரட்சியே எனவும், திருவடித்துணை தந்தி ரட்சியே எனவும், நாதவுன்னடி தந்திரட்சியே

எனவும், கூறிச் செல்வதைன் காணலாம்.

புராண, இதிகாசங்கள் சம்பவங்களை நினைவுபடுத்தும் கருத்துக்களும் இத் தோத் திரப்பாமாலையில் காணப்படுகிறது. முப்புரங்களை எரித்த தன்மையே “திரிபுராந்தகா” எனவும், கங்கையைத் தலையில் சூடிக்கொண்டதை “கற்றையஞ்சடை கங்கை வைத்தவர்” எனவும், தில்லையில் நடனம் புரிவதை “தில்லை யின்னடமாடுச்சித்தனே” என்றும் எண்வகைக் கோலங் கொண்டதை “குலவு எண்வகை கோலங் கொண்டவா” எனவும் கூறியிருக்க காணலாம்.

**திருத்தாண்டகப் பண்**

திருத்தாண்டகம், அப்பர் என அழைக்கப்படும் திருநாவுகக்கரசு நாயனார் பாடிய பதிகவகைகளில் ஒன்று. அவ்வகையைப் பயன்படுத்தியே புலவர் இத்திருத் தாண்டப் பண்ணைச் செய்துள்ளார். இப்பாடல்களைப் படிக்கும் போது அப்பரின் திருத்தாண்டகம் போலவே அமைந்துள்ளதைக் காணலாம்.

பாடல்கள் இறைவனாகிய முனீசுவரரின் பெருமைகளைக் கூறி இறைவனை இறைஞ்சி ஏத்த வேண்டுமென நெஞ்சுக்குக் கூறுமாறு அமைந்துள்ளன. “நெஞ்சே” என்பதனை முடிவுச் சொல்லாகப் பத்துப் பாடல்கள் அமைந்துள்ளன.

அடியவர்கள் செய்கின்ற பிழைகளெல்லாவற்றையும் பொறுத்து அருள் புரியும் பெருமானாகிய முன்னீசுரரை, மீண்டும் மீண்டும் வருகின்ற மானிடப் பிறப்பு அகலப் பணிந்து இறைஞ்சிப் பேச வேண்டுமென தன் நெஞ்சுக்குக் கூறுகிறான்.

“மழவிடைய யுடையமா தேவன் றன்னை
மஞ்சுநிகர் கண்ட முள வரதன் நன்னகட
குழவிதனைக் கறியாகக் கொண்டான் தன்னைக்
குறைவிலியை நிராமயனைக் குவலயத்தே
விழவதனை யடியார் கொள வீற்றான் றன்னை
வித்தகனை முனீசுரத்து மேயான் றன்னைப்
பிழையனைத்தும் பொறுத்தருளும் பெருமான் றன்னைப்
பிறப்பகலப் பணிந் திறைஞ்சிப் பேசு நெஞ்சே”

ஒவ்வொரு பாடலிலும் “தன்னை” என்ற சொல்லைப் பாவித்து இறைவன் பெருமைகளைக் கூறிச் செல்கிறார். கற்றவர்களால் தொழுது ஏற்றபடும் கபாலி தன்னை எனவும், புற்றில் இருக்கும் அரவத்தை பூணூலாக அணிவான் தன்னை எனவும், பொறி, புலன் இவற்றையெல்லாம் கடந்த புராணன் தன்னை எனவும், தன்னை அடைந்தவர்களுக்கும், அடையாதவர்களுக்கும் வேற்றுமையின்றி அருள் பவன் தன்னை எனவும்கூறி நிற்பதைக் காணலாம்.

மேலும் எண் வகைக்கோலங் கொண்டது, தேவர்கள் துயரற நஞ்சருந்தியது, முப்புரத்தை எரித்தது, அகத்தியர் தொழுதது போன்ற புராண வராற்றுச் செய்தி களையும் பாடல்களில் புலவர் எளிமையாக வெளிப்படுத்தியுள்ளார்.

**பதிகம்**

பதிகம் எனும் இலக்கிய வடிவத்தை முதலிற் தொடங்கி வைத்த பெருமைக் குரியவர் காரைக்காலம்மையார் ஆவார். பாட்டியல் நூல்களிற் பன்னிரு பாட்டியல் மட்டுமே பதிகம் என்ற இலக்கிய வடிவம் பற்றிப் பின்வருமாறு கூறுகின்றது.

"..........ஆசிரியத்துறை அதனது விருத்தம்
கலியின் விருத்தம் அவற்றின் நான்கடி
உட்டின் காறும் உயர்ந்த வெண்பா
மிசைவைத் தீரைந்து நாலைந்தென்னப்
பாட்டவரத் தொடுப்பது பதிகம் ஆகும்".

பத்து அல்லது இருபது பாட்டுக்கள் கொண்டதாகப் பதிகம் அமையுமென்பதை இதன் மூலம் அறியலாம். பத்தப் பாடல்கள் தொடர்ந்து வரச் செய்யுள் அமைத்தல் சங்க காலத்திலேயே ஆரம்பித்த தென்பதற்கு ஐங்குறு நூறு, பதிற்றுப்பத்து ஆகிய சங்க நூல்கள் சான்று பகிர்கின்றன. திருக்குறளும் அதிகார வைப்பிற் பத்துக் குறள்களைப் பேணுகின்றது.[4]

முனீசுரத்தில் வீற்றிருக்கும் வடிவாம்பாள் மீது பாடப்பட்ட பதிகமாக வடிவழகி பதிகம் விளங்குகின்றது. காப்பு நீங்கலாக பத்துப் பாடல்கள் காணப்படுகின்றன. இவற்றில் ஒன்று தொடக்கம் ஆறு வரையிலான பாடல்கள் அந்தாதியாகக் காணப்படு கின்றன. விநாயகர் வணக்கம் எனும் பெயரிலமைந்துள்ள காப்பு வெண்பாவில் காணப்படுகிறது.

வடிவழகியின் பூரணத்தன்மையை தான் பாடுவதற்கு சித்தி தருகின்ற ஆனை முகன் தோற்றமிங்கு காட்டுவாயோ சொல்லுவாயாக என காப்புச் செய்யுளில் விநாய கரை வேண்டுகிறார்.

பத்துப் பாடல்களிலும் வடிவழகியை அன்னை என்றே ஏத்தி வழிபடும் பொதுத் தன்மை காணப்படுகின்றது.

"திருவோங்கு முனீஸ்வரத்தின்
சிறப்பை நாளுஞ்
சிதையாது வைத்தருளுஞ்
தெய்வ மாகி
யருளோங்கு வடிவழகி
யாகித் தோற்று
மன்னைதனைச் சிந்தமதி
லணிந்து நாளுந்
தருவோங்கு விண்ணுலக
போக நாடத்
தாளறியா மடியோரைத்
தனைத்த லின்றி

யிருள் போக்கியருள் காட்டு
முமையே சிந்தை
யெண்ணினரை யாளுகின்ற
இன்பத் தாயே"

என சிந்தையில் தன்னை எண்ணுவாரை ஆளுகின்ற இன்பத்தாயே எனத் துதிக்கிறார்.

ஐந்து புலன்கள் வழியில் மனதைச் செல்லவிட்டு, உலகத்துப் பொருள்கள் மீது பற்றுக் கொண்ட மனதிலே நிம்மதியற்று திரிபவனாகிய என்னை அஞ்சேல் எனத் திருக்கரத்தால் அணைத்து அவலமெல்லாம் சிதைத்து ஒழித்து அருள் காட்டு பவளாகிய உன்னை மறக்கமாட்டேன் என்கிறார்.

புலன்கள் வழி மனம் செல்லுமாற்றையும், அவற்றிலிருந்து விடுத்து அருள் தருபவள் வடிவழகி அன்னையே என்பதை இப்பதிகத்தின் சாரமாகக் காட்டும் ஆசிரியர் இறுதியில் சிவபோகம் காட்டும் இன்னமுதாகவும் அன்னையைக் காட்டுகிறார்.

## முன்னைநாதஸ்வாமி பதிகம்

இறைவிக்கு பதிகம் இருப்பதைப் போல, இறைவனுக்குரிய பதிகமாக விளங்குவது முன்னைநாதஸ்வாமி பதிகம் ஆகும். வெண்பாவிலமைந்த விநாயகர் காப்பு நீங்கலாக பத்துப்பாடல்கள் காணப்படுகின்றன. இலங்கை பற்றிய இயற்கை வர்ணனையும், முன்னைநாதஸ்வாமி கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் சிலாப நகரின் இயற்கை வர்ணனையும் சிறப்பாக புனையப்பட்டுள்ளன.

"பேரழி தன்னிடை நித்திலம் தென்னவெ
பிறங்கினின் றொளிகான் றிடும்
பேறுடைய நல்லீழ தீவதின் மேற்கினிடை

பெருமைசேர் சிலாப நகரில் ............" என இயற்கை வர்ணனை குறிக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

அம்பாள் விக்கிரகம் முனீசுரத்தை அடைந்த கர்ணபரம்பரைக் கதை, முன்னேஸ்வர மான்மியத்தில் கூறப்படுகின்ற குளக்கோட்டன் பணி, பராக்கிரம பாகுவின் பணி, கீர்த்திராஜசிங்கன் பணி, குமாரஸ்வாமிக் குருக்கள் பணி போன்றவை பதிகப் பாடலில் அழகாகக் கூறப்பட்டுள்ளன.

திருமால், நான்முகன், இந்திரன், யமன், வருணன், முருகன், வேழவதனன் ஆகிய விநாயகன். ஆலத்தை அமுதமாக்கிய சிவபெருமான் ஆகிய எல்லாக் கடவுள்களாகவும் நீயே இருக்கின்றாய் என்பதை அறிந்து உன்னடி பற்றினோம் என தன்னை அடியவர் கூட்டத்தில் ஒருவராகவே நின்று பாடியிருக்கிறார்.[10]

பதிகத்தின் இறுதி இரண்டு பாடல்களிலும் தத்துவக் கருத்துக்களைக் கூறுகிறார்.

இப்பாடலகளில் ஒருவனை என்றும், பின்னிருவார் உளரென்றம் சத்திபேதம் பேசுவர். அணுவிலும் நிற்கும் உன்னைச் சிறுவன் என்றும் கூறுவர். கரிமுகன் என்றும் கூறுவர். உன்னை ஆறுமுகன் என்றும் ஆக்குவார். கன்னி எனவும் அம்மை எனவும், எல்லாக் கடவுளாகவும் நீயே விளங்குகிறாய் என்று கூறுவது முன்னை நாதரை ஏகனாகக் காணும் முயற்சிலேயாம்.

## அந்தாதி

பிரபந்த வகைகளுள் சிறப்பான இடம் பெற்று விளங்குவது அந்தாதி இலக்கியமாகும். அந்தாதி இலக்கியத்தின் முன்னோடித்தன்மைகள் சில சங்க இலக் கியங்களிற் காணப்படுகின்றன. அந்தாதி தனி இலக்கியமாகும் தன்மையை ஐந்தாம் நூற்றாண்டில் எய்தியதெனலாம். இதன் இலக்கணத்தைப் பன்னிரு பாட்டியல்,

"........வெண்பா கலித்துறை வேண்டியபொருளிற்
பண்பா யுரைப்ப தந்தத்தித் தொகையே" எனக் கூறுகிறது.

அந்தாதி என்பது நூலின் ஒவ்வொரு பாடலிலும் உள்ள இறுதி எழுத்து, அசை, சொல், சீர், அடி, ஆகிய இவற்றுள் யாதாயினும் ஒன்று அதற்கு அடுத்த பாடலின் முதலாக வரும்படி, இறுதிப் பாடலின் முடிவும் முதற் பாடலின் தொடக்கமும் ஒன்றாக இணையும்படி மண்டலித்து மாலை போலத் தொடுத்துப் பாடப் பெறும் யாப்பு வகையிலமைந்த ஒரு வகை சிற்றிலக்கியமாகும்.

அந்தாதி, பல்சந்தமாலை, ஒலியந்தாதி, பதிற்றந்தாதி, நூற்றந்தாதி எனப் பல வடிவங்களில் வளரலாயிற்று. வெண்பா அந்தாதி, கலித்துறை அந்தாதி, பதிற்றந் தாதி, நூற்றந்தாதி, பதிற்றுப்பந்தாதி, ஒலியலந்தாதி, கலியந்தாதி, சிலேடையந்தாதி, திரிபந்தாதி, யமக அந்தாதி, நிரோட்டகயமக அந்தாதி ஆகியனவும் அந்தாதியின் பாற்பட்டவையே.

அந்தாதி இலக்கியங்களில் பெரும்பாலும் ஒரே பொருளமைப்பே இடம் பெற்றுள்ளன எனலாம். இறைவனையோ, இறைவியையோ பாட்டுடைத் தலைவர் யாராயினும் அவரைத் துதித்துப் போற்றுதலே இவ் இலக்கியத்தின் பொதுவான பொருளமைதி எனலாம்.

ஈழத்தில் பதினெட்டாம் நூற்றாண்டு வரை அந்தாதி இலக்கியம் தோன்றவில்லை. எனினும் புராணகாவியங்கள் அந்தாதி தொடரைச் செய்யுட்களைக் கொண்டிருந்தன. ஈழத்து அந்தாதிகள் பெரும்பாலும் இறைவன், இறைவி என்பவர்களைப் போற்றிப்பாடும் தன்மை உடையனவாய் விளங்குகின்றன.

### ஸ்ரீ வடிவாம்பிகா தேவி அந்தாதி

இது ஐம்பது பாடல்களைக் கொண்டது. காப்புச் செய்யுள் முன்னேஸ்வர சூழலில் அமைந்திருக்கும் வேட்டைத் திருமட விநாயகர் மீது பாடப்பட்டிருக்கிறது.

பாடல்களில் அபிராமி அந்தாதியின் சாயல் தெரிகிறது. புலவருக்கு அபிராமி அந்தாதி மீதுள்ள ஈடுபாட்டை இதன் மூலம் கண்டு கொள்ளக் கூடியதாக இருக்கிறது.

"தெங்கயற் றோட்டத்திற் செங்கயல் பாய்சீத நீர்த்தடங்கள்
எங்கனும் மல்குறு முன்னேஸ்வரத்தின் எழிற்கொடியே"

என முன்னேஸ்வரத்தின் இயற்கையழகை புலவர் வர்ணிக்கிறார்.

"ஏந்திழை பாகத்திருப்பவன்" எனத் தொடங்கும் பாடல் வடிவழகியின் பாகத் திலே இருப்பவளாகிய சிவனின் நெற்றிச்சுடர் இடத்தே தோன்றிய தீப்பொறிகளை பூந்தடத்தேவிடஆறு பூக்களாக மலர்ந்து ஆறுதிருமுகத்திலும் முத்தங்களை ஈந்த வளாகிய அன்னையை நாம் போற்றுவோம் என திருமுருகன் உற்பத்தியான புராணக்கதையைக் குறிப்பிடுகிறது.

மேலும் வடிவழகியின் விக்கிரகம் இவ்வாலயத்திற்கு வந்த கர்ணபரம்பரைக் கதை, இராமனின் பிரம்மகத்திதோஷம் நீங்கிய கதை, குளக்கோட்ட மன்னன் செய்த திருப்பணியை நினைவு கூறல், பராக்கிரமபாகு, கீர்த்திராசசிங்கன் போன்ற மன்னர் கள் செய்த பணிகளைப் போற்றுதல் போன்றவற்றை உள்ளடக்கமாக கொண்ட பாடல்களும் காணப்படுகின்றன.

இறுதியில் அன்னையைப் போற்றிட வேண்டும் எனவும், அதன் மூலம் எங்கள் தீயவிதியை மாற்றிடலம் எனவும் கூறி, அவள் பாதங்களை ஏத்திட வேண்டும் என அடியவர்களுக்கு விண்ணப்பம் செய்தலோடு முடிக்கிறார்.

## வடிவழகியம்மை பதிற்றந்தாதி

இது சிவபெருமான் தோத்திரப்பாமாலை எனும் தொகுப்பில் காணப்படுகிறது. அந்தாதி வகைகளுள் ஒன்றாகிய இதில் காப்பு இடம் பெறவில்லை. பத்துப் படல்கள் காணப்படுகின்றன.

வேதமுதற் பொருளாக விளங்கும் சிவனுடைய மாதுவாகிய வடிவழகியை அந்தாதிப் பதிகத்தினால் வாழ்த்துவனே எனக் கூறி பாடத் தொடங்குகிறார்.[18]

தான் வடிவழகியை பாடவே இப் பிறவிதனக்குக் கிடைத்திருப்பதாக மகிழ்ந்து பாடுகிறார்.[19]

மலராசனும், திருமாலும், தேவரும், மாதவரும் பலமுறை தேடியும் காணாத பராபரையாகிய வடிவழகி முன்னீசுரத்திலிருந்து அருள் பாலிப்பதாகக் புலவர் கூறுகிறார்.

பிறப்புப் பற்றிய கருத்துக்கள் இப்பாடல்களில் செறிவாகக் காணப்படுகின்றன.

இறுதியில் வடிவழகிக்கு அடியவன் நான் எனக் கூறி சனி முதலான தீயகிர கங்கள் தன்னை நோக்காது எனவும், யமன் கிட்டவும் நெருங்க மாட்டான் எனவும்

வறுமை அஞ்சி விலகி நிற்கும் எனவும், அதற்கு இமைய மகளான வடிவழகி அருட் கண் பதித்து அருள வேண்டும் எனக் கூறுகிறார்.

## முனீசுரவந்தாதி

இறைவிக்கு இருப்பது போல இறைவனாகிய முனீசுரப் பெருமான் மீது பாடப்பட்ட அந்தாதியாக விளங்குவது முனீசுரவந்தாதியாகும். காப்பு, வாணிதுதி என்பவை நீங்கலாக நூறு பாடல்கள் அந்தாதியாகக் காணப்படுகின்றன. வாணிதுதி எனும் பாடலில் ஆயகலைகள் எதுவுமே அறியாத நாயேன் ஆகிய நான் முனீசுரன் மீது அந்தாதி பாடுவதற்கு வெண்தாமரை மீது வீற்றிருக்கும் பெண் தெய்வமாகிய வாணி அருள் புரிய வேண்டுமென கேட்கிறார்.

"சீர் பெறு தெண்டிரை"[22] எனத் தொடங்கும் பாடலில் செல்வம் கொழிக்கின்ற தென்திரை மோதுகின்ற சிலாப நகரின் கண்ணே பேர் பெற்று விளங்கும் முனீசுரத் தானடி பேணி நின்றார்க்கு பாரினில் நல்ல பலன் பெறலாம் எனவும், தீவினை அனு காது எனவும், கூறி நிற்பது முனீசுரத்தான் தான் மாத்திரமல்லாமல் ஏனையோரும் அவரை வணங்க வேண்டும் என அறை கூவல் விடுப்பதாகவுள்ளது.

இவற்றை விட நிலையாமை கருத்துக்கள், பெண்ணின்பமே பேரின்பம் எனக் கிடக்கும் மூடர்களைக் காப்பாற்ற வேண்டுமென்ற வேண்டுகோள், மழுவேற்றது, காலனைக்காலால் உதைத்தது, அயனும் மாலும் அடி முடி தேடியும் காணாத பரம் பொருள் நரியை பரியாக்கியது போன்ற செய்திகளையும் இப் பாடல்கள் தருகின்றன.

மேலும் முருகப் பெருமானுடைய பல்வேறு பராக்கிரமங்களைக் கூறி அவனை ஈன்றவர் முன்னேஸ்வரப் பெருமானே என சிறப்புறுத்தும் தன்மை பல பாடல்களில் காணப்படுகின்றது.[24]

யமனுடைய தூதர்கள் உன்னை அனுக முன் நீ முனீசுரர் பாதத்திற்கு அன்பு செய்ய வேண்டுமென மனத்திற்குக் கூறுகிறார். இது, எல்லோருக்கும் புலவர் கூறும் அறிவுரையாகவும் அமைகிறது.

"துணையா ருனக்கினிச் சொல்லிடுவாய் நமன் தூதருன்னை
னணையா முன் சென்று முனீசுரர் பாதத்துக் கன்பு செய்யே."

"அறிவு கடந்த பரவெளி யாயகி லங்களெல்லாம்
நெறியனிற் காக்கு முதலாவுயிர் தொறு நீக்கமின்றி
யுறைதரு தெய்வ முமாய முனீசுரத் துத்தமனைச்
செறிதரு மன்போடு போற்றி நின் றன் மிக்க சீர்தருமே."

என முனீசுரரின் பெருமைகளைக் கூறி முடிக்கிறார்.

இறுதில் வேண்டுகோள் எனும் பகுதியில் அந்தாதியை பக்தியுடன் பாராயணம் செய்ய வேண்டும் என அடியவர்களுக்கும் வேண்டுகோள் விடுவிப்பதாய் மூன்று பாடல்கள் காணப்படுகின்றன. தன்னுடைய கையிலேற்பட்ட உபாதையை நீக்கி தேரின்வடம் பற்றி இழுக்க முனீசுரன் அருள் புரிய வேண்டுமெனவும் கூறுகிறார்.

இவ்வந்தாதியில் இன்னுமோர் சிறப்புக் காணப்படுகிறது. ஒரு பாடலின் இறுதியில் காணப்படுகின்ற சொல், எழுத்து, போன்றவை அடுத்த பாடலின் தொடக்க மாக வருவதே அந்தாதியின் தன்மை. இதில் சிலவற்றில் ஒரு பாடலின் இறுதிச் சொல் அப்படியே அடுத்த பாடலின் தொடக்கமாக வருகிறது. சிலவற்றின் பாடலின் இறுதிச் சொல்லின் ஏதாவது ஓர் எழுத்து, அதற்கு இனமான எழுத்து என்பவை அடுத்த பாடலின் தொடக்கமாக வருவதைக் காணலாம்.

## முன்னைநாத சுவாமி நவதுதி

இது விநாயகர் துதி நீங்கலாக ஒன்பது பாடல்கள் முன்னைநாதரை துதிப்ப தாக அமைந்துள்ளன. இதனாலேயே ஆசிரியர் இதற்கு நவதுதி எனப் பெயரிட் டுள்ளார் எனக் கொள்ளலாம். விளிக்கும் பாங்கிலேயே பாடல்கள் அமைந்துள்ளன.

ஆசிரியர் பக்தி நிலையில் பல்வேறு வரங்களை முன்னைநாதரிடம் வேண்டி நிற்கிறார். தன்னுடைய தீவினையெல்லாம் அகல அன்புகாட்டி தன்னை ஆண்டருள வேண்டுமெனவும், அகநிலைக் காட்டி அருள வேண்டும் எனவும், நினைத்த அருளி னைத் தந்தருள வேண்டும் எனவும் வேண்டுகிறார்.

"பொன்னையு மதியேன் பூவையரின்பப்
புணர்ப்பையும் மனத்திடை நினையேன்
பிள்ளைபிங் கெவர்தம் புகழையுந் துதியேன்
பேணிமற் றொன்னையும் விதியேன்
உன்னையே மதிப்பே உன்புகழ் துதிப்பே
னுன் புணர்ப் பேறுமனம் பதிப்பேன்
என்னை நீ கைவிட் டிலுயிர்த் துணையா
யிருப்பவர் பிறிலை யாரசே".

எனும் பாடலில் ஆசிரியரின் பக்தி வைராக்கியத்தையும் காணலாம்.

இந்தப் பூமியில் உன்னுடைய புகழைப்பாடி பாடி இராப்பகலாக அடியேன் பாடி வருகிறேன். என் குறைகள் எல்லாவற்றையும் உன்னிடமே கூறுதலன்றி வேறு எவர்க்கு நான் உரைப்பேன். ஆகவே, முன்னைநாதப் பரம் பொருளாக விளங்கும் நீ அடியேனுக்கு இரங்கி முன்னிலை வேண்டும் எனக் கூறுகிறார். சரணாகதி அடை தலுடன் பிரபந்தத்தை முடிக்கிறார் ஆசிரியர்.

## திருவூஞ்சல்

லௌகீக வாழ்க்கையில் ஊஞ்சல் ஆடி மகிழ்தல் வழக்கமாகக் காணப்படு கிறது. இதனை தெய்வங்களுக்கும் பொருத்தி பார்க்கும் மரபினைத் தொடக்கி வைத்தவராக மாணிக்கவாசர் விளங்குகிறார். அவரது திருப் பொன்னூஞ்சல், தமிழின் முதல் ஊஞ்சற் பதிகமாக விளங்குகிறது.

கோயில்களில் இடம் பெறும் திருவிழாக்களில் ஒரு பகுதியாகத் திருவூஞ்சல் நிகழ்ச்சியும், வழிபாடும் இடம் பெறுகின்றது. கோயில்கள் இறைவன், இறைவியரை

ஊஞ்சலில் ஏற்றி அவரவர் பெருமைகளைக் கூறி ஆட்டி மகிழ்வது ஈழத்தில் பெரு வழக்காகக் காணப்படுகின்றது. ஆகம முறையில் இவ்விழா "டோலோத்சவம்" என அழைக்கப்படுகின்றது.

முன்னேஸ்வரக் கோயிலைப் பொறுத்தவரை இங்குள்ள இறைவன், இறை வியருக்காக மூன்று ஊஞ்சற் பிரபந்தங்கள் காணப்படுகின்றன. இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு காலகட்டப்பகுதியில் எழுந்தவை. இவற்றுள் முன்னைநாதர் திருவூஞ்சல் என்பது ஆய்வுக்காக முதலில் எடுத்துக் கொள்ளப்படுகின்றது.

இதில் காப்பு நீங்கலாக பதினொரு பாடல்கள் காணப்படுகின்றன.

"திருவோங்கு மிருமாயை தூணா நாட்டி" எனக் தொடங்கும் பாடலில் முன்னைநாதேஸ்வரர் ஆடுகின்ற ஊஞ்சலின் பெருமைகளைக் கூறுகிறார். திரு வோங்கும் இரு மாயை தன்னை தூணாகவும், சிவம் முதலான தத்துவங்களை வட்ட மாகவும், கலைகளை வடங்களாகவும், நான்கு வேதங்களை பீடமாகவும் கொண்டு விளங்கும் ஊஞ்சலிற் ஒளி பெற்று விளங்கும் அம்மையாகிய வடிவழகியோடு விளங்கும் முன்னைநாதேஸ்வரே ஊஞ்சல் ஆடி மகிழுமாறு புலவர் வேண்டுகிறார்.

அவ்வாறு ஊஞ்சல் ஆடி மகிழும் போது சூரியன், சந்திரனாகிய இரு சுடர்கள் குடைகள் தாங்குவதாகவும், புனலரசனாகிய வருணன பனிநீர்கள் தூவதாகவும், கூற்றுவன் உடைவாளோடு காவல் காப்பதாகவும், தவமுனிவர்கள் ஆசிகூறுவ தாகவும் பாடியிருப்பது புலவர் கற்பனைக்கு சிறந்த எடுத்துக் காட்டுகளாகும்.

மேலும் யாழினை முனிவன் மீட்டுவதாகவும், நெடுமால் முழவம் வாசிப்ப தாகவும்,கந்தவர்கள் பாடல்கள் பாடுவதாகவும, அதற்கேற்ப பிரமன் தாளம் போடுவ தாகவும் பெண்கள் நடனமாடுவதாகவும் புலவர் காட்டியிருப்பது முன்னைநாதேஸ்வரர் ஊஞ்சலாடுகின்ற நிகழ்வானது பெரும் சபையில் நடப்பது போன்ற எண்ணத்தை படிப்பவர் பால் ஏற்படுத்துகிறதெனக் கூறலாம்.

இதை விட முப்புரங்களை எரித்தமை, தக்கன் யாகம் கெடுத்தமை, யானை யுரி போர்த்தமை, காமனை எரித்தமை, கங்கையைச் சடையில் சூடியமை போன்ற சம்பவங்களையும் புலவர் கூறத்தவறவில்லை.

"பூவாழி பொன்மாரி பொழிந்து வாழி
பூகண்டி யைற்தெழுத்தும் பொலிந்து வாழி
மாவாழுந் திருமுகத்து வள்ளல் வாழி
வள்ளி தெய்வ யானை மகிழ் மணாளன் வாழி
பாவாழு மயில் வாழி யாடியார் வாழி
பைந்தமிழ் பொன்னூஞ்சலிசைப் பதிகம் வாழி
மூவாத வருள் வடிவாம்பிகையும் வாழி
முன்னைநா தேஸ்வரரும் வாழிவாழி"

என்றபதினொராவது பாடலான வாழ்த்துப் பாடலுடன் பதிகத்தை நிறைவு செய்கிறார்.

## ஸ்ரீ முன்னை நாதஸ்வாமி வடிவழகி அம்பாள் திருவூஞ்சல்

இவ்வூஞ்சல் காப்புடன் சேர்த்து பன்னிரெண்டு பாடல்களை உடையது. ஒவ்வொரு பாடலும் ஒவ்வொரு தலைப்புகளிற் பாடப்பட்டுள்ளன. அவையாவன காப்பு, ஊஞ்சல், ஆபரணம், சபா, ஸ்ரீசக்கரம், ஸ்தல மாஹாத்மியம், சம்பவம், வாழி, எச்சரிக்கை, பராக்கு, லாலி, மங்களம் என்பவையாகும்.

இவ்வூஞ்சலில் முன்னை நாதரை மட்டுமன்றி, வடிவழகியையும் விளித்து ஊஞ்சல் ஆடுமாறு ஆசிரியர் வேண்டுகிறார். ஏனைய இரு ஊஞ்சல் பதிகத்திலும் இவ்வாறு இடம் பெறவில்லை.

ஊஞ்சல் எனும் பகுதியிலே நால் வேதங்களையும் கால்களாக நாட்டியும், வேதத்தில் பல சாகைகளாக விளங்குவனவற்றை தழைகளாகவும், பூட்டி, பிரணவம் என்பதாகிய ஓம் என்பதனையே பலவகையாகக் கொண்ட ஊஞ்சலில் முன்னை நாதஸ்வாமியும் வடிவழகியும் ஆடி மகிழுமாறு ஆசிரியர் வேண்டுகிறார். ஆபரணம் எனும் பகுதியில் முத்து முதல் பவள மீறான ஆபரணங்கள் மின்னவும் பறை, தவில், பம்பை, முரசு, எக்காளம், பேரி, வீணை, என்பன நித்தமும் ஒலிக்கின்ற தலமாகிய முன்னேஸ்வரத்தில் வீற்றிருக்கின்ற முன்னைநாதேஸ்வாரும், வடிவாம்பிகையும் ஊஞ்சலாடி மகிழுமாறு வேண்டுகிறார்.

முன்னைநாதேஸ்வரரும், வடிவாம்பிகையும் ஊஞ்சலாடி மகிழும் போது அவர் பக்கத்தே திருமாலும், நான்முகனும் காணப்படுவதாகவும் லக்குமியும் சரஸ்வதியும் ஊஞ்சலினை ஆட்டுவதாகவும், வாயுபகவான் தூபம் தாங்கி நிற்கவும், கணிகை யர்கள் இருமருங்கிலும் இசை கூட்டிப் பாடுவதாகவும், சந்திரரும் சூரியரும் ஆல வட்டம் தாங்கி நிற்பதாகவும், சபா எனும் பகுதியில் ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

ஸ்ரீசக்கரம் எனும் பகுதியில் பிந்து, முக்கோணம், எண்கோணம், தசகோணம் இரண்டு மேலிருக்க, பதின்னான்கு கோணமாக தளமெட்டோடு பதினாறு, விருத்தங் கள் மூன்றுமாக பூமி போன்று விளங்கும் சக்கரத்தில் வந்து அருள் புரிகின்ற முன்னைநாதேசுரரும், வடிவாம்பிகையும் ஊஞ்சல் ஆடி மகிழுமாறும் குறிப்பிடுகிறார்.

சம்பவம் எனும் பகுதியில் பல சமய அடியார்கள் இறைவன், இறைவியை ஏத்துவதையும் வாழி எனும் பகுதியில் வேதங்களையும், ஆகமங்களையும், அந்தணர்களையும், அரசர்களையும், வணிகர்களின் குலநீதியையும், தொண்டர் களையும் வாழி வாழி என வாழ்த்தி இறுதியாக முன்னைநாதேஸ்வரரையும், வடிவாம் பிகையையும் வாழ்த்துகிறார். இது போன்றே எச்சரிக்கை, பராக்கு, லாலி, எனும் பகுதிகளிலும் இறைவனதும், இறைவியினதும் புகழ்பாடுகிறார்.

"சுத்தசிவ மானவர்க்கும் சோதிநிறை தேவியற்கும்
மத்த மணி நாதருக்கும் மாதுவடிவம்பிகைக்கும் – மங்களம்"

என மங்களம் பாடி முடிக்கிறார்.

## முனீஸ்வரரூஞ்சல்

இத்திருவூஞ்சல் முனீசுரத்தில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் சிவ பெருமான் தோத்திரப்பாமலை எனும் தொகுப்பில் காணப்படுகிறது. காப்பு நீங்கலாக பத்துப் பாடல்கள் காணப்படுகிறது. இவற்றைவிட மங்களம், பராக்கு, எச்சரிக்கை, போன்றவை தனியாக காணப்படுகிறன.

பொன்பூத்து விளங்குவது போன்று மலர்வனங்கள் பொழிந்து விளங்குகின்ற முனீஸ்வரப் பகுதியில் வாழ்கின்ற முனீஸ்வரப் பெருமான் மீது ஊஞ்சல் பாட வேழமுக விநாயகனை வேண்டுவோமே. எனக் காப்புக் கூறி ஊஞ்சலை ஆரம்பிக் கிறார். பாடல்கள் முனீஸ்வரரேயாடீரூஞ்சல் என முடிகிறது.

நால்வராகிய சனகாதிமுனிவர்கள் வேதம் பாடவும், முனிவர்கள் வட நூல் பாடவும், மரம்மையர், நடனமாகவும் (கணங்கள்), சண்முகனும் கணபதியும் தழுவி நிற்கவும், விதிகள் கூறுகின்ற சிவாகமங்களின் ஒலிகள் சேரவும், பக்தர்கள் குழாம் கண்களில் நீர் வழிய பார்த்து நிற்கவும், வடிவழகியோடு முனீஸ்வரரே ஆடீரூஞ்சல் என ஆசிரியர் வேண்டுவது இப் பதிகத்தில் சிறப்பாக காணப்படுகிறது.

ஏழாம், எட்டாம், ஒன்பதாம் பாடல்களில் வரிகள் ஒவ்வொன்றிலும் "ஆடீரூஞ் சல்" என முடிவடைகிறது.

> "படிவடிவுடையவரே யாடீரூஞ்சல்
> பத்திவலைப் படுபவரே யாடீரூஞ்சல்"
> ..........................................................................

இறுதியில் வாழி வாழி வாழ்த்துக் கூறி பதிகத்தை நிறைவு செய்கிறார்.

## முனீஸ்வரம் ஸ்ரீ வடிவாம்பாள் கும்மி

கும்மி என்பது இசைப்பாடலமைந்த பிரபந்தமாகும். கும்மியின் போது நடுவில் குத்துவிளக்கோ, கடவுளர் சிலையோ வைக்கப்பெறுதலும் உண்டு. இதனைச் சுற்றி பல பெண்கள் வட்டமாக பாடலுக்கேத்த கும்மி கொட்டி ஆடி மகிழ்வர். இப்படி கும்மி கொட்டி ஆடுவதற்கு பாடப் பெறும் பாடல் கும்மிப் பிரபந்தம் எனப் பெற்றது.

முன்னேஸ்வரப் பிரபந்தங்களுள் சிறப்பாக பிரபந்தமாக இது காணப்படுகிறது. இதில் இருபத்து மூன்று பாடல்கள் உள்ளது. எம்மை ஆளுகின்றவடிவாம்பாளின் பாதங்களைப் பணிந்து கூடி கும்மி கொட்டுமாறு பெண்களை அழைக்கிறார் ஆசிரியர். இக்கும்மியில் ஆசிரியர் திருவிழாவின் போது நடைபெறும் சங்கதிகளை ஒவ்வொன் றாகக் கூறி பெண்களை கும்மி கொட்டச் சொல்கிறார். கோயிலில் நடைபெறும் தேர்த் திருவிழா அதற்கு மறுநாள் நடைபெறும் தீர்த்த திருவிழா தீர்த்ததிற்கு சுவாமி புறப் பட்டு மாயவனாறு செல்லல், அதிலிருந்து திரும்பி ஆலயத்திற்கு வர ஆயத்த மாதல், வரும் வழியில் பல்வேறு வகையான உபசாரங்கள் போன்றவற்றை குறிப்பிடுகிறார்.

இக் கும்மியில் உலாப் பிரபந்தத்திற்குரிய தன்மைகள் காணப்படுகின்றன. உலா என்னும் பிரபந்தமானது கி.பி எட்டாம் நூற்றாண்டில் முழுமை பெற்று ஒரு பிரபந்தமாக விளங்குகிறது.

இறைவன் திருவுருவோ, உலகம் போற்றும் பெருமகனோ, அரசனோ, கரி, தேர், பரி, ஆகியவற்றுள் யாதாயினும் ஒரு ஊர்தியில் ஏற, உடன் வருவோர் சூழ, மங்கள வாத்தியங்கள் ஒலிக்க வீதியில் பவனி வருவதாகவும் அப்பொழுது பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை. தெரிவை, பேரிளம் பெண்முதலிய ஏழு பருவ மகளிரும் பவனியில் வரும் தலைவனைக் கண்டு, காதல் கொண்டு வாடுவதாகவும், புலவர் பெருமக்களால் கற்பனைச் செறிவுடன் பாடப் பெற்ற ஒரு வகைச் சிற்றிலக் கியமே உலா என்பது.

உலாவின் பொருளமைதியினை பாட்டியல் நூலார் முன்னெழு நிலை. பின்னெழு நிலை என இருகூறாக வகுத்துள்ளனர். தலைவனது சிறப்பு, பெருமை, முதலியனற்றைக் கூறி உலாச் செல்வதற்கு அவன் நீராடி, அணிகள் அணிந்து, உடன் செல்வதற்கு வருவார் சூழ, மங்கல வாத்தியங்கள்ஒலிக்க செல்லுதலைக் கூறும் வரையுள்ள பகுதி முன்னெழு நிலை எனப்படும்.

இங்கு பாட்டுடைத் தலைவனாகிய முன்னேஸ்வரப் பெருமான் தூய நீராடி நற்கோலம் பூண்டு வருவதை ஆசிரியர் வர்ணிக்கிறார்.

"மானேந்திய கொன்றை மாலையணி சிவன்
மாயவனாற்றில் தீர்த்தமாடி
வானோர் மகிழ்ந்திட சுவாமி ரதமேறி
வந்திடும் மகிமையைப் பாருங்கடி"
"சாலோக சாமீப சாரூப சாயுட்சியம்
தந்திடும் முன்னேஸ்வர நாதன்
கோலகலத்துடன் மேளத்தாளத்தோடு
நாலாதிக்கும் மக்கள் சூழ்ந்து வர"

வடிவாம்பாள் முன்னை நாதர் இருவருக்கும் ஒருங்கே பாடப்படுவதாக இக்கும்மி அமைந்திருக்கிறது. இறுதியில், சிங்காரமாய் மேளதாளம் முழங்கிட பெரிய சாமிப் பிள்ளையாகிய தன் மங்காப் புகழ் முன்னைநாதர் வடிவாம்பாளின் மங்களக் கும்மியை வாழ்த்துமாறு வேண்டி முடிக்கிறார்.

## வல்ல வடிவாம்பிகை மாலை

மாலை என்னும் பிரபந்தமானது ஒரு பொருளைக் குறித்துப் பல செய்யுட் களால் பாடப்படுவதாகும். இது பன்மணிமாலை, இணைமணிமாலை, இரட்டை மணிமாலை, மும்மணிமாலை. நான்மணிமாலை, காப்பு மாலை, அநுராகமாலை எனப் பல்வகை பிரபந்தங்களாக அமைந்துள்ளன.

மாலை எனும் பிரபந்தத்தை ஒரே பாடல் வகையாலும் இயற்றலாம். வெவ் வேறு பாவகைகளாலும் ஒரே பொருளைப் பாடலாம். பல பாவினங்களைக் கொண்டு இயற்றப்படும் நூல்கள் அவற்றின் பாவின எண்ணிக்கைக்கு ஏற்ப பெயர் பெறுகின்றன. உதாரணமாக நான்மணிமாலை எனப்படுவது நான்கு பாவினங்களைக் கொண்டு விளங்குவதைக் குறிப்பிடலாம்.

வல்ல வடிவாம்பிகை மாலை எனும் இப் பிரபந்தம் விநாயகர் துதி நீங்கலாக நூறு பாடல்களை கொண்டது. தன்மை நிலையிலிருந்து ஆசிரியர் இதனைப் பாடியுள்ளார். பாடல்கள் ஒவ்வொன்றும் "வடிவாம்பிகே" என்ற முடிப்புடன் முடிவடைகின்றன.

ஞால முதற் பொருளாகவும், அல்லல் தொலைப்பவனாகவும், அன்புக்கு அருள்பவராகவும் விளங்கும் கணபதியை வல்ல வடிவாம்பிகை மாலை தொடுக்க சொல்வளம் ஈர்ந்து அருள வேண்டும் என விநாயகர் துதியில் வேண்டுகிறார்.

தான் இம்மாலையை எழுதுவதற்கு வடிவாம்பிகையே அடித்தளம் இட்டதாக ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

"எழுதுவதால் ஆவதென்ன என்றேங்கி முனகுகையில்
பழுதடைந்த பக்திமையால் பறங்கியர்கள் பழிதொடுத்தார்.
பழங்கதையைப் புரிந்து கொண்டால் புத்தி வரும் பக்தி வரும்
இழந்தபதி திரும்பி வரும் எழுதென்றாய் வடிவாம்பிகே." [43]

இப்பிரபந்தத்திலும் இராவணனைக் கொன்றதால் இராமபிரானுக்கு ஏற்பட்ட பிரம்ம கத்தி தோஷம் நீங்கியது, போர்த்துக்கீசர் ஆலயத்தை இடித்தது, வியாசர் அருள் பெற்ற வரலாறு, குளக்கோட்ட மன்னன் திருப்பணி, வயல், காணி போன்றவற்றை அவர் வழங்கியமை, திறைசேரி உருவாக்கியது, கோவிலில் பூசை செய்யும் குருக்கள்மார், சேவகர்கள் போன்றோர் கோயிலருகில் குடியிருக்க வசதி செய்தது, தனியுண்ணாப் பூபாலன் கையில் ஆலய பாலனத்தைக் கையளித்து, அவன் நிர்வாகம் இயற்றிய முறைமை, முன்னேஸ்வரத்தைச் சூழவுள்ள நகரங்களை நிர்ணயித்து, இந் நகரங்களில் மக்களைக் குடியேற்றி அவர்களுக்குரிய ஆலயக்கடமைகளை வரையறை செய்தது, அவர்கள் செய்த தொழில் கொண்டு அவர்கள் வாழ்ந்த இடம் கொண்டும் அழைக்கப்பட்ட பெயர்கள், போன்றவற்றை பாடல்களிலே குறிப்பிடும் ஆசிரியர் அவற்றை திரும்பக்கிடைக்க வடிவாம்பிகை அருள் செய்ய வேண்டு மெனவும் வேண்டுகிறார்.

"குளக்கோட்டன் கூட்டிவைத்த கிராமங்கள் எங்கே!
இழப்போமோ சிவசொத்து இருப்போமோ திக்கற்கு!
எழுப்பாயோ குளக்கோட்ட எங்கள்குறைதீர்க்க.
தொழுபாலர் தொண்டு முறை திருப்பம்மா வடிவாம்பிகே" [44]

அடுத்து ஆறாம் பராக்கிரமபாகு மன்னன் சிலாசாசனம் செய்தது, ஒன்பதாம் பராக்கிரமபாகுவின் மகன் மின்னலால் உண்டான உபத்திரவம் தீர்ந்து முன்னேஸ்வரம் வந்து விஷ்ணுமூர்த்தியைத் தொழுதது, கீர்த்தி ராஜசிங்கன் பணி, குமார சுவாமிக் குருக்கள் பணி போன்றவைகளை அன்னைக்கு கூறுவது போன்ற பாடல்கள் அமைந்துள்ளன.

மேலும் நாம் இந்த பூமியில் பிறந்தது எதற்காக என்பதை அன்னையிடம் கேட்டு அவ்வாறு நாம் பூமியில் அலைந்து திரிகையில் நம்மைக் காக்க வேண்டும் எனவும் வேண்டுகிறார்.

இறுதியில் சொன்ன பாடல்களின் சுவையாகவும், சாந்த சொரூபமாகவும், ஊறுகாதல் உறவாகவும் விளங்குகின்ற உன்னை என்ன சொல்லிப் புகழ்வேன் எனக் கேட்டு முடிக்கிறார்.

## பிள்ளைத் தமிழ்

பிரபந்த வகைகளுள் ஒன்றாக விளங்குவது பிள்ளைத்தமிழாகும். பிள்ளைத் தமிழ் இலக்கிய வகை தமிழில் மட்டுமே காணப்படுகிறது. இது பிள்ளைப் பாட்டு என வும் வழங்கப்படுகிறது. கடவுளரை, அல்லது மனிதரைப் பாட்டுடைத் தலைவ ராகக் கொண்டு, அவருடைய பிள்ளமைப் பருவத்து நிகழ்ச்சிகளைக் கூறுமுகமாகக் எழுந் ததே இப் பிரபந்தம்.

இலக்கிய வரலாற்றில் பிள்ளைத் தமிழ் பிரபந்தத்தை நோக்கின் சோழ நாட்டுத் திருமங்கையாழ்வாரும் சேரநாட்டுக் குலசேகர ஆழ்வாரும் கண்ணன் அவதாரத்தினதும், இராமவதாரத்தினதும் குழந்தைப் பருவத்தில் நன்கு ஈடுபட்டு பாடியுள்ளனர்.

மகளாக ஆண்டாள் எனும் ஆழ்வாரை வளர்த்தெடுத்த தந்தை பெரியாழ்வார் கண்ணனைக் கற்பனையில் வளர்த்தெடுத்தமை பற்றிய பாசுரங்கள் பெரியாழ்வார் திருமொழி என்ற பெயரிலே நாலாயிரத்திவ்வியப் பிரபந்தத்தின் முதலிலே தொகுக் கப்பட்டுள்ளன. சுமார் 28 தலைப்புக்களிலே இவர் பாடியவற்றுள் பெரும்பாலானவை கண்ணனைக் குழந்தையாகவும் சிறுவனாகவும் இளைஞனாகவும கண்டு பாடியன வாக உள்ளன.

இது பொருட்டொடர் நிலைச் செய்யுளாக அமைந்தது தொடர் நிலைச் செய்யுளுக்குரிய வனப்புக்களில் விருந்து என்ற வகையின் பாற்பட்டது. ப..்றொடை வெண்பா, கலிவிருத்தம், அகவல் விருத்தம் இவற்றுள் ஒன்றால் இயற்றப்படுவது.

பிள்ளைத் தமிழில் ஆண்பாற் பிள்ளைத்தமிழ், பெண்பாற்பிள்ளைத்தமிழ் என்ற இரு வகைகள் உண்டு. பிள்ளைத்தமிழ் பிரபந்தத்தின் பருவங்களில் காப்பு, செங்கீரை, மொழிபயில்ல், தால், சப்பாணி, முத்தம், வருகை, மதியழைத்தல், ஆகிய எட்டுப்பருவங்களும் ஆண், பெண் ஆகிய இருபாலார்க்கும் பொதுவாக அமைந் துள்ளன.

## ஸ்ரீவடிவாம்பிகை பிள்ளைத்தமிழ்

இது, முனீஸ்வரத்து வடிவாம்பிகை மேற்பாடப்பட்டது. காப்புப்பருவம், செங் கீரைப்பருவம், தாலப்பருவம், சப்பாணிப்பருவம்,முத்தப்பருவம், வாரானைப்பருவம், அம்புலிப்பருவம், அம்மானைப்பருவம், நீராடற்பருவம், ஊசற்பருவம். ஆகிய பத்துப்

பருவங்களை உடையது. பருவம் ஒன்றுக்கு பத்துப்பாடல்களாக நூறு பாடல்கள் காணப்படுகின்றன.

காப்புப் பருவத்திலே வடிவழகியைக் காக்குமாறு சிவபெருமான், திருமால், முருகன், வைரவர், வீரபத்திரர், அரிகரபுத்திரர், மாகோனி, கலைமகள், திருமகள், முதலானோரை வேண்டுகிறார் ஆசிரியர். தமிழ்த் தாயை வேண்டுவதாகவும் ஒரு பாடல் பாடியிருப்பது இப் பிரபந்தத்தில் ஒரு புதுமையாகும்.

காலாவாதீதையாகிய உன்னைச்சிறுமியாய்ப் பாவித்து பிள்ளைத் தமிழ் சூட்டத் துணிந்த எம் அறியாமையைப் பொறுத்து நீ செங்கீரையாடி அருள்புரிய வேண்டும் என செங்கீரைப் பருவத்துள் கூறுகிறார்.

“கார், கூதிர், முன்பனி, பின்பனி வேனிலொடு
காலையின் மாலை எனலும்
கருதியே மாதம் ஆண்டூழியுக மென்னலும்
கருத்தி லாளங் கணக்கு
கார் குழற் கற்றையினைத் தாங்குவஞ் சிக்கொடீ
காலவா தீதை நீயே
கனிவு மிகு குழலியாய் உனையெண்ணும் வோமெற்
கடைகெட்ட மூடரன்றோ?
ஆர்பரித் தெழுகின்ற அலைகளைச் சிறுமியாய்
அகத்தினிற் கொண்டு விட்டோம்
சீர்மிகும் செல்வி எம் சிறுமியை மறந்து நீ
செங்கீரை ஆடி யருளே”

தாலப்பருவத்திலே இராவணனைச் சங்கரித்ததால் இராமனுக்கு ஏற்பட்ட பிரம்மகத்தி தோஷம் நீங்கியது உண்மைக் கதையாகும் எனக்கூறி அவ்வாறு அக் குறையை நீக்கியவனான முன்னைநாதரின் ஆருயிராக விளங்கும் அன்னையே தாலேலோ எனக் குறிப்பிடுகிறார்.

ஊழிக்கால முடிவில் வடவாமுகாக்னியானது, கோபித்து அண்டங்கள் யாவற் றையும் ஒரு சில் நொடியில் நீறாக்கவும், பரமனாகிய சிவன் உருக் கொண்டு பயங்கர நடனம் ஆடுகையிலே கூற்றுவனுக்கு கூற்றுவனாக விளங்கும் அவன் அடங்காத கோபத்தை வீழ்த்திய மெல்லணங்காக விளங்கும் வடிவழகியே கொட்டுச் சப்பாணி என சப்பாணிப் பருவத்தில் கூறுகிறார்.

அம்புலியே என்னை வானத்தே கண்டு மகிழ்ந்தவர், புகழ்ந்தவர், தொழுதவர் எல்லோரும் மாய்ந்தொழிந்தனர். ஆயின், நீ முதுபெரும் கிழவனன்றோ! உன் னுடைய வெண்ணிறம் உண்மையில் காமாலை என்பதைச் சிறுமி வடிவழகி அறிந்து விடுவாள் என்று பயப்படாதே. அவள் முதியாரை கனம் பண்ணும் இயல்பினள். உன் னைப் பாட்டன் எனக்கொண்டாடுவாள். இது முதியோருக்கு விழாவெடுக்கும் காலம்.

பயப்படாமல் வா, இவளோடு அம்புலியாடலாம். என்று பழமையும் புதுமையும் ஆசிரியர் குறிப்பிடும் திறன் சுவாரஸ்யமானது.

எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறொன்றறியார்கள், அருளாளர்கள் தீயதெல்லாம் ஒழியவும், அச்சம் அகலவும், கலியொழிந்து கிருதயுகம் உதிக்கவும் ஆசைகொள்கிறார் புலவர்.

"...............உலகினில்
நகர்த்திடா திருக்க என்றும்
கலியுகம் விலகிநற் கிருதயுகம் உலகிற்கு
களிப்பெமக் காக என்றும்"[48]

எனக் கூறுவது பாரதியார் கிருதயுகத்தை வேண்டி நிற்பதை நினைவுபடுத்துவதாக விளங்குகின்றது.

## முன்னேஸ்வரப் பிரபந்தங்கள் காட்டும் பக்தி வெளிப்பாடு

கோயில்கள், தலங்கள் என்பவற்றைச் சார்ந்து எழுகின்ற பிரபந்தங்கள் அவற்றின் வரலாறுகள், சடங்குகள். திருவிழாக்கள் என்பவற்றின் விளக்கங்களைத் தருகின்றன என்ற செய்தி ஒரு புறமிருக்க, அப்பிரபந்தங்களுடைய அடிநாதமாக விளங்குவது பக்தியாகும். இறைவன் மீது மனிதர் வைக்கின்ற இடையறா அன்பை பக்தி எனக் கொள்ளலாம்.

தமிழிலக்கியத்தைப் பொறுத்தவரையில் பக்தி அனுபவவெளிப்பாடு என்பது முக்கியமானதாகும். தமிழிலக்கியத்திற் பேசப்பெறும் பக்தியணர்வு பக்திஅனுபவத்தை அடிப்படையாக் கொண்டது. "தெய்வத்தை தன்னிலைப்படுத்தி, மனித உறவுப்படிம அடிப்படையில் அத் தெய்வத்துடன் உறவு கற்பித்துக் கொண்டு, அந்த உறவின் அடிப்படையில் தோன்றும் உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதே பக்தியநுபத்தின் அச்சாணியாகும். தெய்வங்களை மனித நிலைப்படுத்தி அம்மனித நிலையின் இன்றி யமையா உணர்ச்சி பாவங்களை அத் தெய்வத்தின் மேல் ஏற்றி முழுமத அனுபவத் தையுமே சமூக அனுபவ குறியீடுகளில் (ஆண்டான் அடிமை, காதலன் காதலி, தகப்பன் பிள்ளை, தாய் பிள்ளை நண்பன்) வெளிப்படுத்தும் முயற்சி தான் பக்தி முறையாகும்". எனும் கா.சிவத்தம்பியின் கூற்று இவ்விடயத்தில் அவதானிக்கத்தக்கது.

பக்தி இயக்க காலம் முதலாக பக்தியுணர்வின் வெளிப்பாட்டுச் சாதனமாக இலக்கியம் விளங்கி வருகிறது. பக்தி அநுபவத்தின் தலைசிறந்த இலக்கிய வெளிப் பாடாய் அமைவன மாணிக்கவாசகரின் திருவாசகம், நம்மாழ்வாரின் பாசுரங்கள் ஆகியவையாகும். இவ்வரலாற்றின் தொடர்ச்சியாகவே இப்பக்தி பொருள் கூறும் இலக்கியங்களும் விளங்குகின்றன. முன்னேஸ்வரப் பிரபந்தங்களை பாடியோரும் பக்தியை வெளிப்படுத்தியுள்ளார். ஈண்டு அவரை நோக்குவோம்.

"குற்ற மில்லவா குணமு மில்லவா
தோல வெண்பிறைக் கூறு கொண்டவா

பற்றிலா துழல்இன்ற நாயினேன்
பரம வேதனையடைதனீதியோ"

"உற்றவர்க்கருள் செய்யுமத்தனே
யுன்னடித்துறை தந்தி இரட்சியே"

எனும் பாடலில் ஆசிரியர் பற்றிலாது உழல்கின்ற (உன்மீது) கடையவனாகின்றேன். நான் பரமவேதனை அடைதல் நீதியோ என தான் கொண்ட பக்தியால் இறைவனை வினவி, அவன் திருவடித் துணை தந்து இரட்சிக்க வேண்டுமென வேண்டுகிறார்.

இறைவன் திருவடிகளே மனிதனை இரட்சிக்கும் எனப் பொருள்பட பாதமலர் தந்து ரட்சியே எனவும், திருவடித்துணை தந்திஇரட்சியே எனவும், நாதவுன்னடி துணை தந்தி ரட்சியே எனவும், குலவு முன்பந்தந்தி ரட்சியே எனவும்....எனவும். கருணை செய்தெனைக் காத்தி ரட்சியே எனவும், அடியேன் வினையகற்றி ரட்சியே எனவும், அனைய உன்பதந் தந்தி அடியேன் வினையகற்றி ரட்சியே எனவும், அனைய உன்பதந் தந்தி ரட்சியே எனவும் பக்தி மேலிட்டால் ஆசிரியர் கூறுவதை நோக்கலாம்.

திருத்தாண்டகப்பண் எனும் பகுதியில் இறைவனது (முனீசுரத்தானது) பல்வேறு நிலைகளைக் கூறி அவனைத் துதித்து நிற்குமாறு தன் நெஞ்சுக்குக் கூறுகிறார்.

"உலக மேலாந் தொழுதேத்த மொருத்தன் தன்னை என்றும், உபநிடதப் பொருளாகியுறைந்தான் தன்னை என்றும், இடை தோறும் பலியேற்ற கடவுடன்னை என்றும், பூரணனைப்புத்தமிர்தம் போல்வான் றன்னை" என்றும் குறிப்பிடுவதை நோக்கின் ஆசிரியர் தான் மட்டுமன்றிஎல்லோரையும் பக்தி நிலைக்கு ஆற்றுப்படுத்துவதைக் காணலாம்.

வடிவழகி பதிகத்தில் ஆசிரியர் "இவ்வுலகத்தில் பிறந்து சுகம் பெறுவதற்காக பாவங்கள் பல செய்து, பெரியோர் நேசந்துறந்து, அலைந்து வழிதவறுகின்ற தறுகண் ஆகிய என்னை தேடி வந்து தூக்கி எடுத்து அருள் சுரக்கும் தவப் பெருவாழ்வே" என வடிவழகியை வேண்டுவது பக்தி செலுத்தாதவர்களிடத்தும் பக்தியை உண்டு பண்ணுபவள் இறைவியே எனும் கருத்தை வலியுறுத்துகின்றது.

"...............சிவபோக
விளைவுகட்டு
மின்னமுதே யுனைவிடுத்துப்
பிறதோர் தெய்வ
மியம்புதற்கு முறையுளதோ
வியம்பு வாயே......."

என ஆசிரியர் கூறுவது அன்னையையே சரணாகதி அடைகின்ற தன்மையை எல்லோர்க்கும் காட்டுவதாக விளங்குகின்றது.

மேலும். பக்தி நிலையில் அனைத்து தெய்வங்களையும் முன்னை நாதராகவே காணும் ஆசிரியரின் தன்மையை முன்னைநாதஸ்வாமி பதிகத்தில் "ஒருவனே யென வுன்னை" எனத் தொடங்கும் பாடல் குறிப்பிடுகின்றது.

அன்னையாகிய வடிவாம்பிகை மீது வைக்கின்ற பக்தியினால் நமக்கு என்னென்ன பலன்கள் கிடைக்கும் என்பதை ஸ்ரீவடிவாம்பிகாதேவி அந்தாதி ஆசிரியர்.

"தொலைந்திடுந் தீமை எழுந்திடுஞ் ஞானந் துகளறுமே
அலைந்திடும் புன்மை அடங்கி விடும் அன்பதும்ஆர்த்தெழுமே
மலைத்திடம் ஆணவம் மாய்த்திடும் மாயை மறுகிடுமே
குலைந்திடு மேகக் குழற்கனி நெஞ்சிற் குறித்திடினே."

எனக் கூறுகிறார்.

மேலும் "அன்பின் அணங்காக விளங்கும் வடிவாம்பிகைகை சத்து சித்தாந்தச் சேர்க்கையினாள் எனவும், தொழுகின்ற தூயமுடைய தொண்டர்களின் துன்பம் துடைத்திடுவாள் எனவும், தாய் போல் தன் கைகளால் அடியவர்களைத் தாங்குபவள் எனவும், அழுகின்ற போது கண்ணீரைத் துடைப்பவள். எனவும் ஆசிரியர் குறிப்பிடுவது எம்மையும் அன்னை மீது பக்தி பூணுமாறு செய்கிறது.

பதற்றந்தாதியில் ஆசிரியர் வடிவழகியையன்றி வேறொர் தெய்வத்தை இனி தொழமாட்டேன் எனக் கூறுவது அவர் பக்தி வைராக்கியத்தைக் காட்டுகிறது.

"வேண்டே னனியோரு தெய்வத்தையொன்று வெறுத்துவிட்டேன்
ஈண்டே யெனையுமென்சந்ததி தன்னையு மெப்பொழுதும்,
ஆண்டே யருளென் றுகைகே யினி யாமைத் தொழும்பு,
பூண்டேயிச்சாதனஞ் செய்து தந்தேனின் - பொறுப்பினியே"

"நாடி முனீசுரஞ் சென்றே சிவனி னளின பதந்
தேடி றினைந்து விழிநீ ருகுத்துப் பலன டைவாய்
பாடி மகிழ்ந்து பணிந்து மெய்ஞ் ஞானத் தெளிவடைந்து
மாடினைப் பெண்ணினை மண்ணை மதிக்கு மடநெஞ்சமே".

முனீசுரத்தை நாடிச் சென்று சிவபெருமானுடைய நளினபதத்தைத் தேடி நினைந்து, பணிந்து மெஞ்ஞானத் தெளிவடைந்து, அவளைப் பாடி, மகிழ்ந்து, விழிநீர் உகுத்துப் பலனடைவாய் பெண்ணை மண்ணை மதிக்கின்ற மடநெஞ்சமே என தன் நெஞ்சுக்கு கூறுகிறார் முனிசுரவந்தாதி ஆசிரியர். இது நம் எல்லோரையும் முனிசுரப் பெருமான் மீது பக்தி கொள்ள அழைக்கும் அறைகூவலாகவும் விளங்குகிறது.

"கண்ணே யரிய மணியே யடியர் கருத்திலமலா
பண்ணேயப்பண்ணி னிசையே முனீசுரப் பண்டையனே
விண்ணே வழிகன லேபுன வேறில மேவினங்கு
மண்ணா மதியுயி ரேஞாயி றேயுன் னடைக்கலமே"[59]

பக்தியின் மேலீட்டால் ஆசிரியர் முனீசுரரை பஞ்ச பூதங்களாகவும் காணும் தன்மை இப் பாடலில் காணப்படுகிறது. கண்ணே, மணியே, அடியவர்கருத்தில் அமர்கின்ற பண்ணே, அப்பண்ணின் இசையே, முனிசுரப் பழமையே, விண்ணே, கனலே, புனலே, மண்ணா ஞாயிறே, உனக்கு நான் அடைக்கலம் எனப்பக்தியாற் பாடிப் பரவசமடைகிறார்.

மரணபயம் வரும் போது இறைபக்தி ஏற்படுதல் உலக இயல்பு. அவ் வாறான ஒரு நிலையை முனீசுரவந்தாதி ஆசிரியர் ஒரு பாடலில் குறிப்பிடுகிறார்.

"கொற்றவனேயந்தக் கூற்றுவன் வந்தெனைக் கூப்பிடும்போ
துற்றிடு துன்பினை நீக்கிடு வாரெவ ருன்னடியைப்
பற்றிடும் மாபுரிந் தைந்தெழுந் தோதவும் பண்ணியெனைச்
சுற்றிடு பாவமு நீங்கச் செய் வாய்நற் சுகங்கொடுத்தே"[60]

முன்னைநாதரும், வடிவாம்பிகையோடு ஊஞ்சலில் ஆடுகின்ற போது அதனைப் பாடவந்த முன்னநாதேஸ்வரர் திருவூஞ்சல் பாடிய புலவர் "ஊனகநெக் குருகியடியவர்கள் ஆட"[61] என்ற அடியால் அடியவர்களும் பக்தியில் ஆடி மகிழ்வதாக குறிப்பிடுகிறார்.

முனீசுரருஞ்சல் ஆசிரியர் முனீசுரர் வடிவழகியோடு ஊஞ்சல் ஆடிமகிழ் கினறபோது பக்தர்கள் குழாம் பக்தி மேலீட்டால் கண்களில் நீர் வழிய காணப் படுவதாகக் குறிப்பிடுகிறார்.

"விறன்மருவு பத்தற்குழாம் விழிநீர்வார"[62]

"தேவியர் பாகத்தில் செறிந்து விளங்குந் தெய்வமே, என்னுள்ளத்தே உறையும் ஆவியே, அமுதே, ஆனந்தநிதியே, அனைத்துயிர் புரந்தருளும் அரசே, பாவி யேனாகிய நான் படும்பாடதனை இங்கு எடுத்து கூறவும் முடியுமோ"[63] எனக் கூறும் முன்னைனாதசுவாமி நவதுதி ஆசிரியர் உன் அடிகளைப் பணிந்தேன் என்குறை பொறுத்து ஆள வந்தருள வேண்டும் என பக்தியுடன் வேண்டிநிற்கிறார்.

உலகத்தில் உயர்வான பொருள் தாய் ஆண்டவனிடத்தில் பக்தி பூண்ட அடியவர்கள் தாயினும் மேலாக அவனைப் பாராட்டி புகழ்ந்துள்ளனர். இதற்கு நாயன்மார்களின் ஒருவரான திருநாவுக்கரசரும், மாணிக்கவாசகரும் பாடிய பாடல் கள் உதாரணங்களாக அமைவன. அவ்வாறால் தாயினும் மேலான ஒரு தன் மையை முன்னை நாத சுவாமிக்கு வழங்கி பக்தி பரவசமடைகிறார் ஆசிரியர்.

"..........................................................................
தாயினு மினிய கருணைவைத் தாளுந்
தற்பரா னந்தவா ரிதியே
வாயினும் மனத்து மிடைவிடா திருக்கும்
வகையினை யருள் புரிந் தெப்போ"[64]

உலக இன்பங்களெனக் கூறப்படுவனவற்றை யான் துறப்பேன் என மனவுறுதியுடன் ஆசிரியர் பின்வருமாறு கூறுகிறார்.

"பொன்னையு மதியேன் பூவைய பின்பப்
புணர்ப்பையும் மனத்திடை நினையேன்
பின்னையிங் கெவர்தம் புகழையும் துதியேன்
பேணிமற் றொன்றையும் விதியேன்
உன்னையே மதிப்பே னுன் புகழ் துதிப்பே
னுள் புணர்ப் பேமனம் பதிப்பேன்
என்னைநீ கைவிட் டிடிலுயிர் துணையா
யிருப்பவர் பிறிதிலை யரசே."[65]

வல்லடிவாம்பிகாமாலை ஆசிரியர் தனது காலச் சமுதாயத்தின் சீர்கெட்ட, பாழ்பட்ட நிலையினை அம்பிகைக்கு தெரிவிக்கிறார். அதற்கு தீர்வு தருமாறும் வேண்டிநிற்கிறார். பக்தி செலுத்தவதில் இதையும் ஒரு வகையாகக் கொள்ளலாம்.

"அகதிகளாய் அங்குமிங்கும் அலைந்துட்ட மாயுகிறோம்
மிக அரிய இளமுயிர்கள் மிக எளிதாய் மடியுதையே
அகமுடைந்து அழ் துயரில் அமிழ்ந்துவதே விதியதுவாய்
கிலமடைந்த கோயிலெனக் கிடக்கின்றோம் வடிவாம்பிகே."[66]

எனக் கூறவதை நோக்கலாம்.

உலகப் பொய்ம்மைகளைக் கூறும் ஆசிரியர் அவற்றை அகற்றி விடு மாறு வடிவாம்பிகையை வேண்டுகிறார்.

"வழிநெடுக முள்ளுகளும் வகையறியாத் தொல்லைகளும்
பழி பெருக்கும் பண்புகளும் பாழடைந்த நெஞ்சுகளும்
குழி பறிக்கும் குணக் கேடும் கொன்றொழிக்கும் நிலைப்பாடும்
அழிவு தரும் அவலங்களும் அகற்றிடம்மா வடிவாம்பிகே."[67]

இறுதியில்

"புகலிடமாய் நீயிருக்க புதைகுழியை நாடுவதோ
அகல்விளக்கு உள்ளிருக்க அசுர இருள் கூடுவதோ
பகலிரவு பரவெளியில் படருவது பார்ப்பதுண்டோ
இகபரசுகம் தர இரங்கம்மா வடிவாம்பிகே."[68] என இகபரசுகம் தந்தருளுமாறு வடிவாம்பிகையை வேண்டுகிறார் ஆசிரியர்.

முன்னீச்சரத்து ஸ்ரீ வடிவாம்பிகை பிள்ளைத் தமிழ் ஆசிரியர் சிவஞான சித்தியர் கூறும் தத்துவத்தைக் கூறி செங்கீரை ஆடியருளுமாறு வேண்டுகிறார்.

"சிவனவன் சக்தியையும் சக்திசிவன் தன்னையும்
சிறப்புடன் ஈன்ற பின்னைச்

சிவம்சக்தி இருவரும் எலகுயிர்க் குருத்தருவர்
சிவஞான சித்தி கூற்று
------------------------------
------------------------------
------------------------------
------------------------------
------------------------------
------------------------------
------------------------------
சிவமெனும் செம்பொருட்குயிரன்ன செல்விநீ
செங்கீரை ஆடியருளே
சிற்றிடைப் பெரியவிழி கரியஒளி மேனியாய்!
செங்கீரை ஆடியருளே."[69]

"பற்றற்ற பரமர்தம் பற்றினைப் பற்றிடப்
பற்றருள் கொடாதாகிப்
பழவினைகளில் விழுற் தழுதாம லேதொழும்
பத்தருக் கருள் புரிந்து
சிற்பர வியோமமாய்ச் சிற்றம் பலத்திலே
சிவனுடன் கூடியாடிச்
செகதல மனைத்தையும் ஆட்டுவித் திங்கிதம்
செய்கின்ற எம்பிராட்டி."[70]

சப்பாணி பொட்டியருளே என ஆசிரியர் வேண்டுவது திருவள்ளுவருடைய "பற்றுக பற்று அற்றான் பற்றினை அப்பற்றைப்பற்றுக பற்று விடற்கு." [71] எனும் திருக்குறளை ஞாபகப்படுத்துகிறது.

பாசக்கடலிலே சிக்குண்டு, உலகத்தளைகள் இறுக்க, அலைந்து தாயின் வயிற்றில் பத்துமாதங்கள் சிறைகிடந்து மாந்தர்கள் பிறத்தல் போல் நீ உதித் தாயோ"[72] என வாரனைப் பருவத்தில் அம்பிகையைப் ஆசிரியர் வினவுகிறார். பின்பு இமயவனின் ஒப்பற்ற தவத்தின் காரணமாகவே அவர்களுக்கு குழந்தையாய் பிறந்து வளர்ந்தாய், விருப்போடு இமயவன் மனைவிதரும் பாலை நீ உண்ண வந்தருள வேண்டும் என வேண்டுகிறார் ஆசிரியர். இதில் மானிடபிறவியின் தன்மையையும், அம்பிகை அடியவர்களுக்கு இரங்கி அருள் செய்வதையும் பக்தியோடு கூறுவதைக் காணலாம்.

இப்பிள்ளைத்தமிழ் ஆசிரியர் அம்பிகையை இமயவனின் மகளாகவே காணு கிறார். அவன் மனைவியாகிய மேனையின் பாசத்தையும் காட்டுகிறார். இவ்வாறு கூறி இப் பிரபந்தத்தைச் செய்திருப்பது புதுமையாகவுள்ளது.

அம்பிலிப்பருவத்தில் "ஆதரத் தோடன்னை மேன்மையாள் அழைக்கிறாள் அம்புலி! ஆடவாவே"[73] எனவும், அம்மானைப்பருவத்தில் ஆனந்தமாக இப்பூமி விளங்கவேண்டும் எனில் நீ அம்மானை ஆடி அருளவேண்டும் எனவும், அரிய தவத்தினை உடையளாகிய உன்னன்னை மேனை அழைக்கிறாள். அவள் வேண்டுகோளுக்கிரங்கி நீராடி அருளவேண்டும் என நீராடற்பருவத்தில், பொன்னம்பல வரான முன்னைநாதரின் அரசி நீ பொன்னூசல் ஆடியருள வேண்டும் என ஊசற்பருவத்திலும் பக்திப் பரவசத்துடன் பாடுகிறார்.

முன்னேஸ்வரப் பிரபந்தங்கள் பெரும்பாலும் பக்தியை அடிப்படையாகக் கொண்ட தோத்திரப் பாடல்களாகவே காணப்படுகின்றன. ஆயினும், அப்பக்தியை அவை வெளிப்படுத்தும் விதம் பல்வேறாகக் காணப்படுகின்றன. தேவாரம் போன்று புராண, இதிகாச சம்பவங்களை கூறுதல், முன்னேஸ்வரத்திற்கே உரித்தான அதன் மானமியம் கூறும் செய்திகளைக் கூறுதல், பல்வேறு அலங்காரங்களால் இறைவன், இறைவியைப் புகழ்தல், இயற்கை வர்ணனைகள் கூறுதல், கோயிலில் நடைபெறுகின்ற பக்தி மயமான உற்சவங்கள் கிரியைகள் என்பவற்றைக் கூறுதல், சமகாலப் பிரச்சினைகளைக் கூறுதல், நிலையாமற் கருத்துக்கள் ஆகியவற்றை கூறுவதன் வாயிலாக பக்தியை வெளிப்படுத்துகின்றன.

**அடிக்குறிப்புகள்**

1) சிலம்புநாதபிள்ளை சி. முனீசுரத்தில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் சிவபெருமான் தோத்திரப் பாமாலை –ப.2
2) மேலது –ப.5
3) சிலம்புநாதபிள்ளை சி. மு. கு. நூல் ப. 7
4) சந்தனா ந. (1995). கதிர்காமப் பிரபந்தங்கள், கொழும்பு. ப. 112
5) தம்பு S.R. (1938) வடிவழகிபதிகம், சைவப்பிரகாச யந்திரசாலை. யாழ்ப்பாணம். ப.1
6) மேலது ப.2
7) தம்பு S.R. மு.கு.நூல் ப.8
8) மேலது ப.11
9) ஸ்ரீமுன்னேஸ்வர ஷேத்ர ஸ்ரீவடிவாம்பிகாதேவி அந்தாதி (1995) இரத்தினபூபதி பாலசுப்பிரமணியம் வெளியீடு ப.1
10) மேலது ப.5
11) மேலது ப.6
12) சந்தனா .ந (1995). கு.நூல் ப.107
13) செயராமன் ந. வீ.(1995) சிற்றிலக்கிய செல்வங்கள் மணிவாசகர் நூலகம், சிதம்பரம்
14) மேலது ப.57
15) சந்தா .ந (1995). கு.நூல் ப.106
16) ஸ்ரீமுன்னேஸ்வர ஷேத்ர ஸ்ரீவடிவாம்பிகாதேவி அந்தாதி (1995) ப.7
17) மேலது ப.10
18) சிலம்புநாதபிள்ளை சி. மு. கு. நூல் ப.15
19) மேலது ப.15

20) சிலம்புநாதபிள்ளை சி. மு. கு. நூல் ப.16
21) வயித்திலிங்கம். அ.(1962) முனீசுரவந்தாதி, முன்னேஸ்வர தேவஸ்தானம், சிலாபம் ப.1
22) மேலது ப.1
23) வயித்திலிங்கம். அ. சி. மு. கு. நூல் ப.3
24) மேலது ப.10
25) வயித்திலிங்கம் அ. சி. மு. கு. நூல் ப.13
26) மேலது ப.14
27) வயித்திலிங்கம் அ. சி. மு. கு. நூல் ப.15
28) மாணிக்கத்தியாகராசா. சி. (1996) முன்னைநாதசுவாமிநவதுதி ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம், சாகித்திய மண்டல வெளியீடு ப.416
29) மேலது ப.416
30) சோமசுந்தர புலவர்.க. (1965) "முன்னநாதேஸ்வரர் திருவூஞ்சல்" முன்னநாதேஸ்வர தேவஸ்தானம், ப.1
31) மேலது ப.1
32) சோமசுந்தர புலவர்.க.(1965) .சி. மு. கு. நூல் ப.4
33) பாலசுப்பிரமணியக்குருக்கள் .சி. (1965) .சி. மு.கு. நூல் ப.5
34) சிலம்புநாதபிள்ளை .சி. மு. கு. நூல் ப. 8
35) சிலம்புநாதபிள்ளை .சி. மு. கு. நூல் ப. 9
36) மேலது ப. 12
37) சந்தனா. ந. (1995) .சி. மு. கு. நூல் ப. 68
38) செயராமன். ந.வீ.. (1967) .சி. மு. கு.நூல் ப. 72
39) மேலது ப.80
40) பெரியசாமிப்பிள்ளை. கா(1970) "முன்னைநாதர் வடிவாம்பாள் திருக்கோலக்காட்சி" ஹிக்கொடை, உடநடது கொடை ப.8
41) சந்தனா. ந. (1995) சி. மு. கு. நூல் ப.101
42) செல்வம்.க (1994) "வல்லவடிவாம்பிகாமாலை" திருமூலர் சங்கம், கொழும்பு ப.1
43) மேலது ப. 1
44) செல்வம்.க (1994) .சி. மு. கு. நூல் ப.7
45) சந்தனா. ந. (1995) .சி. மு. கு. நூல் ப.89
46) மேலது ப.90
47) சொக்கம் (1999) "முன்னீச்சரத்து வடிவாம்பிகைபிள்ளைத்தமிழ்", முன்னேஸ்வரம் தேவஸ் தானம், சிலாபம் ப.10
48) மேலது ப.50
49) சிவத்தம்பி .க. (1983) "தமிழ் இலக்கியத்தில் மதமும் மானுடமும்", தமிழ்ப்புத்தகாலயம், சென்னை, ப. 22
50) சிலம்புநாதப்பிள்ளை. .சி. மு. கு. நூல் ப. 3
51) மேலது ப. 5
52) தம்பு S.R(1938) .சி. மு. கு. நூல் ப.6
53) மேலது ப.10
54) ஸ்ரீமுன்னேஸ்வர ஷேத்ர ஸ்ரீவடிவாம்பிகா தேவிஅந்தாதி (1995) ப.13
55) மேலது ப.12

56) ஸ்ரீமுன்னேஸ்வர ஷேத்ர ஸ்ரீவடிவாம்பிகா தேவிஅந்தாதி (1995) ப.13
57) சிலம்புநாதபிள்ளை. சி. மு. கு. நூல் ப. 16
58) வயித்திலிங்கம் சி. மு. கு. நூல் ப. 3
59) மேலது ப. 9
60) வயித்திலிங்கம் சி. மு. கு. நூல் ப.9
61) சோமசுந்தரப்புலவர் .க. (1965) சி. மு. கு. நூல் ப.2
62) சிலம்புநாதப்பிள்ளை சி. மு. கு. நூல் ப.11
63) மாணிக்கத்தியாகராசா சி. மு. கு. நூல் ப.415
64) மேலது ப. 415
65) மாணிக்கத்தியாகராசா சி. மு. கு. நூல் ப. 416
66) செல்வம் .க. (1994) மு. கு. நூல் ப. 11
67) மேலது ப.13
68) செல்வம் .க. (1994) மு. கு. நூல் ப. 15
69) சொக்கன் (1999) மு. கு. நூல் ப. 7
70) மேலது ப. 16
71) திருக்குறள். பரிமேலழகர் உரை (1961) பாரதி பதிப்பகம். சென்னை.
72) சொக்கன் (1999) மு. கு. நூல் ப. 30
73) மேலது ப. 31

# இயல் நான்கு
# முன்னேஸ்வரப் பிரபந்தங்கள் காட்டும் சமூக, கலாசார அம்சங்கள்

முன்னேஸ்வரமானது, மக்களுடைய சமூக வாழ்க்கையோடு பல்வேறு வகையில் பின்னிப்பிணைந்துள்ளது. அதற்கேற்ப முன்னேஸ்வரப் பிரபந்தங்களும் சமூக கலாசார அம்சங்களை விளக்கி நிற்கின்றன.

இக்கோயிலுக்கு சிங்கள மக்கள் பெருங்கூட்டத்தினராக வந்து வழிபடுகின்றனர். பௌத்தர்கள், கிறிஸ்தவர்கள், முகம்மதியர், போன்ற பல்வேறு சமயத்தவர்களும் எவ்வித பேதங்களுமின்றி இங்கு வழிபடுகின்றனர்.[1]

இதனை

"ஈந்தவளே அண்டம் யாவையு மங்குள இன்னுயிரும்
போந்தவளே முன்னை யம்பதி தன்னிடைப் புண்ணியங்கள்
சார்ந்தவளேதமிழ் சிங்கள மக்கள் முஸ்லிங்களெல்லாம்
காந்தம தீர்த்திடு நல்லிடும் பாக்கிய காரிகையே"[2]

எனும் பாடலால் ஸ்ரீவடிவாம்பிகாதேவி அந்தாதி ஆசிரியர் குறிப்பிடுகின்றார்.

மேலும்

"காரிகை பாதந் தொழுதிட வேவந்து காதலுடன்
வாரியைப் போல்மக்கள் சேருதல் கண்டிவ் வனிதையும்
ஆரியச்சங்கதம் செந்தமிழ் சிங்களம் ஆய்ந்துதரும்
சீரிய தோத்திர பாடற் கருளினைச் சேர்க்குவளே."[3]

எனும் பாடலில் காரிகையாகிய வடிவாம்பிகையின் பாதந்தொழுவதற்கு சாதி, சமய, பேதம் மறந்து மக்கள் வந்து அவரவர் மொழிகளிலே அவளைப் பாடிப் பணிந்து நிற்கும் போது அவர்களுக்கு ஏற்ற அருளினை செய்பவராகவும் அம்பிகை விளங்குகிறாள் என ஆசிரியர் கூறுவதும் இங்கு நோக்கத்தக்கது.

முன்னேஸ்வரத்தில் ஆவணி மாதத்தில் நடைபெறுகின்ற திருவிழாவே பெரிய திருவிழாவாகும். இவ்விழாவை சிங்களவர் "பெரஹரா" எனவழைப்பர். இவ் விழாவுக்கு நாட்டின் பல்வேறு பாகங்களிலிருந்து பலதரப்பட்ட மக்கள் வந்துகூடுவர்.

இதனை

"எத்திக்கிலும் வாழும் மக்களெல்லாம் கூடி
ஏங்கி வாடி மனம் கசிந்து
பக்தி பாசத்தடன் அம்பிகை பாதத்தை
பார்க்க வென்று சிரமே பணிந்து"
கோச்சி மோட்டார் சைக்கில் தன்னிரிலே - மக்கள்
கோடான கொடி சிலாம் தன்னில்
நின்று இளைப்பாறி கால் நடையாய்"[5]

என முன்னேஸ்வரம் ஸ்ரீ வடிவாம்பாள் கும்மி ஆசிரியர் கூறுகிறார்.

இங்கு நடைபெறும் இப்பெருத்திருவிழாவில் பெரும்பான்மையான உற்சவங்கள் பல்வேறு கிராமத்தவர்கள் ஒன்று சேர்ந்து நடாத்தப்படுகின்றது.[6] அதாவது ஒருநாள் திருவிழாவை ஓர் ஊரிலுள்ள மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து செய்வார்கள்.

இதனை

"ஊரார்கள் செய்திடும் ஒவ்வோர் உபாயத்தை
ஊகித்து நின்றோதும் பார்ப்பனர்கள்"[7] என

கும்மி ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

பெருந்திருவிழாக் காலத்தில் அநேகமாக ஒவ்வொருநாளும் இரவினில் கோயில் வாசலில் அமைக்கப்படும் மேடையில் கூத்து நாடகம் போன்றவை நடைபெறுவது வழக்கம்.[8]

"..........................................................
..........................................................
விடியும் வரைகளைக் கூத்து களாடிடும்
வேடிக்கை பார்த்து கை கொட்டுங்கடி"[9]

தற்காலத்தில் இக் கூத்தில், நாடகங்கள் என்பவை இசை நிகழ்ச்சிகளாளவே நடைபெறுகின்றன.

தேர்த்திருவிழாவிற்கு மறுதினம் நடைபெறுகின்ற தீர்த்தத் திருவிழா இங்கு மிகுந்த சிறப்புடையது.

தீர்த்தத் திருவிழாவன்று எருதுகள் பூட்டிய தேரிலே இறைவனும், இறைவியும் தீர்த்தமாடுவதற்காக மாயவனாற்றுக்கு எழுந்தருளுவர். தீர்த்தம் முடிந்தபின்பு, மீள ஆலயத்திற்கு வரும்போது நகரின் மையப்பகுதியில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

"சாந்த நிறைந்த சிலாபம் நகர் நடுச்
சந்தியில் சுவாமியை நான் நிறுத்தி
காந்தம் பொருந்திய ஒலிபெருக்கி வைத்து
கண் தெரியாதவர்கள் பாடும் பாட்டிசைத்து

அமைதியான சிலாபநகரின் நடுச் சந்தியில் சுவாமியை நிறுத்தி ஒலி பெருக்கிகள் வைக்கப்பட்டு கண் தெரியாதவர்கள் பாடும் பாட்டிசைப்பார்கள் எனவும்.

"பாடல்கள் கேட்டு நாட்டமுடன் கொட்டிப்
பாலத்தின் அக்கரைப் புல்வெளியில்
ஆட்டக்கரகமும் ஆகாய வான்மும்
அண்டமதிர்ந்திடும் பாருங்கடி"

விரும்பியவாறே பாடல்கள் கேட்டும், கரகாட்டம், ஆகாயவாணவேடிக்கைகள் அண்டமதிர்ந்திட நடைபெறும் எனவும்,

"பிரியாண்டு கிளாரி நெட் நாயண வாத்தியம்
பேரினை நாட்டு முரசொலிக்க"

பியாண்டு கிளாரிநெட், நாயணம், வாத்தியம் பேரிகை, நாட்டு முரசு(சிங்களவர்களால் வாசிக்கப்படும் பறை) என்பவை முழுங்கவும் எனவும் குறிப்பிடுவது இதை ஒரு சமூக விழாவாகவே எடுத்துக்காட்டுகிறது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் (சிலாபநகரில் கடைவைத்துத் தொழில் செய்வோர்) சுவாமி தங்கள் தொழில் தளத்தின் வழியே செல்லும் போது தோரணம் கட்டியும், தமது காலாசாரங்களைப் பேணி பூசையாற்றுவதும் மரபாக இருந்து வருகிறது.

இதனை

"யாழ்நகர் சீமானகள் தோரணம் கட்டியே
பால்பழம் வைத்துமே பூசை செய்து
வேல்முருகன் தந்தை வீதிவலம் வரும்
வேடிக்கை கும்மியைக் கொட்டுங்கடி"[13]

எனவும் பாடி கும்மி கொட்டச் சொல்கிறார் ஆசிரியர்.

இவை முன்னேஸ்வர திருவிழாவின் சில கலாசார தன்மைகளை பிரதி பலிக்கின்றது எனலாம்.

இத்தகைய முன்னேஸ்வர பெரும் திருவிழாவின் சிறப்பைப்பாட வந்த முன்னேஸ்வர ஸ்ரீவடிவாம்பிகை பிள்ளைத் தமிழ் ஆசிரியர் பின்வருமாறு கூறுகிறார்.

"பாங்கரும் முன்னைப் பதியினிலே
பரன்பரை மகோற்சவக் கொடியேற்றம்
பரவசம் தொடர்ந்திரு பத்தேழுநாள்
பழம்பெரும் அடியார்க்குக் கொண்டாட்டம்
தீங்குகள் கொடுமைகள் பாதங்கள்
செய்பவர் கட்கினித் திண்டாட்டம்
சேரிம்மைப் பயன்களை வேண்டுபவர்
தேவியின் அருளுக்கு மன்றாட்டம்
ஓங்கி எழும்பத்தி வெறியானார்
உடல்வளைத் தாடும்நற் கூத்தாட்டம்
உணர்வுமிகுந்தெழுப் போற்றிசையால்
உருகி இசைப்பவர் பெருங் கூட்டம்
தேங்கிடா தலையெறி சனக்கூட்டம்
தோந்து நீ ................................"[14]

சிறப்புமிக்க முன்னேஸ்வரத்திலே பரம்பரையான மகோற்சவம் அதனால் இருபத்தேழுநாட்கள் பரவசம், பெருமைமிக்க அடியாகளுக்குக் கொண்டாட்டம். தீங்குகள், பாவங்கள், கொடுமைகள் செய்பவர்களுக்கு இனி திண்டாட்டம். இம்மைப் பயன்களை அவாவி நிற்போர் வடிவழகியிடத்தில் மன்றாட்டம். உயர்ந்த பக்தி காரணமாக உடல்களைத்து ஆடும் பக்தர்களின் கூத்தாட்டம். உணர்வு மிகுந்து எழ பாற்றிசைபாடி அம்பிகையை மகிழ்விப்பவர் பெருங்கூட்டம். இவற்றை யெல்லாம் மிகுந்த சனக்கூட்டம் என மகோற்சவத்தின் சிறப்பைக் கூறுகிறார்.

மேலும், முன்னேஸ்வர மான்மியம் கூறுகின்ற பல்வேறு தகவல்களையும் முன்னேஸ்வரப்பிரபந்த ஆசிரியர்கள் தங்கள் பிரபந்தங்களில் கையாண்டுள்ளார்கள். பெரும்பாலான முன்னேஸ்வரப் பிரபந்தங்களில் இப் பண்பு கையாளப்பட்டிருப்பதை நோக்கும் போது, இதை அவர்கள் ஒரு சமூக நோக்கில் கூறுயிருக்கிறார்கள் எனலாம்.

எவ்வாறெனின், முன்னேஸ்வரக் கோயிலொடு அதனைச் சூழவுள்ள சமூகங் களுக்கிடையிலுள்ள தொடர்பின் இருப்பை அவர்கள் இதன் வாயிலாக உறுதி செய் துள்ளார்கள் எனலாம். உதாராணமாக, குளக்கோட்டன் பணிகளைப் பற்றி குறிப்பிடும் வல்லவடிவாம்பிகா மாலை ஆசிரியர் தனியுண்ணாப் பூபாலன் பரிபாலன முறையைப் பற்றிக்குறிப்பிடும் போது வேளாளர் எனப்படுகின்ற சாதியைக் குடியமர்த்தியையும் அச்சாதியினருக்கு வழங்கப்பட்டபட்டங்களையும் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

> "தனியுன்னாப் பூபாலன் பரிபாலனமுறை அமைத்து
> பன்னிரு வேளாளர் பரம்பரையைத் தேர்தெடுத்து
> முன்னவர்க்கு சந்திர கேசர முதலிப்பட்டம்
> பின்னவர்க்கு பட்டம்கட்டியக் கோறளை பட்டம்
> சூட்டினான். வடிவாம்பிகே"[15]

மேலும், பட்டம் பெற்ற அவ்விருவர்க்கும் ஆலய பரிபாலனத்தில் முக்கிய இடம் கொடுக்கப்பட்ட தென்பதையும், திருவிழாவில் முக்கிய இடம் கொடுக்கப் பட்ட தென்பதையும், திருவிழாவில் சுவாமியை காவுகின்ற உரிமையும் வழங்கப் பட்டிருந்தது என்பதையும்

> "..........................................................................
> பெரிய "கபடா" உத்தியோகம் இருவருக்கும் மீந்து
> பிரகாரம் இரண்டிலும் சுவாமி எழச்செய்தல்
> உரிய அவர் மரபினர்க்கு வழங்கினான் வடிவாம்பிகே"[16]

எனப் பாடலில் குறிப்பிட்டுள்ளதைக் காணலாம்.

ஸ்ரீவடிவாம்பிகா தேவி அந்தாதி ஆசிரியர் குளக்கோட்டன் பணி பற்றிக் குறிப்பிடும்போது "குறித்த கொள்கையுடையவனாகிய கோவாகிய வாராமனின் குலத்தொளியாக விளங்கும் உத்தமனாகிய குளக்கோட்டன் நிறைந்த அன்பினை உடையவனாக முன்சுராலயம் சிறக்க பலநற்பணிகளை" செய்ததாக கூறுகிறார்[17]

தொடர்ந்து ஆறாம் பராக்கிரமபாகுவின் பணி, கீர்த்தி ராசசிங்கன் பணி போன்றவற்றைப் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

"இன்னமூ தேபின ராறாம்ப ராக்மன் ஏற்றபணி
உன்னுவ மாயின் உயர்ந்ததென் றேயுளத் தோர்ந்திடுவோம்
மன்னவன் கீர்த்திகொ ளிராசசிங்கம் கேறும் மகிழ்ச்சியுடன்
பன்னருந் தொண்டுக ளாற்றினின் அன்பிற் படிந்தனனே"[18]

முன்னேஸ்வரத்தில் நடைபெறுகின்ற கிரியை முறைகளில் ஸ்ரீசக்ர பூஜை முக்கியமானதாகும். ஒவ்வொரு பௌர்ணமி தினத்தன்றும் அந்திப் பொழுதில் நடைபெறும் விசேட ஸ்ரீசக்ரபூஜை, பர்வயந்திரபூஜை எனப் பெயர் பெறும், சிவசக்தி ஐக்கிய ரூபமாக உள்ள இது சுமார் இரண்டரை அடி உயரம் கொண்டது. ஸ்ரீசக்ரத்தின் திருவுருவினிற்கு அபிஷேகங்கள் நடைபெற்றது, மாலையில் சந்திரோதயத்தின் பொழுது ஸ்ரீசக்ரபூஜை நடைபெறும்.

இவற்றின் சிறப்பையும் முன்னேஸ்வரப் பிரபந்த ஆசிரியர்கள் தமது இலக்கியங்களில் பிரதிபலித்துள்ளார்கள். ஸ்ரீவடிவாம்பிகா தேவி அந்தாதி ஆசிரியர் "விளங்குஞ் ஸ்ரீசக்கர மீதொளிர் ஞான விழுப் பொருளே!" என வடிவாம்பிகையை ஏற்றுகிறார்.[19]

ஸ்ரீமுன்னநாதஸ்வாமி வடிவழகி அமபாள் திருவூஞ்சல் ஆசிரியர் ஸ்ரீசக்ரம் எனும் பகுதியில்

"பிந்துவொடு முக்கோண மென்கோணம்
பிரியமுள தசகோணம் இரண்டு மேவ
சிந்தைநிறை பன்னான்கு கோணமாகச்
சிறந்தன மெட்டோடு பதினாறும்
சொந்தமிகு விருத்தங்கள் மூன்றுபூமி
சொன்ன முறை சக்கரத்தில்
வந்தருளு முன்னநா தேசுரரே
வரதவடி வாம்பிகையே யாடீரூஞ்சல்"[20]

என முன்னநாதேசுரரும், வடிவாம்பிகையும் ஸ்ரீசக்ரமீதிருந்து அருள்புரிவதாக ஆசிரியர் கூறுகிறார்.

மேலும், ஸ்ரீவடிவாம்பிகை பிள்ளைத் தமிழ் ஆசிரியர் அம்மானைப் பருவத்தில் ஸ்ரீசக்ரபூஜையின் தன்மையையும், தத்துவார்த்த உண்மைகளையும் கூறுகிறார்.

"ஐம்பொறி எனுந்தீயில் அர்க்கியம் ஆகவுயர்
அருள் ஞானம் அவிசதாக
அதனோடு ஞேயமாம் வித்துகளை இட்டுமே
அயர்விலா ஞானி செய்யும்
உம்பருஞ் செய்யொணா உயர்மகப் பாவனை

உத்தமச் சித்து நிலையில்
அறிவானும் அறிவதும் அறிபொருளும் என்கின்ற
அஞ்ஞானம் தீய்ந்து போகும்
இம்பரில் அம்மையே! உன்றனுக்காற்றிடும்
ஏற்றமார் ஸ்ரீசக்ர
இயல்புணர்ந்தார் உரைப்பார்
அம்பொனே! முன்னையில் இப்பூசை ஏற்றுநீ
அம்மானை ஆடி அருளே!"[21]

"அகிலம் எங்கும் அமைதிபெற" எனத்தொடங்கும் பாடல் ஆசிரியருக்கு சமூகத்தின் மீதுள்ள அக்கறையை வெளிப்படுத்துவதைக் காணலாம்.

"அகிலம் எங்கும் அமைதி பெறுவதற்காகவும், அன்பும் அறனும் தழைத் தோங்குவதற்காகவும், அழிவுகள், கொடுமைகள் அன்பிலாத செயல்கள் நீங்குவதற் காகவும், எல்லோரும் சமமான வாழ்வை பெறவேண்டுவதற்காகவும், பிணி நோய் துயர்கள் எல்லாம் தலைகாட்டாதிருக்கவும் வடிவழகியாகிய நீ அம்மானை ஆடி அருள்புரிய வேண்டும்"[22] என்கிறார்.

இவ்வாறு, முன்னேஸ்வரப் பிரபந்தங்கள் சில சமூக, கலாசார அம்சங் களையும் பிரதிபலிக்கின்றன.

## அடிக்குறிப்புகள்

1. சிவராமகிருஷ்ண சர்மா பா(19968) "முன்னேஸ்வரவரலாறு" முன்னேஸ்வர தேவஸ்தானம், சிலாபம் ப.43
2. ஸ்ரீமுன்னேஸ்வர ஷேத்ர வடிவாம்பிகா தேவி அந்தாதி (1995) இரத்தின பூபதி பாலசுப்பிரமணியம் வெளியீடு ப.10
3. மேலது ப.10
4. பெரியசாமிப்பிள்ளை கா(1970) "முன்னைநாதர் வடிவாம்பாள் திருக் கோலாட்சி" ஹிக்கொடை, உந்து கொடை ப.7
5. மேலது ப. 7
6. சிவராமகிருஷ்ண சர்மா பா. மு. கு. நூல் ப.44
7. பெரியசாமிப்பிள்ளை கா(1970) மு. கு. நூல் ப. 7
8. சிவராமகிருஷ்ண சர்மா பா. மு. கு. நூல் ப.44
9. பெரியசாமிப்பிள்ளை கா(1970) மு. கு. நூல் ப.8
10. மேலது ப.9
11. பெரியசாமிப்பிள்ளை கா(1970) மு. கு. நூல் ப.9
12. மேலது ப.9
13. பெரியசாமிப்பிள்ளை கா(1970) மு. கு. நூல் ப.9
14. சொக்கன்(1999) "முன்னைநாதர் வடிவாம்பிகை பிள்ளைத் தமிழ்" முன்னேஸ் வரம் தேவஸ்தானம், சிலாபம் ப.20
15. செல்வம் க.(1994) "வல்லவடிவாம்பிகா மாலை" திருமூலர் சங்கம் கொழும்பு ப.4
16. மேலது ப.4
17. ஸ்ரீ வடிவாம்பிகாதேவி அந்தாதி (1995) மு.கு.நூல் ப.2
18. மேலது. ப.12
19. மேலது ப.12
20. பாலசுப்பிரமணிய குருக்கள் சி.(1965) "முன்னைநாதஸ்வாமி வடிவழகி அம்பாள் திருவூஞ்சல்" முன்னேஸ்வர தேவஸ்தானம். ப.6
21. சொக்கன் (1999) "முன்னீசுரத்து வடிவாம்பிகை பிள்ளைத்தமிழ்" முன்னேஸ்வரம் தேவஸ்தானம், சிலாபம் ப.36
22. மேலது ப.40

# இயல் ஐந்து

# முன்னேஸ்வரப் பிரபந்தங்கள் கலைத்துவப் பண்புகள்

எந்த ஓர் இலக்கியமும் குறிப்பிட்ட சில வரைமுறைகளுக்கு அமையவே படைக்கப்படு கின்றன. அவ்வாறு படைக்கப்படும் இலக்கியங்கள் கலைத்துவப் பண்புகளை எந்த ஓர் உடையதாக வியங்குகின்றன. முன்னேஸ்வரப் பிபந்தங்களில் காணப்படும் கலைத்துவப் பணபுகள் இவ்வியலில் ஆராயப்படுகின்றன.

பாடல்கள் எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை அறுவகை இலக் கணப் பகுப்புக் குட்பட்டு ஆக்கப்படுகின்றன. பாக்கள் வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என நால் வகைப்படும்.

வெண்பா எனப்படுவது செப்பலோசை குன்றாமல் ஈற்றடி முச்சீராகவும் ஏனைய அடிகள் நாற்சீராகவும் இண்டாவது அடியிற் தனிச்சொல் பெற்றும் வெண்சீர் வெண்டளை இயற்சீர் வெண்டளை விரவிவர காசு, பிறப்பு, நாள், மலர் ஆகிய வாய்ப்பாட்டுகளில் ஒன்றினை ஈற்றிலே பெற்று முடிவடைவதாகும்.

முன்னேஸ்வரப் பிரபந்தங்களில் முனீஸ்வர வடிவழகி பதிபகம் முன்னைநாத சுவாமிநவதுதி, ஸ்ரீவடிவாம்பிகா சமேத ஸ்ரீமுன்னநாத ஸ்வாமி பதிகம் ஆகியவற்றின் காப்புச் செய்யுட்கள் வெண்பாவிலே அமைந்துள்ளன.

உதாரணமாக

"நல்ல விநாயகனே நாடமுன்னை நாதனருள்
வல்ல கணபதியே மாநிதியே - சொல்லாய்

அட்ட சித்தி யீந்தருளுமண்ணிலே நாயேனுக்
கிட்டசித்தியீந்தருள்வாயே" என்ற பாடலைக் குறிப்பிடலாம்.

அகவல் ஒசை, ஆசிரிய உரிச்சீர், அளவடி, ஆசிரியத் தளைக்குப் பிறதளை மயங்கல், வஞ்சியுரிச்சீர் அல்லாத பிறசீர்கள் வரப்பெறுவது ஆசிரியப்பாவாகும். ஆசிரியததாழிசை, ஆசிரியத்துறை, ஆசிரியவிருத்தம் என்பன இப்பாவின் இனங் களாகும்.

தோத்திரப்பாமாலையின்பத்துப்பாடல்களும், திருத்தாண்டகப் பண்ணின் பத்துப்பாடல்களும் எண்சீர் ஆசிரியவிருத்தத்தாற் பாடப்பட்டுள்ளன.

"பவள மேனியாய் பாப நாசனே
பணிகு வார்வின் நீக்கு பண்ணவா
பவம தேபுரி பாவியேன் பிறப்
பங்கு மோர்தளைப் படுதனீதியோ

குவளை மாமலர் குலவு மோடை சூழ்
கோதிலாதநன் முனீசுரத் துளாய
திவ்வி யாழ்மொழித் தேவி பங்கவுன்
திருவ டித்துணை தந்தி ரட்சியே"[2]

"மழுவிடைய யுடையமா தேவன் றன்னை
மஞ்சுறிகர் கண்டமுளவரத் றன்னைக்
குழுவிதனைக் கறியாகக் கொண்டான் றன்னைக்
குறைவிலியை நிராமனைக் குவலயத்தே
விழுவதனை யடியர்கொள் வீற்றான் றன்னை
வித்தகனை முனீசுரத்து மேயான் றன்னைப்
பிழையனைத்தும் பொறுத்தருளும் பெருமான் றன்னைப்
பிறப்பகலப் பணிந்திறைஞ்சிப் பேசு நெஞ்சே."[3]

என்றபாடல்கள் எண்சீர் ஆசிரியவிருத்தமாக அமைந்துள்ளன.

மேலும், முன்னைநாத சுவாமி நவதுதிப் பாடல்கள் ஒன்பதும் எழுசீர் ஆசிரியவிருத்திமாக அமைந்துள்ளன. அதற்கோர் உதாரணமாக பின்வருமாறு.

"விண்டுவின் பெருமை பெரிதென வெடுத்து
வியந்துகை தலைமிசைத் தூக்கி
யுண்டுகொல் பிறிதென் றுரைத்திடு வியாத
னுயர்த்திய கையினைப் பெரிய
தண்டு நின் றதுபோ லாக்கிப்பி னாண்ட
தற்பர ஞானசிற் பரனே
..........................................................................."[4]

பத்துப் பாடல்களை உடைய பதிகமாக விளங்கும் முனீசுர வடிவழகி பதிகப் பாடல்கள் எண்சீர் ஆசிரியவிருத்தத்தால் ஆனவை. இதில் ஒன்று தொடக்கம் ஆறுவரையான பாடல்கள் அந்தாதியாகக் காணப்படுகின்றன.

"..............................................................
..............................................................
யிருள் போக்கி யருள்காட்டு
முமையே சிந்தை
யெண்ணினரை யாளுகின்ற
இன்பத்தாயே"[5]

என முதலாவது பாடல் முடிய இரண்டாவது பாடல்
"தாயாகி முனீஸ்வரமாந்
தலத்தில் நாளுந்
..............................................................
.............................................................."[6]

என ஆரம்பித்துச் செல்வதைக் குறிப்பிடலாம்.

முனீசுரவந்தாதியானது, கட்டளைக் கலித்துறையிலமைந்த நூறு பாடல்கள் ஆனது. நாலடிகளுடைத்தான இது அந்தாதி வகையினுள் நூற்றந்தாதி வகையைச் சார்ந்தது.

முதற்பாடலின் அந்தம் மறுபாடலுக்கு தொடக்கமாக அமைந்து நூல் முழுவதும் இவ்விலக்கணம் பேணப்படுதலும், நூலின் தொடக்கப் பாடலின் முதற்சீர், நூலின் இறுதிப் பாடலின் இறுதிச் சீராக அமைந்து மண்டலித்து வருதலையும் இவ்வந்தாதியிற் காணலாம். உதாரணமாக.

"வினையா லெடுத்திட்ட காய மிதனை விரும்பிநிதம்
மனையாளுஞ் சுற்றமும் வாழ்வுஞ் சதமென மாண்மனமே
உனையாள வெண்ணி முனீசுரந் தன்னி லுறையுமரன்
நனைநாளும் போற்றி நீங்கிடும் வல்லினை சத்தியமே"[7]

என ஒரு பாடலமைய அடுத்தப்பாடல்

"சத்தியங்காணளி மெத்திட நின்றவன் சன்னிதியிற்
..........................................................................................
.........................................................................................."[8]

எனவமைந்து அந்தாதி இலக்கண அமைதியை எடுத்துகாட்டுகின்றன.

மேலும், நூலின் தொடக்கப்பாடல் "சீர்பெறு தெண்டிரை" என ஆரம்பிக்க இறுதிப்பாடல் அறிவு கடந்த பரவெளி யாகிய லங்களெல்லா
நெறியினிற் காக்கு முதலா யுயிர்தொறு துத்தமனைச்
செறிதரு மன்பொடு போற்றிநின் றன்மிக்க சீர்தருமே"[9]

எனக் காணப்படுகின்றது. இதன் ஈற்றடிச் "சீரில் காணப்படும் சீர் தருமே" என்பது தொடக்கப் பாடலில் "சீர்பெறு" என ஆரம்பித்து மண்டலித்து வந்திருத்தலை காணலாம், இதைவிட வடிவழகியம்மை, பதிற்றந்தாதி என்பதும் அந்தாதி வகையுள் ஒன்றாகும். இது பத்துப் பாடல்களைக் கொண்ட பிரந்தமாகும். ஸ்ரீவடிவாம்பிகா தேவி அந்தாதியானது, கட்டளைக் கலித்துறையாலான, அந்தாதியிலமைந்த ஐம்பது பாடல் களைக் கொண்டது. இந்நூலின் காப்புச் செய்யுளும் கட்டளைக் கலித்துறை யாலேயே அமைந்துள்ளது.

"ஒலிக்கும் பிரணவத் துள்ளொளி யாய்நின் றுணர்வருளி
நலிக்கும் பவப்பிணி நண்ணிடிற் போக்கி நமைப்புரந்து
சலிக்கும் பொழுதெங்கள் சஞ்சலம் மாற்றிச்சந் தானவரம்"
பலிக்கும் படிக்கருள் பாவாய் வடிவெழிற் பங்கயமே"[10]

என முடிய அடுத்த பாடல்

"பங்கயச் செம்மலர்ப் பாதங்கள் ............................"[11] என ஆரம்பித்துச் செல்வதைக் காணலாம். இங்கும் தொடக்கப்பாடலின்முதற்சீரன "ஒலிக்கும்" என்பது இறுதியான ஐம்பதாவது பாடலின் இறுதிச் சீரில் "ஒலித்திடுமே"[12] மண்டலித்து வருவதைக் காணலாம்

வல்லவடிவாம்பிகா மாலை ஆசிரியர் கலிவிருத்தம் அல்லது கட்டளைக் கலித்துறையால் பிரபந்தத்தைப் பாடமுயற்சி செய்துள்ளார் எனத் தெரிகிறது. ஆனாலும் அம்முயற்சி கைகூடவில்லை எனத் தெரிகிறது. கருத்துக்குக் கொடுத்த இடத்தை பாடலின் கட்டுக் கோப்புக்கு கொடுக்கவில்லை என்றேசொல்ல வேண்டும்.

"முன்னைநாதர் மகிழும் மூலப் பெருகனலே
என்னை இயக்கிநிற்கும் இன்பம் பெருமுதலே
அன்னை அருள்வடிவே அன்பினிருப்பிடமே உன்னை உணர வைக்கும் உணர்வேவடிவாம்பிகே"[13]

முனீசுரத்து ஸ்ரீவடிவாம்பிகை பிள்ளைத் தமிழானது, பிள்ளைத் தமிழ் யாப்புக்கு ஏற்ப விருத்தப் பாவால் இயற்றப்பட்டுள்ளது. ஆசிரியர் தான் எடுத்துக் கொண்ட பொருள் முடிபிற்கேற்ப விருத்தத்தின் அடிமைகளை கூட்டியும், குறைத்தும் உள்ளார். சீரிற்கேற்ப விருத்தங்கள் அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரியவிருத்தம், எழுசீர் ழிநெடிலடி ஆசிரியவிருத்தம் எனவாறு இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

"கோவணம் துன்னமே ஆயினும் கோவணம்
குன்றிடா மன்றடியைக்
கூடியே அன்னவற் கொள்ளையின் பங்கொளக்
கொழிதமிழ்ப் பாட்டிசைத்த
நாவணம் மிக்கவர்நால்வருக் கருளினை
நல்கிவீ டளிநம்பனை
நம்பியே பாதங் கயமீது வீழ்ந்தெமது
நாவலித் திடப் போற்றுவோம்
சாவணம் செலவிடா துய்வணம் காட்டவும்
சந்தமார் தமிழ்கேட்கவும்
சிலாபநன் னகரத்து முன்னையம் பதியினைச்
சார்ந்தஎம் வடிவழகியைப்
பூவண மேனியொடு பூத்துக் குலுங்கிடும்
பொழிலெனப் பூணணிந்து
பொலிந்திடும் செல்விதனை அகத்தினிற் கொண்டு
போற்றிப் புரக்க வென்றே"[14]

எனும் அறுசீர்கழி நெடிலடி ஆசிரியவிருத்தமான பாடல்களும்

"மட்டவிழ் மலர்கொடு விட்டுனை வழிபட
மகிழ்ந்தவர்க் காழி அருள்
மாமலை மேருவைச் சாபம தாகவே
..........................................."[15]

எனும் எழுசீர்கழிநெடிலடி ஆசிரியவிருத்திமான பாடல்களுடன் இடம் பெற்றுள்ளன.

பாடல்களின் கலைத்துவப் பண்புக்கு அணிகளும் காரணமாக விளங்கு கின்றன. அணி சொல்லணி பொருளணி என இருவகைகளை உடையது. பொருளணி யானது உவமையணி தொடக்கம் ஏதுவணி ஈறாக நூறுவரையுள.[16]

ஆய்வுக்கொடுத்துக் கொண்ட பிரபந்தங்களில் இவ்வாறான அணிகள் பரவலாக இடம்பெற்றுள்ளன.

இரண்டு பொருள்களுக்கு ஒப்புமையை விளங்கச் சொல்வது உவமை யணி. ஸ்ரீவடிவாம்பிகா தேவி அந்தாதியில் இரு நிகழ்வுகளின் ஒப்புமையைக் கூற உவமையணியை ஆசிரியர் கையாள்கிறார்.

"காப்புள தென்றுன்னி முன்னையின் தேவியின் கால்பிடித்துத்
தீப்புக் கழிகின்ற விட்டிலைப் போற்செகத் தீமைகளை
............................................................................................."[17]

எனும் பாடலில் தீயினிலே தானாக விழுந்து அழிகின்ற பூச்சிகளைப் போல மக்களும் உலகத்து தீமைகளில் மூழ்குகின்றனர் எனக் கூறியிருப்பது இங்கு நோக்கத்தக்கது.

மேலும், ஆசிரியர் வேறோர் இடத்தில் தெய்வச்சிறப்புக்களை உடைய வடிவழகியை அடியவர்கள் பற்றுவதை. "பழமரம் நாடும் பறவைக ளொத்துநாம் பற்றிநிதம்"[18] எனக் குறிப்பிடுவது அழகுணர்ச்சி உடையதாக விளங்குகிறது.

மேலும், ஆசிரியர் அன்னையைப் பின்வருமாறு ஓரிடத்தில் வர்ணிக்கிறார். "ஆமலவன் நூலிடை மீன் விழி முல்லை விளங்குநகை பாலவள் இன்மொழி பாதிப் பிறைநுதல் பாற்கலசம் போலவள் கொங்கைகள் பூத்த புதுநிலாப் போன்முகத்தள் ஆலமர் தெய்வத் தருநந்துணையாகும் அணங்கிவளே"[19] உவமை யணி பொதிந்து இவ்வர்ணனை விளங்குகிறது.

இயற்கை நிகழ்ச்சிகளை கவிஞர் தம் பாடற் குறிப்பில் ஏற்றிச் சொல் லுதல் தற்குறிப் பேற்றவணியாகும். ஸ்ரீமுன்னநாதஸ்வாமி பதிகத்திலே இயற்கையாக நடைபெறும் ஒரு நிகழ்ச்சியை கவிஞர் தன்குறிப்பில் ஏத்தி உரைக்கிறார். மரங்கள் வானளாவி நிற்பதையும், முகில்களுள்ளே சந்திரன் மறைவதையும் தனது கற்பனை யில் சொல்கிறார் கவிஞர்.

"வானோங்கு தருக்களின் மீதொங்கு தழையெனும்
வண்டூரி கை கொண்டுமே
வான் மீது படிக்கின்ற முகிலென்ற தூசினை
வற்றத்துடைக்க ஆங்கே
தானோங்கி வளர்கின்ற தண்மதியு மஞ்சியே
தன்னை மேகத் தொளிக்கும்
.................................................................................
................................................................................."[20]

எனக்கூறி நிற்பது சிறப்பான தற்குறிப்பேற்றவணியாக விளங்குகிறது. இயல்பாகவே ஒருவர்க்கு ஏற்புடையாவது சுபாவத்தையாவது, தருமத்தையாவது, திறமையயாவது சொல்வது தன்மைநவிற்சி அணியாகும்.

அடியவர்களை ஆண்டருள் செய்தல் இறைவனுக்கு இயல்பானது இதனை முன்னைநாத சுவாமி நவதுதி ஆசிரியர் பின்வருமாறு கூறுகிறார்.

"..............................................................................

துடியன விடையார் அம்பிகை மருவச்

சந்திர விடைமிசை யேறிப்

படியுள தீய வினையெலா மகலப்

பரவுமொ ரன்புறக் காட்டி

மடியுனேன் றன்னை யாண்டருள் கருணை

வள்ளலே முன்னையகனே"[21] என்கிறார்.

ஆர்வமொழியணி எனப்படுவது ஒரு பொருள்மேல் பல உருவகங்களை ஆர்வத்தால் சொல்லுதலாகும்.

"மருந்தே பிணிக்கு வழித்துணை யேயடி யார்வழங்கும்

விருந்தே யமர்க் கமுதளித் தாண்டிடும் வித்தகனே

.................................................................................................."[22]

என ஆர்வமிகுதியால் முனீசுரத்தானை உருவகிக்கிறார் முனீசுரவந்தாதி ஆசிரியர்.

முன்னைநாத சுவாமி நவதுதி ஆசிரியர் "தன்னுள்ளத்தில் உறையும் ஆவி எனவும், அமுதேனென்றும், ஆனந்த நிதியே என்றும், அனைத்துயிர்களையும் காக்கும் அரசே என்றும்"[23] ஆர்வமொழியால் வர்ணிக்கிறார். மேலும் ஸ்ரீவடிவாம்பிகா தேவி அந்தாதி ஆசிரியர் அன்னை வடிவாம்பிகையை ஆர்வமொழியால் பின்வருமாறு வர்ணிக்கிறார்.

"பார்வதி சாம்பவி ராஜரா ஜேஸ்வரி பைரவி

ஆர்வலர்க் கின்பருள் அம்பிகை கௌரி அருந்துணையே

பார்தனைக் காத்திடும் நாயகி காளி பராபரையே

ஏர்தனக் குன்றினாய் ................................................"[24]

எனக் கூறுவதைக் காணலாம்

இவ்வாறு முன்னேஸ்வரப் பிரபந்தங்களில் காணப்படும் கலைத்துவ அம்சமானது சுருக்கமாக ஆராயப்பட்டுள்ளது.

## அடிக்குறிப்புகள்

1. மாணிக்கத்தியாகராசா.சி. "முன்னைநாதசுவாமிநவதுதி: ஈழத்துத் தமிழ் கவிதைக் களஞ்சியம் ப.414
2. சிலம்புநாதப்பிள்ளை. சி.(?) "முனீசுரத்திற் கோவில் கொண்டு எழுந்தருளியிருக்கும் சிவபெருமான தோத்திரப்பாமாலை" ப.2
3. மேலது ப.5
4. மாணிக்கத்தியாகராசா .கி. மு. கு. நூல் ப.415
5. தம்பு S.R (1938) "முனீசுர வடிவழகி பதிகம்" சைவப்பிரகாச யந்திர சாலை, யாழ்ப்பாணம் ப.2
6. மேலது ப.3
7. வயித்திலிங்கம் .அ(1962) "முனீசுரவந்தாதி" கோடியார்ச்சனை வெளியீடு, முன்னேஸ்வரம் தேவஸ்தானம். ப.1
8. மேலது ப.1
9. மேலது ப.14
10. ஸ்ரீமுன்னேஸ்வர ஷேத்ர வடிவாம்பிகா தேவி அந்தாதி(1995) இரத்தின பூபதி பாலசுப்பிரமணியம் வெளியீடு ப.7
11. மேலது ப.7
12. மேலது ப.14
13. செல்வம் க (1994) "வல்லவடிவாம்பிகா மாலை" திருமூலர் சங்கம் கொழும்பு ப.1
14. சொக்கன் (1999) "முனீசுரத்து வடிவாம்பிகை பிள்ளைத்தமிழ்" முன்னேஸ்வரம் தேவஸ்தானம் சிலாபம் ப.1
15. மேலது ப.15
16. சந்தனா .ந(1995) "கதிர்காமப் பிரபந்தங்கள்" கொழும்பு ப. 229
17. ஸ்ரீமுன்னேஸ்வர ஷேத்ர வடிவாம்பிகா தேவி அந்தாதி (1995) ப.14
18. மேலது ப.12
19. மேலது ப.8
20. மேலது ப.5
21. மாணிக்கத்தியாகராசா .கி. மு. கு. நூல் ப.414
22. வயித்திலிங்கம் அ (1962) மு. கு. நூல் ப.10
23. மாணிக்கத்தியாகராசா .கி. மு. கு. நூல் ப.415
24. ஸ்ரீமுன்னேஸ்வர ஷேத்ர வடிவாம்பிகா தேவி அந்தாதி(1995) ப.10

# மதிப்பீடும் தொகுப்புரையும்

தமிழ் இலக்கியப் பரப்பில் பல்லவர் கால பக்திப்பாடல்களுக்கும், நாயக்கர் கால தலபுராணங்களுக்கும் இடையே வேறுபாடு உண்டு. இவ்விருவகை இலக்கியங்களின் தோற்றத்திற்கும் நோக்கங்கள் வேறுவேறானவை. பல்லவர் கால பக்தி இலக்கியங்கள் வீழ்ந்து கொண்டிருக்கும் ஒரு சமயத்தை நிலை நிறுத்த உதவிய தென்றால், நாயக்கர் கால சமயஇலக்கியங்கள் அக்கால சமய இருப்பை உறுதி செய்வனவாகவும், பிரதேச பண்பாடுகளை வளர்ப்பதாகவும் விளங்குகின்றது. பல்லவர் கால பக்திப்பாடல்களில் காணப்படும் இயற்கை சித்தரிப்புக்கள். நாயக்கர் கால தல புராணங்களில் பிரதேச ரீதியான பண்பாடுகளை எடுத்துக்காட்டுகிறது. பக்தி இலக்கியத்தில் கூறப்படுகின்ற இறைவன் திருவிளையாடல்கள், சரித்திர புராண இதிகாச சம்பவங்கள் என்பவை நாயக்கர் காலத்தில் இலக்கிய வடிவங்களில் மாற்றங்களையும் உள்வாங்கி சமூக, பண்பாட்டு சூழலுக்கு ஏற்ற வகையில் இலக்கியங்களாக மலர்ந் துள்ளன. பிரபந்தங்கள் என்ற வடிவம் சமயங்களோடு கொண்ட தொடர்பிற்கு, சார்புக்கு இதுவும் ஒரு காரணம் எனலாம். தொடர்ந்து வந்த காலப்பகுதிகளில் பக்தி இலக்கியங்கள் என்பது மருவி பக்திப்பிரபந்தங்கள் ஆனதும் இங்கு நோக்குவதற்குரியது.

இத்தகைய ஒரு பின்னணியிலேயே முன்னேஸ்வரப் பிரபந்தங்களும் ஆராயப்பட்டுள்ளன. முன்னேஸ்வரக் கோயில் வரலாற்றிலே, வரலாற்றுக் குறிப்புகள், முன்னேஸ்வரமான்மியம் பற்றிய செய்திகள், சிற்பங்கள் புலப்படுத்தும் செய்திகள் எனப்பலவாறு கூறப்பட்டுள்ளன. இவற்றில் குறிப்பாக முன்னேஸ்வர மான்மிய முதல் நூல் பற்றியவை, சிற்பங்கள் தரும் செய்திகள் என்பன தொடர்ந்தும் ஆய்வுக்குரியவை. அவ்வகை ஆய்வுக்கு இது ஓர் ஆரம்ப முயற்சியாக அமையலாம். திருவிழாக்கள் உற்சவங்கள் பரிபாலனம் செய்யும் அந்தணர்கள் மடங்களின் பணிகள் போன்றவை நடைமுறையில் உள்ளவாறும், ஒப்பிட்டும் ஆராயப்பட்டுள்ளன.

முன்னேஸ்வரப் பிரபந்தங்கள் அறிமுகம் எனும் இயல் பிரபந்தங்களை அறிமுகம் செய்வது மட்டுமன்றி ஈழத்து, தமிழ் நாட்டு இலக்கிய வரலாறுகளை ஒப்பீட்டு ரீதியாக நோக்கும் தன்மையைக் கூறியுள்ளது. எதிர் காலத்தில் இவ்விரு இலக்கிய வரலாறுகளையும் ஆராயப்புகுவோருக்கு இது அத்திவாரமாக அமையும் எனலாம். மேலும் பிரபந்தங்கள் கோயில்களோடு கொண்ட அத்யந்த பிணைப்பு போன்றவை கூறப்பட்டிருக்கிறது. பிரபந்தங்கள் போற்றப்படுவது போலவே அதைப் பாடியவர்களும் போற்றப்பட வேண்டும் அவர்களின் பெருமைகளை உலகறிய வேண்டும், என்பதற்காக இயலின் இறுதியில் அவர்களைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது.

தொடர்ந்து வரும் இயலில் பிரபந்தங்கள் அவை தோன்றிய கால அடிப்படையிலும், பதிகம், அந்தாதி, என பலவகைப்படுத்தப்பட்டும் அவற்றின் உள்ளீடான பாடற்றொகை, அவை கூறி நிற்கும் விடயங்கள் என்பன ஆராயப்பட்டு அப்பிரபந்தங்கள் பக்தியை வெளிப்படுத்தும் தன்மையும் கூறப்பட்டுள்ளது.

இலக்கியம் என்பது சமூகத்தைப் பிரதிபலிப்பது. பக்திப் பிரபந்தங்களும் இதற்கு விதிவிலக்கல்ல என்பதைக்கருத்தில் கொண்டு, அப்பிரபந்தங்கள் முன் னேஸ்வர கோயிலோடு சமூகம் கொண்டிருக்கும் தொடர்புகளையும், கலாசார பின்னணிகளையும் எவ்வாறு புலப்படுத்தியுள்ளன என்பதும் ஆராயப்பட்டுள்ளது. இனிவரும் காலங்களில் பிரபந்தங்களை இச்சமூகவியல் கண்ணோட்டத்தில் நோக்கு வோர்க்கு இது ஆரம்பமாக அமையவேண்டும் என்பதே ஆய்வாளனின் எதிர்பார்ப் பாகும்.

இறுதியில் இப்பிரபந்தங்கள் மரபு வழிப்பட்டு நின்று பாடப்பட்டவை. மரபிலக்கணங்களைப் பேணி நிற்பவை ஆகையால், தமிழ் இலக்கியப் பரப்பில் இப்பிரபந்தங்களுக்குரிய இருப்பை உறுதிசெய்யுமுகமாக அவற்றின் யாப்பு, அணி அலங்காரங்கள் போன்ற கலைத்துவ அம்சங்கள் மிகச்சுருக்கமாக ஆராயப்பட்டுள் ளன. இவ்வாறாக "முன்னேஸ்வரப் பிரபந்தங்கள்" எனும் இவ்வாய்வு மேற்கொள் ளப்பட்டுள்ளது.

பல்லவர் கால பக்திச்சாயலைக் கொண்டிருக்கும் இப்பிரபந்தங்களில் நாயக்கர் கால சமூக, பண்பாட்டு விழுமியங்களும் பேணப்பட்டுள்ளன. இப்பிரபந் தங்கள் பெறும்பாலானவற்றில் முன்னேஸ்வரத்தைப் பற்றிய சித்திரிப்புக்கள், இயற்கை அம்சங்கள் போன்றவை அழகாக கூறப்படுள்ளன. இவை தலபுராணத்தின் பண்புகளை இவ்விடத்தில் நினைவூட்டுகின்றன.

இதிகாச புராண கருத்துக்கள் பக்திப்பாடல்களைப் போலவே கூறப்படு கின்றன. அதனோடு குறிப்பிட்ட முன்னேஸ்வர கோயில் வரலாறு கூறும் அல்லது அதன் மாண்புகளை உரைக்கும் மான்மியம் பற்றிக் கூறப்படுவது இவற்றின் சிறப்பான அம்சங்களில் ஒன்று இவற்றை தலப்பெருமைக்காகவும், அத்தலத்தின் வரலாறுப் பாரம்பரியத்தின் இருப்புக்காகவும் புலவர்கள் கையாண்டுள்ளனர் எனலாம். ஆனாலும், சிலபிரபந்தங்களில் இவை பாடல்களில் பெரும் பகுதியை ஆக்கிர மித்துள்ளது எனலாம். சில பிரபந்தங்களில் இவை அளவோடும் இடமறிந்தும் பயன் படுத்தப்பட்டுள்ளதை காண முடிகிறது.

சிலபிரபந்தங்களை பக்தியோடு கோயிலில் படிக்கப்படவேண்டும் என்ற விருப்புடன் ஆசிரியர்கள் பாடியுள்ளனர் எனத்தெரிகின்றது. உதாரணத்திற்கு ஸ்ரீவடிவாம்பிகாதேவி அந்தாதியை குறிப்பிடலாம். இது கிட்டத்தட்ட அபிராமி அந்தாதியைப் போல விளங்குவதை ஆராய்ந்துள்ளோம்.

இதைப்போலவே ஊஞ்சலையும் குறிப்பிடலாம். ஆனால் ஊஞ்சல் பாடல் களுக்கு ஒரு தேவை இருப்பதையும் நோக்க வேண்டும். முன்னேஸ்வரப் பிரபந் தங்களில் மூன்று ஊஞ்சல் காணப்படுகின்றன. இது ஆசிரியர்களிடத்தில் காணப் பட்ட அருட்டுணர்வின் வெளிப்பாடு எனலாம்.

இதைவிட தத்துவக் கருத்துக்கள், நிலையாமைக் கருத்துக்கள் போன்றவையும் கூறப்படுகின்றன. இவ்வளவோடு ஆசிரியர்கள் மனம் திருப்தியடையவில்லை என்றே கூற வேண்டியுள்ளது. சமூகத்தோடு முன்னேஸ்வரக் கோயில் கொண்டிருக்கும் தொடர்பினையும் படம் பிடித்துக் காட்டுகின்றனர். இதில் அவர்கள் எவ்வளவு தூரம் வெற்றியடைந்துள்ளார்கள் எனக் கூறவியலாது. ஆனாலும், சமூகத்தையும் இலக்கியங்கள் பிரதிபலிக்க வேண்டும் என்பதை கருத்தில் கொண்டிருந்தார்கள் என்பது தெரிகின்றது. முக்கியமாக இங்கு நடைப்பெறுகின்ற உற்சவம் பல சமய, இன மக்கள் ஒன்று கூடும் விழாவாகும். இதை நேரில் தரிசித்த கும்மி பிரபந்த ஆசிரியர் தனது பாடல்களில் சமூகத்தையும், சமூகமானது முன்னேஸ்வரக் கோயிலுடன் கொண்டிருந்த கலாசார தொடர்புகளையும் அழகாகக் கூறியுள்ளார்.

மேலும் இவை பக்திப்பாசுரங்கள் என்ற வரையறையைக் கடந்து இலக்கிய வளம் உள்ளவையாக விளங்க வேண்டும் என்பதிலும் ஆசிரியர்கள் கவனமாக இருந்துள்ளனர் எனத் தெரிகின்றது. அதற்காகவே பல்வேறு தமிழ் இலக்கிய வடிவங்கள் தமிழ் இலக்கண மரபுகள் அணி அலங்காரங்கள் போன்றவற்றைக் கையாண்டுள்ளனர். இது அந்நூல்களுக்கு ஓர் இலக்கிய அந்தஸ்து பெற்றுக் கொடுக்க காரணமாகிறது. மொத்தத்தில் "முன்னேஸ்வரப் பிரபந்தங்கள்" தமிழ் இலக்கிய மரபிலும் சரி நிலையான ஓர் இடத்தை தக்கவைத்துள்ளதென்றே கூறவேண்டும். பிரபந்த ஆசிரியர்களும் அவ்வாறான நோக்கத்தை கொண்டிருந்தனர் என்பதை ஆய்வு மூலம் அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கின்றது.

**ஆய்வுக்குதவிய அடிப்படை நூல்கள் -**


| | |
|---|---|
| 01) சிலம்புநாதபிள்ளை சி. | தோத்திரப்பாமாலை<br>திருத்தாண்டகம்<br>முனீஸ்வரருஞ்சல்<br>வடிவழகியம்மை<br>பதிற்றந்தாதி<br>ஆ. தெ |
| 02) செல்வம் .க | வல்லவடிவாம்பிகா மாலை<br>திருமூலர் சங்கம்<br>கொழும்பு. (1994) |
| 03) சொக்கன் | முன்னீச்சரத்து ஸ்ரீவடிவாம்பிகை<br>பிள்ளைத்தமிழ்<br>முன்னேஸ்வரம் தேவஸ்தானம்<br>சிலாபம். (1999) |

| | |
|---|---|
| 04) சோமசுந்தரப்புலவர் .க | முன்னநாதேஸ்வரர்திருவூஞ்சல் முன்னேஸ்வர தேவஸ்தானம் சிலாபம். (1965) |
| 05) தம்பு.S.R | முனீஸ்வரவடிவழகி பதிகம் சைவப்பிரகாச யந்திரசாலை யாழ்ப்பாணம். (1938) |
| 06) பாலசுரப்பிரமணியக்குருக்கள்.சி | ஸ்ரீமுன்னைநாதஸ்வாமி வடிவழகி அம்பாள் திருவூஞ்சல் முன்னேஸ்வரதேவஸ்தானம். சிலாபம் (1965) |
| 07) பெரியசாமிப்பிள்ளை. கா | முனீஸ்வரம் ஸ்ரீவடிவாம்பாள் கும்மி ஹிக்கொட, உந்துகொட (1970) |
| 08) மாணிக்கத்தியாகராசா.சி | முன்னைநாத சுவாமி நவதுதி ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம் |
| 09) வயித்தியலிங்கம் .அ | முனீசுரவந்தாதி கோடியர்ச்சனை வெளியீடு முன்னேஸ்வர தேவஸ்தானம். முன்னேஸ்வரம் (1962) |
| 10) (பெயர் தெரியாது) | ஸ்ரீமுன்னேஸ்வர க்ஷேத்ர ஸ்ரீ வடிவாம்பிகாதேவி அந்தாதி இரத்தினபூபதி பாலசுப்பிரமணியம் வெளியீடு. 1995 |

குறிப்பு:- ஆ. தெ - ஆண்டு தெரியவில்லை

## உசாத்துணை நூற்பட்டியல்


| | |
|---|---|
| 1) கதிர் தணிகாசலம் | தமிழர் வரவாறும் இடப் பெயர்ஆய்வும் சரவணா பதிப்பகம் சென்னை 1992 |

2) சதாசிவம் .ஆ — ஈழத்துத் தமிழ் கவிதைக் களஞ்சியம்
சாகித்திய மண்டலம், வெளியீடு
(1966)

3) சந்தா .ந. — கதிர்காமப் பிரபந்தங்கள்
கொழும்பு (1995)

4) சண்முகம்பிள்ளை .மு. — "சிறுபிரபந்தங்கள்"

இலக்கியக் கொள்கை
உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை. (1977)

5) சிவத்தம்பி. கா. — "தமிழ் இலக்கியத்தில் மதமும் மானுடமும்"
தமிழ்ப் புத்தகாலயம்
சென்னை. (1983)

6) சிவராமகிருஷண சர்மா .பா. — முன்னேஸ்வர வரலாறு
முன்னேஸ்வர தேவஸ்தானம்
சிலாபம். (1968)

7) சுப்பிரமணியம். ச.வே. — பிரபந்ததீபம்
தமிழ்ப்பதிப்பகம்
சென்னை. (1980)

8) செயராமன் .நா. — அரங்கேறிய ஆய்வுகள்
ஐந்திணைப் பதிப்பகம்
சென்னை. (1988)

9) செயராமன் .ந. வீ — சிற்றிலக்கியச் செல்வங்கள்
மணிவாசகர் நூலகம்
சிதம்பரம். (1967)

10) திருவள்ளுவர் — திருக்குறள்
பரிமேலழகர் உரை
பாரதிபதிப்பகம்
சென்னை. (1961)

11) நடராசா கா. செ — ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சி
காந்தளகம்
சென்னை. (1987)

12) வேலுப்பிள்ளை .க. — யாழ்ப்பாண வைபவ கௌமுதி
ஜயசிறி சாரதா பீடேந்திர சாலை
வயாவிளான். (1918)

13) வேலுப்பிள்ளை .ஆ. — சாசனமும் தமிழும்
ஏப்பிரல் (1970)


**உசாத்துணை நூல்:- ஆங்கிலம்**


Somakhandhan:- TEMPLES OF SIVA IN SRLANKA
CHINMAYAMISSION
PUBLICATION SRILANKA> 1999


சஞ்சிகைகள்


தில்லைநாதன் சி. — “தமிழ் இலக்கிய வடிவங்கள்”
கட்டுரை
இளங்கதிர், தமிழ்ச் சங்கம்
பேராதனை (1979)

மகேஸ்வரன் வ. — பாரதியாரின் விநாயகர் நான்மணிமாலை
கட்டுரை
அகிலம் பதிப்பகம்
கண்டி (2000)

# பகுதி இரண்டு
# முன்னேஸ்வர தமிழ்ப் பிரபந்தங்கள்

திருச்சிற்றம்பலம்

# முன்னநாதேஸ்வரர் திருவூஞ்சல்

[யாழ்ப்பாணத்து நவாலியூர் திரு க. சோமசுந்தரப்புலவர் பாடியது.]

காப்பு

முந்துமொரு மூவருக்கு மூல மாகி
முழுதுலகு மீன்றவடி வழகி யோடு
சந்தமலர்த் தடம்பொலிமுன் னேச்சு ரத்திற்
றானாக முளைத்தசிவக் கொழுந்தைப் போற்றிச்
செந்தமிழின் னிசையூஞ்சற் றிருப்பாட் டோதச்
சிந்திப்போர் தீவினைகள் தீர்த்துக் காக்கு
மைந்துகரத் திந்துமுடித் தொந்தித் தந்தி
யானைமுகன் ஞானமலர் காப்ப தாமே.

நூல்

திருவோங்கு மிருமரயை தூணா நாட்டி
சிவமோங்கு தத்துவங்கள் விட்டம் பூட்டி
அருவோங்கு கலையாதி வடங்கள் மாட்டி
அணியோங்கு மறைநான்கும் பீடங் கூட்டி
உருவோங்க வுஞற்றமூல கூஞ்சன் மீதே
ஒளியோங்கு மம்மைவடி வழகி யோடு
முருகோங்கு பொழின்முன்னேச் சுரத்து வாழும்
முன்னைநா தேஸ்வரரே யாடீ ரூஞ்சல். 1

வெளிமருவு மிருசுடருங் குடைகள் தாங்க
விரைமருவு மனிலனணி கவரி வாங்க
நளிமருவு புனலரசன் பனிநீர் தூவ
நயமருவு மடலியம னுடைவாள் காவ
களிமருவு தவமுனிவ ராசி நீடக்
கயன்மருவு நயனிவடி வழகி யோடு
மொழிமருவு புகழ்முன்னேச் சுரத்து வாழும்
முன்னநா தேஸ்வரரே யாடீ ரூஞ்சல். 2

சந்தணியு மாடகயாழ் முனிவன் மீட்ட
தகையணியு மணிமுழவம் நெடுமால் கூட்ட
வந்தணியுங் கந்தருவர் வரிப்பண் பாட
மறையணியு மலரினயன் தாளம் போட
கொந்தணியுந் தளமடவார் நடன மாட
கோலணியுங் குவளைவிழி யழகி கூட
முந்தணியும் பொழின்முன்னேச் சுரத்துவாழும்
முன்னநா தேஸ்வரரே யாடீ ரூஞ்சல். 3

வானகதுந் துபிமுழங்கச் சங்க மேங்க
மண்ணகதூ ரியமிசைக்க மறைக ளோங்க
தேனகமந் தாரமலர் மாரி வீச
சீரகச்செந் தமிழ்மறைமந் திரங்கள் பேச
ஊனகநெக் குருகியடி யவர்க ளாட
உள்ளகஞ்சே ரோங்கார வடிவி யோடு
மோனகலை யருளுமுன்னேச் சுரத்து வாழும்
முன்னநா தேஸ்வரரே யாடீ ரூஞ்சல். 4

வானமருங் கங்கைவர நதிநீர் பன்னீர்
வரமமரு மந்திரநீ ரிளநீர் கூட்டி
ஆனமரு மைந்துமுய ரன்பா லாட்டி
அணியமருந் துகிலுடுத்துக் கலன்கள் மாட்டி
மானமரு நானமலி தேய்வை சாத்தி
மலரமருஞ் செங்கைவடி வழகி யோடு
மோனமுனி வரர்தொழுமுன் னேச்சு ரத்து
முன்னநா தேஸ்வரரே யாடீ ரூஞ்சல். 5

கைம்மலிந்த பூமாலை கனக மாலை
கவிமலந்த பாமாலை கவினச் சூட்டி
நெய்மலிந்த புத்தமுதுங் கனியுங் கூட்டி
நிரைமலிந்த கர்ப்பூர நிறைவு காட்டி
மெய்மலிந்த தொண்டர்குழாம் விரும்பி யேத்த
வேன்லிமந்த கண்ணிவடி வழகி யோடு
மொய்ம்மலிந்த பொழின்முன்னேச் சுரத்து வாழும்
முன்னநா தேஸ்வரரே யாடீ ரூஞ்சல். 6

பொன்னேறு மலரிதழி யறுகு மாடப்
புரியேறு சடையாட நிலவு மாட
கொன்னேறு மக்குமணி மாலை யாட
கூரேறு மழுவாட மானு மாட
மின்னேறு துடியிடைமென் கொம்பு மாட
விடையேறு நந்திமுதல் விபுத ராட
முன்னேறு புகழ்முன்னேச் சுரத்து வாழும்
முன்னநா தேஸ்வரரே யாட லூஞ்சல். 7

கைம்மேவு மதகரடக் களிறு மோர்பால்
கதிர்மேவு சுடர்நெடுவேற் காளை யோர்பால்
மைம்மூவு கஞ்சுகத்து வடுக னோர்பால்
வலிமேவு மடல்வீர வரத னோர்பால்
மெய்ம்மேவு முருத்திரர்பல் கணத்த ரோல்பால்
விதுமேவு நுதலிவடி வழகி யோர்பால்
மொய்ம்மேவு ஞானமுன்னேச் சுரத்து வாழும்
முன்னநா தேஸ்வரரே யாட லூஞ்சல். 8

பழிவிரவு முப்புரங்கள் படுத்தல் பாடி
பகைவிரவு தக்கன்மகம் கெடுத்தல் பாடி
களிவிரவு மதமலையை யுரித்தல் பாடி
கைவிரவு கரும்பனுட லெரித்தல் பாடி
துளிவிரவு கங்கைசடைச் சூடல் பாடி
துடிவிரவு மிடையவளோ டாடல் பாடி
மொழிவிரவு புகழ்முன்னேச் சுரத்து வாழும்
முன்னநா தேஸ்வரரே யாட லூஞ்சல். 9

மாசுணச்செஞ் சடையீரே யாட லூஞ்சல்
வஞ்சகநெஞ் சடையீரே யாட லூஞ்சல்
ஆசறுமா தாங்கத்தீ ராட லூஞ்சல்
அருடருமா தரங்கத்தீ ராட லூஞ்சல்
தேசுமதி முடித்தவரே யாட லூஞ்சல்
தீயமதி முடித்தவரே யாட லூஞ்சல்
மூசுமரி முரல்பொழின்முன் னேச்சு ரத்து
முன்னநா தேஸ்வரரே யாட லூஞ்சல். 10

பூவாழி பொன்மாரி பொழிந்து வாழி
பூதிகண்டி யைந்தெழுத்தும் பொலிந்து வாழி
மாவாழுந் திருமுகத்து வள்ளல் வாழி
வள்ளிதெய்வ யானைமகிழ் மணாளன் வாழி
பாவாழ மயில்வாழி யடியார் வாழி
பைந்தமிழ் பொன்னூஞ்சலிசைப் பதிகம் வாழி
மூவாத வருள்வடிவாம் பிகையும் வாழி
முன்னநா தேஸ்வரரும் வாழி வாழி.

முற்றும்.

திருச்சிற்றம்பலம்.

உ
சிவமயம்

# ஸ்ரீ முன்னநாதஸ்வாமி வடிவழகி அம்பாள் திருவூஞ்சல்

[முன்னேஸ்வரம் பிரம்மஸ்ரீ சி. பாலசுப்பிரமண்ய குருக்கள் பாடியது]

## 1. காப்பு

திருவளரு மிலங்கா புரியிலோங்குஞ்
சிலாபநக ரந்தன்னில் மேவும்
தருவளரு முனீச்சுர தலத்திலோங்கித்
தவப்பெரியார் மனத்துள் வாழும்
உருவளரும் வடிவழகி பாகங்கொண்ட
உவமையிலா முன்னநா தேசுவரர்மேல்
கருவளரு மூஞ்சலிசை கனிந்துபாடக்
கணபதித ஏிருசரணங் காப்பதாமே.

## 2. ஊஞ்சல்

திருமலியும் நால்வேதக் கால்கனாட்டி
சேர்ந்தபல சாகைகளாந் தழைகள்பூட்டி
உருமலியும் பிரணவமே பலகையாக
ஊஞ்சலிலே வாஞ்சைமிக வேகந்தூண்ட
கருமலியும் மைந்துவகைக் கிரிகைதேங்க
கனங்குழலாள் சுந்தரியாள் பாகம்மேவ
தருமலியும் முன்னநா தேசுரரே
தன்னைநிகர் வடிவாம்பிகையே யாடீரூஞ்சல்.

## 3. ஆபரணம்

முத்தினொடு வைரங்கள் புஷ்பராகம்
முழுநீலம் பச்சைகோ மேதகமும்
சித்திரமார் பவளமொடு கெம்புங்கூட
செறிந்தபல வாபரணங்கள் மின்ன
தித்திபறை தவில்ப்ம்பை முரசினோடு
சிறுசின்ன மெக்காளம் பேரிவீணை
நித்தமொலி முன்னநா தேசுரரே
நிமலைவடி வாம்பிகையே யாடீரூஞ்சல்.

### 4. சபா

திருமாலும் நான்முகனும் பாங்கில்மேவ
சீர்மாதுங் கலைமகளும் நாண்தொட்டாட்ட
உருவளரு மங்கிதீ வர்த்தியேந்த
உயர்வாயு நற்றூபந் தாங்கிநிற்ப
இருபாலுங் கணிகையர்கள் இசையோடாட
இரவியொடு சந்திரனும் வட்டந்தாங்க
அருளோங்கு முன்னநா தேசுரரே
அன்னைவடி வாம்பிகையே யாடீரூஞ்சல்.

### 5. ஸ்ரீ சக்ரம்

பிந்துவொடு முக்கோண மெண்கோணம்
பிரியமுள தசகோணம் இரண்டும்மேவ
சிந்தைநிறை பதினான்கு கோணமாகச்
சிறந்ததள மெட்டோடு பதினாறும்
சொந்தமிகு விருத்தங்கள் மூன்றுபூமி
சொன்ன முறைச க்கரத்தில்
வந்தருளு முன்னநா தேசுரரே
வரதவடி வாம்பிகையே யாடீரூஞ்சல்.

### 6. ஸ்தலமஹாத்மியம்

சீராரும் இலங்கைவாழ் மன்னரேத்தி
சிறப்புடனே வெற்றிபுகழ் வீடும்பெற்று
பாராருங் கனநிதியும் பலவளமும்
பணிபொன்னும் பரிந்து நல்கத்
தாராருஞ் தேசுடனே யிலங்குநாத
சடைகங்கை யறுகோடு மதியஞ்சூடுங்
காராரும் முன்னநா தேசுரரே
கௌரிவடி வாம்பிகையே யாடீரூஞ்சல்.

### 7. சம்பவம்

பலசமய வடியார்கள் பரவியேத்தப்
பாங்கினொடு மறையோர்கள் வேதமோதத்
தலமருவுந் தமிழ்வேத கீதம்பாடத்
தகுமாதர் தமைமறந்து வணக்கம்பேச

நலமோங்கு வாத்தியங்கள் எங்குமார்ப்ப
நாடாளும் முடிமன்ன ரடிபணிய
வலந்திகழு முன்னநா தேசுரரே
வாமிவடி வாம்பிகையே யாடீருஞ்சல்.

## 8. வாழி

வேதமோடா கமங்க ளென்றும் வாழி
வித்தகஞ்சே ரந்தணர்க ளாவும் வாழி
நீத முடனர சர்நெறி யோங்கி வாழி
நிறைவணிகர் குலநீதி யென்றும்வாழி
தீதகற்று முழவோரும் பாரும்வாழி
திடபக்தி செறிதொண்டர் நாளும்வாழி
தாதணியு முன்ன நாதேசுரரும்வாழி
தையல்வடி வாம்பிகையும் வாழி வாழி!

## 9. எச்சரிக்கை

வருவார்வினை தவிற்கும்பரம் பொருளே யெச்சரிக்கை
வடிவாம்பிகை வாமந்திகழ் வரதா யெச்சரிக்கை
திருவார்சடை முடியாயெமை யுடையா யெச்சரிக்கை
சிவமேதவ முதலோர்நினை முதல்வா யெச்சரிக்கை
மருவும்பல வடியார்தொழு மலையே யெச்சரிக்கை
மறையாகம நிதியேதரு மணியே யெச்சரிக்கை
உருவார்குண நிதியேஉயர் நிலையே யெச்சரிக்கை
உருவேயரு வெளியேயொளி யுருவே யெச்சரிக்கை.

## 10. பராக்கு

சித்த மிசை யுறைகின்ற தேவீ பராக்கு
சிந்தா மணிக்ரகச் செல்வீ பராக்கு
நத்துமடி யார்கள்வினை தவிர்ப்பாய் பராக்கு
நாதனருள் பாங்கிலுறை நல்லாய் பராக்கு
சுத்தசிவை யானவெங்கள் சுகமே பராக்கு
தொல்லுல கோர்க்கருளுந் தோகாய் பராக்கு
பக்தி செறி யன்பருளம் படிவாய் பராக்கு
பாசவினை வேரறுக்கும் பாவாய் பராக்கு.

## 11. லாலி

அன்பர்ணி அற்புதனே அமரர்தொழு சிற்பரமே
ஆதியுமை அம்பிகையா ளருகமருந் தேவே
வன்பரிடை சேராத வரதபுர லாலி
வரங்கள்தரு முன்னநக ரீசலாலி.

## 12. மங்களம்

மங்களம் மங்களம் நித்ய சுப மங்களம்

திங்களணி நாதருக்கும் தேவிவடி வாம்பிகைக்கும்
பொங்குகுண சீலருக்கும் போற்றுசிவ தேவியர்க்கும்-மங்க.

தேவாதி தேவருக்கும் தேவர் புகழ் சுந்தரிக்கும்
சிவலோகநாதருக்கும் சிவானந்த தேவியற்கும்-மங்க

முன்ன நகர்வாசருக்கும் முத்தியருள் தேவியற்கும்
மின்னுசடைவள்ளலுக்கும் மின்கொடியாளம்பிகைக்கும்-மங்க.

சுத்தசிவமானவர்க்கும் சோதிநிறை தேவியற்கும்
மத்தமணிநாதருக்கும் மாதுவடிவாம்பிகைக்கும்-மங்க.

முற்றும்.

# முனீஸ்வரரூஞ்சல்

[கொக்குவில் சி. சிலம்புநாதபிள்ளை பாடியது]

## காப்பு

பொன்பூத்த மலர்வனங்கள் பொலிந்து சூழும்
பொருள் பூத்த முனீசுர சிற் பதியில் வாழும்
மன்பூத்த வீசு வரர் மீதிலூஞ்சல்
வளம் பூத்த செந்தமிழில் வறியேன் பாட
கொன் பூத்த மதியரவு கங்கை தங்கு
குணம் பூத்த சடை மவுலிப் பெருமானின்ற
மின் பூத்த புழைக்கரத்து மதமூன்றுள்ள
வேழமுக விநாயகனை வேண்டுவாமே.

தேமேவு நாதவிந்து கால்களாக
திறமேவு சத்தியொளிர் விட்டமாக
நாமேவு மந்திர நூலிழையதாக
நயமேவு மறைநான்குங் கயிறதாக
மாமேவு முபநிடதம் பலகையாக
வரமேவு பிரணவமே பீடமாக
தூமேவு வடிவழகி யம்மையோடு
சுத்தபர முனீஸ்வரரே யாடீரூஞ்சல். 1

இந்திரவி வெண்கவிகை தாங்கி நிற்க
எண்டிகழும் பூதர்பல வியங்களார்ப்ப
சுந்தரஞ்சேர் சுந்தர நற் பூதியேந்த
சுகமுறு நல்லளகையர்கோ னிதிகடூர்ப்ப
வந்துபல துதிகூறிக் கவரிதூவ
வரமுடைய சிலாதரன் சேய் பிரம்பு தாங்க
சுந்தரியாம் வடிவழகி யம்மையோடு
சுத்தபர முனீஸ்வரரே யாடீரூஞ்சல். 2

விண்ணவர்கண் மண்ணிறைய மலர்கடுவ
வியன்மேவு கணநாத ரரவென்றார்ப்ப
தண்ணுலவு முனிவரர்க ளாசிகூற
சதுர்மறையோ ராத்தனுரை தன்னையோத

பண்ணுலவு கீதமறை யிருபவர்பாட
பத்தியுறு மடியார்பல் லாண்டு நீட
சுண்ணமுலை வடிவழகி யம்மையோடு
சுத்தபர முனீஸ்வரரே யாடீருஞ்சல். 3

மதிமருவு நால்வருள் வேதம் பாட
வளர்புட்ப தத்தமுனி வடநூல் பாட
சதிமருவு மரம்பையர் கண்டன மாட
சண்முகனுங் கணபதியுந் தழுவிச் சார
விதி மருவு சிவாகமத்தி னொலிகள் சேர
விண் மருவு பத்தற்குழாம் விழிநீர் வார
துதிமருவு வடிவழகி யம்மையோடு
சுத்தபர முனீஸ்வரரே யாடீருஞ்சல். 4

கனமாருங் கண்டர்புடை சூழ்ந்து மேவ
காலுறுநற் கண்ணுடையான் கழிப்பினீட
மனமாரு மனசூயை பதத்தோனாட
வளமாரும் பிருங்கியுளம் வாழ்விற்கூட
தனமாரும் வடுகிமனம் நிமர்ந்து நாட
தக்க வியராவணமும் பக்கமாக
சுனை யாடு மிமைய வடிவழகியோடு
சுத்தபர முனீஸ்வரரே யாடீருஞ்சல். 5

படர்ந்தொன்பா னாயவிளஞ் சடையுமாட
பதவிருக்கும் பெண்கொடியும் பரவியாட
அடர்ந்த சிறு சதங்கையோடு சிலம்புமாட
ஆனையுரிப் போர்வையது வழகாயாட
அடைந்தபவத் தொடக்கறுக்குங் கருணையாட
அலைவுறு நற் சேன் மீனின் விழிகளாட
தொடர்ந்தவருள் வடிவழகி யம்மையோடு
சுத்தபர முனீஸ்வரரே யாடீருஞ்சல். 6

செயிரறுநற் பசுபதியே யாடீருஞ்சல்
செல்வங்க ளளித்தருள்வா யாடீருஞ்சல்
அயர்வில்சிகா மதியனே யாடீருஞ்சல்
ஆரணித்தினுட் பொருளே யாடீருஞ்சல்

துயரகற்றும் பெருமானே யாடீருஞ்சல்
சுபசமய நாயகரே யாடீருஞ்சல்
சுயம் வளரும் வடிவழகி யம்மையோடு
சுத்தபர முனீஸ்வரரே யாடீருஞ்சல். 7

அங்கிங் கெனாதவரே யாடீருஞ்சல்
அடற்கரியை யுரித்தவரே யாடீருஞ்சல்
பொங்கரவம் பூண்டவரே யாடீருஞ்சல்
புரமெரித்த புண்ணியரே யாடீருஞ்சல்
தங்கமுறு மலைவில்லா யாடீருஞ்சல்
சந்ததமு மென்மனத்தா யாடீருஞ்சல்
துங்கமுறு வடிவழகி யம்மையோடு
சுத்தபர முனீஸ்வரரே யாடீருஞ்சல். 8

படிகவடி வுடையவரே யாடீருஞ்சல்
பத்திவலைப் படுபவரே யாடீருஞ்சல்
விடமுறழ்கந் தரத்தவரே யாடீருஞ்சல்
வெள்ளி மலைக்கிறையவரே யாடீருஞ்சல்
நெடியவனுக் கரியவரே யாடீருஞ்சல்
நித்தியநின் மலமுதல்வா யாடீருஞ்சல்
துடியிடைசேர் வடிவழகி யம்மையோடு
சுத்தபர முனீஸ்வரரே யாடீருஞ்சல். 9

நன்னலஞ்சே ருலகுயிர்க ணாயநது வாழி
நான் மறையோ டந்தணர் கணங்கின் வாழி
துன்னியவா வினம் வாழி யரசர் வாழி
சுத்த சைவ நெறி வாழி நீறும் வாழி
பன்னியவைத் தெழுத்தினொடு தருமம் வாழி
பகர் தெய்வ நான்முகில்கள் பண்பின் வாழி
சொன்ன வடிவழகியுமை வாழி வாழி
சுத்தபர முனீஸ்வரரும் வாழி வாழி.

## எச்சரிக்கை

சீரார் புகழ் புதிகமவை
செப்புந் திருவுடைய
காரார் காளிக்கர சைத்தரு
கண்ணே யெச்சரிக்கை

பாக மது பிரியா துறை
பச்சைக் கொடியுடனே
வேத முடனடியார்க்
கருள் விகர்தா வெச்சரிக்கை

பொன்னேயரு மணியே பொன்னிற்
பொலி வோடுறு மொளியே
அன்னே அகலிடம் போற்றிடு
மாதீ யெச்சரிக்கை

பங்கமது விலதாகிய படர்கின்ற
தொர்ச் சடையாய்
துங்கமுறு முனிசுவரத்
தொல்லோ யெச்சரிக்கை.

## பராக்கு

அன்பருளங் குடிகொண்டவையா பராக்கு
அகர மதினுட் பொருளா மாதி பராக்கு
நரியதனைப் பரியாக்கு நம்பி பராக்கு
நான் மறையின் மெய்ப் பொருளை நன்றாய் பராக்கு

வெவழற் கொள் கண்ணுடைய விமலா பராக்கு
வேத முரைத்திடுவோர் முன்விரைந்தாய் பர்ராக்கு
சுத்த பரமுனிஸ்வர சுவாமீ பராக்கு
சோதி வடிவாகியுயர் தொல்லோய் பராக்கு.

## மங்களம்

மங்களம் மங்களம் மங்களம் நித்திய சுப
மங்களம் மங்களம் மங்களம்

பொன்னி தளி பூண்டவற்குப் போதவடி வானவற்கு
நன்னலஞ் சேர் நாயகற்கு
நாத முடி வானவற்கு (மங்களம்)

பத்தர் பணி தாளருக்கு
பரவுதச தோளருக்கு
வித்தகஞ்சேர் காளருக்கு
வேண்டு மரு ளாளருக்கு (மங்களம்)

மான் மழுத் தரித்தவற்கு
மன்மதனை யெரித்தவற்குத்
தோன் முகனை யுரித்தவற்குத்
துய்ய வங்கி பரித்த வற்கு (மங்களம்)

சுத்த பர முனீஸ்வரற்குக்
தோற்ற முடிவில்லவற்கு
நித்திய நிராமயற்கு
நீடு வெளி நேயருக்கு (மங்களம்)

முற்றிற்று.

# முன்னேஸ்வர மான்மியம்

ஆக்கம்
பிரம்மஸ்ரீ நா. சிவசுப்பிரமண்ய சிவாச்சார்யார்

வெளியீடு
ஸ்ரீ முன்னேஸ்வரம் தேவஸ்தானம்,
சிலாபம், இலங்கை.
2012.

உ

*ஸ்ரீ வடிவழகி துணை*

# ஸ்ரீ முன்னேஸ்வரமான்மியம் (பாக்கள்)

இஃது கந்தஷஷ்டி விநாயக ஷஷ்டி, ஏகாதசி, சிவராத்திரி, நவராத்ரி முதலிய புராணங்களைத் தமிழில் விருத்தப் பாக்களா-லியற்றியவரும் மணிமந்திர ஔஷத சாஸ்திர விற்பன்னரும் முத்தமிழ் வித்துவானும் ஆரியபாஷா பண்டிதரும் `நா' வன்னா (நாவல்நா) இவ்வொரு எழுத்தாலேயே வியாபகமானவருமான

**பிரமஸ்ரீ நா. சிவசுப்ரமண்ய சிவாசார்யர் அவர்கள்**

இயற்றியது

(இலங்கா மான்மிய 12000 பாக்களுள் ஸ்ரீ முன்னேஸ்வரமான்மியம்)

### காப்பு

*பன்னிய காண்டமைந்து படலமோர் முப்பதின்மே*
*லென்னும்பன் னீராயிரத்து ளறுநூறு விருத்தச்செய்யுள்*
*தன்னிற்சீ ரிலங்காமான்மியந் தழைதென் கோயிற்புராணங்*
*கன்னிகை யருளுமங்கைக் கற்பகம் கருதிச் சொல்வாம்.*

### நூற்பயன்

*திருவுங் கல்வியுந் திகழ் நீதியன்*
*அவள்வரு முத்தியு மணுகுஞ் சிற்பரம்*
*பொருவரும் தெக்கி ணாலய புராணமே*
*லொருகவி யாயினு மோர்ந்து ரைக்கினே.*

### கடவுள் வாழ்த்து

*மழைவளஞ் சுரந்துமல்க மாநிலஞ் சுரக்கத்*
*தழைவை தீகசைவந் தாரணி பெருகநீதி*
*கழைகனுற் றொழிரத்தெக்கி ணாலய புராணக்காதை*
*வரைகட லுலகமெங்கும் மலிந்தனு தினமும்வாழ்க.*

## கண்ணலிங்கேசர் துதி

ஆயிரம் பணாமுடி யாதி சேடனும்
வாயுவும் பொருசமர் மாற்றி யன்றருள்
தூய கண்ணலிங் கேசச் சோதியின்
சேயபொற் பதமலர் சென்னி சேர்த்துவாம்.

## கண்ணகாம்பிகை

புழுகொழுக நறவொழுகுங் குழலி னாளைப்
புவனசராசர நிதமும் போற்றிநன்கு
தொழு பதுமமலர் நிகரும் பதத்தினாளைச்
சுதன்முதலெண் வகையுறுப்பிற் துலங்கிமூவர்
வழுவு நெறி பெறாதியலக் கடைக்கணோக்கம்
வழங்குதிரு நாயகியை மழுமானேந்தி
அழகு பொலி யிடம்பிரியாச் செல்வமானை
அன்னைகண்ண காம்பிகையை யகத்துள்வைப்பாம்.

## திருத்தொண்டர்

திங்களங் கண்ணிவேய்ந்த செல்வனா ருலகோருய்ய
வங்கணே கொள்ளுங்கோல மம்மையா ணந்தநிர்த்த
மிங்கிவ ரடியராக வெய்தினோ ரெய்தாநிற்போ
ரங்கவா பதுமபாத மனந்தழீ அன்புசெய்வாம்.

கடவுள் வாழ்த்து முற்றும்.

## அவையடக்கம்

மதிபுனை சடிலத்தெம்மான் வடிநெடு வேற்கணம்மை
இதயமுற் றொளிரமுன்னா ளியம்புமப் பொருளைநந்தி
விதிமுறை தெரிந்துமீள வியன்சனற் குமாரற்கேற்ற
விதுரமா முனிவன்பண்டு வியாதனுக் கருளவன்னோன்.

சூதமா முனியங்கோதுந் துகளறு புராணநுட்ப
மேதகு முனிவன்றேர்ந்து வேள்விசெய் துள்ளந்தேறி
நாதனம் புயமலர்த்தா ணாடுநைமி சர்க்குச்சொற்ற
காணிலங் காதைநாயேன் கருதுதென் மொழியினேற்றி.

தருப்பணத் துலகுகாட்டுந் தகையெனச் சைவஞான
விரும்பமெய்ப் பக்திதன்னை வித்தையிற்ற றுலக்கநேர
அருப்பமின் மதியிற்றெக்கி ணாலய புராணக்காதை
தெரிப்பயான் முயன்றவாவைச் செகதலத் திலக்கினேனே.

கலைக்கடன் முகந்துநீதி கவின்றுநற் பொருடுலக்கி
நிலைக்கரும் பொருளுளத்து நிலவவத்து விதமான
தொலைக்கதிர் சிஷ்யர்க்கேற்றுந் துகளில்வான் புலவீரென்றன்
மலைக்கெதி ரேற்றும்மின் வளர்சொலின் பொருளுணர்ந்தே.

கற்பனை கடந்து ஞானக் கதிர்விரித் தருள்பரப்பி
எற்பொலி சகமிலக்கு மீசனெவ் வுயிர்க்குநாதன்
பொற்பொலி மேருவில்லி புண்ணிய சரிதங்கொண்டு
நிற்பதின் மலர்த்தார்நேர நெஞ்சக மகிழ்ந்துமாதோ.

## பாயிரம்

முந்தொரு காலந்தன்னில் முதிரருந் தவத்தின்மிக்கார்
சிந்தனைக் கரியமேலைச் சிவநெறி யோதுந்தூயோர்
பந்தமில் மனத்தர்யார்க்கும் பண்ணவர் முராரிமேவும்
அந்தணர்ப் பதியிநீடப் போற்றியன்பி னிம்மொழிபுகன்றார்.

தற்பமின் மனத்தவேதந் தழைதிரு வதனத்தைய
பொற்பமை வாணிநாத புண்ணிய வழியெஞ்சிந்தை
முற்படத் தவமியற்றி முதிர்மனை வாழ்வுபூண்டும்
முற்பவ மொழித்தற்கேற்ற வுறையுளொன் றருடியென்றார்.

## வேறு

அன்னவ ருரைகேளா வாரணன் மகிழ்வெய்தி
முன்னிய வறநான்கின் முனிவர்க ளிவைசொற்றீர்
என்னவெ நனிகூறி இசைபெறு குசையொன்றின்
உன்னின றொளிர்நேமி யுறுவர்முன் னுறுவித்தை.

அந்தண ரிதுகேண்மின் அணிபெறு குசைநேமி
முந்துற வதனின்பின் முகமகிழ் வுடனேகி
அந்தம துறுமிடனின் அணுகி யிருமென்ன
வுந்தின னதனின்பின் யோகர்நன் னடைகொண்டார்.

தழைதரு குசைநேமி சாரொரு வனமெய்தி
வழைதலி வொளிர்கானம் வானவர் புகழ்நேமி
யுழைபெறு வனமாக வுற்றவர் மகிழ்வெய்தி
மழையெதிர் மயில்நேர வைகினர் மகமாற்றி.

அன்னவர் மகநேரு மார்வலின் மறைநாலுஞ்
சொன்னவன் முதரோணன் தோமறு சிவவேட
மென்னவு மொளிர்சீய னிருவினை சமைவெய்தி
நன்னிலை பெறுமேலோன் நான்மறை சொரிநாவான்.

தத்துவ மசிகண்ட தவமுனி மிருகசூத
உத்தம னறவோர்க ளுயரிரு புறனோங்க
அத்தலை யணுகுற்றா னந்தண ரெதிர்சென்று
சுத்திசெய் தடிபேணித் தூமலர் சொரிகின்றார்.

அருக்கிய பாத்தியஞ்சீ ராசமன் னீயநல்கி
மருக்கிளர் விட்டரத்தின் மரபினி விருத்திவேத
இருக்கிய றெளியுமேலோ ரிவனருள் முறையின்வைகித்
திருக்கில்பே ரன்பினோடு மிவையிவை செப்பலுற்றார்.

மாதவ முனிவர்மேலாம் வாதரா யணன்மாண
நாதனா ரருள்புராணத் தணுகினின் றொளிர்விநோத
பாதபங் கயங்கணோவப் பரிந்திவ ணணுகிநந்தங்
கேதமுற் றொழித்தநாத கேடில்சீர் பரதகண்டம்.

புரிதவப் பயனாமென்னப் பொலிமேருச் சிகரமாகி
அரியயன் முதலாந்தேவ ரமர்திருக் கோயிலாகிப்
பிரளய காலத்துந்தன் பேருரு வழிதலின்றா
விரியிடை நாடியாகி விளங்கிடு மிலங்கையன்றோ.

மன்னசீ ரிலங்கையோங்கு மானந்த கானத்தும்பர்
என்னையாண் முக்கணீசன் இறைவியோடு வந்துமேவி
மன்னுயிர்க் கருள்சுரந்து வரம்புரி வரலாறெல்லா
மின்னதென் றருள்வென்னா வேத்தின ரவன்மகிழ்ந்தே.

வடவனத் திமையாமுக்கண் வள்ளலார் வடபுரத்தைக்
கடிதினி னருளியுற்றார் கருதினன்ன கரை மேவித்
தடமிலி பித்தர்வாவி வடிந்திடிற் றத்துவச்சீர்
நடனநன் குவந்துகாணி நரலையாம் பிறவிநீங்கும்.

பஞ்சபா திகம்பகை பிணிவிசார நீங்கும்
எஞ்சலில் சைவஞான மிசையுமுத் தான்மசோபை
செஞ்சவே யொளிருமென்னத் திருமுனி புகலவின்னோ
ரஞ்சலி புரிந்தேயேத்தி அன்பினிவ் வாறுரைப்பார்.

ஆருயிர்க் குயிராய்ஞானத் தவிர்பரஞ் சுடராமுக்கண்
ணாரியைப் பாகர்கண்ண லிங்கர்கண் ணாயிரத்தர்
சீர்பெறு வடபுரஞ்செய் திறனொளிர் சரிதம்யாவுந்
தேறுமா றுரைத்தியென்னத் திருமுனி புகலுற்றான்.

அறநெறி நின்றுமெய் மையழைத்து வாலுணர்விரித்து
மறுவறு முனிவீரின்ன வாலுணர் வோர்கள்சிந்தை
நிறைபரம் பொருளின்காதை நிகழ்த்துவன் புலம்வேறின்றி
அறிவொருங் கமைத்திரென்னா வந்தண னுரைசெய்கின்றான்.

உ

ஸ்ரீ வடிவழகி துணை

# முன்னேஸ்வரப் படலம்
## சம்பவ காண்டம் - தென்முனைக் காண்டம்

01. சித்தசித் தீசனாகிச் செறியுமுப் பொருளுமாகித்
தத்துவ மும்மைதேறுந் தபோதன ருளமுமாகி
நித்தனாய்ப் பரையினொன்றி நிறைமதி யுலகங்கொண்ட
சுத்தனங் கண்ணலிங்கக் கடவுளைப் பணிநல்செய்வாம்.

02. சனகனுற் பத்தியாதி சாற்றியே லங்காதீப
முனையுறு படலமீற மொழிந்துசம் பவகாண்டத்தை
அனகனார் தென்முனைச் சீரமைதரு காண்டஞ்சொல்லி
வினைவலை யொருக்கிமேலாம் மெய்ப்பொருள் காணுகிற்பாம்.

03. தென்முனை முதலாய்ச்சிங்கை செறிந்த வைராவதிப்பேர்
முன்முனை பிரமதேச-முதலெழு வாயேயாகக்
கொன்முனை யைந்துகோடி யோசனை கொண்டதோ
நன்முனை யைந்துகோடி நாயகன் பதிவிளங்கும்.

04. ஆதியார் கண்ணலிங்க ரருளினா லிங்கைவீறி
மேதகு நரலைபம்பி வியன்புலத் தியனார்காலம்
போதுற வநேககோடி புவிகளை ஆலயத்தைத்
தூதுறு மலர்ச்சிமிழ்த்துத் தயங்கினதென்பர் தொல்லோர்.

05. படிபுக ழிராவணன்மேற் பயிலுறு மிலங்காதீப
நடவையி னேழுநூறு நண்ணிய காதமாக
வுடையவன் மழுமானேந்தி யுமையொரு பாகமாக
விடையினிற் காட்சிதந்து மேவுவ னெந்தஞான்றும்.

06. இன்னவா லயங்கடம் முனிறையவன் கருணைதேங்கி
யன்னையோ டப்பனாகி யமைவடி வழகியோடு
மின்னறீர்த் துலகமா யியம்புநாற் பொருளுமோங்க
முன்னைமுன் னேசப்பேரின் முதற்கற்ப மொழுங்கினானே.

07. ஆவது பகுதியாகி யகிலமாய்ப் பூமியாகித்
தாவறு சலமேதீயாய்ச் சலனமே யண்டமாகி
யோவது புவனகோடி யுள்ளுமா யுயிருமாகித்
தேவராய்ச் சித்தசித்தாய்ச் செறிந்தது பிரமாண்டந்தான்.

08. அத்தகை பிரமாண்டத்துள் அமைந்தபல் லண்டத்தின்கட்
சித்தொளி ரிலங்காதீபஞ் செறிந்தபல் கோடியாகும்
நத்திய விருத்தியிங்ஙன் நவில்கிலஞ் சருவசித்து
சுத்தமார் சர்வப்ராண சங்காரந் துலங்கிற்றன்றே.

09. போமுதற் பிரமாண்டத்தின் பொலிமூலப் பகுதியாகி
யாமுறை சங்கரிப்ப னரனெலா வுலகுமாகிக்
காமரு நுதல்வழிக்கட் கறையரக் கனலெழுந்து
தோமறு புவனதத்துவ தூலசூக்கும மவித்தே.

10. சடசடத் தொலிமிகுத்துச் சராசர வுயிர்கள்யாவும்
படவெழு பிரமன்மாயன் பதைத்தன ராகியேங்கிப்
படவரா வசைக்குங்கச்சுப் பரம்பரற் காண்பான்தேட
வடலொழி ரனாதிமூர்த்தி யவருருத் தகித்துச்சாம்பர்.

11. ஆக்கியே யங்கிமேனி யணிந்தன னுயிரைவாங்கித்
தேக்கிய புயங்களூடு திருத்தினன் செவ்வேளாதி
மாக்கவி னுருத்திரேசர் வரவர வாயினள்ளிப்
போக்கினன் கணேசன்தன்னைப் புரந்தன னிதயத்தேற்றி.

12. ஆக்கையை மேல்விரித்தே அக்கினி மயமேயாகித்
தேக்கிய வொளிவிரித்துச் சிவைபரா பரையைப்பற்றி
நோக்கிய போதெரித்து நுணங்குறு பொறியேயாக
வாக்கினன் தனியேயாக வள்ளலங் காடினானே.

13. பூதபூதிய சொரூப பொருளெலா மவிந்துபின்னர்
நாதனா ரருளினாலே நண்ணின நடலையாக
வேதினி னிற்பதெம்மா னிறையவன் சயம்புமூர்த்தி
காதலார் ஞானமேனி கட்பொறிக் கெட்டாமேலோன்.

14. பின்னரே காலம்மாயை பெறுகலை நியதியாவுந்
துன்னிய குணமவித்தை சூக்குமை பரைவினாசி
மன்னிய வகங்காரங்கள் வடிவொளிர மின்னாசக்கி
யென்னவே துலங்கலாலெம் பிரானரு ளினிதினேற்றி.

15. சருவசங் காரமுற்றித் தாணுவாய்ச் சகலஞ்ஞானம்
விரிதலின் அநந்தகோடி விபுவிராட் டுருவமாகிச்
சரிசம் ராட்டுக்கண்டு தழைசுராட் டுருவந்தேறிப்
புரியருள் விசுவமாயா பூரணம் பொலிந்தானன்றே.

16. ஏகனாயனேகனாகி யிருந்தருள மலமூர்த்தி யோகியாய்
யோகமுற்றி யுறுமக தத்துவத்துப் பாகமாய்ப்
பாகமுற்றிப் பயிலைந்து கலைவிரித்துச்
சாகையாய்க் கிளையாயோங்குந் தத்துவம் புவனகற்பம்.

17. கண்டனன் கண்டிருண்ட கலையினி வலைவிரித்து
மண்டலமும் மைதேற்றி வருமலை நிருவிகாரங்
கொண்டனன் குண்மேயாதி குறித்தெழ வருள்விரித்தா
னண்டமாம் பிரமாண்டம்மே லகிலமு முதித்ததன்றே.

18. சுரந்தெழு மனையகற்பஞ் சொலிதிவ கற்பமென்னாத்
தெரிந்தவர் சொல்வர்முன்னைச் சிவகற்ப மதனின்முன்னர்
விரிந்தது மாயைகோடி விளைந்திடு மாயையாற்றிற்
பரந்தது ககனவட்டம் பற்றுமக் ககனின்றும்.

19. வாயுவி னண்டந்தோன்ற வளரந்த வாயுவண்டத்
தேயுவிற் தேயுவண்டஞ் செனித்தது தேயுநின்றும்
பாயசீ ரப்புவண்டம் பரந்தது பரந்துதேங்க
மேயதொல் லப்புநின்று மேதினி பிறந்ததன்றே.

20. இவர்தரு மேதினிக்க ணிகையண்ட நூறுகோடி
யவைகளின் முன்னுரைத்த வண்டங்கட் கவையிரட்டி
தவயறுங் கோடியாகச் சாற்றுவ ரிவைகடம்முட்
புவனமா ரிலங்காதீபம் பொலியுமொவ் வோரினண்டம்.

21. தத்துவா தீதமாகிச் சகளமா யிடையினாடி
யொத்தது குண்டலிக்க ணுரைதரு மசபாசத்தி
வைத்தது விநாயகப்பேர் மருவிய தகிலலோக
சித்தெலாந் தன்னிடத்துச் சேர்த்ததில் விலங்கையாமால்.

22. பன்னுபல் வண்டமுற்ற பரப்பெலாஞ் சுழுனைநாடி
முன்னுபிங் கலையாநாடி மொய்த்தது பிரமன்மாலா
யன்னிலை யகசிருட்டி யாக்குதல் காத்தல்நீத்த
லென்னவுங் கொண்டபான்மை இலங்குமில் விலங்காதீபம்.

23. அத்தகு மிலங்காதீப மமைவட முனையேயாகி
வித்தகத் தென்முனைப்பால் விளங்கிய பூமியெல்லா
மத்தனா ராடல்வேட்டே யருளின னாதிநித்த
சித்தனார் கருணையாரே தெரிகுவர் செப்புங்காலே.

24. ஆதியார் சிவகற்பத்தி னருவுருச் சுயேச்சையாகி
நாதனார் முன்னர்க்கோயி னணுகிய தானமாக
மேதகு மோரேோர்கோடி யோசனை மேதினிச்சார்
நாதனார் முன்னேசப்பேர் நணுகினன் முன்னிருந்த.

25. பூதல மாதலாலே பொலியுமுன் னேசனாமங்
காதலா ரெந்தஞான்றுங் கவின்றிடு மினையபூமி
யோதமார் வாரிதிச்சா ருயர்திரு மாயனாதி
மேதகு குடிஞைபல்கி விரும்பினர் பவந்தொலைக்கும்.

27. இதனிடை மேல்சாராக விசைகுரு நாதசெவ்வேள்
விதமுறு தவம்புரிந்து மேவலி னினையதானம்
பதிபுகழ் குருநாக்கற்பேர் பெற்றிடு மினையபூமி
மதலைதோய் சடிலத்தெம்மான் மைந்தநல் லுருவாயோங்கும்.

28. துங்கமா ராதிசக்தி சூக்குமை யுமைபெம்மாட்டி
மங்குல்நேர் மாயன்தங்கை மகாதேவி முன்னோர்காலைச்
சங்கர சிவனைப்போற்றித் தற்பர நினதுமேனி
இங்குநாம் பாதியென்றா னிறையவன் முறுவலித்தே.

28. சருவசங் காரகாலத் தையனீ யெரிந்துசாம்பர்
விரவினை யுயிர்நம்மாட்டு மேவினதன் றென்செய்தாய்
யொருவரு மெனதுசக்தி யொன்றுகொ லட்டசித்தி
பரவினம் பரவுங்காலை பாவைநீ கிரியையானாய்.

29. அட்டமா சித்திகொண்ட வருளொளி யாடல்செய்கை
யிட்டுநாம் பார்க்கும்போதி லெனைனீ யற்பமென்றாம்
கட்டெழி லுமையவல்லி கதழ்ந்தனள் சிவன்சிரித்தான்
மட்டொழு கனகவல்லி மருண்டனள் பாங்கிநிற்ப.

30. விடவிடத் ததிர்ந்துவிம்மி வெகுளியோர் பெண்குழந்தை
வடிவுறப் புவிகிடந்து வாய்விடா தலறுங்காலைப்
புடவிபல் லண்டரண்டம் போழ்ந்தது மேருச்சாயை
கடலகஞ் சுவறிவற்றிக் கானலாய்ப் பரந்ததன்றே.

31. மன்னுயிர்க் கணங்கள்தோற்று மலரயன் கோடிகோடி
துன்னுமா லாதியோருந் துயருளந் தேங்கியந்தோ
என்னுயிர் காத்தியீச இறைமுனீச் சரனேயென்னாப்
பன்னின ரீசன்பான்மைப் பாற்படு மருளினாலே.

32. சகவுயிர் பிரமராதி தழைந்தன மாயன்தானும்
புகுதியி னிலாவானின்றான் பூரணி யிதனைக்கண்டே
தகுசிறு பெண்குழந்தை தனையெடுத் துலறிச்சுற்றி
வகைகெழு மாமரத்தின் மருங்குற வெறிந்தாளன்றே.

33. அந்தவான் குழந்தைசீறி யலர்த்திரு வண்டேயாகிப்
புந்திசார் மலரைப்பற்றிப் போழ்ந்துடன் கிடந்துமுற்றி
முந்துநா ளனேககால மாகவே முதிர்ந்துவீறிப்
பைந்தொடிக் கனியேயாகப் பழத்துடன் வீழ்ந்ததன்றே.

34. கனிவிழா தொழிர்ந்துமல்கக் கண்டோர் வேதியனெடுத்தே
முனைவனெம் முனேசப்பெம்மான் முண்டக மலர்ப்பதத்திற்
புனைதர வைத்துப்போற்றிப் பூசித்து நிவேதனாதி
நனியுற வுபசரித்து நாதனே போற்றியென்றும்.

35. சங்கர கருணைநாத சயம்புவே தாந்தநித்த
மங்கல வுமையோர்பாக மான்மழு வேந்துங்கையாய்
திங்களைத் தீயைப்பாம்பைச் செஞ்சடைப் பிணித்தவையா
இங்கெனக் கருளுகென்னா விணையடி பரவிமேலும்.

36. கருணை யோர்வடிவமான கடவுளே முனேசநாத
தெரிவரும் பொருளேயட்ட யோகமே சிவனேயேறு
மருவியவ னாதிநித்த மதலையொன் றின்றிநாயேன்
பெருகிய துயரிலாழ்ந்தேன் பிஞ்ஞக வருடியென்றான்.

37. ஆங்கவன் துதியினு மலரு மன்பினின்
வீங்கிய பக்தியின் விளைவி னும்மகிழ்
பூங்கழல் முனீச்சரன் பொருவி றன்னுருத்
தேங்கிய விலிங்கமேற் றெறியத் தோன்றினான்.

38. ஐந்தெனுந் திருமுக மவிருஞ் செஞ்சடை
இந்துமந் தாகினி யியலுங் கொன்றையும்
நந்தலில் தும்பைசெங் காந்தள் நண்ணிய
விந்தையா ரெருக்கலரி வில்வ நொச்சியும்.

39. சருப்பமும் பிணைதரத் தயங்கு கேள்வியி
னுருக்கொழுஞ் சங்கணி யுயருந் தோட்டணி
திருக்கிளர் துதல்விழி செறிந்த நோக்கமு
மருக்கமழ் மதியினின் மலிந்த வாண்முகம்.

40. கண்டமேற் சருப்பமும் காள நஞ்சொழி
விண்டுறு காந்தியும் விளங்கு மார்பினர்
முண்டக னமர்சிர மொய்த்த மாலிகை
யெண்டகைக் காட்சியி னினிய கூருமம்.

41. படியுட லோடுமேற் பன்றிக் கொம்பினி
யுடையபன் மாலிகை யொளிரு மீன்கணுந்
தடையறு நரவரி தனது போர்வையுங்
கடமலைப் போர்வையுங் கவின மேலுமே.

42. ஐந்திரு கைகளி னவிரு மாடனு
வெந்திற லாயுதம் விளங்கு பான்மையு
நந்தலி லிடையினி னவிலுஞ் செம்புலிச்
சுந்தர வாடையுந் துலங்கு முப்புரி.

43. நூரலெனு மனந்தனு நுவலும் பாதமேற்
கோலமார் வேதமேற் கொள் சுரத்தொனி
யோலிடு கிங்கிணி யொளிர் சதங்கையுஞ்
சீலமா ருமையிடைப் பாகஞ் சேரவே.

44. பூதர் பல்லாயிரர் பூரி காகள
மோது துத்தாரி மேலுயர் தவண்டைகள்
மேதகு சல்லரி விளம்பு காகள
நாதபே ரிகைமுதல் நவின் றொலிப்பவும்.

45. தொண்டர் பல்லாயிரர் துதி யளப்பவும்
விண்டல மலர்மழை விண்ணு ளோர்கள்கைக்
கொண்டனர் சொரியவுங் கோல வாணனார்
தண்டலி லாயிர முகங்கள் சார்வணை.

46. புடைபுடை யடித்தனன் பொருவி டங்கர
மிடமுறை திரித்தன னிசைத் தெழுப்பவுங்
கடலென மாதவக் கணத்த ரின்னிசை
யுடையசீர் வேத முச்சரித் தொழுங்கவும்.

47. விநாயகன் மடியினின் மேவி யெம்பிரா
னநாமய முகங்களை யவிர்து திக்கையாற்
பநாமுறை பன்முறை படிக விக்கவுந்
தநாதருட் சக்தியாற் சயம்பு சங்கரன்.

48. வந்தன நின்னருள் வழங்க வேதிய
யெந்தையே யமலனே யிறைவனே செழுஞ்
சந்திர சேகர தனியனே யொளிர்
செந்தழல் மேனியாய் செறிமு னீச்சர.

49. நாயக வுமையொரு பாக மாகிய
சேயனே வெள்விடை செறிந்த மாயனாஞ்
சாயக தற்பர சயம்பு நிற்குண
மாயகா மீசுர வரத போற்றியே.

50. என்றடி வணங்கின னிறைவ னெம்பிரா
னன்றவர்க் கருளுவா னனையர் பார்த்தரோ
வுன்றன் துயர்பணி யுயரும் பூசனை
நன்றிசார் தேரத்திரம் நமை யிழுத்ததே.

51. வேண்டிய வரமென விளம்பு கென்றலு
மாண்டவன் தன்னை யவ்வையை நோக்கியே
காண்டரு நின்னுருக் கலந்த பார்வதி
சேண்டொ டரமிசமாயச் சிறந்த தெய்வமாய்.

52. எனக்கொரு பெண் மகாரீக மேலுமென்
மனத்துளி யொருவலா வரமுந் தம்மெனத்
தனித்தனி வணங்கினன் சகல நாயக
னெனைத்தையும் கேட்டன னியம்பு வானரோ.

53. வருதியென் மனமகிழ் வழங்கு மாத
தருதுநின் மனவெணந் தவறி னாமலே
கருதுதி யென்றனன் கருது மப்பழம்
பெரிதுதன் கரத்தினாற் பேணிப் பற்றியே.

54. ஈதுதெய் விகக்கனி யிதனைக் கொண்டுபோய்
மேதகு பூசனை விரும்பிச் செய்மதி
காதலா லொருசுதை கண்ணகைப் பெயர்
மாதராய் வருமென வழங்கி மேலுமே.

55. இந்தவான் சுதையினில் யாவு மெத்துணைச்
சிந்தையும் வேண்டிய சித்தி யத்தலை
வந்திடும் பெறுகென வழங்கி யெம்பிரான்
முந்திய விலிங்கமேல் முறை மறைந்தனன்.

56. ஆவகைக் கனியினை யரிய சிந்தனை
மேவியவ் வருச்சனை விழைந்து நின்றுபோய்த்
தாவறு மனைபுகாத் தனது பூசனை
யாவுடை யாரிலிங் கத்தி னன்புற.

57. வடபுறம் பதித்தனன் மாறில் பூசனை
யுடையவர் பூசையோ டுகந்து செய்துழி
மடவரல் கண்ணகை வந்து தோன்றியே
கடிதவன் வேண்டிய கணப்பி நல்வரம்.

58. தந்தனன் புதல்வியாய்ச் சார்ந்தவ் வேதிய
னெந்தையே யவன்மனை யியலும் பத்தினி
நந்தலி லன்னையே யெனந யந்தனள்
ஐந்தெனும் வயதவட் கான பின்னரே.

59. தந்தையை யன்னையைத் தாழ்ந்து போற்றினள்
எந்தையே யின்னினி யான் முனீச்சரச்
செந்தழல் மேனியன் சிவனின் றொண்டுந்
தந்தருள் புரியெனச் சாற்றும் வேளையில்.

60. அனையவர் பரிந்தன ரம்மை பாலகி
தினையள வேனுனின் செய்ய மேனிதான்
புனைதவம் பெறவரி தென்ற போற்றின
ரினையளு மினையருக் கருளிற் செப்புவாள்.

61. என்னுயி ரவனதே யெனது மேனியு
மன்னதென் றெனைத்தடை யாற்றல் செவ்வியோ
முன்னைநா தன்பணி முறைபுரிந்து யான்
னின்னிலைச் சேருவ னெனக்கு நல்விடை.

62. தம்மென வணங்கினள் தனையை யெண்ணமே
செம்முறை யாமெனத் தேர்ந்து தந்தையு
மம்மையும் பாங்கிய ரனேகர் சூழ்தர
மம்மவென் றுய்த்தன ரவளுந் தேறியே.

63. மாயவ னாறுநீ மலரு மைவகை
நேயமார் நானமு நிரப்பி நீறணிந்
தேயபஞ் சாக்கர வியம்பி ருத்திரன்
சேயபன் மாமணி திகழ்ப் பூண்டரோ.

64. கடலெழு விடனுகர் களனை மான்மழுப்
படையனை விடையனைப் பாலிற் பார்வதி
உடையனை யொண்ணிலா வுயரு மாமதிச்
சடையனைப் பரவியே தாழ்ந்து மேறுமே.

65. பன்னிரு குரோசமேற் படரும் புண்ணிய
நன்னெறித் தீர்த்தநீர் நாற்பத் தெட்டெனப்
பன்னிய துறையெலாம் படிந்தங் காடியே
தொன்னெறி முனீச்சரஞ் சூழ்ந்து போற்றிமேல்.

66. அருளொளி யிலிங்கமாய் அளவி லாதொளிரப்
பொருளுமாய்ப் பொருள்களின் புறம்பு மாகியே
தெருள்விளை யிலிங்கமேற் சிறந்த பத்திமை
விரிதலி னவ்வுரு மெல்ல நீக்கினாள்.

67. பரரொளிச் சிவநிசி படர்ந்த பாதிநாள்
விடுசுட ரெழுந்தது விளங்கு சோதிமேல்
வடிவமை யுமையொடு மருவி யெம்பிரான்
நடனவி லானந்த நடந்து லங்கவே.

68. காட்டின னண்டமேற் கவிரு மெவ்வகை
கேட்டுய ருயிர்களுங் கிளந்து மல்கின
நாட்டமார் கண்ணகை நடன காளியாய்
ஈட்டிய பேருரு விசைந்து தேறியே

69. சுத்தமத் தளத்தொனி தும்பு ருத்தொனி
சித்தமார் வாணன்முற் சேர்த்த வான்பணை
தத்திமி திமியெனத் தாளம் நாட்டவே
அத்தலை மாலய னடித்த மத்தளம்.

70. தாளமும் ராகமும் தயங்குறு வீணையும்
நீழிய சுரங்கள் நிலவு வாணிசொல்
ஆழமார் பாணியு மமையக் கிம்புருத்
தூளமார் கின்னரித் தொகையுந் தூர்ப்பவே.

71. எழுந்தனள் கண்ணகை யியலு மாயிரஞ்
செழுந்தகை முகங்களுந் திகழீ ராயிரக்
கொழுந்தகைப் புயங்களும் கொடிய சர்ப்பந்தாழ்
விழுந்தசை பான்மையும் விளங்கு வெண்டலை.

72. மாலிகை மழுப்படை வயங்கு கிங்கிணி
யோலிடு கண்டைமு லுரத்த சத்தமுங்
கோலமார் விழிகளிற் கொண்ட தீப்பொறி
யாலமே வள்ளிப்பா லகிலம் வீசவே.

73. திரிபுடை தாளமேற் றிரித்த காளிகள்
வரவர முடுக்கின மகிழு மானடப்
பரிபுரை திருநடம் பயிற்ற வண்டமு
மரிபிர மாதிய ரகில மன்னுயிர்.

74. அதலமே விதலமா யங்கு மிங்கமாய்ப்
பதநிலை பாறினர் பதைத்த காலையில்
மதியணி செஞ்சடை வரதன் முக்கணன்
னதிபதி முனீச்சர னதுதெரிந் தரோ.

75. நல்லருள் வழங்கின நாரணன் முதற்
றொல்லை யோரவ னருட்டுறை நிரம்பினர்
அல்லுறல் நடனமா காளி யாங்கணே
யெல்லையில் நற்பொறி யெங்கும் வீசினான்.

76. குருவெழ வெப்புநோய் கொள்வ சூரிநோய்
பெருகலி வெம்பிரான் பின்னர் மாற்றலு
மரிவையுங் கண்டனள் அம்மை சிந்தலும்
வருதிருக் குமாரனை மயூர வாகனை.

77. கந்தனை வருத்தியே கைக்குழந் தையா
யுந்தின னவளுமவ் வுயர்ந்த பாலன்மேற்
சிந்தனை பெருகலிற் சினந்த ணிந்துமேல்
மைந்தனை யெடுத்தனள் மகிழ்ந்து புல்லியே.

78. பாலக வருகெனப் பரிந்து மோந்துமேற்
சீலமார் குககுரு நாத திவ்விய
கோல மார்சிவ சுதவெனக் குழைந்தனள்
ஆல னேரவன் மனமது மயங்கினான்.

79. இந்தவா றிப்பாலனு மிசைந்து கண்ணகி
மைந்தனா யொருமுகம் வளரி ரண்டுகை
சுந்தர விருவிழி துலங்கு மம்புயப்
பைந்தொடை பூணுநூல் பாத பங்கயம்.

80. முத்தணி சந்திர காவி மொய்யெழில்
வத்திரம் புத்தகம் மலரு மைவகைச்
சித்திர வோடதி செறிந்த பைங்கிளி
மெய்த்துற விளங்கினான் விமலற் போற்றினான்.

81. என்னையீன் றருளிய விறைவ நாயக
முன்னவ முனீச்சர முதல்வ வற்புத
என்னயான் செய்பணி யிசைத்தி யென்றலுந்
தன்னிகர் பரம்பொருட் டலைவன் கூறுவான்.

82. வருதியென் மைந்தனீ மாறி லித்தலம்
பெருகிய வடகிழக் கிலங்கிப் பெட்புற
மொருவரை யிருந்ததங் குயரும் யோசனைப்
பருவமே லுயர்ந்தது பகரக் கேட்டியால்.

83. யோசனை முன்றுளே யுற்ற தாமெனப்
பேசுவர் தொல்லையோர் பெருகு மவ்விடைத்
தேசுய ரிந்திர சித்துச் செய்திடும்
ஓசமார் யாகமு முயர் நிகும்பலை.

84. அடையெழு போரினி னளமுங் கண்டது
திடமுறு மவ்வரை சென்று நீயுறில்
உடையதோர் நாமமு முயரு மென்றுமால்
வடிகுரு நாக்கலாய் வழங்குங் காண்டியால்.

85. வித்தக லவ்விடை மேவி நீபரி
சுத்தனாயக் கண்ணகை துலுங்கு மேனியை
வைத்தனை போற்றிமேல் வசூரி நோய்தெறச்
சித்திர மருந்துநீ செய்து மேவுதி.

86. உன்னுடை யருளினா லுயரு மோர்குள
மன்னிலை யுதித்திடு மருவிகான் றெழீஇச்
சென்னெறி யுந்தியாய்ச் செறிந்து பின்னரே
முன்னிய மாயவ னாறு முன்னுற.

87. படிந்தெழீஇ வாருதி பற்றி நற்றிறந்
திடம்புரி புண்ணிய தீர்த்த மாயுறும்
படிந்தவர் சாருநோய் பாற்றி முத்தியுந்
தடம்பெறு சிவமுமாய்த் தம்மி னோங்குவார்.

88. மாலெழு மாயவ னாற்றின் பாங்கரே
சீலமார் தசரதன் செம்மல் ராமனாம்
மூலமா ரிலிங்கமேனி முறை பதித்தனன்
ஆலுமா னாவரி யென்ப ரான்றவர்.

89. அந்தவா னிலிங்கமே லவிரு மூலநீள்
சுந்தரப் பகுதிமேற் றொடங்கிக் கூருமவிந்தைசா ரக்குற வெடித்துச் சக்தியை
யுந்திமேற் பிளந்துபின் னுயரு நீயமெனும்.

90. பாதலங் கீண்டது படியின்மே லெழீஇ
யோதுகட் காட்சியா யுயர்ந்து பின்னரே
சீதள வைவகைத் திறங்கொள் மென்னிறம்
போதர நின்றது புகலக் கேட்டியால்.

91. ஈதரோ வதிசிவ கற்ப மெய்துற
வாதர நமதுரு வமைத்துப் போற்றினங்
காதலாற் காண்கினுங் கசிந்து போற்றினும்
மேதக நினைக்கினும் விமல நம்முரு.

92. ஆகியே நமதுரு வமைந்து சிற்பர
யோகியா யுள்ளுமா யுணர்வு மாகியப்
போகியாய்ப் போகமேற் கொலிந்த வற்பதச்
சோதியாய் நிலவுவர் சொல்லக் கேட்டியால்.

93. எண்டகு மித்தலை யிலங்கு யோசனை
கொண்டதோர் பூமியிற் குலவு லிங்கமுங்
கண்டதோர் தீர்த்தமுங் கணக்கி லாதன
அண்டமன் னுயிர்க்கெலா மவைகள் சான்றதாய்.

94. புறனுமாய் வெளியுமாய்ப் பொலிந்த நல்வெழி
லறனுமா மரன்வழி யமைத்துக் காட்டிய
திறனுமா யிருந்தன செகங்க ளுய்வழி
யுறிலிவை யுன்னுத லுவப்ப தாகுமால்.

95. இத்தலை யநேகமா யிருந்த தானமுந்
நத்திய நதிகளும் நவையில் வெற்பமேல்
வைத்திடு மடுக்களும் வளருங் கூபமும்
சுத்தமார் கங்கையிற் சுந்த மாகுமால்.

96. இதனிடைப் படிந்துமே லிசை தென்புலப்
பிதிர்கடன் செய்வரேற் பிறப்பு நீக்கியே
அதிபராய்ச் சிவசம மாகி யற்புத
முதையமா யுலகெலா முய்ய மேவுவார்.

97. சோடச தானமேற் சொல்லு மெவ்வகை
நீடிய தானமு நினைந்து செய்பவர்
பீடினை யாயிரம் பெருகு வாயினைத்
தேடியே சொல்லினுஞ் செப்பற் கேயுமோ.

98. அவையெலா நின்மனத் தமையுங் காண்குதி
இவையொரு பாகமாய்த் திகழ வப்புற
மிவரவ லப்பாலினி யிசைந்த மாயவன்
அவிரொளி கதியதா யமைந்து மேவினான்.

99. உத்தம தானமொன் றுஞற்று மேலையோர்
அத்தனை தானமு மாக்கு புண்ணியங்
கைத்தல நெல்லியங் கனியிற் காண்குவார்
புத்திர வின்னும்நாம் புகலக் கேட்டியால்.

100. துலங்கிய மகோத யஞ்சொல் வருத்தமா
யிலங்கிய வுதயமே லிந்து வான்கலை
கலங்குறச் சதாசிவம் கணித்த வோரைவாய்ப்
புயம்புகுந் தின்னதி பொருந்த மூழ்கியே.

101. நித்திய கடனெலா நினைந்து முற்றியே
சுத்தமார் பிதிர்க்கடன் றுதைதி லோதகம்
பத்தியி னிறைப்பவப்பரவணிக் குலஞ்
சத்தியார் சிவபதந் தழைத்தங் குய்வரால்.

102. ஆவணிப் பூரணை யீரி ரண்டென
மேவிய மாதமேல் விழைந்த பூரணை
தாவறு மமைவினைச் சங்கி ராந்திமே
லோவறு நித்திய யோகத் தோங்கிய.

103. பன்னிரு சிவநிசி பயிலும் யோகமாய்
முன்னிய சிவநிசி மொழியுந் திங்களின்
மன்னிய வாரநாண் மலியு மோணநா
ளின்னவை முனீச்சரற் கிசைந்த நாள்களாம்.

104. மார்கழி முப்பது மருவும் வெண்மதி
நீர்கழி யாடல் நினைந்து சங்கரத்
தேர்கழி பாடலு மிசைந்து சுத்தமார்
பார்கழி மன்னுயிர்ப் பவமும் வீக்குமால்.

105. பிறப்பொழித் திணையன பேசு மன்னுயிர்ச்
சிறப்புறு சிவார்ச்சனை செய்த புண்ணியமா
முறப்படு யோகமா யோகி சோதியாய்
மறப்படு மூவகை மயக்கும் வீட்டியே.

106. ஐந்துமா முகங்களு மவிரு மம்புவி
சிந்துவான் கங்கையுஞ் செறித்த செஞ்சடை
நந்தலில் பாம்பணி நலத்த மேனியு
மந்திலே யடைகுவ ரவர்சி வோகமாய்.

107. அநுசதா சிவவுரு வடைந்து நீடியே
தனையுணர் தத்துவ சயம்பி னோங்கவார்
இனையர்வான் குலமெலா மிலங்கிப் பாவவேர்
தனையொழித் தச்சுத னுலகஞ் சார்வரால்.

108. இனையவான் மாயவ னாற்றி னேழ்கரை
தனிலொரு பசுவினைத் தான மீயினு
மனையவான் பசுவுட லமைய ரோமமேற்
புனைசிவ கற்பநீள் பொலிந்த காலையில்.

109. உருத்திர வடிவுறீஇ யுலகம் யாவையுந்
தருத்தரு ளாடலிற் தானி யங்குவார்
பரித்தன கோடிநம் பால வென்றனன்
தெரித்தனன் முருகவேள் சிறந்து போற்றியே.

110. ஈசனார் கட்டளை யினது தேறியே
தேசுய ரவ்வரை சென்று மோனியாய்ப்
பேசரு மோர்குளம் பெட்டங் காளமாய்
வாசமார் தவவுரு வாய்ந்து பின்னரே.

111. சங்கரன் முனீச்சர தலத்தெம் மையநீழ்
பொங்கர வணிந்தவன் பூர ணன்தனை
யங்ஙனே நினைந்தன னறிவொ டுக்கிமே
லைங்கர முதல்வனை யருச்சித் தேத்தியே.

112. கண்ணகை நடனமா காளி சீருருப்
பண்ணமை பிரதமை படுத்தியா யவ்வழி
யுண்ணக வெற்றினன் யோக பூசனை
எண்ணக யியற்றியே யினிய தானமேல்.

113. மலியெழு தானியம் மலர்த்தி மண்ணினாற்
சொலியெழு கும்பமுஞ் சூழ வைத்தனன்
கலிகெழு வேப்பிலை கவினும் தேம்பழம்
நலிபவ தருப்பையு னன்று சூட்டியே.

114. நடவுறு கும்பமேன் நடன காளியின்
வடிவமார் கண்ணகை மாது சீருரு
விடனுற வமைத்தன னீரெண் பான்மையி
லுடையதோ ருபசர முறுத்திப் போற்றினான்.

115. சந்தமுங் கற்புர சாந்துங் குங்குலச்
சுந்தர வாவியுந் துதைபு ரோடமுந்
தந்தன னவீரைசெறி தந்த வன்னமு
முந்திய நிவேதன முகந்து செய்தனன்.

116. இடையிடை யருக்கிய மிசைந்த பாத்தியம்
நடைமுறை யாசமன் னீயநல் கியே
புடைபகர் பாகிலை பொருந்து கண்ணமு
மடைதர வப்பித மமைத்துப் பின்னரே.

117. பஞ்சவ ரார்திகம் பரவி நீட்டியே
செஞ்சொலார் மந்திர புட்பஞ் சேர்த்தினன்
விஞ்சிய கமலவாண் முகை விரித்தனன்
அஞ்சலி கரத்தின னள்ளி வீசினான்.

118. பொருவரு பூசனை புரிந்து போற்றியே
மரகத மேனியாய் மாது கண்ணகாய்
திரிபுரை யாமழை சிவனொ டாடிய
பரிபுரப் பதத்தியே பகரு மாயிரம்.

119. சென்னியீ ராயிரஞ் செறிந்த கையுளாய்
முன்னவ முனீச்சர முதல்வன் தேவியே
கன்னியே நடனமா காளி யம்மையே
சொன்னெறி மந்திர யசாரூப மேனியாய்.

120. வரந்தரு கென்றவன் வழுத்து காலையில்
நிறைந்த ரங்காளிகன் நிறைந்து போற்றவு
மரந்தரு பகழிவே லாதி வான்புடை
கரந்தனி லிலங்கவுங் கடிது தோன்றியே.

121. வசூரிகை நோயினை மாற்றற் கேற்றதோர்
மசூரிகை மருத்துநீர் மணிசொன் மூலிகை
யசூரிகை பக்குவ மடைந்த கற்பிதம்
விசூரிகை விளங்கவே விதித்துச் சென்றனள்.

122. அவ்வளிக் குமரவே ளனைய பெற்றனன்
செவ்வியார் வசூரிகை தீர்த்து மேவிமேல்
எவ்வமில் பேர்க்குரு நாதனாம் பெயர்க்
கவ்வையில் பெற்றனன் கணங்கள் போற்றவே.

123. ஆங்கவ னிடமதா யவிரும் பான்மையி
னோங்கலு மப்பெய ருற்று நீடியே
தேங்கருட் பெறுகுரு நாக்கற் செவ்வியார்
பாங்குறு நாமமே பயின்ற தென்பரால்.

124. இத்மலை மடுவி வனாவி யற்றிய
சுத்தமார் குளனதாய்த் தோன்று பான்மையி
நத்திய பவவினை நலித்து முத்தியு
மத்தலை நல்குறு மமர ராக்குறும்.

125. ஃதிவ ணின்றிட வினிய மாதெனுங்
கோதை கண்ணகை நடனகாளிக் கோமள
மேதகு செயல்பல விளம்பு கிற்பா
மாதர முனீச்சர மமைந்த தானமேல்.

126. முன்னவன் முனீச்சர முதல்வனோ டெழீஇத்
தன்னிகர் நடம்பல தானு மாடியே
யன்னிலை சமழ்ந்தன ளம்மை நாணின
ளென்னினி யுய்வழி யென்னத் தேறியே.

127. முன்னவன் முனீச்சர முதல்வனோ டெழீஇத்
தன்னிகர் நடம்பல தானு மாடியே
என்னையா ளற்புத னிபமுகற் றரும்
முன்னவ னிருபத முளரி தாழ்ந்துளான்.

128. பரசிவ சங்கரி பால்வெண் ணீற்றணி
புரபர சங்கரா புராண காரண
திரிபுர மெரித்தருள் செய்ய சேவக
பரிபுர பதத்தனே பால்கொள் வெண்மதி.

129. செஞ்சடைக் கங்கையிற் செறித்த சிற்பர
மங்கை பங்காளனே மான்மழுக் கொழுஞ்
செங்கர முனீச்சர சிறியன் செய்பிழை
இங்குநீ பொருத்தரு ளென்ன வாழ்த்தியே.

130. ஆதிநீ யானதிநீ யரிவை நானொடு
பேதைநின் னுடனெதிர் பேணி நடஞ்செய்
தாதலாற் கடும்பிழை கலந்த துற்கியா
போதிய சிவத்து ரோகத் துற்றனம்.

131. இப்பிழை பொறுக்கென விறைவன் றேறியே
யப்பணி செஞ்சடை யமைத்து மாதுகே
ளொப்பிலாச் சிவார்ச்சனை யுஞற்றி யுய்மதி
அப்பணி யீதென வறைவன் கேட்டியால்.

132. இந்துவான் முனீச்சர தலத்தி னெய்துகீழ்
வந்துறு தென்கரை மருவு யோசனை
உந்திய பத்தினி லுவரி வான்கரைச்
செந்துவர் மணியினைச் சிந்தி மேவெழீஇ.

133. மகேந்திர வாருதி மாறி னாமமுங்
கஜேந்திரன் பணிதரக் கண்ட தாகுறுஞ்
சுகேந்திர யந்திரஞ் சுழலு மோர்மழைச்
சகேந்திர சாலமாய்த் தழையு மவ்விடை.

134. சூரபன் மாசுரன் துலங்கு மானகர்
நேரிய வடபுறம் நிமிரும் வாசலாய்
யாரிதன் பெருமையை யறைய வல்லவர்
நாரிகே ளவ்விடை நணுகி வாரிதி.

135. சுரண்டெழு திரைப்புறஞ் சுத்த கங்கைநீர்
புரண்டது கேந்துறை யென்பர் புண்ணியர்
மருண்டெழு பாண னின்றுறை மயங்கிடும்
உருண்டெழு மகேந்திர வுவரி காண்டியால்.

136. தடம கேந்திரச் சலதிப் பாங்குறு
மிடமது நீபுகுந் தெம்மை யுன்னியே
வடிவமை நம்முரு வகுத்துத் தேவியோ
டிடமுறு பூசனை யினிது செய்துமேல்.

137. நம்முரை வருத்தினை நண்ணுங் காலையி
லம்முறை வந்துநம் மருள் வழங்குதும்
பொம்மலவெம் முடியினாய் பூவையே காளியாம்
அம்முறை அருளின னவளுங் கேட்டரோ.

138. சேலுயர் கண்களிற் செறியு மன்பெனுங்
கோலவா னந்தநீர்க் குதூக லத்தளாய்க்
காலுயர் மகேந்திரக் கரைசென் றெய்தினாள்
காலிசெய் பான்மையிற் காலி யானதே.

139. கலனெழு மகேந்திரக் கடலின் பாங்கரில்
நிலவு விண்ணுளோர் நீள்க ணங்களும்
புலனுணர் முனிவரர் புலவர் மேதையோ
ருலவலிற் காலியாய் உரைப்பர் தொல்லையோர்.

140. வச்சிரம் மழுப்படை யாதி வான்படை
யுச்சமார் கைத்தல மொழுங்கு காளியாய்
வச்சசீ ரம்பிகை மலருந் தானமா
நிச்சயம் பெறுதலில் நிலவு மம்பிகை.

141. பூசனை யியற்றவே புனிதக் கண்ணுத
லீசனுஞ் சுந்தர வீச னம்பிகை
நேசமீ னாட்சியாய் நிலவு பான்மையிற்
பேசுவார் காலியாய்ப் பெருகு தொல்லையோர்.

142. அத்தலைக் கங்கைநீ ராடு மேலையோர்
சுத்தரே வானுளோர் துதிக்க மேவுவார்
நத்தொழிர் கைத்தல நணுகும் மேனியான்
சித்தொளி ருலகுமேல்ச் செறிந்து மேவுவார்.

143. புண்ணிய தலம்பல பொருப்ப கம்பல
நண்ணிய நதிபல நவிலும் மான்மறை
எண்ணில் பல்கோடி யவிசையும் வெற்பவை
கண்ணினுக் கடங்கலாக் காட்சி நல்குமால்.

144. இந்திரன் மாலய னிருடி யோர்பலர்
சந்திரன் கங்கைநீர் சலதி யக்கர்கள்
முந்திய மேலையோர் முனிவ ராதியோர்
புந்திசா லுரகரும் போற்ற மேவுமால்.

145 கடலெலா முலகினைக் கைப் படுத்தியே
இடமுறு புவிகளை யிசைந்தங் குண்ணிறு
முடையவ ரருளினா லோங்கு காலிபோ
லிடனுறு திருநக ரெங்கு மில்லையால்.

146. சோபையுஞ் சிவசம சோக பாவனை
யாபரந் தேக்கியே யமர்வழி போற்றிடு
பாவமில் மனிதரைப் பாரினுற் றுளோர்
தாபமில் சிவார்ச்சனை தவம் விளைந்துளார்.

147. சங்கமார் கேந்துறைச் சலதி மூழ்குற
அங்குறு சங்கம மாடும் புண்ணியர்
திங்கள்வா னதிமதிச் சென்னி சேர்த்திய
சங்கர னுழைஞரே தவத்தின் மேலையோர்.

148. அரனெறி கொண்டவ னனாதி சங்கரன்
புரமெரி படுத்தவன் பூவை பங்கினன்
வருகரு ணாலயன் மான் மழுத்திரி
கரனெனுஞ் சுந்தரே சுரனைக் காதலார்.

149. கழுவலை யாலயங் கண்டு மேவிய
வழகு மீனாட்சியை யருளிற் போற்றுவோர்
வழுவிலர் பிறவிநோய் மாற்றி யொப்பிலா
மழுவணி கரத்தெம் மானடி வைகுவார்.

150. இவர்பெயர் யாவரே யெனினு மோதினு
மவர்களைக் காணினு மனாதி நித்தியப்
பவனெதிர் கண்டிடும் பான்மை யெய்துவார்
சிவகளை யவரிடஞ் சேரு முண்மையால்.

151. தத்துவ நெறிதரு சகல லோகமார்
வத்துவு மவையிடை மலர்ந்து தேங்கியச்
சத்தி யாய்ச்சிவ மாய்ச் சொல்லு
மத்தலை நித்த கல்யாணியா நிமலைபார்வதி.

152. சங்கரி பராபரை சகல லோகமு
மங்குய ராடலி லருளு மம்பிகை
துங்க மார்காளி யத்தலை துலங்கியே
சங்கர சயம்புவைத் தானி னைந்தரோ.

153. பொருவரு மகேந்திரப் புணரி மூழ்கிமே
லருளுரு வனாதியா மம்மை பாகனை
பரவினள் நீறுமேற் படிய ரன்மணித்
தெரிதொடை புனைந்தனள் சிவமென் றேத்தியே.

154. மன்னிய மகேந்திர வாரி வான்கரைத்
துன்னுமோர் சிவாலயம் துறையி யற்றினன்
அன்னதோ ரிடைதனி லருவ ரூபமாய்த்
துன்னு சதாக்கியந் துலங்கு லிங்கமும்.

155. அம்முறை யாற்றி அணிபல திருத்தியம்பிகை
கொம்மை கொளினமுலைக் கோதை மீன்விழிச்
செம்முறை யம்மையைத் திருந்து மாமணி
யம்மவான் சிலையினி லமைத்து மேலுமே.

156. பரிவுறும் பஞ்ச சுத்திகள் பயிற்றன
ளரிது மூலாதார வைம்பொறிக் கனல்
உரீஇவழி யெழுப்பியே யோங்கு பாவனை
விரிவுற வந்தர் மாயாகம் வீற்றியே.

157. அத்துவ சுத்தி மேலான தேயுவுஞ்
சுத்தமார் வாயுயிற் றுலங்கி நீளிடை
யொத்திடும் திங்களை யொளிர் சுகம்மனை
வைத்தனள் வாயுவை மலர்த்தி யேத்தியே.

158. புறக்கர ணங்களும் பொலிய வாவயிற்
சிறப்புறு சுந்தரே சுரநஞ் செல்வனை
உறப்படு லிங்கமு லுறுத்துச் செவ்வொளி
மறப்பிலா நினைபவர் வாரி யாயுற.

159. மந்திர தியானமேல் வளர வாவளி
யந்திரஞ் சிதம்பர மேற்றி யம்மையை
யைந்துற வேட்டு மேலான மூவரிப்
பந்தமார் கோணமேற் படுத்தி யக்கரம்.

160. மருவும் வாலாம்பிகை மனுவை மாறிமே
லிருதலை மாணிக்க மிசை வரைந்தனள்
பரிவுறு தளங்களிற் பயிலுபூதங்கள் வீற்றியே
அறிவுறு பிரணவ பூசை யேற்றியே.

161. வேண்டுவ தமைத்தனள் விதியை நாடியே
காண்டகு விம்பமுங் கவினி லிங்கமு
மாண்டகு யந்திர மரபுஞ் சுத்தஞ்செய்
தாண்டவ னருள்வழி யாகமஞ் சொலும்.

162. பகுதியா தாரசக்தி பதிகூர்ம மனந்தராதி
மிகுகயம் வரைகளெட்டு மிகுநவ சக்திகொண்
டமைந்தபிண் டிகையின்பூசை தகுமா சனபூசை
சுகமுறு லிங்கபூசை தோகையம் பிகைதன்பூசை.

163. ஆகமவிதிவழா மலருள் வழிவேத மோதித்
தேகியதேகியான சிவனை யம்பிகையைப் போற்றி
வகைசேர் நடனகாளி மாதுர்கி கண்ணகைப்பேர்
மாகவினம்மை போற்றி வான்மிசை யெற்றினாளே.

164. எண்ணிலா ஞானம்வீறி யிருநூறு வருடங்காறும்
பண்ணிய பூசைவேட்டுப் பராபரை யாதிசக்தி
நண்ணிய பாகத்தோடு நரைவிடைப் பாகனெம்மான்
அண்ணலார் சிலிங்கத்தி னருளொளி யாகிமேலும்.

165. வெண்ணிலா மதியங்கங்கை வெவ்வரா ருத்திராக்கம்
புண்ணியக் கொன்றைதும்பை பொலிசடா மகுடமோங்க
வண்ணமா ரைமுகங்கள் மலரவம் பிகையோர்பாக
நன்னவே யெம்மையாளும் நாயகன் கருணையாலே.

166. பரிந்துறு பூதங்கோடி பரவியே வாத்தியங்கள்
நிரந்தர மார்ப்பரிக்க நிறைமலர் மழைகள்சிந்தச்
சுரந்திடு முனிவர்வேதஞ் சொற்றனர ரவெனரேத்த
தெரிந்திடு பிரமன்மாயன் தேவர்பல் லாண்டிசைப்ப.

167. நாரதர் மகதிவீணை நரம்பிடை யேழ்வகைத்தாளஞ்
சாரத வரிநிரப்பித் தழங்கிய பாணிநீட்டச்
சாரதந் திரமகேசர் தத்துவ முறையளப்ப
வாரதிகற் பூராதியக்கினி தூபந் தேங்க.

168. வளரரு ளாடலாலே மலிகாளி யம்மைகாண
வலகிலாத் தவத்தோர்சிந்தை யமைபரா னந்தவாரி
இலகின வெழுந்தாள் தாழ்ந்தா ளெம்பரசயம்புநாத
கலைகுலா மவுலியானே கடவுளே போற்றியென்றாள்.

169. ஆங்கவன் சீர்துதிக்க வரன்மிக மகிழ்ச்சிகூர்ந்து
பூங்குழ லண்டரண்டம் புகழ்பராக் கிரமமிக்க
சாங்கரி நின்னுதிக்கட் டவத்தினி னாமகிழ்ந்தா
மீங்குயா முரைப்பம்கேட்டி யெனவிறை யியம்புவானே.

170. முன்னர்நீ மனச்செருக்கின் முனீச்சர தலத்தின்கண்ணே
யென்னுடன் நடனகாளி யென்னவா தாடித்தேடிப்
பின்னையு மெனையிகழ்ந்த பெரும்பழி நின்னினான்றி
முன்னிய வவசாரத்து முதிர்ந்தது மொழிவன்கேட்டி.

171. அத்தகு பாவனின்னை யடைதலின் மபினையாகி
நித்தமார் நானுரைத்த நெறிப்படி யிங்கட்சென்று
சுத்தமாரி லிங்கபூசை தொகுத்தனை யாதலாலே
நத்திய பவங்களெல்லாம் நதுந்தது புனிதையானாய்.

172. நின்னுடை மலினநீக்கு நெறியினா யித்தலந்தான்
சொன்னெறி கழிவலைப்பேர் துலங்கிய தென்றுங்காண்டி
யின்னினை சுத்தையானாய் யினிமுனீச் சரத்திற்
துன்னுதி சிவோகமேறித் தோன்றுதி துலங்குங்காலை.

173. ஆங்கனே நாம்புகுந்தங் கரியநம் முருவங்காட்டித
துங்கமார் முனீச்சரத்தில்த் துலங்கிய மகிமையெல்லா
மிங்குநீ யுணரச்செல்வ மினியதோர் பூசைப்பேற்றில்
வெங்கத வரக்கர்தம்மை வேருட னழித்துமேலும்.

174. எண்ணிலாப் புவனகோடி யாவையும் போற்றிசெய்ய
நண்ணுதி நண்ணுங்காலை நமதுரு நின்னகத்திற்
புண்ணிய வுருவிற்றோன்றும் பொருளிது வதுவேயன்றோ
யண்ணலார் சிலிங்கத்தி னருளொளி வடிவமானோன்.

## வேறு

175. கருதரும் பிரளய கால மாயினு
எரிபரந் துலகெலா மிறுக்கு ஞான்றினு
தரவிய வாயனரி பட்ட காலையும்
மொருவலன் கழுவலை யும்பர் நாயகன்.

176. அவ்விடை யநேகமா மால யங்களுள்
செவ்விசார் நதிகளும் தீர்த்த கோடியும்
பவ்வமார் பருப்பதம் பரந்த வெள்ளிடை
யெவ்விலாப் பொருள்களு மிலங்கு மாதலால்.

177. இத்தலை முன்னைநா ளிருடி யோகரும்
வித்தகக் காசிபன் மிக்க தும்புருச்
சுத்தமார் வியாதன்மேல்த் துலங்கு கோதமன்
பக்திசார் சிவகணம் பரவு விஞ்சையர்.

178. தங்களி விணங்கியே தவமி யற்றினர்
மங்கை பங்காளனை வழுத்திப் போற்றியே
யெங்குள பொருள்களும் யாவு மாகிய
துங்கமார் யோக மேற்றுறை யழுந்தினர்.

179. பன்னிரு சூரியர் பால்கொள் வெண்மதி
துன்னிய பாசுரர் துலங்கு பூமிவாழ்
மன்னவர் மானிடர் வழுத்திப் போற்றியே
முன்னியல் வரம்பல முறையி னெய்தினார்.

180. அத்தகைக் காளிமா புரத்தை யானொரு
சித்தமேற் றெரிந்தனன் சீர்மை செப்புகேன்
வித்தக நைமிசர் விளங்கச் சூதனு
மத்தலை யருளினி லறையும் பான்மையை.

181. மலிசிவ ராத்திரி மார்கழிக் கணே
சொலிதரு பூரணை சோம வாரமேற்
பலியருத் தோதயம் பருவ மாவமை
கலிம கோதய முதற்கண்ட நாள்களில்.

182. வாரிதி மகோததி மலரும் புண்ணிய
சீரதி நதிபல தீர்த்த மானவை
தேரதி வினயமேற் றெரிந்து மூழ்கிப்பின்
ஆரதி நதிபுனை ஐயனம் மையே.

183. கண்டனர் பணிபவர் கமழும் வில்லுவத்
தண்டளை சொருகுநர் தனையும் நெய்விளக்
கெண்டக வேற்றுன ரிசையுந் தர்ப்பண
மண்டல முறையினில் வழங்கு மேலையோர்.

184. பவமேபரங் கழுவியே பராபரப் பொருட்
சிவவுரு வாகுவர் தேர்வவர் ணுண்பொருள்
இவர்பதிர் கடன்முறை யியற்று வாரெனில்
அவர்குஞ் சிவபத மடைவ திண்ணமே.

185. ஃதிவ ணின்றிட வினையில் கண்ணகை
மாதுசீர் நடனமா காளி வள்ளலார்
ஓதிய முறைநெறி யுகந்து தேறியே
காதலா ராலயங் கசிந்து மும்முறை.

186. வலம்புரிந் தேத்தினள் வழுத்திச் சொன்னிலை
திரம்பெறு மூரகந் தீர்ந்து சென்றனள்
பரம்பிய மகோததிப் பதிக ளாறுகள்
திரம்பெறு நதிபல தீர்ந்தங் கேகியே.

187. சுரும்புறு கீதமுந் துலங்கு நாரதர்
தருமருங் கீதமுஞ் சலதி யோசையும்
பரம்பிய வேதநூல் படிக்குங் கீதமும்
திரம்பெறு வாரிவான் திரை விரித்திட.

188. தத்திய சங்கினந் தனிபுரண் டெழீஇ
முத்தினைக் காண்டுமேல் முழங்கி வாரிதோய்
தத்தலைக் கமடமே லமழி சார்வுறு
மெத்திய கூர்மமும் வெருவி மேலெழீஇ.

189. கரைபொரு மாயவ னாற்றின் கால்வழி
நுரைவிரித் தெழுவெழ நூரறை சின்னையும்
புரைபழ னங்களும் பொருந்து கற்பகத்
தருமலர் மைமுகில் சாருந் திவ்விய.

190. கேத்திர மாகியுங் கிளரு மைவகைச்
சூத்திர நாடிகள் துலங்கி யொன்றதாய்
வாத்திரைச் சுழுமுலை வழியி னேறியே
காத்திரப் பேரொளி கவினு மாட்சியாய்.

191. ஒன்றிய தானமா யுலக மன்னுயிர்
என்றுமே யிலகியு மிலங்கி யொன்றுளி
பொன்றலி லணுவுருப் பொலிந்து மீளவுஞ்
சென்றியல் குண்டலித் திறம தாகியும்.

192. வருபிரான் முனீச்சர தலத்தின் மேவியே
அருளொளி லிங்கமே லன்பு வீற்றினள்
பரிவுறு மாயவன் குடிளை பற்றியே
தெரிதரு ஞானமேற் சிறந்த செவ்வியாய்.

193. தருப்பணந் தானமுந் தாரு மேழ்வகை
யருப்பண விதிகளு வமைத்துப் பூதியைத்
தெருப்பயில் தூளஞ் சேர்த்துச் செவ்வியார்
கருப்பணி தருதிருக் கருணை மந்திரம்.

194. நாப்புடை பேர்கிலா நலமும் வாயிடைத்
தேப்பொலி யமுதமுந் திகழ வுச்சரித்
தாப்பியர் விபூதியை யள்ளி வான்கரம்
பாப்பிய விடக்கரம் பதித்துப் பின்னரே.

195. அத்திர மந்திர மதனில் நீர்தெழித்
துத்தம பஞ்சகவக் கரமு முச்சரம்
வைத்தலைப் பதினொரு மந்தி ரங்களுஞ்
சித்திர முறை நனி செபித்து மேலுமங்.

196. குறைதவி ரமுதமேற் கொண்ட முத்திரை
அறைதரு கோடிக மமைந்த வத்திரம்
முறைதரு புரோட்சணம் முற்றிக் கைகளால்
நிறைதரு நீறினை நினையு மந்திரம்.

197. செப்பியே குழைத்தனள் செறியு லுபன
மப்பியே நிருதியி னமைய வோர்துளி
தப்பினள் பின்னரே தான்கு ழைத்துமேல்
செப்பிய சிவமயஞ் சிந்தை யேறவே.

198. முப்பதோ டாறென மொழியுந் தானமேற்
தப்பிலாச் சிமனு சார வேற்றிப்பின்
செப்பிய சிவோகமாய்த் தெளியு நீறினை
அப்புடன் கலந்து வாய்தனி லேற்றியே.

199. அமுதபா னங்களி லாக்கி நுங்கிமே
யுடமயிடப் பாகனை யுயர் முனீச்சரம்
தமதிட மாய்க்கொளும் சயம்பு சங்கர
விமலனை யுன்னியே விதிதெ ரிந்துமேல்.

200. வேதமந் திரங்களின் விளங்கு சந்தியு
மோது மாகமமுறை யுஞற்ற னுட்டையு
மாதரச் செபதப மணிந்த யோகமும்
போதரச் சிவநிசி பொலிந்து வேலையும்.

201. மத்திராத் திரியினில் வானு ளோர்களுஞ்
சுத்தமார் முனிவலிந் துலங்கு யோகரும்
வித்தக மாலயன் விளங்கி யொன்றியே
கத்தனாம் முனீச்சரக் கடவு ளாலயம்.

202. வந்தனர் முனீச்சர வள்ளல் சன்னதி
எந்தமன் னுயிர்களும் யாவு மெய்தின
சந்திர சேகரத் தாணு தற்பர
மந்திர முனீச்சர வரத போற்றியே.

203. சிவசிவ புரசுர திருந்து மான்மழு
நவைதவிர் கைத்தல நலஞ்செய் நாயக
வவிர்வடி வாம்பிகை யம்மை பாகனே
உவமை யில்தனி யோகி யேயெனா.

204. போற்றினர் நாங்கெனப் புகலும் யாமமே
லேற்றினன் கொண்டிள வினிய முப்பழந்
தேற்றிய பாலனந் திருந்து சக்கரை
மாற்றுய ரன்னமும் வழங்கு நெய்யினால்.

205. அமைத்திடு வோதன மரிய வெள்ளனஞ்
சமைத்திடு மண்டகை தகைய தேன்ததி
இமைத்திடு பானக மிசைந்த சுத்தநீ
ருமைத்திரு மணாளருக் குவந்து தந்துமேல்.

206. வில்லுவ நொச்சிசீர் விளங்குமுட் கிழுவை
சொல்லிய மாவிலங்கைக் கூவிளம் பத்திரம்
நல்லியல் முகங்களி னலத்த வாயிரந்
தொல்லிய லெட்டெனும் துலங்கு நாமமும்.

207. பழிதவிர் பிரணவம் பற்றி விந்துறை
அழகிய விக்கிர மமைத்து முன்னரே
செழுமதிச் செஞ்சடைச் சிவன் சிரத்தின்மேல்
முழுமனு முறைப்படி முந்து சாத்திரம்.

208. அறுகுடன் வன்னியு மழைத்துப் பாலுடன்
நறிய பன்னீர்வகை நலக்கச் சேர்த்தியே
உருமனு உருத்திர சூத்திர மோதினர்
மறுவறு பூசனை மரபி னாற்றினார்.

209. தமதித யங்களைத் தானு தற்பர
நிமலனி லேற்றிமேல் னிறைந்த வாயன
மவிரொளி மந்திர புட்ப மட்சதை
நிமிர்தரு சொர்ணமு நிறைந்த தாம்பூலம்.

210. தம்பிரான் பெறவரு டன்னி னல்கிமேற்
செம்பொருள் பஞ்சவ ரார்த்தி திவ்விய
பைம்பொனார் தீதிகை பரிந்து நீட்டினர்
உம்பரு மரகர வென்ன வோதினார்.

211. தனிமைசார் பரம்பொருள் சலச லோசனன்
கனியிதழ் வாயுமை காளி யைங்கரன்
புனைதரு நீபமார் புனித னாதியோர்
அனைவரும் மகிழ் தரவருள் புரிந்தனன்.

212. பன்னிய சிவகணம் பரவ வெம்பிரான்
பொன்னவ ரிலிங்கமேற் பொலிந்து; வைகலு
மன்னசீர் நடனமா காளி கண்ணகை
தன்னிக ராலய வடாது சாரினே.

213. யோகுயர் வில்லுவ மரத்தி னோர்புடை
யோகியா யிருந்தன ரிருந்த காலையில்
வாகையார் மதியணி வரத யோகியும்
சாகையார் வில்லுவ மரத்தின் சாரலில்.

214. வந்தனர் யோகமா மலிந்த பட்டமுஞ்
சுந்தர முண்டிதந் துலங்கு நெற்றியு
மந்தமா மேனியி லவர்வெண் ணீறுமேற்
தந்திர வுருத்திராக் கங்கள் சாரலில்.

215. சிரமதில் முப்பதோ டிரண்டிற் சீர்மணி
வரமுறு நெற்றியில் மருவு மோர்மணி
உரமுறு மாயிரத் தெட்டி னோவிலாத்
திருமணி மாலைகள் சிறந்தி லங்கவும்.

216. செவிகளி லெட்டெனச் சேர்க்கு மாமணி
யவையவ புயங்களி லாறிரண் டெனும்
நவையறு மாமணி நவிர் முழங்கையிற்
தவலறு மைவகைச் சார்த்து மாமணி.

217. மாலிகை யிலங்கவும் வளரி ரண்டுகை
சீலமார் மணிக்கடை சேர்த்தம் மாதிரக்
கோலமார் மணிநலங் குலவ வெம்பிரான்
மூலமா யாமய முழுத்த சோதியாய்.

218. முப்புரி நூலணி முழுந்த யோகமார்
செப்பமார் பட்டமுந் திருந்து பாதுகை
வைப்புறு சரணமும் வலக்கை யிற்கொழுந்
தப்பறு கரண்டமும் தனிலி லங்கவும்.

219. அம்மையார் விழியிடை யடைந்து காட்சியை
செம்மையா யருளலுந் தேவி கண்டனள்
அம்மவோ நந்தவ மான பான்மையி
னிம்முறை யெம்பிரா னிசைந்த தென்னவே.

220. பணிந்தனள் விட்டரம் பரிவி நல்கிமே
வணிந்திடு முபசர மனைத்து மாக்கினாள்
கணிந்தவர் காணருங் கடவு ளவ்வழி
துணிந்து நல்லாசிகள் சொற்று நங்கைகேள்.

221. உன்னுடைய யோகமு முயர் தியானமுந்
தன்னிலே வளர்ந்தகைத் தான றிந்துமுல்
நின்னிடை யடைந்தன நீசெய் புண்ணிய
மன்னவா கனத்தனு மறிதற் பாலனோ.

222. நாமுயர் மருத்துமா மலையி னண்ணி
ஏமுறு சிவநிசி யெய்து மிற்றைநா
ளாமுறை முனீச்சரத் தானைப் போற்றுவான்
காமியா வந்தனன் கடவுட் போற்றியே.

223. மலிதல வாசமா மருவல் நன்னெறிப்
பலர்சொலும் பான்மையைப் பற்றி யிவ்விடை
யிலகிய நின்னிடை யெய்தி யுற்றனள்
சிலபல காலநாஞ் செறிவங் காண்டியால்.

231. பரைபர பூதியம் பற்றப் பல்லுயிர்
நிருமல சுயம்புமே னிலவி யோவிலாப்
பரிபதி னாமமாய்ப் பசுத்து வத்தொழில்
வரையறுப் பான்மையு மடைந்த தில்லையால்.

232. ஆவது சங்கர கற்ப மாவுறத்
தேவர்கோன் முனீச்சரன்றிருந்தொ ராடலி
லாவலார் சுயேச்சையி னனாதி சத்தியாந்
தேவியை சகந்தர விதையத் தெண்ணினான்.

233. வானமேற் சத்தமும் வாயு கொண்டிருந்
தானமார் சலனமுந் தழலின் வெம்மையு
மானநீ ரிரசமு மகில வான்புவி
மேனகு வடிவமும் விளங்கிற் றென்பரால்.

234. புவியுறு மண்டமேற் பொருந்து நூறதாய்ச்
சவிகெழு கோடியின் சலத்தின் மேவியே
உவமையி னீர்த்திரை யுயரு மாயிரம்
புறமிவர் வதுந்தாழ் வதுமென விளங்குமால்.

235. லம்பமேற் கருடனை யிடை வமுத்திடப்
பம்பிய வான்புவி பரவுமம் பரஞ்
செம்பொறிப் பகுப்பெலாந் திரட்டி நோக்குங்கா
லைம்பொறி யைம்பொறி யாகுங் காண்டியால்.

236. ஃதுறு பான்மையி னிசைத்த பான்மையிற்
போதுறு மன்னுயிர் பொருந்து மைம்பொறி
யாதரங் கவர்வுறு மனைய தானமே
வேதன் மாலுருருத் திரன்விளை மகேசுரன்.

237. சதாசிவ பீடமாகி தளையு மவ்விடைச்
சுதாகர வொழியதாய்த் தோற்று மன்னுயிர்
விதாம்பர வெழியெனும் வெளியி லாடலே
நதாந்த நாதாந்தமாய் நவிலு மோர்பொருள்.

238. ஏதிவ ணின்றிட விசைந்த வித்தலைச்
சோதியா ரிலங்கையே துரியத் தானமேல்
மேதகு பிரமமாம் பிரமரங் கொழும்
நாதகேள் பிரமர வடிவஞ் சங்கரன்.

239. ஐவகை வடிவமா யமைந்து ஞாலமேற்
செவ்விவார் சதாக்கிய சிவலிங்க மாய்த்
தவ்வறு மதனிடை சகல மன்னுயி
ரொவ்வியே பிறத்தலு மொடுங்க லுஞ்செயும்.

240. அத்தலை மன்னு யிரான யாவையுஞ்
சுத்தநல் வாடலிற் துலங்க வாதியார்
நித்தனு மலிங்குவான் னெறிகொ ணீச்சர
தத்துவஞ் சித்தர்வான் கணந்த மைந்ததே.

241. ஒன்பது கோடியா யுயர்சு வாசமே
லொன்பது கோடி யாயுறுஞ் சித்தர்க
ளன்புற வுதித்தன ரனையர் மாதவர்
அன்பொடு முனீச்சர மணுகிப் போற்றியே.

242. ஆயிர யுகங்களா யவிரு மாதவன்
பாயிர மனுமுறை படுத்தி யற்றினர்
சேயிரு மங்கவர் தேறச் சங்கரன்
மீயுயர் யோகமுல் விருத்தி நட்டுமேல்.

243. எட்டெறும் யோகமே லேற்றி மன்னுயி
ரட்டமா சித்தியு மவிர்ந்து பின்னரே
சிட்டரா யக்காய மாசித்தி தேறிப்பி
னுட்டெழி யுயிரினை யுடல் பிரிந்திடா.

244. சோகபா வனையராய்த் துலங்கு பற்பல
வாகையார் கற்பங்கள் வரவு மோங்கினர்
பாகரா மிவரிடைப் படுத்த யோகினிற்
சாகையார் சுவாசமேற் றளைந்த வொன்பது.

245. கோடிநீள் கணக்குறக் குலவு சித்தரு
மாடலி லுதித்தன ரவர்கள் யாரெனிற்
றேடுத்த தாத்தி ரேயன் சிறந்துள
பாடலார் பல்கண மென்பர் பாருளோர்.

246. அவன்முல லாயினோர் ரணியி லங்கையி
னவைதவிர் முனீச்சரம் நணுகிச் சங்கரன்
உவமையில் தாம்புய முறுத்து யோகராய்ச்
சிவமுறு சித்திர் வான்மடுத் திருத்தியே.

247. தவலரு நிட்டையிற் சாருங் காலையிற்
சிவசுடர் வந்தனன் தேவி தன்னொடு
முவமையில் விடையினை யூர்ந்து காட்சிதந்
திவர்செயல் யாவையு மெண்ணி யெண்ணியே.

248. உங்களுக் கினிதரு ளுதவும் பான்மையி
னிங்கனே வந்தனம் யாதும் மெண்ணெமென்
றங்கர னருளவு மனையர் தவழ்தெழீஇச்
சங்கர சிவசிவ சடிலப் பாணியாய்.

249. உனதருள் யாவுமே லுற்ற பான்மையி
லனகனே நமதுட லமைந்த மன்னுயிர்
தினையள வேனுமேற் றிகழ்ந்த தில்லையாற்
கனவதோ நினைவதோ காட்டும் புன்மையே.

250. எமதுறு சடந்தனி விடுத்து மன்னுயி
ரமையவு முலாவவு மறிவெ முப்பியே
இமைநொடி நின்னையா மிதையத் தேத்திவெங்
கமையுறு கற்பவான் காணந் தேறவும்.

251. வழிச்செலும் பான்மையை வகுத்தி யாலென்ப
பழிச்சினப் பராபரன் பரவு சித்தருக்
கழித்துநல் வரமெலா மறிவிர் கேண்மினோ
செழித்தமுற் பிரமன்வாழ் திகழ்ந்த கற்பமே.

252. காலிமா புரம்வட கிழக்குக் கண்டிடுஞ்
சீலமாரு வரியாற் சித்தர் தேறநங்
கோலமார் மருத்து வான்குன்ற மாயினேம்
மூலமா ரனேக மாம்மூலி யோங்குமால்.

253. சொல்லிய கரணியத் தலையி னோங்குறுஞ்
சொல்லிய வதன்விரி தொகுத்துச் சொற்றிடிற்
புல்லிய மன்னுயிர் புரத்து வேதனை
செல்லியல் முப்பிணித் திட்பத் தீர்க்குமால்.

254. கனிந்ததோ ரூனமாங் கரணி காணுறிற்
தினந்தின முடலின்மேற் செறிந்த காயமு
மனந்தமார் புரைகளு மங்கம் வேறுபட்
டிணைந்திடு வருத்தமு மினிது தீர்க்குமால்.

255. போற்று சௌபாக்கிய கரணி போற்றிடி
லேற்றமார் நவநிதி யினைய பாக்கியம்
மாற்றிலாவ சிகரம் வானம் வார்கடல்
தோற்றிய வெங்கனல் தீமை தீர்க்குமால்.

256. புல்லுசஞ் சீவினி கரணி போற்றிட
னெல்லையார் மன்னுயி ரினிய தேகமேல்
பல்லுகஞ் செல்லினு மிருக்கும் பாவனச்
சொல்லுயர் வாயுவின் றொந்தம் போக்குமால்.

257. மண்ணினைப் பொன்னதாய் வகுத்துக் காட்டவுந்
தண்ணிரைத் திரம்மையைத் தானஞ் செய்யவு
முண்ணிகழ் வானமே லுயர்ந்து தாவவு
மெண்ணறு சித்துக ளியற்றி யாடவும்.

258. தன்னுடல் விடுத்துமேல்ச் சாரு மோருடல்
மன்னவும் தேவரை வருத்திக் கூவவும்
பொன்னிகர் பூதபை சாசம் போந்துதின்
சொன்னெறி யியற்றுவுந் தூரத் தோட்டவும்.

259. எண்வகைக் கரணிசீ ரினிது நாட்டவும்
பண்ணமை மாமாரணப் பகுப்பு வீற்றவுங்
கண்ணெதிர் காணொணாக் கதியி லோடியே
எண்ணுயிர் திருச்செப வெழில் பரப்பவும்.

260. கொடுவிட மழுத்தவுங் கொடிய நாகமேற்
றடமுறை புலிவகை தத்தி யாளிகள்
கொடியதோர் சிங்கமுங் குலைந்தங் கோடவு
மடைதரு மூலிக ளனந்த மவ்விடை.

261. சுடர்விடு மருத்து மாமலையிற் சோதியா
மிடனுறு முடியி னினிய கங்கைநீ
ரடைதருங் குளனதா யனைய தீர்த்தமே
படியினி லனேகநோய் பாற்றி வீட்டிய.

262. புண்ணிய வசத்தினிற் பொருந்து கன்மமு
நண்ணிய பான்மை மேலவை தொலைத்துச்சீர்
எண்ணிய படியரு ளினிய தீர்த்தமாய்
விண்ணவர் மாலயன் விரும்பி யேத்துவார்.

263. இதனுறு வான்கரை யிலகு மாமர
மதனுறு முற்பவ மறைவன் கேண்மதி
மதலை செஞ்சடை வரதன் முக்கண
னதிபதி முனீச்சர னண்ட ரண்டமும்.

264. தந்தருள் பரம்பரன் தாணு வாகிய
செந்தழல் மேனியன் திருந்தொ ராடலில்
பைந்தொடி பாகமேயென பரப்பி மேவினா
னைந்தெனுஞ் சக்தியே யான வம்மையும்.

265. தன்னையே பொருளெனத் தானி னைந்தனள்
பின்னமாயவ ரானைமாப் பிரானைப் பேணலன்
என்னையோ சிவமென வெண்ணி யோசியா
முன்னுறு கருணையான் முதல்வி வைகினாள்.

266. ஈதறி சங்கர னிறைவி தன்னெணப்
பேதமை தெளிந்தனள் பிராட்டி மாலினை
யாதரத் தொருக்குவான் அருளி னாற்றினால்
மாதுனீ னின்றனை மதித்தி மேன்மையால்.

267. ஈதுபெண் டிறத்தினற் கியல்ப தாகுமோ
மாதுநின் பவத்தினை மாற்றல் வேண்டுமால்
பேதைநீ நமதுரு பெற்ற சீதமார்
மேதகு மருத்துமா மலையின் மேவியே.

268. உன்னுடைப் பவமெலா மொருங்க வத்தலைத்
துன்னுதி குளமதாய்த் துலங்கு காலையில்
அன்னிலை நின்பவ மகற்றும் பான்மையால்
வன்னமா மரவுரு வடிவ மாகியே.

269. வந்தருள வோமிகு மரனி னுற்றுள
சுந்தர விலைதவிர் துலங்கு காய்கனி
சிந்தியக் குளனுறச் செறிந்த கன்மமும்
பந்தமு மறுமெனப் பரனும் வூதியே.

270. திருவருள் புரிதலுந் தேவி தேறியே
நிருமல நல்லருள் நினைந்து போற்றினள்
புரபர சங்கர புராண காரண
வரபர வெனவடி யன்பிற் போற்றியே.

271. திருந்திய விடைதெறித் தேவி காலிமா
புரம்புகுந் தலையெழப் பொலிம கோததி
நிரம்பிய நானமேல் நிலவு செஞ்சடைப்
பரம்பொருள் சுந்தரப் பகவற் பேணியே.

272. மன்னிய ஞானவல்லி மாதுமீ னாட்சியம்மை
தன்னையு மெதிரேகண்டு தலையரு ளாடலாலே
பொன்னொடு மகரஞ்சிந்தும் புணரிசா ரணுணமாகி
முன்னவா னண்டநக்கி முழுமணி யாரஞ்சூடி.

273. சந்தனம் பலவுதேக்கு சம்புகாயா கொன்றை
நந்தம்மரு திருப்பை நாரத்தம் முதிரைதேங்கு
கொத்துலா மருதுகான்றை கோங்குகுன் றாத்திவெட்சி
பைந்துணர் கடம்புமுல்லை பயில்சுர புன்னையாதி.

274. மரங்களி னழகுகாட்டி மங்குல்கண் படுக்கநீடிச்
சிரங்களு மனேகங்கொண்டு தேம்பிழி யருவிசிந்தி
உரம்பெறு முத்தநத்த மொழிரகின் முருகுநாட்டி
நிரம்பிய வருவிசிந்தி நீள்கடன் மகிணற்புல்லி.

275. திசையெலாந் தன்னைக்காட்டிச் செறிதரு மமுதவெற்பி
னிசைதரு குடுமிச்சார லெய்தியோற் குளனாயுற்றாள்
அசைவறு குளக்கரைக் கணமருமா மரமேயாகி
விசையமன் னுயிரைப்போற்றி மேவினனென்பர் தொல்லோர்.

276. இத்தகு தீத்தப்பாலி னிசைந்தபிண் டோதங்கள்
சுத்தமா ரந்தியேட்டி துதிபிதிர் கிரியையாதி
மெத்திய விருப்பிற்றின் வீடுறு பிரேதசீவர்
கைத்தலச் சங்கமேந்துங் கடவுளி னுலகஞ்சேர்ந்தே.

277. விட்டுணு கற்பமட்டும் விளங்கியே யீசன்மேனிச்
சிட்டராய்த் திகழ்ந்துமேவிச் சிவசம சோபையாவர்
மட்டெழிற் தருமமொன்று காண்கினு மனேகமாகித்
திட்டமா ரனந்தகோடி திருப்பயன் பெறுகுவாரே.

278. புனைதரு மனந்தர்பல்லோர் புகலுமா யிரமாகோடி
கனிவுறு நாவைக்கொண்டு கழறினு மனியகுன்றின்
புனிதமு முயர்வுஞ்சீரும் புகலினு மழவிற்றாமோ
யழகனார் சிவனேயன்றி யாரதன் மகிமைதேர்வார்.

279. இந்தவானதி நறந்தன யியல்பல வளங்கள்யாவும்
சந்தமன னுயிர்தழைப்பான் தற்பர னமைத்தேயுற்றான்
புந்திசார னேககோடி புவனங்க ளிந்தவெற்பா
லந்திலே செறிந்தங்குய்யு மமுதவான் குன்றமுற்ற.

287. இந்தநின் சென்மமுன்னர் இசைந்தவோர் மறையோனா
வந்தனை வேதந்தேர்ந்து மாதவத் திறமைகொண்ட
அந்தணன் மகனாய்ப்பின்ன ரரியநற் கலைகள்கற்று
சிந்தனை மயங்கித்தீய செயலினாற் செயல்திறம்பி.

288. வழுக்குறு தசையருந்தி மதுகுடித் தகக்கழிப்பாய்
இழுக்கினை புலையர்கூட்ட மெய்தினை பழிபாவங்கள்
அழுக்கினா லுடல்விடுத்தா யந்தகன் தூதர்கையி
லழீஇப்படி நரகமெல்லா மழுந்தினை யிப்பிறப்பில்.

289. சேடமார் பவத்தினோடுஞ் செனித்தனை கருமநோயில்
நீடினை யென்னாற்றீர்க்குந் நிலையல வினிதுகேட்டி
யாடுயர் மகேந்திரத்தின் மகோததி யருகிலங்கும்
பீடுயர் சுந்தரேசர் பிராட்டியை வணங்கியேத்தி.

290. எதிருறு கடலின்சார லீசுர மேனியாகி
துரமென் மொழிவாயம்மை மகிழவான் குண்டமாகி
இதமுறு மாநிழற்கீ ழிருந்துநீர் புகுந்தேயாடித்
ததையுறச் சிறங்கைநீரைத் தான்குடி பருகுங்காலை.

291. தேகமேற் கருமநோயுந் தீர்ந்துமெய்ச் சுத்தமாகி
வாகையார் முனீசவள்ளன் மலர்ப்பத நினைந்தேயாங்கட்
பாகமார் நெய்விளக்குப் பழிப்பிலோ ரிலக்கமேற்றிச்
சோகமுற் றொழித்துவாழ்ந்து துலங்குதி யின்னுங்கேட்டி.

292. முன்னையிற் சனனந்தன்னில் முனீச்சர விறைவன்கோயின்
மன்னுபூ சகரிடத்தின் மறைபல கற்றுணர்ந்தாய்
பின்னொருநாள் முனீசப்பெம்மான் பேரருட் சன்னதிக்கட்
துன்னிய நெய்விளக்குத் துலங்கிய ததனைக்கண்டாய்.

293. ஆவிதுமு னீசப்பெம்மா னாலைய விளக்கிதென்றும்
பாவமதென் றும்பாராய் பனிச்சுடர் நதுத்தேயாங்கண்
மேவிய நெய்யெடுத்து மெய்பூசி யன்னத்தோடும்
ஓவற வுண்டபாவ முன்னையே பற்றிற்றையா.

280. கதைபல வனேகமுண்டு கௌரிகண் ணகையேகேட்டி
விதமுறு மிக்கதைக்கண் விளங்குமோர் சரிதஞ்சொல்வன்
அதிபதி யருளேயாகு மற்புத ஞானவாரி
துதியுறு மணத்தினேற்றுஞ் சுத்தமாங் காண்டிமேனும்.

281. பொன்னிக ரீழதேசம் பொருந்துமோர் மனிதன்சீர்சால்
தன்னுடை வினையுடற் சரீரமேற் பெருவியாதி
துன்னின னுடலுமுற்றுஞ் சொறியெழ விரத்தஞ்சிந்தி
மன்னிய குரையோங்கு வடிவெலாம் புளுக்கள்சிந்த.

282. ஏங்கின னிந்தநோயை யெந்தவா ருகதீர்ப்ப
னோங்கிய மருந்துயாவு முண்ணினும் பயனேயில்லை
ஈங்கென துயிரும்போகா தென்னையே கருமமென்னா
வேங்கினன் பதைபதைத்தா னினியென்னா லொன்றுமாகா.

283. விடையிவர் பரமன்தந்த வேலவன் கந்தன்சாமி
நடனவில் மயூரவாக னாரலைசார் மகேந்திரத்திற்
கொடியதோ ரசுரற்செற்றுக் கூற்றெனுஞ் சூரறுத்த
வடிநெடு வேலோனன்றி மற்றியார் மாற்றவல்லார்.

284. என்றனன் கதிரைவெற்பி னேகின னேகியாகித்
துன்றிய மாணிக்கப்பேர்த் துதிகங்கை நானமுற்றி
வென்றிசேர் குவடெடுத்த விசாகன்செவ் வானமேனி
குன்றமு யமரவாழ்வே குமரனே சரணமென்றான்.

285. சன்னிதி முன்னர்சென்று சண்முக கருணைவாழ்வே
என்னுடை யுயிருடம்பு யாவது நின்னதன்றே
தன்னுடை யெண்ணந்தேற்றித் தழையறு வில்வத்தாரு
மன்னினன் பழிகிடந்தான் மருவுமூ வாறுநாளும்.

286. வரவர விரத்தம்பீறி வடிவெலாம் புழுக்கள்கீண்ட
அரிதவ னுயிரிருந்த வாறுமா முகத்துவள்ளல்
கருணையா லவன்கனாவிற் காட்டின னெனதுமேனி
உருகுசீ ரன்பவென்சொ லுறுதிநீ நன்றுகாண்டி.

294. ஈதெலா முன்னைப்பற்ற விசைபெரும் பாவியாகி
மேதகு நாலேழ்கோடி வியனரை குழந்துபின்னர்
ஓதுபல் சன்னந்தோறு முறுபல நோய்திளைத்து
வாதையா யிந்தச்சென்ம மருவினை யறிவிலாதாய்.

295. ஆங்ஙனஞ் சேறியென்றா னனையனு மனதுநொந்தே
ஈங்குநாந் தனியனாகி யெவ்வணஞ் செல்வேனென்னா
வேங்கின னிவர்க்கிரங்கி யீரறு புயத்துவள்ளல்
தேங்கருட் கருணையாலே சிற்சில வோதுவானால்.

296. நாளையோர் வேடனின்பால் நணுகுவ னஞ்சலின்றி
ஏழைநீ போதியென்றா னிவனவன் தன்னைநோக்கி
காளைக்கும் கூலிநல்கக் காசிலை யுண்டுயில்லை
ஆளனே யென்னசெய்வே னென்றன னவனுஞ்சொல்வான்.

297. இந்தவா லயத்திற்பூசை யியற்றுவோன் காசுகூலி
தந்துனை விடுப்பனென்றே சண்முகன் கனாக்கரந்தே
அந்தவான் பூசகர்க்கு மருளின னவனுந்தேறி
நொந்தவர்க் கினியகாசு நுவன்மொழிப் படியேயீய.

298. பெற்றனன் குமரவேளும் பெரிதிளங் காளையாகி
யுற்றசீர் வேடமேனி யுடனுற விவனுந்தேறி
பற்றுட னமைந்தகூலி பரிவுடன் தாறேனென்னை
யுற்றதோ ரமுதகுன்றத்தே கெனவுடன் பட்டேபின்.

299. முன்னரே கூலிதந்து முறைப்படி வருதியென்ன
அன்னவன் கொடுக்கக்கூலியை யனுமவன் கைபற்றி
மின்னொளி மறையுமுன்னம் விடுத்தன னமுதகுன்ற
மென்னையோ வென்னத்தேறி யிதமுறு குண்டமுழ்கி.

300. வலக்கையி னீர்சிறங்கை வாரியே குடித்துநின்றான்
புலப்படு குரைநோய் மேனிப்புழுவெலாம் புறத்தேசிந்த
தலைப்படு கரையினேறிச் சாருமா நிழலிலுற்று
நிலைப்படு தனதுமேனி நிகளொளி தன்னைக்கண்டே.

301. கனவுரை பான்மைதேறிக் கடவுளே விசாகன்கந்தன்
முனைவனின் னருள்தானென் னுள்ளேநின்று முகமலர்ந்து
புனிதமார் தோத்திரங்கள் புகன்றுசெவ் வேள்வேடர்
வனைவுறு வடிவங்காட்டி வந்தன னினையசொல்வான்.

302. முன்னவன் முனேசப்பெம்மான் முழுமணி கிடந்திமைக்குஞ்
சன்னிதி செல்லவேண்டித் தகுதிநீ கூலிதந்தால்
நின்னரே னின்னோடேகி யிதமுறு கூலியாளாய்ப்
பின்னரே செல்வனென்றான் பெருமகிழ் வெய்தியன்னோன்.

303. காசிலையோர் பணந்தந்த கையுறு மதனைவாங்கிப்
பேசுறு முனீசுரத்திற் பெருமகிழ் வுடனேசெல்ல
நேசமார் வழியைக்காட்டு நீகேட்குங் காசுபின்னர்
யாசகஞ் செய்தேதாறே னென்றன னவன்சிரித்தான்.

304. அரைப்பணம் போதியைய அதனைமுற் றருதியென்றான்
பரித்துட னவன்கொடுக்கப் பரைமக னதனைவாங்கித்
தெரித்தனன் மடிசிமிழ்த்தான் திருக்கையி னவனைப்பற்றி
வரித்திழு முனீசக்கோயின் மருவவே விடுத்தகன்றான்.

305. இவனரு வாதன்கண்டே யீரறு புயத்தன்மைந்தன்
சிவன்மக னாடலென்றே சிந்தித்தா னகமகிழ்ந்தான்
பவமொருக் கனகஞான பராபர வெனப்பணிந்து
கவலைய தெல்லாம்நீங்கிக் கணிப்பரு மகிழ்ச்சிகொண்டான்.

306. துங்கமார் முனீசப்பெம்மான் துணையடி வணங்கியேத்தி
யங்கணே தீர்த்தமாடி யருளொளி சோதியாடி
மங்கல மாசிமாதம் வளர்சிவ நிசியிராவிற்
சங்கைசா ரிலக்கதீபம் சன்னிதி துலக்கிமேலும்.

307. இந்தவான் பிறப்புநீங்கி யேழ்பரித் தேரோன்பானு
சந்ததி குலந்தழைப்பத் தருமமெய் யறிவுதேங்கப்
புந்திசார் சிவோகஞானம் பொலிவுற வவதரித்து
மைந்துறு பராக்கிரமப் பேர்வாகு வினாமஞ்சூடி.

308. திசைபுகழ் பரிதிபோலச் சிறந்துடன் வாழ்ந்துமேலும்
விசையமார் கலைஞானங்கள் வில்வித்தை குதிரையேற்ற
மசைவறு பரியினேற்ற மாதியாய் நன்றுதேர்ந்து
வசியெழு மிலங்கைமுற்று மணியணிச் செங்கோலோச்சி.

309. பூருவ சென்மஞானம் புகுதலு மிகத்தெளிந்து
சாருவா கானசண்டா ளப்பதங் கடிந்து
பேருவா மதியைநேரப் பிறைமுடி மதம் பெருக்கித்
தாருவார் வளங்கள்சென்று சார்தரு மரக்கர்செற்று.

310. துணையெதிர்ந் தடிவணங்குஞ் சகலர்க்கும் நன்றிகூட்டி
மனமகி ழனேகமான மாதரை மகிழ்ந்துபுல்லி
யினியநன் மக்கட்பெற்றே யெண்டகைத் தருமநாட்டிக்
கனகமார் முனேசநாமக் கடவுளா லயம்புதுக்கி.

311. நிபந்தனை நித்தபூசை திகழுநை மித்யாமாதி
சுபம்பெற வனேகபூமி துலங்கிய நிதியமைத்து
தவம்பொறை யழுகுமேன்மை தனக்குறு துணையாக்கொண்டே
செபம்பெறு சிவேரகமேறிச் சென்மநோய் யொருக்கிமேலும்.

312. சுத்தசத் தாகியென்றும் துலங்கிய சிவத்தோ டொன்றி
உத்தம னிவனுமுற்றா னூழ்வினைக் கருமபாவ
மெத்திய சிவத்துரோகம் யாவையும் விலக்கியுய்வாத்
தத்துவ நேசன்தன்னை யடுத்தவ ரென்பர்மன்னோ.

313. என்றுபின் தவசியந்த விதமுறு சித்தரெல்லாம்
நன்றுள மருந்துக்குன்ற நணுகினர் மழுலிதுய்த்துத்
துன்றிய காயசித்தி தொகுத்துப்பின் யோகராகி
நின்றன ரெந்தஞான்றும் நிலவிலர் முனீச்சரத்தில்.

314. இவர்புரி தீர்த்தகுண்ட யிவ்வகை பயனைநல்கி
இவர்தரு சித்ததீர்த்த மென்னவே யிலகியோங்குஞ்
சிவைமுன்னாட் சிவனைநேர்த்தித் திருந்திய தவம்புரிந்தே
உவமையில் தீர்த்தநட்டே யுற்றன் ளாதலாலே.

315. அத்தகை தீர்த்தவம்மை யருளொளி படிதலாலே
சுத்தமார் பவங்கள்போக்கித் துலங்கிய தனேககோடி
பைத்தவெம் பிறவிதோறும் பயிற்றிய பாவநீக்கி
சித்தியார் சக்திதீர்த்த மென்னவே சிறக்குமாதோ.

316. புண்ணிய மனேகநல்கும் பொலிதரு தியானசிந்தை
எண்ணிய படியேயாக்கு மீசுர தியானநிட்டை
உண்ணெகிழ் சொரூபமாக்கு முற்றவர்க் கென்றேயோகர்
விண்ணவர் பரிந்துசூழ்ந்து மேவுவர் கானஞ்செய்வர்.

317. திருந்திய துர்க்கையாய்ச் செப்பு மம்மையும்
புரந்தரன் பகைவனாய்ப் பொலிந்த துற்கணின்
சிரந்தனிற் சூலவேல் செறித்துக் கொன்றதோர்
பெருந்தகப் பாவநோய் பிணிப்ப மாழ்கியே.

318. சங்கரன் முனீச்சர தலத்தி னோரிடை
மங்கல தீர்த்தமெய் மரபிற் கண்டனள்
அங்கணே விளங்குற அரனின் காட்சியால்
பொங்கிய தீப்பவம் போயிற் றென்பரால்.

319. அத்தலைத் தீர்த்த மேலாடி னோரெலாஞ்
சுத்தராய்ப் பவவினை தொலைத்து மான்மழுக்
கைத்தலத் தேந்திய கடவு ணல்லருள்
மெய்த்துற விளங்குவ விளஙகு துற்கையாம்.

320. நாமமே பூண்டது நண்ணு மத்தலை
ஏழுறு சூரிய னினிய தக்கனின்
மாமகத் தவியுணும் வலிய நோயதா
மேமறி தீர்த்தமும் தாபித் தன்பினே.

321. தனதுறு பெயரினிற் றானு னாட்டியே
யனகமார் சிவார்ச்சனை யாற்றி யுய்ந்தனன்
புனிதவத் தடம்படி புலவர் மண்ணவர்
அனகராய் முத்தியை யடைவ ருண்மையால்.

322. முன்னொரு காலையில் முளரி மேலுறை
யன்னவா கனன்தனை யாறு மாமுகன்
தன்னிலே சினத்திலிற் சதுர் முகத்தனு
மென்னவோ விதுவென வேங்கி நாணியே.

323. சிறையிடைப் பட்டனன் சேய்தன் கையினால்
முறைதருங் குட்டினை முன்னரப் பட்டன
னிறையுல கங்களி னிந்தை யேற்றன
றறிவனாம் பெயர்கன் றரிது மாழ்கினேன்.

324. என்னதான் செய்வனென் றேங்கி யம்புயன்
பொன்னைநேர் முனேசுரப் புரம் புகுந்தனன்
தன்னிகர் வான்றடஞ் சமைத்துக் கோயிலுந்
தொன்னெறி யாற்றியே துலங்கி மேகினான்.

325. கலைதெரி நாரதன் கனிந்த வாசக
நிலைபெற நவின்றவ னினைந்து செய்துமேல்
மலைவறு பிணியெலா மாறி வையமேல்
நிலவின் னவன்றவம் நிகழ்த்தற் பாலதோ.

326. அயன்புரி தீர்த்தமு மவனி னாமமே
பயன்படு பிரமவான் குண்டப் பண்புறு
நயம்பெறு மித்தட நானம் மூழ்குநர்
செயம்வி சயம்பல சேர்ந்து மெய்மையார்.

327. உத்தம கலைஞரா யுறையு முன்னுயர்ச்
சித்தசங் கற்பமுந் தெரியக் காண்குவர்
நத்திய பிணிவகை நாச மேகுறுந்
தத்துவ ரலைதெரீச் சகள ராகுவார்.

328. கந்தவேள் முன்னொரு காலை யிந்திரன்
செந்திறற் பகைஞனாம் தீய சூரனைச்
சிந்தவே முனீச்சரஞ் சென்று ஞானமா
ரைந்தெழுத் தோதின ரரனை யுன்னியே.

329. பொருவரு வான்றடம் புக்கி யக்கரை
மருவுறு மிலிங்கமு மரபிற் பேணியே
சருவசங் காரமுந் தாணி யற்றிய
உருவமா ருருத்திர வுயரும் வான்படை.

330. பெற்றன னாதலிற் பிறர்க்கு மத்தடம்
நற்றிறற் கேளரு நான தீர்த்தமா
யுற்றது படிந்துளோ ருற்ற சத்துரு
வெற்றியை யடைகுவர் விமல ராகுவார்.

331. சங்கரன் சடையிடைத் ததும்பு கங்கைநீ
ரங்கனே பரசிவ னாடு மாட்சியாற்ப
பொங்கியேழ் துழிவிழப் பொதுளிக் குண்டமாய்க்
கங்கையாய் நின்றது காணும் பான்மையின்.

332. சங்கமுந் துகிர்களுந் தரளச் சும்மையும்
பொங்கு மத்தடம் புணரி யாடுவோர்
மங்கல வமுதர்ாய் மறந்துஞ் செத்திலாத்
துங்கதை யடைகுவர் சோபை தேர்குவர்.

333. விடுகடா வைரவன் வேதன் சென்னியைத்
தடவிமேற் கிள்ளியே சகல லோகமு
மிடைதரு ரத்தவான் துட்சை யேற்றிடுங்
கொடுமையாற் பிரமவான் கத்தி கொண்டனன்.

334. அண்ட ரண்டங்களு மலைத்து லாவிப்பி
னெண்டகை முனீச்சர மெய்த்த வன்னவன்
கொண்டதோர் கபாலங்கை குலைய வீழ்ந்தது
சண்டவான் றடமெனச் சார்ந்த தென்பவே.

335. அத்தகு வான்தட மாடி வைரவன்
சுத்தனாய் சிவன் ருட்டுறை சிமிழ்த்திட
வுத்தம வண்டமே லுற்று மேவினான்
இத்தலைத் தீர்த்தநீர் யார்க்கு மாகுமால்.

336. இதனிடைச் சரிதமொன் றிசைப்பன் கேண்மதி
விதமுறு சேதுவான் கரை விளங்கிய
மதமுறு மிராக்கதன் மைலியன் கொட்பினன்
பதம்பெயர்ந் துலகெலாம் பற்றுந் தன்மையன்.

337. அண்டமார் பைம்புன லள்ளி நுங்கியே
வெண்டலை யுலாவுவான் வெடித்த சொல்லினான்
துண்டமார் மதியெனத் துலங்கு பற்களான்
மண்டல வுயிரெலாம் வாரி நுங்கிவான்.

338. கொடியரிற் கொடியவன் குணப மள்ளியே
வெடிபடு வாயினன் விழுங்கும் பான்மையான்
துடிதுடித் துலகெலாம் சூறை யாடிமேற்
படிறுறு சுரைமதுப் பானம் பண்ணுவான்.

339. கொடினுறு குஞ்சிமேற் குலுங்க வோடிப்போய்
வடிவுறு தேவரை மாத வத்தரைப்
பிடிபிடி யாகவே பிடித்து நுங்குவா
னசடுல வெம்பொறிக் கனறாவுங் கண்ணினான்.

340. மந்தர மசைந்தென வயங்கு தோளினான்
வெந்திறற் கரியினை விழுங்கித் தித்தியா
யுந்துவா னெலும்பினை யொளிறு மன்னுயிர்
சிந்துவான் மிசைகுவன் தின்ப நூரனினை.

341. வடிசுடர் வான்கதை வயக்கித் தன்னெதிர்
கொடியவெம் பூதரைக் குணலைப் பேயரை
மடமுறு பெண்களை மயக்கிக் குத்தியே
சுடுவனைக் குடிக்குவன் துன்னி யோடுவான்.

342. பேயினும் வலியவிப் பிரம ராக்கத
னாயவன் வனமெலா மடைந்து சுற்றியே
தீய பெண்களைத் தின்று தின்றுமேற்
தூயதோர் தவவனம் தொடர்ந்து சென்றனன்.

343. அவ்வனத் தனேகமா மருந்துவத் தருஞ்
செவ்விதி னிருந்தனர் தீயற் கண்டனர்
எவ்வழி யுய்குவ மென்ன வேங்கினா
னவ்வழி நாரத னணுகி னானரோ.

344. படர்சடை விழுதெழப் பரம்புங் கண்டிகை
புடைவிழி நீற்றணி பொலிந்து குண்டிகை
வடிவமை புரியதன் மருவு நூலணி
யுடையனா யெதிர்ந்தன னுவலுங் கண்டரோ.

345. விடுவிடு பாரென வீர வாள்கொடு
தொடர்பவன் தனையிவன் சூர்த்து நோக்கலு
மடையுடல் வெடிபட வங்கி பற்றியே
சடுலவான் பொறியெழச் சாம்ப ரானதே.

346. அன்னவ னாருயி ரவிர்ந்து சூக்கமேற்
றுன்னியே பேயுருத் தொக்க நின்றது
வன்னியின் விழிசெறி மகதி யான்முனி
யென்னயீ தென்னவே யினிது நோக்கினான்.

347. அந்தவான் பேயெழீஇ யைய செய்யவ
வெந்தையே யென்பிழை யாவுந் தீர்க்கென
வந்தியே பணித்ததங் கவனுந் தேறியே
முந்தையூழ் முனிவரன் முழுதுங் கண்டரோ.

348. தனதுறு சமண்பலஞ் சார்ந்த சுத்தநீர்
வனமலர்க் கையினால் வாரிச் சிந்தியே
தினையள வுண்கெனத் தீற்றி யுய்த்தனன்
அனையது சிவமய மாக்கி யுய்த்ததே.

349. இன்னதோர் கபால நீரிடைப் படிந்திடு
முன்னவ நாரதன் முன்னை தீர்ந்திடுஞ்
செந்நிற வரக்கனைச் சிதைத்து வன்னியார்
றொன்னெறி பேயுரு துலங்க நட்டுமேல்.

350. அந்தவான் பேயுரு வயன்க பாலமேல்
வெந்திறற் தீர்த்தநீர் மேவும் பான்மையி
னுய்ந்ததப் பேயுய ருற்ற மந்தினோ
டிந்தனீர் படிந்திடி லிசைப்ப தென்னையோ.

351. கோடிவான் கணங்களும் கோடி ருத்திரப்
பீடுறு சீவரும் பெரிதி னேத்திட
வாடலார் சிவபத மணுகி யுய்குவர்
நாடருங் கங்கைநீர் நலத்தி னன்றது.

352. சங்கணி கரத்துமாயன் தசரத குமாரனாகி
மங்கலச் சீதைவேட்டு மகிழ்ந்திடு முனீச்சரத்துத்
தங்கினன் தம்பிமார்கள் சார்ந்திடத் தவழுமுழந்தா
ணங்கணே இராமதீர்த்த மணிசெறி சீதைதீர்த்தம்.

353. என்னுமித் தீரத்தோ டேயிசைத்து மானாவரிக்கண்
முன்னுயர் சுயம்புமூர்த்தி முனீச்சரன் பாதம்போற்றி
யன்னிலை யருளவேண்டியயோத்திமா நகரிற்சென்று
தன்னுடை முடியைநீத்துத் தம்பியும் தானும்சீதை.

354. தையலுந் தொடர்ந்துசெல்லத் தழைத்திடு கானஞ்சென்று
வெய்யதோ ரரக்கர்செற்று விளைவழி சீதைவேட்டு
பையவே சேதுநாட்டுப் பயின்முடி யயோத்திபெற்றுச்
செய்யமால் இராமன்தேகம் தீர்ந்துவை குண்டமுற்றான்.

355. ஆதலா லினையதீர்த்த மரிராமன் சீதைதீர்த்த
மேதகு சேதுதீர்த்தம் வினையொழி பாவநாச
மாதிய மானாவரிப்பே ரமையுமித் தீர்த்தமாடிற்
பாதகம் பகைவிசாரம் பாற்றிவிண் ணமரச்செய்யும்.

356. செங்கம லத்தில்மேவுந் தெரிவைபூந் திருவுமுன்னா
ளங்கமார் முனீச்சரத்தி னமர்ந்தனன் வித்தையாக்கி
மந்தலத் தடமுண்டாக்கி மருங்கினி லிலிங்கநட்டுச்
சங்கர சிவனைப்போற்றித் தவம்பல நாட்புரிந்தாள்.

357. அவட்கருள் பான்மையுற்ற வம்பிகை பாகங்கொண்டு
தவத்துறு மிடபமூர்த்தி சாரத கணங்கள்போற்ற
உவப்பினிற் காட்சிதந்தா னுத்தமி அவனைவேண்டிக்
கவைத்தவெள் ளேறுகொண்ட கடவுணீ யருள்கவென்றே.

358. ஐயனே எந்தஞான்று மரியிரு தயத்தினானே
செய்யதோர் திருவற்சப்பேர் செறியணி யாகவேண்டும்
மெய்யனே யென்கழுத்தில் விளங்குமங் கல்யமென்றும்
பொய்யிலாப் பொருளாயோங்கப் புனிதநீ யருள்கவென்றாள்.

359. ஆவது வரமளித்தே யரனுயர் சீரிலிங்கத்து
மேவினா னிணையதீர்த்தம் விரும்பினோர் படிந்தோர்யாரும்
பூவுயர் சுமங்கலைப்பேர் புனைந்துபிற் காலந்தன்னி
லாவலார் கௌரிபாங்க ரடைகுவ ராயுங்காலே.

360. சுத்தசத் தாகியோங்கித் துலங்கிய முனீச்சரத்தி
லெத்தனை கோடிலிங்க மத்தனை கோடிதீர்த்த
மெத்தனை மருத்துமூலி யத்தனை தவவொழுக்கஞ்
சித்தமாய்ச் சித்தியற்றிச் சித்திகள் யாவுநல்கும்.

361. புரையறு தியானநிட்டை பொலிதரு மித்தலத்திற்
வரநதி சென்னிசூடும் வள்ளலுங் கௌரிதானும்
மொருவல ரனந்தானந்த யோகியா யுள்ளமாகி
விரிபரா னந்தமாகி மேவுவர் தேருங்காலே.

362. கருணைசேர் புலத்தியன்சீர்க் கதிபொல னுறுவைக்கண்ணே
பெருகிய யோகநிட்டை பெணின னனையகாலை
விரிதரு மட்டயோகம் வெடித்தது பிழம்பாயோங்கி
யரியதோ ரட்டமூர்த்தித் தாகியே யவிர்ந்துமேலும்.

363. தேங்கிய மூலாதாரத் தீயினிற் பிறந்துமேலு
மோங்கிய வடிவந்தண்மை யுயருறுஞ் சலனஞ்சத்தம்
வாங்கிய பரிதிக்காந்தி மதிகொழுந் தன்மையானம்
பாங்குறு முயிர்ப்புப்பற்றிப் பயின்றெட்டு வடிவாமாகி.

371. எங்கணு மொளியாயுள்ள தெங்கணு முயிராயுள்ள
தங்கனேக மாகவான் றவருரைப் பார்பல்லோர்
இங்கிதின் முதல்வன்யாவ னென்னவென்பதை யாங்கள்தேரோ
மீங்கிவை தனாக்கனாதி யில்லையோ வுண்டோதேரோம்.

372. படித்தன மனேககாலம் படித்ததாற் பயனென்னைய
தடித்திடு தர்க்கந்தன்னாற் சார்ந்திடுமைய நீக்கிநாடித்
தடுகுரவ னின்றிநுண் பொருளுணர்வ தென்னோ
யடைந்தனை யெல்லாந்தேர்வை யருமறை தொகுத்தநூலோய்.

373. உத்தமப் பொருளைக்காட்டி யுணர்த்தென வியாதமேலோ
னித்தனா ரருளின்மாயா சக்தநீணெறி யையமாற்றச்
சுத்தமார் சிவமதந்தான் லுளவணி மாயன்தானே
கத்தனென் றுரைத்தான் கேட்டகடவுளர் மனம்வருந்தி.

374. ஃதென்ன காலமந்தோ விறையவன் சிவமிருக்கப்
பேதையாய் மாயன்தானே பிரானெனத் துணிந்துரைத்தான்
மாதவ னஞ்ஞானத்து மயங்கின னாயினுஞ்சீ
ரோதந்த வஞ்ஞானந் தானுற்றிடா திவனிடத்து.

375. தற்கமெத் தனைகள்கோடி சாற்றினன் பிரமவித்தை
விற்பன னெனமருண்டார் மீண்டுமவ் வியாதனின்னோ
ரிற்புகு மெண்ணங்கண்டே யின்னமுற் சொன்னவாறே
பற்பல நியாயங்காட்டிப் பகர்ந்தனன் னையன்றானே.

376. பிரமமென் றினிதுரைத்தான் பிரமனே யாதியானோர்
திரிபல விந்தமாறு செப்பிடில் நாங்கணின்னைப்
பரிவுறத் தடுக்குங்கல்வி பயின்றுசேர் வாரணாசி
விரிதரு நந்திமுன்னர் விளம்பிடி லொப்புக்கொள்வோம்.

377. என்றன ரிவனுணர்தா னேகுதும் வம்மினென்னாத்
துன்றிய முனிவன்சென்றான் தொடர்ந்தனர் யோகரேனோர்
மன்றல்சார் நந்தனங்கள் வளர்ந்துவான் றடவியோங்கி
இந்தணி மண்டபத்தி லேறுபூங் காவிளங்கும்.

378. நாரணர் வாரலெழுந்து வழிநறா வுண்டுகொண்டு
சீரிய மடைவுடைந்து தெள்விழி வண்டியம்பக்
கூரிய தூம்புபாயுங் குளனகள் மருதவேலி
சேரியல் வாரணாசி சென்றனன் முனிவன்றானே.

379. தருக்கிய கல்விமேலோன் சங்கரன் மாயவீறோ
பிரித்தறி தரனாம்வீறோ பிரமனே யாதியோரும்
பொருக்கெனப் புடையடைந்தார் புங்கவன் கையுயர்த்தி
இருக்கினிற் சிலபுகன்றோ விறையவன் மாயனென்றான்.

380. கண்டனன் ந்திதேவன் கடுஞ்சினங் கொட்புவீறத்
தண்டலில் பொய்மொழிந்தாய் தற்பரன் சிவனேயல்லால்
விண்டுதா னதிபனாகான் வேதம்வின் ஞரைகள்பார்த்துக்
கொண்டிலை முற்றுவிட்டாய் முனிவநீ கூறக்கேண்மோ.

381. எனதுமுன் சிவனைநிந்தை யியற்றினை யாதலாலே
புனைதருநா வெழாதேபோகப் பொருந்துகை யுயர்பான்மை
தனிபெருஞ் சாபமிட்டான் றாபதனி வைகள்கண்டே
யினியென்ன செய்வேனென்னா வேங்கினன் பரதவித்தே.

382. செருக்கெலா மிழந்துவாழச் செய்யனே நந்திதேவே
கருப்பமாய்த் தோன்றுஞ்சீவர் கலங்கலுந் தெளிதலும்
உரைப்படி நித்தமுந்தா னுறுவன வுணர்கிலாயோ
திருக்குடை யெனதுபுன்மை தீர்த்தரு ளென்றானன்றே.

383. ஆங்கவன் சொலக்கேட்ட வான்முக னருளினாலே
ஈங்குநீ சிவத்துரோகத் திடைப்பழி நீக்கவேணுஞ்
சாங்கமாய் முனீசமூர்த்தி தனதரு ளதனாலாகும்
பூங்குழ லுமையோர்பாகன் புண்ணியன் புராணநாதன்.

384. சங்கரன் சன்னிதிக்கட் சாரென வினையான்தேறித்
திங்களங் கண்ணிவேய்ந்த செல்வர்க்குப் பூசைசெய்து
பங்கமார் சிவத்துரோக பாவமுற் றொழிந்துமேலாம்
புங்கவர் வணங்கியேத்தும் பூரண நிலையிலுற்றான்.

385. ஆதலா வன்னவீச னாயிளை யம்மையோடு
மேதகு பூசைகொண்டு மிகுமுனி சிவத்துரோக
வாதனை மாற்றலாலே வாகனன் பரவியேத்தும்
ஆதரமு னீசனென்னா வமைந்தன னின்றுமாதோ.

386. இன்னுமெம் பரமமூர்த்தி வியலரு ளாடலாலே
முன்னிய மணவாளப்பேர் முதல்வனாய் முதல்வியோடுங்
கன்னிகை கலந்தயோகங் கதிதரு பிரமசைய
மன்னிய சுரூபமுற்றான் மாதுநீயினிது கேட்டி.

387. வேறு
துங்கமுறு மாவணிக்க ணோணந் தன்னிற்
சுத்தசிவம் சிவையோடுஞ் செறிந்துபுல்லிச்
சங்கமுறு மணவாளக் கோலங் கொள்வான்
தன்னிகரி லிக்கோலத் தகைமைகூறி
வெங்குமுள மன்னுயிர்க ளின்பந் தேறி
யிசைநாம முத்திவழி யினிதுகொள்ள
வங்கமுறு கல்யாண சுந்தரப் பேர்
அமைந்தனவ் விதந்தன்னை யறைவன்கேட்டி.

388. வேறு
துன்ன மித்தினந் தொல்லுயிர் விண்ணவர்
மன்னு மாதவர் மாலயன் வானுளோர்
பன்னு விஞ்சையர் பற்றிய நாரத
னின்னர் யாருமு னீச்சர மெயதினார்.

389. ஈசனல் வருளா லிசையும் மயன்
தேசு லாவுமு னீச்சரஞ் சேர்ந்தனன்
ஆசில் மாமணத் தாகிய சாலைகள்
பேசு செம்பொருள் பெட்புற வேற்றினான்.

390. வாழை கன்னல் வளர்முளைப் பாலிகை
சூழ பந்தர் துலங்கிய கண்ணாடி
வாழி மாலைகள் மங்கலச் செம்பொரு
ளேழு யோகமு மேற்ற வியம்பினான்.

391. செய்ய பூமணிப் பந்தர் சிறந்துள
வைய மெங்கணு மாண்புற நாட்டினான்
துய்ய வாலரி தோன்றுறு மங்கலங்
கையி லாரதி காட்டவு நாட்டினான்.

392. தேவ ரம்பையர் சென்றனர் நாடக
மாவ லாகவ மைத்தனர் துந்துமி
யோவில் மல்லரி சல்லரி யோங்கிய
தேவ பாணி சிறக்க வொலித்தவே.

393. வேறு
இத்தகைய காட்சிபெற வெம்மை யீன்ற
விறையவனு மிறைவி தானுஞ்
சுத்தமறு மணக்கோலந் துலங்க நட்டார்
துந்துமியே யாதியன துவன்றியார்ப்பத்
தத்திமிதெய் தத்தியெனத் தாளம் போடச்
சரம்புரளும் வீணையிரு பாங்கின்பாட
நித்தமலி கல்யாணக் கோலங் காட்டி
நிருமலனா ருமையோடும் வீற்றிருந்தார்.

394. அரியெழுந்தா னம்புசைகைச் சிரகம் வாங்கி
யரன்பதத்தி லபிடேக முறையியற்றிப்
பரிவுபெறு மதுவர்க்க மினிது தந்து
பயிலனேக தோத்திரங்கள் பகர்ந்துமேலும்
தெரிவரிய கன்னி தனைத் தானமாகத்
தீம்புனல்பொன் னோடுதவச் சிவபிரானு
மருமைசெறி திருக்கரத்தி னினிது வாங்கி
யகிலங்க ளினிதுய்ய வறம்வளர்த்தான்.

395. அம்புயனும் விவாகநெறி யினிது நாடி
யனலெழுப்பி நெய்சொரிந்தாங் கவியிகுத்துச்
செம்பொருளார் கந்தருவ தர்ப்பணாதி
செய்வித்தா னங்கிமுறை செறிந்தேசுத்தி.

நம்புசெறி யம்மைபதஞ் சிலையிற் சேர்த்தி
ணண்ணுமருந் ததிதரிச னங்கண்டே
உம்பர் மகிழ் பூரணமுந் தாலீவாக
முற்சவமு நீராட்டு முவந்தானன்றே.

396. ஈது கண்டோ ரெல்லோரும் சிவமேயாரி
னிப்பிறப்ப தின்றின்றென்னா விறையேயைய
மாதுமையே வடிவழகி யம்மையே நம்
மனத்துயரை மாற்றென்றார் வரதனாருஞ்
சீதளமா ரருள்புரிந்தார் மாலே யாதி
தேவர்களுங் கொண்டா டிப்பாடி
மேதகைய தமதுலகம் மேவி யுற்றார்
விமலனார் முனீச்சரத்தின் விளங்கினாரே.

397. வேறு
கன்னி கேளிக்கடி நகர்க் காவலாய்
முன்னு வைரவ னாதியர் முந்துற
இன்னர் வைகுதி யீண்டுறு தீர்த்தமுங்
கன்னி தீர்த்தம் தென்னக் களறுவார்.

398. இந்த மாமடு எய்திப் படிகுநர்
சிந்தை வேண்டிய சித்தியை யெய்துவார்
கந்தமா மலரோன் கற்ப மீதினு
மந்த வீசன ருட்பத மோங்குவார்.

399. என்று கூறியி ருந்திடு யோகியுந்
துன்று ஞானச் சுடரின் மறைந்தனன்
அன்று கண்ணகி யம்மையு மீசனின்
மன்ற நல்லரு ளாலவன் வைகினான்.

400. பேசு மிந்நகர் பெட்புறு லிங்கமும்
வீசு சோதி விளங்கு சுயம்பதா
மாசி லம்மையு மானவ ருள்வழி
தேசு சேருஞ் சிலையெனச் செப்பவார்.

401. காண்டல் சேருமக் கான முனீச்சர
மண்டி னேருட லாகிய கால்களுந்
தண்டு றாவுடற் சார்ந்திடிற் சுத்தவான்
முண்ட கன்பதம் மேவுவர் முன்னினே

முனீச்சரப் படலம் முற்றும்
ஆகத்திரு விருத்தம் 401

சாற்றுகவி
விந்தைசெறி வட்டுநகர் வேதியனா கேசபுந்தி
மைந்தன்சிவ சுப்ரமண்யகுரு - தந்ததமிழ்
தென்கோயின் மான்மீயச்சீர்ச் செப்புபுரா ணஞ்சிவமே
என்கோ அமுதென்கோ யான்.

# ஸ்ரீவடிவாம்பிகா சமேத
# முன்னைநாதஸ்வாமி நவதுதி

[உருவில் பண்டிதர் சி. மாணிக்கதியாகராஜக்குருக்கள் பாடியது]
[1877–1945]

## விநாயகர் துதி

### வெண்பா

நல்ல விநாயகனே நாடுமுன்னை நாதனருள்
வல்ல கணபதியே மாநிதியே – சொல்லரிய
அட்டசித்தி யீந்தருளு மண்ணலே நாயேனுக்
கிட்ட சித்தி யீந்தருள் வாயே.

### ஆசிரிய விருத்தம்

உலகுயி ருய்ய வுலகருள் கடவு
ளுவப்பொடு முன்னை நாளுருகி
யலகிலன் பார நிறுவிமுற் பூசை
யாற்றிட வமர்ந்தமா மணியே
திலகவா ணுதலார் தேவியோர் பங்கிற்
சேர்ந்திட விளங்குபொன் மணியே
யிலகுமெய் யடியார்க் கருள்செய வளரு
மிசைநிறை மாணிக்க மணியே. (1)

அடியனேன் றனக்கு னடிமல ரிணையை
யனுதின மகமிக மகிழத்
துடியன விடையா ரம்பிகை மருவச்
சுந்தர விடைமிசை யேறிப்
படியுள தீய வினையெலா மகலப்
பரவுபே ரன்புறக் காட்டி
மடியுளேன் றன்னை யாண்டருள் கருணை
வள்ளலே முன்னை நாயகனே. (2)

வேண்டுவார்க் கிட்ட சித்திக ளருளும்
விண்ணவர் பணியுமெய்ப் பொருளே
மீண்டுபோர் புரியு மிராவணன் றனைவீட்
டிராமமமூர்த் தியைமுனந் தொடர்ந்து
தீண்டுசீர்ப் பிரம கத்தியை விலக்கித்
தேங்குபே ரருண்மழை பொழிந்து
தூண்டுபே ரொளியாய் விளங்குமா ரமுதே
சுகநிலை காட்டியாண் டருளே. (3)

தேவியோர் பங்கிற் செறிந்திட விளங்குந்
தெய்வமே யென்னுளத் துறையு
மாவியே யமுதே யானந்த நிதியே
யனைத்துயிர் புரந்தரு ளரசே
பாவியேன் படும்பா டதனையிங் கெடுத்துப்
பகர்ந்திட வளவினிற் படுமோ
கூவியே யுனது குரைகழல் பணிந்தேன்
குறைபொறுத் தாளவந்தருளே. (4)

விண்டுவின் பெருமை பெரிதென வெடுத்து
வியந்துகை தலமிசைத் தூக்கி
யுண்டு கொல் பிறிதென் றுரைத்திடு வியாத
னுயர்த்திய கையினைப் பெரிய
தண்டுநின் றதுபோ லாக்கிப்பி னாண்ட
தற்பர ஞான சிற்பரனே
கண்டுநின் பாத தொண்டு பூண்டுய்யக்
கருணைவைத் தாண்டருளரசே. (5)

நாயினுங் கடையே னாயினு முன்னை
நாதனே யுலகநாத யகனே
தாயினு மினிய கருணைவைத் தாளுந்
தற்பரா னந்தவா ரிதியே
வாயினும் மனத்து மிடைவிடா திருக்கும்
வகையினை யருள்புரிந் தெப்போ
தாயினு மறவா வாழ்வு தந்தாள
வந்தருள் மால்விடை யெழுந்தே. (6)

## முனீசுரத்திற் கோவில் கொண்டெழுந்தருளி இருக்கும் சிவபெருமான் தோத்திரப் பாமாலை.

[கொக்குவில் சி. சிலம்புநாதபிள்ளை பாடியது]

கொண்டலே நிகர் கண்ட முள்ளவா
கொன்றை கூவிளை தங்கு செஞ்சடை
அண்டர் நாதனே யன்பில் பாவியே
ளைவிலாப் பிறப் படைத நீதியோ
தெண்டிரைக் கடற் றுயிலு மாயவன்
சிந்தை செய் யுநன் முனீசுரத்தனே
பண்டு நான் செய்த வினைகள் பாறிடப்
பாத மென்மலர் தந்துரட்சியே. 1

பவள மேனியாய் பாப நாசனே
பணிகு வார்வினை நீக்கு பண்ணவா
பவம தேபுரி பாவியேன் பிறப்
பாகு மோர்தளைப் படுத நீதியோ
குவளை மாமலர் குலவு மோடை சூழ்
கோதி லாதநன் முனீசுரத் துளாய்
திவ்வி யாழ் மொழித் தேவி பங்கவுன்
திருவ டித்துணை தந்தி ரட்சியே. 2

தில்லையின் னடமாடு சித்தனே
சிந்தையா லுணர்வரிய சோதியே
எல்லையில் பிற விப்பெருங் கட
லேழையே னுறைந் தேங்க நீதியோ
முல்லை கொன்றைவான் முட்டு தண்டலை
முனீசுரத் துறை முக்கண் மூர்த்தியே
நல்லவா வுனை நாளும் போற்றுவேன்
நாதவுன் னடி தந்தி ரட்சியே. 3

உன்னடி பணியும் நாயினேன் படும்பா
டுனதுள மறிந்திடு மல்லால்
பின்னையா ரறிவார் பேசுதற் குரிமை
பெற்றுளார் பிறிதுயா ருள்ளார்
அன்னையே யனையா யென்னை நீகைவிட்
டவமதித் திருந்திடி லடியேன்
றன்னையார் காப்பார் தமியனேன் செய்யத்
தக்கது மேதுமிங் குளதோ. (7)

பொன்னையும் மதியேன் பூவைய ரின்பப்
புணர்ப்பையும் மனத்திடை நினையேன்
பின்னையிங் கெவர்தம் புகழைத் துதியேன்
பேணி மற்றொன்றையும் விதியேன்
உன்னையே மதிப்பே னுன்புகழ் துதிப்பே
னுன்புணர்ப் பேமனம் பதிப்பேன்
என்னை நீ கைவிட் டிடிலுயிர்த் துணையா
யிருப்பவர் பிறிதிலை யரசே. (8)

இந்நிலத் துன்றன் பெரும்புகழ் பாடி
யிராப்பகல் துதித்திடு மடியேன்
உன்னிலை யறியாப் பாவியா யுள்ளத்
துன்னடி பெற்றிடா துறைந்தால்
எந்நிலத் தவரு மென்னதான் சொல்லா
ரெவர்க்குநா னிக்குறை யுரைப்பேன்
முன்னிலை வருவா யடியேனேற் கிரங்கி
முன்னை நாதப் பரம் பொருளே. (9)

***

குற்ற மில்லவா குணமு மில்லாவா
கோல வெண்பிறைக் கூறு கொண்டவா
பற்றிலா துடில் கின்ற நாயினேன்
பரம வேதனை யனடத னீதியோ
கற்றை வெண்ணிலவு மிழு மாரைத்தைக்
கரும்புகக்குநன் முனிசரத்தானே
உற்றவர் கருள் செய்யு மத்தனே
யுன்ன டித்துணை தந்திரட்சியே. 4

திங்கள் வேணியாய் மங்கை பங்கனே
தேவ தேவனே திரிபு ராந்தகா
பங்கமார் பிறப் பதனிலே படும்
பாவியேன் றுயர் படுதனீதியோ
சங்க மூடுசெல் சாலி வேலி சூழ்
சாற்றரும் முனீசுரத்தில் வாசனே
செங்கை மானுளாய் தீய பாவிக்குன்
திருவடித் துணை தந்து ரட்சியே. 5

கற்ற யஞ்சடை கங்கை வைத்தவா
கருணை வள்ளலே கைலை நாதனே
நற்ற வம்மிலா நாயினே னிவண்
நாளு நாளுமே நலித னீதியோ
புற்றில் வாளர வீன்ற பொன் மணி
பொங்கு நன்முனீசரத்துப் புங்கவா
குற்ற மற்றிட வுளங் குறித்தனன்
குலவு முன்பதந் தந்தி ரட்சியே. 6

செத்த மாலய னத்தி யோட்டினைத்
திங்கள் வேணியிற் சேர்த்த நாதனே
எய்த்தன னிரும் பிறப்பி னாடெ றாு
மேழை யேனிட ரடைத னீதியோ
நித்திலந் திரையோடு சிந்திடு
நேரிலா முனி சுர்தி னீதனே
கத்தனே யுன தடியடைந் தனன்
கருணை செய்தெனைக் காத்தி ரட்சியே. 7

பொங்கரா வணி பூத நாதனே
புரையி லாதவென் கரையி லின்பமே
இங்கியான் பிறப்பெய்தி யெய்தியே
யிடருண் மூழ்குத லீச நீதியோ
மங்கையர் குடைந்தாடுவா விசூழ்
மன்னு நன்முனீ சுரத்தில் வைகிய
வங்கண் மூன்றுள வெந்த னண்ணலே
யடிய னேன்வினை யகற்றி ரட்சியே. 8

குன்ற வில்லியே கூற்றை வென்றவா
குலவு மெண்வகைக் கோலங் கொண்டவா
என்று நாயினேன் சிந்தை யீடழிந்
தேங்கியே பிறந் தெய்த்த னீதியோ
துன்று மாயவ னாறு சூழ்தரு
தூய மாமுனி சுரத்திற் றோன்றலே
பொன்ற லற்றிநின் பொன்னடித் துணை
போற்று நாயனைக் காத்தி ரட்சியே. 9

பாவநாசனே பரம மானவா
பங்க யக்கணன் றோடு பாரிலே
பாவியேன் பிறந் திறந்து வாடியே
பல பகல் துயர்ப் படுதனீதியோ
ஒவில் காவிலே ஒப்பில் மஞ்ஞைஞக
ளூலவு நன்முனீ சுரத்தி லுற்றவா
ஆவலோடுனை யடைந்து போற்றினே
னைய வுன்பதந் தந்தி ரட்சியே. 10

***

# திருத்தாண்டகப் பண்

[கொக்குவில் சி. சிலம்புநாதபிள்ளை பாடியது]

உலகமெலாந் தொழுதேத்து மொருத்தன் றன்னை
உபநிடதப் பொருளாகி யுறைந்தான் றன்னைக்
கலைகுறைவெண் மதியணிந்த கருணைக் குன்றைக்
கடைதோறும் பலியேற்றி கடவு டன்னைப்
புலனதனா லினையனென வறியான் றன்னைப்
பூரணனைப் புத்தமிர்தம் போல்வான் றன்னை
இலகு புகழ் முனீசுரத்தி லிருந்தான் றன்னை
யென்னாளுந் துதிசெய்தே யிறைஞ்சு நெஞ்சே. 1

மழவிடையை யுடையமா தேவன் றன்னை
மஞ்சுநிகர் கண்டமுள வரதன் றன்னைக்
குழவிதனைக் கறியாகக் கொண்டான் றன்னைக்
குறைவிலியை நிராமயனைக் குவயத்தே
விழவதனை யடியர்கொள வீற்றான் றன்னை
வித்தகனை முனீசுரத்து மேயான் றன்னைப்
பிழையனைத்தும் பொறுத்தருளும் பெருமான் றன்னைப்
பிறப்பகலப் பணிந்திறைஞ்சிப் பேசு நெஞ்சே. 2

எரிபுரையும் புலியதனை யேற்றான் தன்னை
யிறையவனை யெண்குணனை யென்றனன்பைக்
கரையில் பெருந் திரவியத்தைக் கண் மூன்றுள்ள
கழைக் கரும்பைக் கங்கையணி சடையான்றன்னைக்
உரைகடந்த முடிவினுக்குண் முடிவா யுற்ற
வுத்தமனை யொப்பிலியை யொளியை யென்றுந்
திரைபொருவு முனீசுரத்துத் தேவன் றன்னைத்
தினந் தினமும் வினையகலச் செப்பு நெஞ்சே. 3

நான் மறைக்கு மறையாகி நடிப்பான் றன்னை
நன்மனத்தி னீங்காத நம்பன் றன்னை
மேன்மையுறு முயிரினுக்கு ளுயிரான் றன்னை
மேதினியோர் தொழுதேத்து மேலோன் றன்னை
மான்மழுவைத் தரித்தருளு மகிபன் றன்னை
மஞ்சுபடி முனீசுரத்தெம் மறையோன் றன்னை
யானெனதென் பவர்கானா விறைவன் றன்னை
என்றென்றுந் தொழுது மனத்திருந்து நெஞ்சே. 4

எண்குணமுங் கடந்துறையு மீசன் றன்னை
யெவ்வுயிர்க்கும் வினைப்போக மீட்டுவானை
மண்முதலாந் த்த்துவத்தின் மடங்கான் றன்னை
மயல் கொண்ட முனிவர்விரு மறிமான் றன்னை
திண்கடந்த கரமதனிற் செறித்தான் றன்னைத்
தீயணைய நஞ்சமுண்ட தேவன் றன்னை
தணகடந்த முனீசுரத்தெந் தந்தை தன்னைத்
தானிறைஞ்சி வினையகலச் சார்வை நெஞ்சே. 5

மணி நிலவு செஞ்சடையைப் பரித்தான் றன்னைப்
பாராதி யண்டங்கள் படைத்தான் றன்னைப்
பணிபவர்க ளுளத்துயரைப் பறித்தான் றன்னைப்
பரவையிடந் தூதாகப் படர்ந்தான் றன்னைப்
பணிகொள் முனீசுரத்தாரும் பரமன் றன்னைப்
பன்மலர் தூய்ப் பரவுவோர் பிரிவிற் செய்யும்
பணியதுவே பணியாகக் கொள்வான் றன்னைப்
பன்னாளும் பகிர்ந்துதுதி பண்ணு நெஞ்சே. 6

அருவாகி யுருவாகி யமர்ந்தான் றன்னை
யவிர்மதியைச் சடைக்கணித்த வந்தன் றன்னைப்
பெரியானைப் பிரணவத்தைப் பேசொணாத
பெருமறையின் பொருளான பெம்மான் றன்னைக்
குருவாகி யடியர் மலங்குறைப்பான் றன்னைக்
கும்பமுனி தொழுதேத்துங் கோமான் றன்னை
வரைமாதர் வாழு முனீசுரத்தான் றன்னை
வம்பவிழு மலர்துாவி வாழ்த்து நெஞ்சே.. 7

இப்பிறவி யெனும் பெரிய கடலைத் தாண்ட
என்மனமே யானியம்பு மொழியைக் கேளாய்
முப்புரத்தை முனமெரித்த மூர்த்தி தன்னை
மூவுலகுந் தொழுதிறைஞ்சு முதல்வன் றன்னை
ஒப்பரிய வொளியாகி யுள்ளான் றன்னை
யுலகு புகழ் முனீசுரத்தி லுறைவான் றன்னை
அப்பலருஞ் செஞ்சடைய யுடையான் றன்னை
அநுதினமுந் துதிசெய்தே யமரு நெஞ்சே. 8

ஆக்கைதனை யெடுத்தெடுத்தே யநேக நாளா
யலைந்துலைந்து திரிகின்ற வறிவின் னெஞ்சே
போக்கு வரத்தில்லா புனிதன் றன்னைப்
புண்ணியனைப் புகழரிய பொருளா னோனைத்
தேக்குலவு மிதழியணி சிவனார் தன்னைத்
தேவரிடம் தீர்த்தாண்ட தேவன் றன்னைப்
பாக்கியத்தை முனீசுரத்துட் பரமன் றன்னைப்
பக்தியொடு பணிந்தேத்திப் பரவு நெஞ்சே. 9

கற்றவர்கள் தொழுதேத்துங் கபாலி தன்னைக்
கற்பகத்தை யென்னுள்ளத்துக் கருணை குன்றைப்
புற்றிலுறு மரவமணி பூணான் றன்னை
பொறிபுலன்க டான்கடந்த புராணன் றன்னை
உற்றவர்க்கு முறாதவர்க்கு மொத்தான் றன்னை
யொப்பிலியை யொருமொழியா புறைந்தான் றன்னை
பெற்றமதைப் பேணுமுனீ சுரத்தன் றன்னைப்
பிரபஞ்சத் தருள் பெறவே பேசுநெஞ்சே. 10

***

## திருக்குறுந் தொகைப் பண்

[கொக்குவில் சி. சிலம்புநாதபிள்ளை பாடியது]

திங்க ளென்பு சிரமிசை வைத்தவன்
மங்கை பாகன் மறைப் பொருளானவன்
செங்கண் மால்தின மேத்து முனிசுரன்
பங்கயப் பதம் பத்தியோ டேத்துமே. 1

கடுவி னைக்கடுக் குந்திறற் கண்டனார்
முடிவி னாளுமு டிவின்மு னிசுரன்
அடி மலர்த்துணை யன்பொடு போற்றினோர்
படிமி சைப்பவர் போற்றிப் படுவரே. 2

கருத்தி வெண்ணியே கைகுவித் தேத்தினால்
இருத்து மன்னர்போ லென்பது சத்தியம்
மருத்துப் போலுமு னிசுரன் மந்திரம்
பொருத்து வீர்தினம் புந்தியி விற்றையே. 3

மரண வேதனைப் பட்டு மயங்குவீர்
பரம னைப்பர ஞானியர் நேயனை
யரவு திங்கள ணிந்த முனிசனைப்
பரவு வீர்வினை பாறிடு முண்மையே. 4

குழவி மாமதி கொண்டருள் செஞ்சடை
மழவி டைவரை மாதொரு பங்கனைப்
பழனமா ருமுனிசக் கபாலியைத்
தொழுது போற்றினர் தூயரிற் றூயரே. 5

மாறி மாறிப்பி றந்தும்ம யங்கினாய்
நீறு கண்டிகை தன்னை நினைகிலாய்
கூறும் வேதமு னிசுரற் கொண்டிலாய்
பேறியா திப்பெ ரும்புவி மீதரோ. 6

தேக்கு ஞானச் சிவானந்த நல்கியே
போக்கு மிப்பெரும் புன்பிறிவித் துயர்
ஆக்கி முத்திய தாதி முனீசனை
நாக்கி னாலுரை செய்து நவிற்றினே. 7

நஞ்ச மென்ன நமன்வரு நாளையில்
அஞ்ச லென்றிங் கடியனுக் காந்துணை
தஞ்ச மெந்தை முனீசுர தற்பரன்
கஞ்ச மாமலர் போற்றிடுங் கால்களே. 8

என்ன செய்தன மிந்தப் பிறவியிற்
பொன்ன கர்க்கிறை யாதியர் போற்றிடு
முன்னை வாசன் முனீசுரன் சேவடி
சென்னி சேர்த்திடச் சிந்திக்கச் சிந்தையே. 9

அம்பு நேர்வழி யம்மையோர் பங்கினன்
றும்பி யின்னுரி போர்த்தரு டுயவன்
செம்பொ னாருமு னீசுரன் சேவடி
நம்பி யேத்தின ரும்பரி னாதரே. 10

***

உ

திருச்சிற்றம்பலம்.

# முனீசுரவந்தாதி.

கொழும்பு,
**அ. வயித்திலிங்கம்**
இயற்றியது.

**வெளியீடு**
**ஸ்ரீ முன்னேஸ்வரம் தேவஸ்தானம்,**
சிலாபம் - இலங்கை.
2012.

உ

திருச்சிற்றம்பலம்

# முனீசுரவந்தாதி.

## காப்பு.

ஆனை முகத்தனை யைங்கரத் தோனை யடிவர்தங்
கோனை யொருமருப் பானை வணங்குதுங் கோதிலொரு
மானை மருங்கினில் வைத்து முனீசுர மன்னிநின்ற
வானவர் போற்று முதல்வற்கந் தாதி வழுத்துதற்கே.

## வாணி துதி.

தாயே யுனையன்றி வேறார் துணையித் தரணிதனி
லாயேன் கலைக ளறியேனல் லோருரை யார்வமிலா
நாயேன் முனீசுரன் மீதிலந் தாதி நவிலுதற்கிங்
காயே யருள்புரி வெண்டா மரையி னணங்கரசே.

## நூல்.

சீர்பெறு தெண்டிரை மோது சிலாபத் திருநகரிற்
பேர்பெற் றிலங்கு முனீசுரத் தானடி பேணிநின்றாற்
பாருக்கு ணல்ல பலன்பெற லாம்பவம் பாற்றிடலா
மேர்பெற லாமணு காதொரு நாளு மிருவினையே. 01

வினையா லெடுத்திட்ட காய மிதனை விரும்பிநிதம்
மனையாளுஞ் சுற்றமும் வாழ்வுஞ் சதமென மாண்மனமே
யுனையாள வெண்ணி முனீசுரந் தன்னி லுறையுமரன்
றனைநாளும் போற்றிட நீங்கிடும் வல்வினை சத்தியமே. 02

சத்தியங் காணனி மெத்திட நின்றவன் சன்னிதியிற்
பத்தி யுடன்பணி செய்திடு வாய்பவத் தன்மையற்றுச்
சுத்த மனதுடன் போற்றிடு வாயுனைச் சூழ்ந்தவினை
யத்தனை யுஞ்செலு முன்னீச் சுரனை யடுத்திடவே. 03

அடுத்திடு வாரயன் மாலோடு தேவ ரனுதினமுந்
தொடுத்திடு வார்மலர் சூட்டிடு வார்தொல் வினையகல
முடித்திடு வாரருட் பூசை முனீசுரன் முன்னிலையிற்
படித்திடு வார்தொண்டர் தேவார மாதிய பத்தி செய்தே. 04

செய்வாய் பணிவிடை சேர்வாய் நதியையுந் திங்களையும்
பைவா யரவையும் பூண்டானை வேதப் பழம்பொருளைப்
பொய்யான வாழ்வைச் சதமென வெண்ணும் புரையொழித்திங்
குய்வாய் முனீசுர வாணனைப் போற்றி யுளங்களித்தே. 05

களித்திடு வாய்யன் மாலோடு தேடியுங் காண்பரிய
விழித்கன லண்ணலை மெய்யோனை வேத விழுப்பொருளை
வழித்துணைச் செல்வத்தை மாயா மருந்தினை மன்றுண்டந்
தெளித்திடு தேவை முனீசுர வள்ளலைத் தேடி நின்றே. 06

தேடற் கரிய மருந்தினைத் தித்திக்குந் தேன்கரும்பைப்
பாடற் கிரங்குந் திருவுளத் தானைப் பரவையென்பா
ளூடற் றணித்திடு மாருரி லையனை யொண்பொருளை
நாடி முனீசுரஞ் சென்று வணங்குவை நன்னெஞ்சமே. 07

நெஞ்சே கவலைக்கு ளாழ்ந்தனை நின்வினை நீக்கவென்றே
செஞ்சாலி சூழ முனீசுரத் தையன் றிருமருங்கிற்
றுஞ்சா தமர்ந்தன டூய வடிவழ் கம்மைசுக
மெஞ்சா தளிப்ப ளடைந்தா லுனக்கின்ப மென்றுமுண்டே. 08

உண்டு முடுத்துந் திரிந்தே யுழன்றிடு மூனநெஞ்சே
கண்டு மிருந்தனை மானிட வாழ்வைக் கனவெனநீ
பண்டை வினையாற் கிடைத்தவிக் காயமும் பாறமுன்னே
யண்டர் வணங்கு முனீசுரஞ் செல்லுவை யைதெனவே. 09

ஐயா லடைப்புண்டிங் காவி விடும்பொழு தந்தகனார்
கையாற் புடைத்துக் கயிற்றா லிறுக்கிக் கடுநரகில்
வையாமுன சென்று முனீசுரன் பாதத்தை வாழ்த்துவையேற்
பொய்யான வாழ்வைவிட் டுய்வா யிதுநிசம் புன்மனமே. 10

மனமே யுனக்கினி நான்சொல்லும் புத்திக்கு மாறுசெயே
லனமே பழிக்கு நடையாளின் பங்கனை யண்டர்தொழும்
வனவேடன் றன்னை முனீசுரஞ்சென்று வழுத்திநின்று
சினமே யடக்குவை யானா லுன்க்கிணை செப்பரிதே. 11

அரிதே கிடைத்த வுடலினை நாளைக் கயலவர்க
ளெரிமேற் கிடத்தி யெரித்திடு வாரிதை யெண்ணலையோ
கரிபோ னிறமுடைக் காலனின்றுதுவர் கட்டமுன்னே
நரியே பரியெனச் செய்த முனீசனை நாடுவையே. 12

நாடி முனீசுரஞ் சென்றே சிவனி னளின பதந்
தேடி நினைந்து பணிந்துமெய்ஞ் ஞானத் தெளிவடைந்து
பாடி மகிழ்ந்து விழிநீ ருகுத்துப் பலனடைவாய்
மாடினைப் பெண்ணினை மண்ணை மதிக்கு மடநெஞ்சமே. 13

நெஞ்சே யுனக்கினி வேண்டுவ தொன்றது நின்மலனை
மஞ்சாடு மாமலை மங்கையின் பாகனை வானவர்க
ளஞ்சா திருந்திட நஞ்சினைத் தானுண் டருள்பவனை
நெஞ்சார வேத்த லதாற்பிற வாவர நேர்ந்திடுமே. 14

மேலான வுண்டி விலையாடை பூண்கள் விரும்புநெஞ்சே
பாலான மென்மொழிப் பாவையின் பங்கனைப் பண்ணவர்க்கா
யாலால முண்ட முனீசுரன் றன்னை யடைந்தனையே
லேலாத காரய மொன்றில்லை வான்பதி யேறுவையே. 15

ஏறுடை யானை யிறப்பிலி தன்னை யெவர்க்குமருட்
பேறுடை யானைநம் பிஞ்ஞகன் றன்னையம் பெண்ணினல்லாள்
கூறுடை யானை முனீசுர நாதனைக் கோதில் சிரத
தாறுடை யானை யடைந்தாரை யல்ல லகன்றிடுமே. 16

இடுவார் தமைக்கெடுத் தின்னல் விளைத்திடு மேழைகட்கு
விடுவா னரக மதேகதி யென்று விறலியமன்
கெடுவாய் மனனே யியன்றன வீந்து கிளர்ச்சியொடுங்
கடுமாற் களத்த னடிபணிந் தாற்சிவங் காணுவையே. 17

காதிற் குழையின ரென்பணி மார்பினர் கண்ணுதலார்
பூதப் படையுடைப் புண்ணிய னார்புலித் தோல்புனைவார்
வேதத் தலைவர் முனீசுரர் பாதம் விரும்பியன்போ
டோதக் கொடுமல நீங்கிடு ஞான முருப்பெறுமே. 18

உருவரு வாகிய விண்ணோர்க ணாதனை யோதுகரி
யுரிதனை யார்த்த சுடர்மணிக் குன்றினை யுண்மைமறை
பரிவுற வேத்தித் துதிக்கு முனீசனைப் பக்தியுட
னிருகரங் கூப்பிப் பணிவா ரிருவினை யேகிடுமே. 19

ஏகனைப் பொன்னம் பலத்தாடு மேந்தலை யேந்திழையாள்
பாகனைப் பத்த ரகத்தமா சோதியைப் பண்ணவனை
மாகந் தவழு முனீசுர வாணனை வான்பொருளைத்
தேகந் தவிருமுன் போற்றா யகலுநிற் சேரிடரே. 20

இடரே யடைந்துமென் னேவர் பகைத்துமென் னெங்குநிறை
சுடரே கொடுத்திடுஞ் சோதியை வானவர் தூயவனைப்
படமே விரித்திடும் பாம்பினைப் பூண்ட பரம்பொருளைத்
தடமேவு முன்னீ சுரத்தமர் நாதனைச் சார்ந்தவர்க்கே. 21

சார்வாய் முனீசுர வாணனை யன்னவன் றன்னிலன்பு
கூர்வாய் திருமணி நீறணி வாய்குறிக் கொள்ளுமலந்
தீர்வாய் களிப்போடு வேண்டி நிற் பாயவன் சேவடியைச்
சேர்வார் பெறும்பயன் கொள்ளுவை யீது திருக்கருத்தே. 22

கருவாகிப் பின்ன ருதித்து வளரந்திளங் காளையுமாய்
மருவாரும் பூங்குழற் பெண்களின் மோக வலையிற்சிக்கி
யுருவாருந் தேக மிழைத்துயி ரேகுமுன் னோடிவந்தே
தருவாய் பதத்தை முனீசுரம் மேவிய சங்கரனே. 23

சங்கந் தவழுந் தடாகங்கள் சூழத் தடம்பணைகள்
எங்கும் மருவ வியலறிவேதிய ரின்பமுடன்
பங்க மிலாதெழு நாவினைப் போற்றிப் பரவநலந்
தங்கி விளங்கு முனீசுரர் பாதத்தைச் சார்வைநெஞ்சே. 24

சேசெயன்றும் பெண்ணென்றுஞ் சுற்றம தென்றுந் தியங்குகிறீர்
பாயதனி னாளைப் படுத்தா லறிவிர் பலனதனைக்
காய்கின்ற சூலம் பிடித்திடுங் காலனின் கட்டவிழ்த்து
வாய்மையினிற்பர் முனீசுரர் நாமம் வழுத்தினரே. 25

வணங்கின னின்னடி வாழ்த்தினன் கோவில் வலமுறவே
யிணங்கு மனத்தொடு சுற்றிவந் தேனென் னிருள்வினையைத்
தணந்திடு வாய்புலி யூரினு நின்றிடுந் தற்பரனே
யணங்கை மருங்கினில் வைத்த முனீச வருட்சிவமே. 26

மேபா டடையத் தனங்கொட்டி மெச்சிடும் வீணர்கள் போ
லாங்கால மெல்லா மறந்தனை விட்டா ன ன்பும்விட்டுப்
போங்காலங் கண்டு புலம்பு கிறாய்வினை போக்கவெண்ணிற்
பாம்பாடு மேனி முனீசனைப் போற்றுவை பத்திவைத்தே. 27

வைத்தார் முடியிற் பிறையினைக் கங்கையை மற்றுடம்பிற்
செத்தா ரெலும்பை யணிந்தார் திருவிழித் தீயதனாற்
கைத்தார் புரங்க ளெரித்தா ரெமைநன்று காத்திடுவார்
மெய்த்தார் புனையு முனீசுர நாதன் விரும்புகவே. 28

விரும்பா ரிருவினை மெய்த்தவத் தோர்கள் விரும்பினரைத்
துரும்பாய் நினைப்பர் தொழுதிடு வார்சிவ தொண்டர்களை
யரும்பார் கருங்குழ லம்பையின் பாகனி லன்புவைப்பார்
திரும்பார் கருவுட் டிசைமுகன் வேலையுந் தீர்ந்திடுமே. 29

தீராத வன்பொடு சென்று வணங்கிடுஞ் சீலருக்குப்
பேரா விடும்பை தொலைத்திடும் வேண்டிய பீடுதருங்
காரார் சிலாப மருவுஞ் சிவமென் கடவுள் கண்டாய்
வாரா தியமனின் வாதை வணங்கவன் வார்கழலே. 30

வாரிட்ட கொங்கை யுமையாண் மணாளனை வானவனைத்
தாரிட்ட செஞ்சடைச் சங்கரன் றன்னைச் சதானந்தனைப்
பேரிட்டழைக்கு முனீசனைப் பேணும் பெரியவரைத்
தேரிட் டழைத்திடும் காணந்தி நாளிற் சிவகணமே. 31

கறை மிடற் றண்ணலைக் காலாந் தகனைக் கயிலைமலை
யுறையு மெய்ஞ் ஞானியை யொண்பொரு டன்னை
-யொளிவிளக்கை
மறையருள் வள்ளலை வான்பிணி தீர்க்கு மருத்துவனை
நறைபயில் சோலை செறியு முனீசனை நாடுமினே. 32

மின்னாரு மூவிலைச் சூலத்தினானை விழிக்கனலாற்
பொன்னாரு முப்புரஞ் சுட்டெரித் தானைப் புகழ்மைந்த
நன்னாவி னாலற மன்றால் நீழலி னால்வருக்குச்
சொன்னானை மன்னு முனீசுரவாணனைத் தோத்திரியே. 33

திரியா மனமுடைத் தொண்டர்தந் தேவைத் திகழ்தருமி
பரிவாய் மனங்கொளப் பொற்கிழி யீந்த பரனையுளைப்
பரியா நரிவா நல்லாடல் செய்த பழம்பொருளை
விரிவான வன்பொடு போற்றிடில் வீடெனும் வேதங்களே. 34

வேதங்க டேடியுங் காணா விமலனை மெய்யன்பற்காய்ப்
பாதங்க ணோவ நடந்தூடல் மாற்றிய பண்ணவனை
நாதங் கடந்த பரவெளி யானை நலவடிவை
மாதுங்கன் றன்னை முனீசனை வாழ்த்திநல் வாழ்வடையே. 35

வாழ்விதை நம்பி மதங்கொண்டு பேசும் மருளுடையீர்
தாழ்விது வென்று தருமத்தையெண்ணிச் சகந்தனிலே
சூழுநல் லன்பருக் கன்ன மளிப்பீர் சுகம்பெறுவீர்
நாளு முனீச னடிபணி வீர்கதி நண்ணிடுமே. 36

மேகந் தவழு மதில்சூழ் முனீசுர மேடையிலே
தேகந் துலுங்கிடு நீறோடு சென்றடி தேடியருட்
டாக மடந்தைந் தெழுந்தோது மன்பர்க டன்மைகண்டு
மாகன் ம்ந்தொலைத் தேற்றுவன் வான்பதி மாதவனே. 37

மாதுக் கணிகல நாயகன் சொல்லை மதித்தொழுகல்
காதுக் கணிநற் சிவகதை கேட்டுக் கசிந்துருகல்
சாதுக் கணிகலங் கோப மதனைச் சகித்தொழுகல்
ஓதுநன் னாவுக் கணிதான் முனீசனை யோதுவதே. 38

தேடித் திரிந்து திகைக்குநெஞ் சேசிவன் சேவடியைப்
பாடித் துதித்துப் பரவுகண் டாயவன் பண்புடனே
நாடிக் குலவு முனீசரஞ் சுற்றி நலம்பெறுவா
யீடில்லை யென்றெம தூதுவர் வந்திடி லென்செய்வையே. 39

என்னா லினிச்செய்ய வேண்டிய தேதுரை யென்னரசே
பொன்னார் கயிலைக் கிறையே மதிநதி பூண்டவனே
மின்னருமூவிலை வேற்படை யாய்விற னஞ்சையுண்ட
மன்னா முனீசுர னேகுறை தீர்த்தருள் மாமருந்தே. 40

மருந்தே யமர்க ளஞ்சிட நஞ்சுண்ட மாதவனே
பொருந்துங் கயிலையி னல்லடி யார்க்கறம் போதித்தவா
வருந்தின்ன் றீவினைப் பாசத்தி னாலென் மலமகற்றி
வரந்தந் திடுவை முனீசுர வாண மகிழ்ந்துவந்தே. 41

வந்தே னுனைநம்பி யென்குறை யோதினன் மாணிக்கமே
செந்தா மரைப்பதந் தந்தருள் வாய்திருத் தெள்ளமுதே
பந்தாடு கையினள் பாகா பரவையின் பாலொருநா
ணந்தாத வன்புடைச் சுந்தரற் காக நடந்தவனே. 42

கடந்தவந் தேனுன் றிருக்கோவிற் றேடி நயந்துவலம்
படர்ந்தனன் பாடினன் பால்போலு நீறு பணிவுடனே
யுடம்பினிற் பூசியுள் ளன்புட னைந்தெழுத் தோதினன் காண்
விடந்தனை யுண்ட முனீசுர னேயருள் வேடுவனே. 43

வேடத்தைத் தாங்கிலென்மெய்யை மெலிக்கிலென்
- மெய்யன்பொடும்
பாடத்தைக் கற்றுப் பரனைத் துதித்திடும் பான்மையிலீர்
ஓடத்தி லேறி வழிதெரியாதுழல் வீருறுவீர்
வீட்த்தகுவன வீட்டி முனீசுர வீரனையே. 44

வீரிட்ட பிள்ளைக்குப் பாற்கட றந்திடும் வித்தகனைக்
கூறிட்ட பங்கனைக் கொன்றையைச் சூடிய கொற்றவனைத்
தேரிட் டிருத்திச் சிறப்புடனே கொண்டு சென்றடியார்
சீரிட்டு வாழ்த்துவர் முன்னீ சுரமுறை செல்வரையே. 45

செல்வனை மாம னெனவந்து மன்று சிறப்பநின்று
நல்வழக் கன்றுரைத் திட்ட வருளுடை நாயகனை
யல்ல லடியார்க் ககற்றிடு மையனை யர்ச்சுனனால்
வில்லடி பெற்ற முனீசனை வேண்டி வினையைவெல்லே. 46

வெல்லும் புலன்கள் வழிச்சென் றுழன்று விழும்மனமே
சொல்லுஞ் சிவகதை கற்றிலை யேயுன்றன் றொல்லைவினை
கொல்லும் பொழுதுனக் கார்துணை யிந்தக் குவலயத்தி
லல்லும் பகலு முனீசனை யேத்த வருடருமே. 47

மேனாளிற் செய்திட்ட கன்மத்தி னாலிந்த மேதினியி
லூனா ருடம்பை யெடுத்தே யுழன்றனை யோங்குபுகழ்
வானார் துதித்திட மேருவில் லாக வளைத்தவொரு
கோனா முனீசனை யன்பொடு போற்றிக் கொளமுத்தியே. 48

முத்தி யளிக்கு முனீசுரத் தானை முழுவன்புடன்
பத்திசெய் தேத்திட நீபடித் தாயில்லைப் பாழுநெஞ்சே
கத்தி யெதிர்வருங் காலனின் பாசத்தைக் கண்டுகண்கள்
பொத்தி யழுதிட வோபிறந் தாயிந்தப் பூதலத்தே. 49

தேனே யின்னிய கரும்பே விரும்புந் திருவடியார்
பானேச மிக்க பதியே விளங்கும் பழம்பொருளே
மானோர் விழியுமை பங்குடை யாயென் மனத்திலுறை
கோனே முனீசுர னேகுறை தீர்த்தருள் கொற்றவனே. 50

வன்மந் தவிர்த்தெனை யாருளுகண் டாய்மத வாரணத்தோல்
பொன்னம் பலத்தினிற் போர்த்தாடு கின்ற புராந்தகனே
யின்னந் தயவு வரவிலை யோவெளி யேனெடுத்த
கன்மந் தொலைப்பதென றோதடை யேதெனைக் காப்பதற்கே. 51

கேடுற்ற வானவர்க் காக வசுரர்கள் கெட்டழிய
வூடுற் றறுத்திடும் வேலோனைத் தந்த வொருமுதலே
மேடுற்ற பொன்மதில் சூழு முனீசுரம் மேவியருட்
பீடுற்று நின்ற பொருளே கயிலையிற் பிஞ்ஞகனே. 52

கருத்தைத் திருத்தி வணங்கவென் றாலைந்து கள்வர்களும்
வருத்திச் சினத்து மயக்கின் றாரிந்த வாதனையைத்
துரத்திக் கொளச்சக்தி யில்லாது சோர்ந்து துடிக்குமெனைத்
திருத்தி நடத்திடு வாயே முனீசுரச் சிற்பரனே. 53

பத்தி யுடன்றுதி செய்திடு வோர்தம் பதமறிந்தே
முத்தி யளிக்கும் முதல்வா முனீசுர முன்னவனே
சுத்தி வதைக்கும் பிரபஞ்ச வாதை தொலைக்கவொரு
புத்தி யுரைத்தரு ளாயோ சிவமெனும் புண்ணியனே. 54

புண்ணிய னேநுதற் கண்ணுடை யாயிப் புவிதனைமுன்
னுண்ணு மரிக்குப் படையொன் றருளிய வுத்தமனே
பண்ணவ னேயென் றுயரினைக் கண்டும் பரிவுசெய்யாய்
மண்ணி லுனக்கழ காமோ முனீச வரமருளே. 55

வரந்தந் துதவிட வேண்டுமை யாமறை வாழ்த்துமெய்யா
சிரங்கொண்ட மேருவை வில்லாய் வளைத்த செழுஞ்சுடரே
யுரங்கொண்டகாலன்வரும்பொழு தைந்தெழுத்தோதியென்றன்
கரங்கொண்டு போற்றவுஞ் செய்திடுவா யுமை காதலனே. 56

தத்தி விழும்படி வேறொட் டசுரா? தலைகடமைக்
கொத்திக் கழுகுகள் சோரியை யுண்ணக் கொடுத்தவொரு
சத்திச் சரவணன் றன்னை யளித்த தயாநிதியே
முத்தி யளிக்கு முனீசுர மேவிய முச்சுடரே. 57

சுடுவா ருடலை யயலவர் சேர்ந்திதைச் சுட்டுவிட்டான்
முடிவா முழுமுத லேநின் னிடத்து முழுவன்புட
னடைவேன் கொலோவெனக் கைந்தெழுத் தோத வருள்புரிந்து
நடுவோனின் வாதையுந் தீர்த்திட வேண்டு நயந்துசற்றே. 58

சற்றாகி லுந்தயை செய்திடு வாயென்றன் சஞ்சிதங்கண்
முற்றாக நீக்கி யருடரு வாய்கொடு மும்மலங்கள்
பற்றாது செய்துனைப் பாடித் துதிக்கும் பரிசருள்வாய்
நற்றா மரைத்தடஞ் சூழ முனீசுர நாயகனே. 59

கண்ணே யரிய மணியே யடியர் கருத்திலமர்
பண்ணே யப்பண்ணி னிசையே முனீசுரப் பண்டையனே
விண்ணே வழிகன லேபுன லேநில மேவிளங்கு
மண்ணா மதியுயி ரேஞாயி றேயுன் னடைக்கலமே. 60

கலமது மீக னிலாத பொழுதினிற் கால்வழியே
நலமுறல் போனின் னருடா னிலாவிடி லமபுவியிற்
பலதுய ரோடும் பதைத்திடு வேனெனைப் பார்த்தருள்வாய்
குலவும் வளங்கொண் முனீசுர மேவிய கொற்றவனே. 61

கொற்றவ னேயந்தக் கூற்றுவன் வந்தெனைக் கூப்பிடும்போ
துற்றிடு துன்பினை நீக்கிடு வாரெவ ருன்னடியைப்
பற்றிடு மாபுரிந் தைந்தெழுத் தோதவும் பண்ணியெனைச்
சுற்றிடு பாவமு நீங்கச்செய் வாய்நற் சுகங்கொடுத்தே. 62

கொட்டுடன் கூடை யெடுத்தே யெதிர்வந்து கொம்பனையாள்
பிட்டினுக் கிச்சித்து மண்ணைச் சுமந்திடும் பிஞ்ஞகனைக்
கட்டிய செஞ்சடை யானை முனீசுரக் கற்பகத்தை
நெட்டிலைச் சூலனை நெஞ்சே துதிவினை நீங்கிடவே. 63

வேலைப் பிடித்தொரு சூரைத் தடிந்திட்ட மெய்க்குகனை
மாலுக்கு நல்ல மருகனைக் காட்டிடை-மான்பயந்த
கோலக் குறத்தி கணவனைத் தந்திடுங் கொற்றவனே
ஞாலத் தினி..லனைக் காப்பாய் முனீசுர நாயகனே. 64

நாயக னேயன்று நாரைக்கு முத்தி நயந்தளித்தாய்
தாயென வேனக் குருளைக்குப் பாலினைத் தான்கொடுத்தாய்
சேயெனை யாண்டு நடத்திடு வாய்புரஞ் செற்றவனே
வேய்புரை தோளியின் பங்கா முனீசுர மெய்ப்பொருளே. 65

மெய்யெனப் போற்றுமிக் காயந் தனையிந்த மேதினிமேற்
பொய்யெனக் கண்டு மிதற்குடை யுண்டி புதுக்குவதே
செய்யுந் தொழிலென வெண்ணிநின் றேனுன்றன் சேவடிகண்
டையவிங் குய்ந்திடச் செய்வாய் முனீசுரத் தாருயிரே. 66

ஆவி கலங்கிட வந்தகன் றூத ரருகில்வந்து
கூவி யழைத்திடும் வேளையி லேயவர் கூறுமொழி
மேவு செவிப்பட முன்னே யெழுத்தைந்தை வேட்கையொடு
மோவற வோதிடச் செய்வாய் முனீசுரத் துத்தமனே. 67

மருந்தேபிணிக்கு வழித்துணை யேயடி யார்வழங்கும்
விருந்தே யமரா?க் கமுதளித் தாண்டிடும் வித்தகனே
வருந்தேன் பிறவிப் பிணிக்குன் றுணைவந்து வாய்க்குமென்றே
யிருந்தே னெனையினி யாள்வாய் முனீசுரத் தெம்பரனே. 68

பந்தாடு கையினள் பங்கனை மேலைப் பழம்பொருளை
நொந்தாடி நித்தந் தொழுவார்க் கருளு நுதற்கண்ணனை
யைந்தா மெழுத்தினிற் கட்டுண்டு தொண்டர்க் கருள்பவனை
வந்தே தொழுகுவர் முன்னீ சுரத்தினில் வானவரே. 69

வடிவழ கம்மையைப் பாகத்தி லேற்றனை மாலயன்முன்
னடிமுடி தேடற் கரியவ னாயினை யன்றசுரர்
பொடிபட வேலனைத் தந்தனை மாமறை போற்றநின்றாய்
கொடியவ னேனையு மாண்டுன் னடியைக் கொடுத்தருளே. 70

அருள்வாய் வரமெனக் காருயிர் நீங்கிடு மப்பொழுதில்
வருவா யுமையொடு பூதங்கள் சூழ்ந்திட வந்துனது
திருவா ருருவினைக் காட்டி யெளியன் றிகைப்பகற்றி
மருவாரும் பாதந் தருவாய் முனீசுரம் வாழ்முதலே. 71

முத்தி யளிக்கும் முதல்வனை வானவர் முன்னவனைப்
பத்தி செய்க்கற்று நீயிருந் தாயில்லைப் பாசத்தினாற்
சுத்தி யிறுக்கிடு முன்னே முனீசுரந் தோன்றியரு
ளத்தியுரிதனைப் போர்த்தோனைப் போற்றுவை
- யன்புகொண்டே. 72

அன்பே யுருவா யமைந்தவ னேயழ கம்மையுடன்
முன்பேமுனீசுரங்கோயில்கொண்டோய்நலமுன்னுதொண்டர்க்
கின்பே பொருந்த வருடரு நாயக வேங்கிநின்றே
னென்பே ரிடும்பை தொலைத்தெனைக் காப்பை யிருமருந்தே.73

மருவாருங் கொன்றை மலர்மாலை சூடிய மாமுதலே
திருவார் கரங்களிற் சூலநன் மான்மழுச் சேர்த்தி நின்றோய்
குருவாகி நால்வர்க் கறமுரைத் தோய்கொடுங் கூற்றுதைத்தோய்
வருவாய் விடையினின் மாதோடு கூடி வரந்தரவே. 74

வேயுறு தோழியின் பாகத்தி னாய்விட முண்ட கண்டா
தேயு மதியைச் சிரத்தினிற் சூடிய தீவண்ணனே
யாயுநன் மாமறை தந்தவ னேயரு ளானந்தனே
மாய வினைகடிந் தாள்வாய் முனீசுர மன்னவனே. 75

மன்னவ னேயுன்றன் சன்னிதி நாடி வணங்கிநின்றேன்.
பன்னகப் பூணணிந் தாட லயர்ந்து பலவுயிர்க்கு
மின்ன றவிர்க்கு மிறையே யெளிய னியற்றுபணி
தன்னையு மேற்று னடித்த மரைதனைத் தந்தருளே. 76

அருளே யுருவா யமைந்துநின் றாடிய யார்களுண்ணும்
பொருளே பொருளின் முடிபே கமழும் புதுமணமே
கருவே கருவு ளமைந்தவித் தேகயி லைக்கிறையே
வருவாய் மலர்ப்பத மீவாய் முனீசுரம் வாழரனே. 77

அரனே யடியார்க் கருமருந் தேயயன் மாலறியாப்
பரனே நரியைப் பரியாக்கு மீச பரவுமைந்தக்
கரனே கரியி னுரிபோர்த்த வாநெற்றிக் கண்படைத்த
வரனே முனீசுரத் தெந்தாய்வந் தாளினி வன்மம்விட்டே. 78

வில்லா லடித்திடக் கல்லா லெறிய விரும்பியவர்க்
கெல்லா வரங்களு மீந்தனை யேயிணை யாருமுண்டோ
வல்லார் புரங்க ளெரித்தவ னேவடி வாம்பிகையோ
டுல்லாச மாய்விடை மீதேறி வந்தரு ளுத்தமனே. 79

தத்தித் தலைக ளுருண்டாட வேல்விடுஞ் சண்முகனின்
முத்த முவந்து மழலைச்சொற் கேட்டு முகமல்கும்
பத்திக் கருளும் வடிவாம் பிகையொரு பாகத்தினாய்
முத்திக் கொருமுத லோனே துணைசெய் முனீசுரனே. 80

முன்னவ னார்பிறை தங்கும் முடியர் முனீசுரனார்
அன்ன நடைவடி வம்மை மருங்கி லமர்ந்திடவே
மன்னு மடிய ரிடரினை நீக்கிட வந்தருள்வார்
இன்னமு நீயவர் பாலணு காம லிருப்பதென்னே. 81

என்னா ரமுதென நின்றவ னேவிடை யேறுகந்தோ
யிந்நாள் வசைமொழி கேட்டேன் புகழு மிழந்துநின்றேன்
பொன்னார் பொருளையுந் தூர்த்தே னெனையும்
- பரப்பையென்றே.
எண்ணா நினையடைந் தேன்றடை யேதரு ளிதரவே. 82

தருவா ருனக்கரு ளஞ்சனெஞ் சேயரன் றாளிணையை
மறவாது நித்தந் துதித்திடு வாய்வந்த வல்வினைக
ளொருபோது முன்னைத் தொடரா வுறுகுறை யோட்டுதற்கு
வருவார் விடையில் வடிவழ கம்மை மருங்குறவே. 83

வேதங்கள் போற்றிடும் மெய்ப்பொரு ளாகிய வித்தகனைப்
பூதங்க ணாதனைப் பொன்மலை யானைப் புராந்தகனைப்
பாதங்க ணோவ நடந்தூட நீர்த்திட்ட பண்ணவனை
மாதங்கம் பாதி யுடைய முனீசனை வாழ்த்துநெஞ்சே. 84

சேவற் கொடியுடைச் செவ்வேளைத் தந்த செழுஞ்சுடரே
நாவிற் கிசைந்த விசைபாடுந் தொண்டர் நறுங்கனியே
பாவத்தி னாலிச் செனன மெடுத்தரும் பாடுபட்டேன்
மேவுற்ற துன்பகற்றாயோ முனீசுர மெய்ப்பரனே. 85

பற்றித் தொடர்ந்த வினையா லெடுத்தவிப் பாழுடம்பை
வெற்றித் தருமன் கடாமீதி லேறி விடுங்கயிற்றாற்
சுற்றி வரிந்து சுருக்கிட் டிழுக்குமுன் றோன்றியெனைப்
பற்றி யருளுவை முன்னீ சுரத்துப் பரஞ்சுடரே. 86

சுடரே யிதழி யணிந்தவ னேதில்லைத் தூயவனே
திடமாடக் கூட லெனும்பதி தன்னிற் சிறந்த தொண்ட
ரிடர்நீக்க வெண்ணெட்டு நல்லாடல் செய்த விறையவனே
விடுவாய்கொலோவெனை யாள்வாய்கொலோவென்
- வினைப்பயனே. 87

பயந்தே னிறப்பதற் கென்செய் லாமென பழவினையா
லயர்ந்தேன் பிணியா லிளைத்துமெய் சோர்ந்துன் னருளதனை
நயந்தே னுனது திருநாமம் பாடும் நலமடைந்திங்
குயர்ந்தேன்முனீசுர னேயொழிப்பாயென்றனூழ்வினையே. 88

வினையாற் கிடைத்த சடலத்தை மெய்யென வீழ்மனமே
மனையாளைச் சுற்றத்தை மக்களைப் பேணி மறந்து கெட்டாய்
துணையா ருனக்கினிச் சொல்லிடு வாய்நமன் றூதருன்னை
யணையாமுன் சென்று முனீசுரர் பாதத்துக் கன்புசெய்யே. 89

செய்வீ ரரன்பணி யெந்நே ரமும்பத்தி செய்துவந்தா
லுய்வீர் நமனு முமைத்துதிப் பானும்பர் போற்றுமெழின்
மைசேர் விழிவடி வாம்பிகை பாதம் மனதிருத்தி
மெய்கூர வேண்டி னளிப்பா ளருளை விரும்புகவே. 90

வேலைப் பழித்த விழியார் மயக்கத்தில் வீழ்ந்தவர்கள்
சாலத்திற் சிக்கிப் பிணியால் வருந்திச் சலனமுற்றுக்
காலத்தை வீணிற் கழித்திடு வார்பின்பு கலான்வந்தால்
ஞாலத்தி லேதுசெய் வாரோ முனீசுர நாயகமே. 91

மேனா ளவுணர்தங் கோபத்துக் கஞ்சிய விண்ணவர்கண்
மானான் முகனுடன் சென்றேத்திப் போற்ற மனமிரங்கி
நோனார் புரங்கள் சிரித்தே யெரித்த நுதற்கண்ணனே
யானா வறுமை தொலைத்தெனை யாளுவை யாதரித்தே. 92

தேடித் திரிந்தனை மூவாசைக் கேற்றன தேடியவை
நாடிய நல்வழி காட்டின வோநவில் வாய்மனனே
சூடிக்கொண் டாயில்லை முன்னீசன் பாதத்தைத் தோத்திரித்தங்
காடிக்கொண் டாயில்லை யென்செய் லாமினி யார்நிலத்தே. 93

தேனோ வினிய கரும்போ கனிகள் செறித்தெடுத்து
வானோ ரருந்திடும் பாகோ தெவிட்டா வகையடியார்
மேனா ளயின்ற வமிழ்தோ முனீசுர மேவிவளர்
ஆனாவரன்ற னடித்தா மரையதை யண்டுகவே. 94

கடம்பணி வேலனைத் தந்தவ னேகயி லைக்கிறையே
தடம்பெறு தில்லையிற் செல்வா சுரர்க டமைவருத்து
மடங்கொடு ளவுணரைக் காய்ந்தவ னேயிம் மகிதலத்தி
லிடம்பொரு ளேவலை யீவாய் முனீசுரத் தெந்தையரே. 95

எந்தா யிமய மலையாளி னாயக வேறுதனில்
வந்தா தரித்திட வேண்டினன் மாமறை வாழ்த்தநின்ற
கொந்தாரிதழிப் பிரானே முனீசுரக் கொற்றவனே
சிந்தா குலந்தவி ராவிடி லென்செய்வன் நீவண்ணனே. 96

தீயே னுலகத்தை மெய்யென நம்பித் திகைத்துநின்ற
நாயேன் கொடிய வினையாற் றிகைத்துனை நாடிவந்தேன்
நீயே வளிவெளி யேபுன லேநில மேதிங்களே
காயாத தெள்ளுற லேஞாயி றேயெனைக் காத்தருளே. 97

காண் பாரின் கண்கள் களிக்கத் திருநடங் காட்டிடுவோய்
மாண்டா ரெலும்பொடு நான்முக னோட்டினைமார்பகத்தே
பூண்டாய் புராணங்கள் போற்றித் துதித்திடும் பூரணனே
வேண்டேன்பிறதெய்வ நின்பதம் போற்றின்மெய்ப்பொருளே. 98

பொருளென் றுலகினர் மண்பொன்னை நன்று புகன்றிடுவார்
மருளினைக் கொண்டவை யன்றி யவைநல மாண்பொருளோ
தெருள்சிவ மேபொரு ளன்னோ னடித்தலஞ் சென்றவனி
னருள்பெற லேபெரும் பேறென் றறிவி ரறிஞர்களே. 99

அறிவு கடந்த பரவெளி யாயகி லங்களெல்லா
நெறியினிற் காக்கு முதலா யுயிர்தொறு நீக்கமின்றி
யுறைதரு தெய்வமு மாய முனீசுரத் துத்தமனைச்
செறிதரு மன்பொடு போற்றிநின் றான்மிக்க சீர்தருமே. 100

திருச்சிற்றம்பலம்.

முற்றிற்று.

## வேண்டுகோள்.

அருடர வேண்டுமிவ் வந்தாதி மாலையை யன்புடனேற்
றருளிட வேண்டு மனியொடி தோதிடு மன்பருய்யப்
பொருடர வேண்டு முனீசுர னேயிந்தப் பூமியிலே
திருமணி பூண்டுன தைந்தெழுத் தோதவுஞ் செய்குவையே.

கைவாதை நீக்கினை யான்வேண்டித் தேரின் கயிறுதொட
மெய்யான தெய்வமென் றெண்ணிநின் றேன்வினைவேரறுப்பாய்
பைவா யரவம் புனைந்தவ னேயுமை பங்குறையு
மையா முனீசுர னேயடி யேனுன் னடைக்கலமே.

பத்திசெய் வேனுனக் கன்புட னேயென் பழவினையாற்
சுத்தி வருத்தும் பிணியினை நீக்கிச் சுகந்தருவாய்
அத்தி முகத்தானைத் தந்திடு மைய வருட்கடலே
முத்திக் கொருமுத லேவர மீவை முனீசுரனே.

# ஸ்ரீவடிவாம்பிகா சமேத
# ஸ்ரீமுன்னைநாதஸ்வாமி பதிகம்

[நாயன்மார்கட்டு க. சொக்கலிங்கம் [சொக்கன்]]

## காப்பு

மண்ணா றறியா மதியிலிக்கு மாபெரிய
விண்ணா றளிக்கின்ற வேதியனைப் பண்ணாது
காடாடுங் குரவர் கவினாற்றிற் பாடவருள்
கூட்டுங் கரியகத்தே கூடு.

## நூல்

பேராழி தன்னிடை நித்திலம் தென்னவே
பிறங்கி நின் றொளிகான் றிடும்
பேறுடைய நல்லீழ தீவின் மேற்கினிடை
பெருமைசேர் சிலாப நகரில்
சீராழி யென்னவும் பேராழி யென்னவும்
திகழ்தரும ஆழி எனவும்
சிவனென்று முன்னவன் பின்னவனு மென்றுமே
தெளிவுளார் பரவ நின்று
போராழி யாம்பிறல் பெண்ணரிய கொண்டுநாம்
புன்மையுற அருளி னாலே
பொய்யாகு மெய்யினைப் போக்கியின் பருளுமொரு
போதனே ஞான பரனே!
காராழி மேனியிரு கூராழி விழிகொண்டு
கன்னியா யுலகு மீனும்
கவினாரு மலையவன் கதியாக வருகனியின்
கணவனே! முன்னை அரசே! (01)

ஆழியின் கரையிடை அன்றுநீ சிறுவனாய்
அம்மையுஞ் சிறுமி யாகி
ஆடல்பல அருளிடும் போதினில் அணைத்துமே
அக்காட்சி கண்ட வலைஞன்
பாழினைப் போக்குமொரு பக்குவம் வந்ததோ
பகரீழ மோங்க வேயோ?
பற்றியே சிறுமியைக் கையகங் கொண்டனன்
பாவை விக்ரக மாயினாள்
ஈழமதன் மன்னனும் இதன் உண்மை கண்டிட
எண்ணியோன் பல விக்ரகம்
இவற்றிடை யதைவைத்துத் தேரேன்ன மீனவன்
எழிலியின் கருணை யாலே
வேழத்தி னன்னைசிலை காலசைவு கொண்டுமே
வேறுசெய் ததுகாட் டினான்
வேந்தனும் கோவிலிற் சேவித்தனன் அவளின்
வேறிலாய் முன்னை அரசே! (02)

சுடராகி விண்ணிலே ஏழ்பரியு கைத்துமே
சூழிருளை நீக்கி யுலகின்
துயர்களை கின்றவொரு சூரியன் குலத்தினிடை
துகளிறுத் தெழுந்த கோவாம்
அடலேறு வரராம தேவனின் புதல்வனாய்
அழகுபெறு சோழ நாட்டில்
அவதரித் திட்டநற் குளக்கோட்டன் என்கின்ற
அரசனிவ் வீழ நாட்டில்
திடமாக வீற்றிருந் தருளுநின் கோயிலில்
திருப்பணிகள் பல செய்தனன்
தெய்வமே! உன்றனுக் கணிபெறுநல் லாலயந்
திருத்தியே உய்வு கண்டான்
மடலேறு கொன்றையும் விடமேறு கண்டமும்
மன்னியெழில் கொள்ளு மிறையே!
மாதான வடிவழகி யோடினி தமர்ந்தருள்
மாதேவ! முன்னை அரசே! (03)

வானேறு சிங்கேறு தானேறு துவசமுடன்
வளர்கின்ற புகழு மேற
வையந்தனிற் பெயரை எய்வின்றி யேநிலை
வைத்திட மன்னர் மன்னன்
தேனூறு தார்மார்ப னாறம்ப ராக்ரமன்
செய்தபணி சொல்ல வசமோ?
திகழிசையி னொன்பதாம் பராக்ரமனுமிங்கனே
திருப்பணிக ளாற்றி யுய்ந்தான்
ஊனூறு மாணவ விருள்கடித் லுன்னியே
உயர்கீர்த்தி ராஜ சிங்கன்
உன்னடித் தொழும்புகள் பலப்பல வியற்றியே
ஓங்குநல் வீடடைந் தான்
கானேறு சிங்கமமர் தேனூறு சொல்லழகி
கவினூறு வடிவாம் பிகை
காதலில் அணைந்தமுலை வைத்துப் பதித்தகுறி
காண்மார்ப! முன்னை அரசே! (04)

வேதமோ டாகமம் மெய்யான இறை நூல்கள்
மிகுதியுங் கற்று யர்ந்தார்
வேதனின் மறுபிறப் பென்னவே வந்தவர்
மிக்கவே பத்தி யுடையார்
ஓதுநற் புகழாளர் உன்னதக் குருதேவர்
உயர்கு மாரஸ் வாமியார்
உன்னத நன் முறையினிற் பன்னுமக வன்புடன்
ஒளிகொள்நற் குடமுழுக்கை
நாதனே உன்றனுக் காட்டினார் நன்மைபல
நங்களுக் கமைய வுய்த்தார்
நாளுமெமை யுன்னருளை நாடங்கு வைத்தனர்
நாங்களினி உயந்து விட்டோம்
சீதநீர் சூழ்தடம் செய்கள் நிறை பழனங்கள்
சீராரு மாட வீதி
செறிகின்ற பதிதன்னிற் கொடியினோ டுறைகின்ற
சேவகா முன்னை அரசே! (05)

வெண்மதியொ டிதழியர வெண்ணுமிவை கங்கையொடு
வேணியதி லிலக வென்றும்
வீறுபெறு நீறதுவு மேனியினி லேயிலக
வெந்நெருப் பொளிக ரந்து
தண்ணளிசெய் முறுவலொடு மெண்ணிரிய உலகங்கள்
தாளிணைகள் போற்ற நின்று
தாவறுமிவ் வுலகுயிர்கள் ஒய்வறநின் றளிசெயுந்
தாதையே! தேவ தேவா!
பண்ணிசையு மொண்ணுமோ என்னமொழி பகர்கின்ற
பாதியுடற்குரிமை கோரும்
பாங்கான வல்லியணை ஓங்கார உட்பொருட்
பரஞ்சோதி! நாத பரமே!
எண்ணரிய பழனமோ டெங்கணுந் தெங்குசெறி
ஏழில் சூழ வான ரங்கில்
இலகுமுகில் கண்டுபொழில் மயிலாடுஞ் சோலையுறை
எந்தையே! முன்னை அரசே! (06)

காட்டைச் சுமந்தகுழல் ஈட்டிக் குயர்ந்த விழி
கமலமும் வெஃகு வதனம்
காணாத எழில்முல்லை நாணாகுமு றுவலைக்
கண்டாரின் உள்ளொளிரு வாள்
பாட்டிற்கு கந்த புகழ் ஏட்டிற் களித்த திறல்
பற்பலவு மொன்ற மைந்த
பச்சைக்களி பரமனிச் சைக்கிளி எழிற்
பாவைமுலை கொண்டு காதல்
ஊட்டிக் குழைத்து மகிழ் வேட்கைக் குகந்தவா
உள்ளத் தினுள் நின்றவா!
ஒவர்மல் உன்பெயரை உன்னால் ஒருபோதும்
உன்னடிக் கன்பு செய்யார்
மாட்டிக் கொடுங்கூற்று வாட்டித் திரிந்திடில்
மனமாள்கி உடல் மல்குவார்
மாண்பான நல்லமரர் மற்றவரும் ஏத்துமொரு
மாதேவ முன்னை அரசே! (07)

மாலோடு நான்முகனு முன்னுண்மை காணவே
மாதவம் பலசெய் குவார்
மாலான இந்திரன் மற்றுமுள மாதவர்
மன்னனின் அருள்வேட் குவார்
காலொடு நலக்கினி நமனோடு வருணனும்
கனதேவர் அடிநண் ணுவார்
காதலுற் றுனதுபேர் ஓதுலுற் றிவரெல்லாம்
கண்ணியம் பெற்றுய்குவார்
பாலமுதை யொத்ததமிழ் மீதுற்ற காதலன்
பாலகன் செய்ய முருகன்
பற்றுக்க ளோட்டிநித முத்திக்கு நல்லருள்
பாலிக்கும் வேழ வதனன்
ஆலமமு தாக்கினாய் அவரெலாம் நீயாதல்
அறிந்துன்ற னடிபற் றினோம்
ஐயனே துய்யவருள் மெய்யனே ஆனந்த
ஆதியே முன்னை அரசே! (08)

வானோங்கு தருக்களின் மீதோங்கு தழையெனும்
வண்டுரி கைகொண் டுமே
வான்மீது படிகின்ற முகிலென்ற தூசினை
வற்றத் துடைக்க ஆங்கே
தானோங்கி வளர்கின்ற தண்மிதியு மஞ்சியே
தன்னை மேகத் தொளிக்கும்
தாங்காத துன்பமோ டச்சமும் மீதூரத்
தாரகைக் கூட்ட மாள்கும்
மானோங்கியே பாய்ந்து தீயினிடை விழாது
மதிகொண்ட கையனியோ
மானாகும் உமைமீது கண்பதித் திருந்திடுவை
மங்கையும் உனைநோக்கு வாள்
நானோங்கு நெஞ்சினர்மேலாங்கு மருனினால்
நாளுமே ஞான மீந்து
நல்லாறு காட்டுமோர் தொல்லா றமைத்தவா
நாதனே முன்னை அரசே! (09)

ஒருவனே யெனவுன்னை ஒருவார் பின்னிருவர்
உளரென்று சத்தி பேதம்
ஓதுவார் மூவரென உள்ளத்தி லெண்ணிடுவார்
உன்றொழில் நினைத்துய் குவார்
பெரியனே என்றிடுவர் அணுவினும் நிற்குமுனைப்
பின்னர்நற் சிறுவ னென்பார்
பேதமில் நெஞ்சிலார்க் கரியனே உன்றனைப்
பேரடியார் எளிய னென்பார்
கரிமுகன் என்னுவார் அறுமுகனு மாக்குவார்
கன்னியென அம்மையென வைப்பார்
காதலால் இவர் கூறும் மொழியெலாங் கேட்டவர்
கருத்தினை முடித்து வைப்பாய்
பரியேறி வந்துநரி பரியாக்கி விட்டவா!
பத்தர்கட கடியனே பரனே
பரையவளி னுரையிறந் தொழுகு மெழில் பருகுமவள்
பாங்கனே முன்னை அரசே! (10)

- முற்றும்.

30

# முன்னேஸ்வரப் பெருமான்

[திரு த.மனோகரன்]

தில்லையிலே ஆடுகின்ற பேரருளே சிவனே
திருவருளை நாடுகின்றோம்அருள் தருவாய் ஐயா
வல்வினைகள் போக்கியெமைக் காத்தருளும் சிவனே
வரந்தந்து எங்களுக்கு வாழ்வளிப்பாய் ஐயா. 1

நாடி வந்து உன்பாதம் சரணடைந்தோம் சிவனே
நல்லருளை வழங்கியெமைக் காத்தருள்வாய் ஐயா
பாடித் துதித்துன்னை நாம் போற்றுகின்றோம் சிவனே
பார்த்து அருள் வழங்கியெமை ஆதரிப்பாய் ஐயா. 2

பூவுலகில் எமக்குத்துணை நீயன்றோ சிவனே
பூமகளின் மைந்தரெமை அணைத்தருள்வாய் ஐயா
மூவுலகும் ஆளுகின்ற மூத்தவனே சிவனே
மூண்டுவரும் துன்பங்களைத் துடைத்தெறிவாய் ஐயா. 3

வேதங்கள் போற்றுகின்ற மெய்ப்பொருளே சிவனே
வேதனைகள் களைந்திடவே வந்திடுவாய் ஐயா
பேதலித்து நிற்பவர்க்கு வழிகாட்டும் சிவனே
பேதமைகள் போக்கியெமைக் காத்தருள்வாய் ஐயா. 4

இராமபிரான் பூசையினால் பெருமை கொண்டசிவனே
இரவுபகல் துணையிருந்து பார்த்தருள்வாய் ஐயா
அறம்காத்து மறம்அழித்து அருளுகின்ற சிவனே
அச்சமில்லா நிம்மதியைத் தந்திடுவாய் ஐயா. 5

முன்னேஸ்வரப் பதியில் கோயில் கொண்ட சிவனே
முத்திதரும் வழியெடுக்குக் காட்டுவாய் ஐயா
சிந்தையிலே உனையிருந்திப் போற்றுகின்றோம் சிவனே
சிறந்த நல்ல வாழ்வதனைத் தந்திடுவாய் ஐயா. 6

முற்றும்.

31

# முன்னைநாதனே காத்தருள்வாய்

[மாத்தளை ர.பி.பொன்னழகன்]

முத்தி விநாயகனை மதிஞான ஒளியாய் பெற்று மகிழ்ந்தவா
முருகனை மூவிருதாமரை மலர்கள் மேல் அழகனாய் படைத்தவா
முன்னொளித்து பாருலகை படைத்தெம்மை படைத்தவா
வடிவழகம்மையுடன் முன்னேஸ்வரத்தில் வாழ்
முன்னைநாதனே வந்தெம்மை காத்தருள்வாய். 1

முக்கண்கள் கொண்டு திரிபுர மெரித்தவா
கங்கையாளை முடிதனில் சிறை வைத்தெம்மை காத்தவா
முனிவர்களை தேவர்களை தேவசபைதனில் அமைத்தவா
வடிவாம்பிகா தேவியுடன் முன்னேஸ்வரத்தில் வாழ்
முன்னைநாதனே வந்தெம்மை காத்தருள்வாய். 2

முதற் பிறை தனை தன் சிரஞ்சூடி மகிழ்ந்தவா
நாகத்தை சிரசின் கடை முடியோடிணைத்தவா
முற்கூடந்தனை தூக்கி தில்லையில் நடனமாடியவா
சக்தியுடன் முன்னேஸ்வரத்தில் வாழ்
முன்னைநாதனே வந்தெம்மை காத்தருள்வாய். 3

முழுமையாய் எமை மண்ணில் மாந்தராய் படைத்தவா
வாழ்வில் முத்தி பெற நல்லறிவையும் படைத்தவா
முத்து சிலாபக் கடலழாகன வா அலையெனவரும் வோர்துயர்களை
முன்னேஸ்வரத்தில் வாழ்முன்னை நாதனே
தீர்த்தெம்மை காத்தருள்வாய்; சரணம். 4

***

## அருள் புரி ஈஸ்வரா முன்னேஸ்வரா

[மாவை விசுந்தரம்]

அற்புத தாண்டவ ஈஸ்வரா
ஆனந்த நாப ஈஸ்வரா
தில்லையில் ஆடுகின்ற ஈஸ்வரா
முன்வினை தீர்க்கும் முன்னேஸ்வரா
பாவவினை அறுக்கும் பார்வதி சமேத
பக்தியில் தொழுதிட பரபதம் அருள் லிங்கேஸ்வரா
சக்தியுடன் ஆடும் சர்வேஸ்வரா
கமலம் மலர்வாவி கரை அமர்ந்த கரனேஸ்வரா
கழலடி சரணே உன் மலரடி சரணே முன்னேஸ்வரா
தம்பத்தில் விம்பமாய் காட்சி தந்திட வேண்டும்
கும்பாபிஷேக காட்சிகண்டு நாம் உய்திட வேண்டும்
மண்ணில் அமைதி நிலைத்திட வேண்டும்
மாயை ஒழிந்து அருள் துலங்கிட வேண்டும்
கருணையில் வரம் ஈந்திட வேண்டும் ஈஸ்வரா
சிலாப நகர் அருள் ஆட்சி புரி
முன்னை நாத முனீஸ்வரனே.

***

## வரம் தரும் முன்னேஸ்வரா

ஈஸ்வரா முன்னேஸ்வரா
முன்வினை அறுக்கும் முனி ஈஸ்வரா
வல்வினை கடிந்தே வரம் அருள்
லிங்கேஸ்வரா சிவலிங்கேஸ்வரா
வாவி கரை அமர் பெருமானே
பஞ்சாட்சரத்தின் உட்பொருளே
சச்சித்தானந்தனே சிவனே
சித்தத்துள் தித்திக்கும் தேனே

திருவருள் பொழி சிலாபம்
நகர் மேவிய பெருமானே
கும்பத்தில் விம்பமாய் காட்சி தந்து
கும்பாபிகேஷகம் காண
அருட் கருணை புரி ஈஸ்வரனே
அருள் கொடுக்கும் முன்னேஸ்வரனைப்
பாடிப் பணி நெஞ்சே
பரவசம் கொள் மனமே.

***

## அருள் புரிந்திடும் ஈஸ்வரம்

பஞ்ச ஈஸ்வரத்தில் முதல் ஈஸ்வரம்
பக்தர் பணிந்திடும் முன்னேஸ்வரம்
வல்வினை கடிந்திடும் அருள் ஈஸ்வரம்
வாழ்வுக்கு ஒளிதரும் முனீஸ்வரம்
சிலாப நகர் வளர் ஈஸ்வரம்
சித்தர் முத்தர்கள் பாடி பணி ஈஸ்வரம்
லிங்க வடிவமாய் காட்சி தரும் ஈஸ்வரம்
முனி ஈஸ்வரம்
காளியுடன் கூடி அருள் ஈஸ்வரம்
கபாலீஸ்வரம் கருணையில் உறைந்த ஈஸ்வரம்
சாந்தி தரும் ஈஸ்வரம்
சங்கரன் அருள்புரி சத்தீஸ்வரம்
வேதனை களைத்திடும் வேத நாயகனே
விரும்பிகுடி கொண்ட முன்னேஸ்வரன்
மூவாம்பிகை உடன் கூடி உறை ஈஸ்வரம்
தனப் பணிந்து நீடு வாழ்வோம் மண்ணிலே.

***

## ஈஸ்வரா சரணம் முன்னேஸ்வரா

ஈஸ்வரா சரணம் ஈஸ்வரா
லிங்கேஸ்வரா முனி ஈஸ்வரா
கும்பத்தில் விம்பமாய் ஈஸ்வரா
குடமுழுக்கு காட்சி தந்த ஈஸ்வரா
வாவி கரையிலே வயல் சூழ்தல் ஊரிலே ஈஸ்வரா.
(ஈஸ்வரா சரணம் ஈஸ்வரா)

சிவாய நம பிரியனே ஈஸ்வரா
சிவலிங்க வடிவனே ஈஸ்வரா
சிலாபநகர் மேவி அருள் லிங்கேஸ்வரா
முன்னை நாதனே முனி ஈஸ்வரா
சக்தி காளியுடன் கூடி அருள் ஈஸ்வரா
சக்தி தந்து வெற்றி தரும் ஈஸ்வரா
முன்னை வினை அறுக்கும் மூலமுதலே ஈஸ்வரா
மூஷிக வாகனன் அப்பனே ஈஸ்வரா
பஞ்ச ஈஸ்வரத்தில் முதல் ஈஸ்வரா
முக்கண்ணன் நீயே முனி ஈஸ்வரா
சாமகானப் பிரியனே சக்திலிங்க வடிவனே ஈஸ்வரா
சர்வலோக நாயகனே ஈஸ்வரா
இக் கலியுகத்தில் நாம் வாழும் கருணை புரி ஈஸ்வரா
எம் காயமெனும் கோவிலிலே குடிகொண்ட ஈஸ்வரா
வைகாசி திங்களிலே ஈஸ்வரா குடமுழுக்கு காட்சி
கண்டோம் ஈஸ்வரா
சரணம் சரணம் சரணம் ஈஸ்வரா
உன் திருவடி சரணம் பொன்அடி சரணம் ஈஸ்வரா.

முற்றும்.

## சிலாபம் ஸ்ரீ வடிவாம்பிகா ஸமேத முன்னநாதசுவாமி அந்தாதிக் கீர்த்தனைகள்

[யாழ்ப்பாணம் பிரம்மஸ்ரீ மா.த.ந. வீரமணி ஐயர் M.A]

### கணபதி ஸ்துதி

#### 1. நல்ல விநாயகனே – சரணம்

ராகம் – நாட்டை தாளம் – ஆதி

**பல்லவி**

நல்ல விநாயகனே – சரணம்
நாதன் முன்னனீச்சரனை நற்றமிழில் பாட அருள்

**அநுபல்லவி**

வல்லமை அருள் சக்தி வடிவாம்பிகை மருவும்
தொல்பதி சிலாபத்துத் தேவனைப் பாட அருள்

**சரணம்**

முனீச்சரத் தலமமர்ந்த முன்னை நாதரின் பதம்
முத்தமிழில் பாடி முண்டகப்பதம் துதித்த
கணாதிபனே அருள் வாய் கவியெழுதிய கணேசா
கட்டழகி வடிவம்மை கல்யாணச் சிவனைப் பாட.

#### 2. பாட வரம் அருள்வான்

ராகம் – மோஹனம் தாளம் – ஆதி

**பல்லவி**

பாடவரம் அருள்வான் - செந்தமிழ்
நாடதாம் சிலாபத்து நாயகன் முனீச்சரன்

**அநுபல்லவி**

ஆட வல்லான் தில்லை அம்பலன்தனில் நடனம்
ஊடல் நாயகி வடிவாம்பிகை மோகனன்

**சரணம்**

என்னகத்தே இருந்து இன்பநடம் புரியும்
முன்னனீச்வரன் புகழ் முத்தமிழில் பாடுவேன்
கன்னல் தமிழில் நானும் கானம் பாடித்தொழுவேன்
பன்னக பூஷணன் பரமேஸ்வரன் சிவனை.

### 3. சிவனைப் பூஜிக்கும் திருத்தலம்

ராகம் - ஹிந்தோளம் தாளம் - ரூபகம்

**பல்லவி**

சிவனைப் பூஜிக்கும் திருத்தலம் - அது
சிலாபத்துறையும் முனீச்சரம்

**அனுபல்லவி**

அவனி புகழும் அணி இலங்கையில்
தவ மறை நூலோன் தொழுது வணங்கும்

**சரணம்**

வடிவழகியாம் உமை தழுவிடும்
துடியனல் ஏந்தும் தெய்வம் முனீச்சரன்
மிடிமை தீர்த்தென்றும் மேலாம் அருள் நல்கும்
முடி நவரத்ன முனீச்சரன் பரன்.

### 4. பரன் முனீச்சரனின் பதம் பணிவாய்

ராகம் - வஸந்தா தாளம் - ஆதி

**பல்லவி**

பரன் முனீச்சரனின் பதம் பணிவாய் - மனமே
வரமருளியே இன்ப வாழ்வருள்வான் சிவன்

**அனுபல்லவி**

கரமலர் திரிசூலம் கபால மேந்தும் ஐயன்
புரமெலித்த பரமன் புகலிடம் தந்தருள்வான்

**சரணம்**

இசைந்திடும் கல்யாணத் திருக்கோலக் காட்சியை
வஸந்த நவராத்திரி விழாவினில் காட்டுவான்
அசைந்திடும் கொடியாகிய அம்மை வடிவழகி
பிணைந்திடும் முனீச்சரன் பேரின்பம் தானருள்வான்.

37

## 5. அருள்வான் முனீச்சரன் ஆனந்தம்

ராகம் - பிருந்தாவனஸாரங்கா தாளம் - ஆதி

### பல்லவி

அருள்வான் முனீச்சரன் ஆனந்தம் - சிவன்
பொருள் புரிந்தேபாடப் பொழிவான் பேரின்பம்

### அனுபல்லவி

இருள் நீக்கும் இறைவன் இன்பமெல்லாம் தருவன்
மருள் நீக்கியாருக்கே மகிழ்ந்தருள் புரிந்தவன்

### சரணம்

அன்னை வடிவாம்பிகை அணைக்கும் முனீச்சரன்
முன்னர் பிருந்தாவன ஸாரங்கன் மைத்துனன்
வன்னமருப்பழகன் வடிவேலன் பிதாமகன்
அன்னவன் சிலாபத்தில் அநுக்ரஹம் புரிபவன்.

## 6. பவஸாகரம் நீந்த அருள்தா முனீச்சரா

ராகம் - ஸாமா தாளம் - ஆதி

### பல்லவி

பவஸாகரம் நீந்த அருள் தா - முனீச்சரா!
புவிமீதில் உனையன்றி புகலிடம் வேறுண்டோ?

### அனுபல்லவி

தலமான சிலாபத்தில் தையல் வடிவழகி
இடம் மேவி இறு கணைக்கே இன்பம் சுரந்தவனே

### சரணம்

தேமதுர கீத வீணை மீட்டி ராவணன்
சாமகானம் பாடச் சாயுஜ்யம் தந்தவனே
பூமருசு முனீச்சரப் புண்ணியக் கோவில் கொண்டாய்
நாம மகிமை பாடி நானுனைப் பணிந்தேன் தேவா.

## 7. தேவாதி தேவர்கள் தோத்தரிக்கும் முனீச்சரா

ராகம் - பிலஹரி தாளம் - ஆதி

**பல்லவி**

தேவாதி தேவர்கள் தோத்தரிக்கும் முனீச்சரா!
காவாதிருப்பாயோ? கழலடி சரணடைந்தேன்

**அநுபல்லவி**

மூவாதி மூலருள்ளும் முதல்வனே முக்கண்ணனே
நாவாரத் தமிழ் பாடி நானுமுனைத் தொழவருள்

**சரணம்**

அருள் அளப்பில் ஹரி அயன் போற்றும் முனிச்சரா
திருவளர் சிலாபத்துக் க்ஷேத்திரம் கோயில் கொண்டாய்
அருள்தனை வேண்டியே அநுதினம் இறைஞ்சினேன்
திருவருள் தாராயோ? தின தயா பரா.

## 8. பரா முகம் உனக் கழகோ?

ராகம் - பூபாளம் தாளம் - ஆதி

**பல்லவி**

பரா முகம் உனக்கழகோ? முனீச்சரா
அராவணை துயிலுமால் அரிமைத்துறா என்மேல்

**அநுபல்லவி**

தராதலந் தன்னிலே தலச்சிலாபப் பதியில்
சுரா சுரர் பணிந்திடும் சுந்தரனே முனீஸ்வரா

**சரணம்**

மார்க்கண்டன் பக்தி கண்மே மறாலியை உதைத்தனை
ஆர்க்கும் சிலம் பொலிக்க அந்தகனை வதைத்தனை
தார்திரு வில்வமாலை தனையணிந்திடும் பூபாலா
ஈர்த்தென்னை ஆட்கொண்ட ஈஸ்வர முனீஸ்வரா.

## 9. வராமலிருப்பானோ முனீச்வரன்?

ராகம் - கரஹரப்பிரியா தாளம் - ஆதி

### பல்லவி

வராமலிருப்பானோ முனீச்வரன்?
வடிவழகி மயலால் அடிமையாகினானேடி?

### அனுபல்லவி

இராப்பகல் எதிர்பார்த்த இறைசிவனின் வருகை
நிராசையும் ஆனதடி நெஞ்சம் கொதிக்குதடி

### சரணம்

கரஹரப்பிரியமான கனத்தவில்வமும் ஏந்தி
அரனவனைப் பணிந்தே அர்ச்சனை செய்தேனடி
தரணியில் சிலாபத்துத் தலைவனை எண்ணி நானும்
உருகுவதறியானோ? உணர்விழந் தேனெடி.

## 10. தேனென தித்திக்கும் திருநாமம்

ராகம் - மோகனம் தாளம் - ஆதி

### பல்லவி

தேனெனத் தித்திக்கும் திருநாமம் - நாவில்
தெவிட்டாத பேரின்பச் சிவநாமம்

### அனுபல்லவி

வானவர் போற்று மெழில் வண்டமிழச் சிலாபத்து
மோன வடிவாம்பிகை மோகன முனீஸ்வரன் நாமம்

### சரணம்

பக்தி எனும் காதல் பரவசம் ஆக்குதடி
சித்திரைந்த சிவன் சிலாபத்து முனீஸ்வரன்
அத்தன் பதமலரில் ஆனந்தம் கொள்வேனடி
சித்தமதில் இனிக்கும் சிவபெருமான் நாமம்.

***

40

### பல்லவி

ஓங்காரத்தின் ரீங்காரமாய் நாவெங்கும்
பூத்தாடும் – முன்னேஸ்வரா
நீர் சூழ்ந்திடும் தீவெங்கிலும் கால்வீசி
அருளாடும் – முன்னேஸ்வரா
மூச்சாடி முத்தாடும் சிலாபக் கரையினிலே
தேரோடும் திருவீதி உலாவும் பரம் பொருளே
ஐயா முன்னேஸ்வரா

(ஓங்கார...... )

### அனுபல்லவி

ஸ்ரீ ராமனது பூங்கரங்கள் பட
பூலோகம் கண்ட சிவலிங்கம் – வெண்ணீர்
அணிய பொன்னாய் எழுந்து வாராதோ
லங்கா புரியை ஆட்கொண்டபடி தீ
கொண்ட விழி ஒளிதீபம் – தாய்
வடிவாம்பிகை திருவருளைக் காட்டாதோ
ஒரு அத்தி மரத்தடியில் இளைப்பாறும்
திரு நந்தி அதன் முதுகில் அரங்கேறும்
முன்னீஸ்வரத்து சிவமேகமான பதம்
உருக உருகவே மலராதோ – வினை
தீர்க்கும் கணபதி வழிகாட்ட – பெரும்
ஐயநாயகன் படை சூழ ஜெய பத்ரகாளி – அவள்
உத்ர தண்டை ஒலி இசைய வருக இறைவா......

(ஓங்கார............ )

### சரணம்

சீர் ஆடிவரும் ஊர்க் கூடிவரும் – பார்
பரந்த மனம் பரமேஸா
பூக்குழியும் திருநீர்க் கரையும்
அருள் மறக்காதோ.........
தெர் ஓடிவர தேவாரம் தொழ – நீர்
சூடிவரும் முன்னீசா – பார்

வாழ கருங் கார் மேகக் குழல் விரியாதோ
அறுபத்து மூவரும் போற்றிவர
சிவ புத்தளம் என்றும் பொழிவு பெற
அன்று வியாசர் தொழுத மண்ணை
ஈசன் அருளைப் பெற ஏங்கும் கூட்டம்
அதைப் பாராயோ........ கதிர்காமத்
திருமகனை படைத்தவனே – எதிர்
காலம் அறியாத தவிப்புடனே
உன் வாசல் அடைந்தவரை – வாழ
வைக்க தினம் வருக அருள்க இறைவா

(ஓங்கார)

உ

சிவமயம்

# முன்னீச்சரத்து ஸ்ரீவடிவாம்பிகை பிள்ளைத்தமிழ்

ஆக்கம்
**சொக்கன்**

வெளியீடு,
**முன்னேஸ்வரம் தேவஸ்தானம்,**
சிலாபம்.
2012

உ

## குலதெய்வ வணக்கம்

நலந்தி கழ்திரு நல்லையிற் கந்தனைச்
சிலம்பு மெல்லடிச் சிற்றிடை யாரொடும்
இலங்கி எங்களுக் கின்னருள் ஈந்திடும்
பொலங்கொள் வேற்படை யாளனைப் போற்றுவாம்.

பொலம் - பொன்

## விநாயகர் வணக்கம்

ஓம்எனும் பிரணவத் துருவாகி உலகெலாம்
ஒருவனாய் விக்கினங்கள்
ஒன்றுமே இன்றிநன் றாகவே அடியவர்
உள்ளஅணை மீதமர்ந்து
நாம்எனும் ஆணவப் பிணிகடிந் தவர்தமது
நவையழித் தருள்சுரந்து
நாதனாய் ஞானமளி போதனாய் ஐந்துகர
நம்பனாய் நிலவுமெந்தாய்!
போம்எமது வழியெலாம் கலங்கரை விளக்கமாய்ப்
பொலிந்திடும் ஆனைமுகனே!
புத்திசித் தியெனும் பொன்னெழிற் பாவையர்
புகலிடங் கொள்ளுமார்ப!
ஆம்என இசைந்தெனக் காதரம் ஆகிடுன்
அன்னைமுன் னீச்சரத்தாள்
அகிலாண்ட நாயகிக் கன்புடன் அளித்திடும்
அருந்தமிழ்க் கவிதழையவே.

---

விக்கினங்கள் - தடைகள்.
நவை - குற்றம்.
அகில + அண்டம் (அகிலாண்டம்) எல்லா அண்டங்களும்.
ஆதரம் - ஆதாரம். தழைய-சிறக்க.

# அவையடக்கம்

அண்டசரா சரமனைத்தும் அருளாற் பேணி
அவ்வவற்றிற் கேற்றவெலாம் அளிக்கும் அன்னை
பண்டையநற் கவிவாணர் பலரும் பாடிப்
பரவிநின் றருள்வேட்ட பாவை யாட்(கு)
உண்டுறங்கி உலகினிலே உழலும் நாயேன்
ஒருசிறிய தமிழ்மாலை புனைந்து சூட்டல்
"மண்டுமொளிக் கதிரவனுக் கிணைநான்" என்று
மமதைகொளும் மின்மினியின் மடைமை அன்றோ!

ஆயினுமே திருமூலர் கூற்றிற் கொப்ப
அவளடிக்கோர் பச்சிலையாய் ஆனாற் போதும்
பாயருளை வெள்ளமென வழங்கும் அன்னை
பராசக்தி கடைக்கணிப்பாள் என்று நம்பிச்
சே(ய்)யானும் என்பிள்ளைப் பாட்டைச் சாத்திச்
செம்மலர்நேர் தாளிணையைப் பணிவேன் தாயும்
"பொயிடுஎன் முன்வையேல்" என்னா ளாயின்
புலவர்களும் புறந்தள்ளார் போற்றுவாரே!

## 1. காப்புப் பருவம்

**சிவபெருமான்**

கோவணம் துன்னமே ஆயினும் கோவணம்
குன்றிடா மன்றாடியைக்
கூடியே அன்னவற் கொள்ளையின் பங்கொளக்
கொழிதமிழப் பாட்டிசைத்த
நாவணம் மிக்கவர் நால்வருக் கருளினை
நல்கிவீ டளிநம்பனை
நம்பியே பாதபங் கயமீது வீழ்ந்தெமது
நாவலித் திடப்போற்றுவோம்
சாவணம் செலவிடா துய்வணம் காட்டவும்
சந்தமார் தமிழ்கேட்கவும்
சிலாபநன் னகரத்து முன்னையம் பதியினைச்
சார்ந்தஎம் வடிவழகியைப்
பூவண மேனியொடு பூத்துக் குலுங்கிடும்
பொழிலெனப் பூணணிந்து
பொலிந்திடும் செல்விதனை ஆகத்தி னிற்கொண்டு
போற்றிப் புரக்கவென்றே. 01

**திருமால்**

தட்டிக் கேட்க ஆளில்லைத்
தறுதலை என்றே தாய்கவலச்
சற்றும் அஞ்சா தயலேகித்
தறதற என்றே உறிஏறிச்
சட்டி வெண்ணெய் உண்டாலும்
சற்றும் வெகுளி கொள்ளாமல்
தங்கள் மகன்போல் அரவணைத்துத்
தழுவி மகிழும் ஆய்ச்சியரின்
குட்டிப் பிள்ளை, கோபாலன்
குறும்பன், திருவின் மணவாளன்
கோலக் கார்நிற மேனியினான்
கட்டிப் பாகும் முக்கனியும்
காணாச் சுவையின் சொல்லழகி
கவினார் பொழில்சூழ் முன்னைவளர்
கனியை இனிதே காக்கவென்றே. 02

---

*01. **துன்னம்**-கிழிந்த கந்தலாடை, **கோவணம்**-1. கௌபீனம்(கச்சை), 2.அரச இயல்பு. **மன்றாடி**-மன்றில் ஆடும் சிவபெருமான், **நால்வர்**-சமயகுரவர் நால்வர். **நம்பன்**-நம்பெருமான்(சிவன்), **சாவணம்**-சாகும் வண்ணம், **பூண்**-ஆபரணம். **ஆகம்**-உடல், மார்பு.*

*02. **கவல**-வருந்த, **ஆய்ச்சியர்**-இடைச்சியர், **திரு**-இலக்குமி, **கார்**-முகில். **கவின்**-அழகு, **கனி**- கனியை ஒத்த வடிவழகாம்பிகை.*

**முருகப்பெருமான்**

வேத ஞானபரி பூரணன் பிரமன்
மேதை அல்லனென வைத்தவன்
மேனி செம்பவள மானவன், கருமை
மேவு கண்டமுள எம்பிரான்
காதல் கொண்டுசெவி தந்து நற்கதியைக்
காட்டும் 'ஓம்'எனுமோர் மந்திரம்
கருது நற்பொருளை உரைஎனக் கெனவும்
கனிவுகொண்டு பொருள்வி ரித்தவன்
சீத மார்தமிழை ஓத வைத்தெமது
சிந்தை நன்குகுடி கொண்டவன்
சீறு வேலும்முகம் ஆறு மோடுசென்று
தேவர் துன்பமன் றோட்டினோன்
மோது வேல்விழிகொண் டாடுங் கூத்தனைத்தன்
மோக லாகிரியில் வீழ்த்திய
முன்னை வாழழகி தன்னை அன்புமிக்க
முந்தியே புரக்க என்றுமே. 03

**வைரவக்கடவுள்**

ஆணவம் மிகுத்திட அனைத்துமே தன்னுடைய
ஆக்கமென நகங்கரித்தே
அனலாடி தன்னிலும் தான்பெரியன் என்றெண்ணி
ஐந்துதலை யான்தானென
வீணாய்த் திரிந்திட்ட வேதனின் தலையொன்று
வீழ்ந்திடக் கிள்ளினானை
வெங்கொடிய தீமைகள் வீழ்ந்துபரி நாசமாய்
மேதினிவிட் டோட்டுவானைக்
காணவே சுவானவா கனத்தமர்ந் தூர்களைக்
காக்கின்ற காவலானைக்
கருநீல மேனியொடு கனல்விழிப் பார்வைகொடு
காட்சியான அடிபோற்றுவோம்
பூணரவி னோடுபுலி அதழணிந் தேகயத்
துரிபோர்க்கும் எந்தையாரின்
பொன்னெழிற் பாவையைச் சங்குவளை யாளினைப்
போற்றிப் புரக்க என்றே. 04

---

3. *பரிபூரணன்-முழுமையானவன், மேதை-பேரறிவாளி, கண்டம்-கழுத்து, சீதம் ஆர்- குளிர்மை மிகுந்த, மோக லாகிரி-ஆசையாகிய மயக்கம், முன்னை-முன்னீச்சரத்தின் மருஉ.*

4. *அனலாடி-தீயைத் திருக்கரத்தில் ஏந்தி ஆடியருளும் சிவன், வேதன்-பிரமன், சுவானம்-நாய், புலி அதழ்-புலித்தோல், கயத்துரி-(கயம்-யானை) யானைத்தோல், புரக்க-காக்க.*

### வீரபத்திரக் கடவுள்

தக்கன் தன்னை அகிலத்தின்
தலைவன் ஆகத் தக்கவனாய்த்
தகுதி நோக்கா திருமாந்து
தலைவன் தன்னை மறந்துசெயப்
புக்க வேள்விக் கமரர்களும்
புகுந்தார் புகல்யார் எனஓரார்
புன்மை கடியச் சிவன்ஏவப்
போந்தான் அழித்தான் புல்லியரைச்
சொக்கத் தங்க மேனியினான்
சுந்தரற் கீடிலை எனுமுண்மை
சொல்லா லன்றிச் செய்கையினாற்
சூதினர் உணர வைத்தமகன்
மிக்க வீர பத்திரனை
வேண்டிப் பரவித் துதித்திடுவோம்
வேயின் தோளி முன்னையளை
விழைந்து நன்கு காக்கவென்றே. 05

### அரிகரபுத்திரர்

"பாரினில் விண்ணிற பாதலத் தினில்வாழ்
பவர்எவர் எனினுமே யாகப்
பதிக்குவன் கரத்தை எனில்அவர் தலையிற்
பசுமமாய் ஆக" என்றரனை
ஈரமில் கொடியன் வேண்டிய வரத்தை
ஈந்தவன் மீதுசோ திக்க
ஏற்றினன் அஞ்சி ஓடியே மாயன்
இடஞ்சரண் எய்திட மாலும்
ஓரெழிற் கன்னி உருவுடன் தோன்றி
உலுத்தனை உயிர்கவர்ந் திட்டான்
ஓடியே ஒளித்த அரனவன் திரும்பி
உருவினில் மோகினி யான
காருருக் கனியைக் கலந்தனன் கலந்த
கலப்பினில் தோன்றிய ஐயன்
கடும்புலி ஊர்தி, கால்பிடித் திடுவோம்
முன்னையாட் காத்திட என்றே. 06

---

*5. அகிலத்தின்-உலகத்தின், புக்க-புகுந்த, புகல்-ஆதாரம், புல்லியர்-இழிந்தோர்(தேவர்கள்), சூதினர்-சூழ்ச்சியாளர், பரவி-போற்றி, வேய்-மூங்கில்.*

*6. பசுமம்-நீறு, ஏற்றினான்-எருத்து வாகனத்தனான சிவன், கனி-கனி போலும் அழகி, ஊர்தி -(வாகனமாகக் கொண்டு) செலுத்துவோன்.*

## மாகாளி

இதழ்களைப் பீறிமுன் வருகின்ற இருபற்கள்
இருட்பிழம் பனைய மேனி
உருத்தெழுந் தெங்கணும் கனற்பொறி பறக்குமிரு
ஏற்றமார் செய்ய விழிகள்
கதம்மிகுத் துலகத்தின் கொடுமைகள் அனைத்தையும்
களைந்திடற் குரியபூட்கை
கங்காளனோடு வெங்கான கத்திலே
கதித்தெழுந் தாடும்ஆடல்
வதம்பல புரிந்துகொடும் அரக்கரை அழித்தவிண்
ணவர்களுக் கிதம் அளிக்கை
வாய்த்தபே ரன்னைமா காளியைப் பயத்துடன்
பத்திமிகப் போற்று கின்றோம்
பதம்பஞ் சினாற்செய்து பவளத்தை இதழாக்கிப்
பால்வணப் பற்களோடே
பழம்பெரும் முன்னையின் கழையுறழ் தோளியைப்
பரிந்துமே காக்க என்றே. 07

## கலைமகள்

பாலோடு தேன்கலந் தாலனைய சொல்பொருள்
பதமாய்க் கலந்து புலவர்
பாடிடும் பாடலின் சுவைநயந் திடுகின்ற
பாவைவெண் கமலாசனி
ஞாலமிசை இசைபோக்கி நவையறுத் திடுகம்பன்
நன்னையக் காளிதாசன்
நலமிக்க செந்தமிழ்க் கவிகுமர குருபரன்
நாவினில் அமர்ந்த செல்வி
கோலமிகு வெள்ளாடை வெள்ளணிகள் செபமாலை
வீணையுந் தரித்த அன்னை
குவலயத் தறுபத்து நான்கெனும் கலையெலாம்
குடைநிழற் காக்கும் அரசி
வாலையாய் முன்னையில் வந்தருளி எங்களின்
வாழ்வினுக் கொளி விளக்காய்
வளர்கின்ற மாதேவிக் காகவே வேண்டுவம்
வழுத்தியே காக்க என்றே. 08

---

7. *பிழம்பூ-கட்டி, கதம்-கோபம், பூட்கை-உறுதிப்பாடு, வதம்-அழிப்பு, பதம்-(பாதம்) கால்கள்-கழை-மூங்கில்.*

8. *அனைய - போன்ற, ஞாலம்-உலகம், இசை-புகழ், நவை-குற்றம், குவலயம்-உலகம், வாலை-சிறுமி, வழுத்தி-வணங்கி.*

### திருமகள்

திருமால் உளம்மகிழ அவர்மார்பி லேதிகழும்
திருவாட்டி எங்களது பெருமாட்டி
சிறுவாயி லேமுறுவல் பெரும்ஆழி ஆம்விழியில்
தெளிவாகும் நற்கருணைச் சீமாட்டி
மருவா தவத்தருக்குப் புவிவாழ்வு வெந்துயராம்
மகிழார்கள் ஆயினுன தருளாட்சி
மருவும் நலத்தருக்கோ அளகா புரிக்கதிபன்
மதிக்கத் தகும்பெருமை அடைவாமே
கருவா தனைக்கெதிராய் அறமாதி செய்வரெனின்
கனகாலம் இன்பினிலே திளைப்பார்கள்
கடலாரும் நஞ்சையுண்டே அமுதார வைத்தவனின்
கனியான முன்னைவளர் எழிலாளை
உருவான செங்கமலத் துறைவாய்! மனங்கனிந்தே
ஒருகால மும்விடுத்து நீங்காமல்
இணையாக நின்றிடவென் றிதமாக வேண்டுகிறோம்
இனியா ளையேபுரந் தருள்வாயே. 09

### தமிழ்த்தாய்

எந்தமிழே! எழிற்றமிழே! ஏற்றமிகு தமிழே!
இன்பருளும் தெய்வதமே! இணையிலிஎந் தாயே!
அந்தமுனக் கில்லையென வந்தனைகள் செய்ய
ஆரியத்தோ டருகமர்ந்து சீரிளமை கொண்டாய்
சொந்தமென உன்னடிகள் சூட்டியுளத் தேத்திச்
சுந்தரியே! அஞ்சலியைத் தந்திடுவோம் என்றும்
பந்தமறுத் தின்பமளித் தெங்களினைக் காக்கும்
பராசக்திக் கரணாக நின்றிடுக நீயே. 10

---

*09. அழி-கடல், மருவா-அணையாத, வாதனை-வேதனை, அளகாபுரிக்கு அதிபன்-குபேரன் (அளகை-அலகை எனலுமாம். அலகை-பேய், முனி, (முனி+ஈச்சரம்) முனீச்சரம் முனி வழிபட்டதால் -அலகேசுரம் எனவும் முன்னர்த் தோன்றியது என்னும் பொருளில் முன்னீச்சரம் எனவும் வழங்கும்.*

*10. தெய்வதம்-தெய்வம், ஆரியம்-சம்ஸ்கிருதம், பந்தம்-கட்டு, தளை, அரண்-காப்பு.*

## 2.செங்கீரைப் பருவம்

பன்னுதற் கின்னிய சொன்னயப் பைந்தமிழின்
பண்ணிசையி லேகுளிர்ந்து
பழமறையி லமைதுதிகள் மனமகிழ் முறுவலொடு
பரிந்துநற் செவிமடுத்துக்
கன்னலது சாற்றினைக் காய்ச்சிப் பதஞ்செய்த
கட்டியின் இனியவான
கவினாரு செவ்விதழ் மலர்த்தியே கேட்பவர்
கனிந்துருக ஒலியெழுப்பி
அன்னையே! உன்னரிய அனிச்சமலர் மேனியால்
அம்புவியி லேதவழ்ந்து
அனைத்திலும் புனிதமாம் கங்கையின் மேலான
அரியவுமிழ் நீர்வழித்துச்
சின்னவுன் வாய்நோவக் கிர்கிரென் றொலிசெய்து
செங்கீரை ஆடியருளே
சிவதலத் துயர்தலம் எனப்பகர் முன்னையாய்!
செங்கீரை ஆடியருளே. 11

ஆற்றும் பூசை நெறிமாறா
அந்தணர் ஆற்றித் துதித்திடவும்
அணைந்தே உன்றன் அடியார்கள்
அருள்தா என்றே அரற்றிடவும்
போற்றிப் புகழ்ந்து பூரித்துப்
புலவோர் பாமழை பொழிந்திடவும்
பூவார் சோலைப் புதுமலராற்
புனைந்தே மாலை சாத்திடவும்
கூற்றைக் குதித்த கூத்தாடி
குதூகலித் துன்னை நோக்கிடவும்
குளிர்ந்துன் திருவாய் திறந்துநீ
குவலய மெல்லாம் மகிழ்வெய்த
ஆற்றின் ஒழுக்கின் மென்மெலென
ஆடுக இனிதே செங்கீரை
ஆதியின் முன்னைப் பெருவாழ்வே!
ஆடுக இனிதே செங்கீரை. 12

---

*11. பன்னுதல்-கூறுதல், பழமறை-பழைமையான வேதங்கள், கன்னல்-கரும்பு, கவின்-அழகு, அம்புவி-அழகிய பூமி (அம்-அழகிய), செங்கீரை-தவழும் பொழுது குழந்தை வாயிலிருந்து எழும் 'கிர் கிர்' எனும் செழுமையான குரலொலி.*

*12. ஆற்றுதல்-செய்தல், நெறி-முறைமை, கூற்று - யமன்.*

ஆயிரம் இதழ்கொண்ட தாமரை மலரிலே
அமர்ந்தருளும் எம்பி ராட்டி!
அகிலமுடன் அண்டங்கள் சராசரம் யாவுமே
அணைத்துவாழ் வளிக்கும் அன்னை!
பாயருள் வெள்ளத்தி லேதினைத் திடஅவை
பாலிக்கும் மேன்மை யாட்டி!
பாலகி வடிவுகொண் டரவிந்த மீதிலே
பரிவுடன் இருந்த உன்னைத்
தோயுமன் பெழவந்த இமயத்து ராசனும்
தோகையெனும் மேன்னை யாளும்
துதித்துமே மார்பார அணைத்துநன் மகளென்று
சொந்தமும் கொண்டாடவே
ஆயுமறி வானந்த ரூபிணி! முன்னையாய்
செங்கீரை ஆடியருளே
அமுதவாய் மலர்த்திநீ கிர்கிரென றொலிசெய்து
செங்கீரை ஆடியருளே. 13

சிவனவன் சக்தியையுஞ் சக்திசிவன் தன்னையும்
சிறப்புடன் ஈன்ற பின்னைச்
சிவம்சக்தி இருவரும் உலகுயிர்க் குருத்தருவர்
சிவஞான சித்தி கூற்று
இவையெலாந் தோற்றினும் சிவன்மாணி சக்தியும்
ஏற்றமார் கன்னி யேயாம்
இதுவுமஃ துரைக்கின்ற உண்மையே ஆய்ந்திடின்
ஏற்பதே மறுத்த லில்லை
பவவினை கொண்டுலகிற் கருவிருந் துழலாது
பாலிக்கக் குழவியாகிப்
பாரினில் வந்துதவழ் பாலகி! முன்னையுறை
பத்தருக் கெய்ப்பில வைப்பே!
சிவமெனும் செம்பொருட் குயிரன்ன செல்விநீ
செங்கீரை ஆடியருளே
சிற்றிடைப் பெரியவிழி கரியஒளி மேனியாய்!
செங்கீரை ஆடியருளே. 14

---

*13. சராசரம்-நிற்பனவும் நடப்பனவுமான உயிர்கள், பாலிக்கும்-காத்தருளும், பாலகி-சிறுமி, காப்பவள் எனவும் கொள்ளலாம், தோகை-மயில்(சினையாகு பெயர்) இமவான் என்ற இமயமலை அரசனும் அவன் மனைவியான மேனையும் செய்த தவத்தின் பயனாக அவர்களுக்குப் புதல்வியாக உருக்கொண்டு தாமரை மலரிலே எழுந்தருளினாள் எம்பிராட்டி.*

*14. ஈன்ற பின்னை-பெற்றபின்னர், மாணி-பிரமசாரி, பவவினை-பிறவிக்கான நல்வினை, தீவினை, எய்ப்பில் வைப்பு-தளர்வுறும் காலத்திற்கென்று சேர்த்து வைக்கும் சேமிப்பு, செம்பொருள்-செம்மையான (மேலான) பரம்பொருள்.*

பாட்டி னால்வழி பாட்டினால் மறை
பரவலால் ஒலிஎன் றென்றும்
பாய்ந்துமே அருவி வீழ்தல்போல் ஆர
வாரம் மிக்கதாம் முன்னையில்
ஏட்டிதழ்க் கமல வாவியில் இளைய
இன்னறும் வளிவந் துளரலால்
இனிய கந்தமண முறுவ தெப்பொழுதும்
எங்கணும் பரவும் அல்லவோ?
சுவட்டியே இனிய பாலுடன் நறிய
குன்றினிற் குறவர் தந்ததேன்
குளிர்ந்த பால்தயிரும் இனிய முக்கனியும்
கொண்டு நல்லஅபி டேகங்கள்
ஆட்டுவார் அரிய தொண்டிலே மகிழ்ந்
தாடுகசெங் கீரையே
அவனி எங்குமுன் புகழ்ம ணந்திடநீ
ஆடுகசெங் கீரையே. 15

முகில்மதிவில் கயலோடு திலமலர் மாங்கனியும்
முத்தினொடு சிவந்த பவளம்
முழுமையுந் தாங்கியழ கொழுகவே வஞ்சியென
முத்தனைக் கனிய வைக்கும்
அகிலாண்ட ஈசுவரி கௌரிகௌ மாரிஉயர்
ஆதிபரா சத்தி உமையே!
ஆதியும் அந்தமும் இல்லாத சோதியொளிர்
அத்தனுக் கிடம ளித்தாய்
சிகைகொண்ட மயிலால வண்டினம் மலர்களைத்
தேடியே ரீங்கரிக்கச்
சேர்முகில்கள் இடித்துமழை பொழிந்திடச் சீருடன்
சிறந்தவளம் நிறையு முன்னை
சகத்தினிற் றலைமைபெற அமைத்திடும் தேவியே!
செங்கீரை ஆடியருளே
சித்தத்தில் நித்தமொளிர் உத்தமி! நீநன்கு
செங்கீரை ஆடியருளே. 16

---

*15. ஏடு - பூவிதழ், இனிமை+நறும்(இன்னும்)-இனிய நன்மணம், குறவர்-குறிஞ்சிநில வாழுநர், அவனி-பூமி.*

*16. தில மலர்-எட்பூ(திலம்-எள்) மகளிரின் மூக்கினை எட்பூவுக்கு உவமிப்பது புலவர் மரபு, வஞ்சி-ஒரு கொடி (சீந்திற் கொடி) பெண்களின் மெல்லுடலுக்கு உவமை, சிகை-(மயிலின்) கொண்டை, ஆல(ஆடல்)-மயிலின் குரலையும் அதன் ஆடலையும் குறிக்கும், சகம்-பூமி.*

சந்திரமண் டலநடுவில் லலிதமகா நித்யையாய்த்
தண்கலை கள்பதி னாறுடன்
சர்வபரி பூரணியென் றெவ்வெவரும் எத்தஒளி
காலுவை ஒவ்வொர் திதிக்கும்
நந்தலில் வெவ்வேறு நவமான பெயர்பெற்று
நற்கலை கள்ஒவ் வொன்றுமே
நாள்தொறும் வளர்ந்துபின் னொடுங்கிநின் றரியவாம்
நாடகம் பயிலு நங்காய்!
புந்தியில் உனைக்கொண்டு வந்திக்க வந்தருள்
புரிகின்ற நன்னெஞ் சினாய்!
பூரணி! புராதனி! கௌமாரி! சங்கரி!
போதமிக் கருளு முன்னைச்
சிந்தெழிற் பதிவாழும் சுந்தரி! சுதந்தரி!
செங்கீரை ஆடி யருளே
சீலமார் பாலகி! ஏலமார் குழலிநீ!
செங்கீரை ஆடி யருளே. 17

கால, குல, நாம, சுத்த மொடு நாத
விந்து, ஞானகலா சிவமான
கருது நவபுவன மெனுமிவைகள் சக்தி
சிவமுடைய கோணம் ஒன்பானும்
சால மிகுதிறனிற் கோலமுற இணையச்
சங்கமித் திடலின் விளைவாகச்
சாற்று முயர்தொழில்கள் மூன்றும் முறையாகச்
செய்கை நிகழ்வ வாம்உணர் வூற
ஆல மொளிர்கண்டற் காதரங் கள்தரும்
அஞ்சொலிள மங்கை நீயன்றோ!
அன்றி உன்துணையொன் றின்றி ஒருசெயலும்
ஆகிடாதெனவும் அறிவோமே
தூல உருக்கொண்டு முன்னை நகர்வதே
ஆடுசெங்கீரை இனிதாயே
சோதி எழில்நங்கை! மாலவனின் தங்கை!
ஆடுசெங்கீரை இனிதாயே.

---

17. *நித்யை-என்றும் உள்ளவள், **தண்கலைகள்**-குளிர்ந்த (சந்திரனின்) கூறுகள், **நந்தல்**-கெடுதல், **நவமான** -புத்தியில் உள்ளத்தில், **வந்திக்க** - வழிபட, **புராதனி**-பழையவள், **எழில்**- அழகு, **சுந்தரி**-அழகி, **சீலம்**-ஒழுக்கம்.*

18. *நவபுவனம் -ஒன்பது உலகங்கள். இவற்றை நவ வியூகம் எனவும் கூறுவர். (வியூகம்-படைவகுப்பு) "சக்திகோணம் ஐந்துடனே சிவகோணம் நாலும் கூடுவது முத்தொழிலும் உண்டாவதற்குக் காரணம்" என்று வாமகேசுர தந்திரம் குறிப்பதாய் சைவ எல்லப்ப நாவலர், சௌந்தரிய லகரி உரையிலே கூறியுள்ளார். **சங்கமித்தல்**-கூடுதல், **ஆலம்**-விடம்.*

கார், கூதிர், முன்பனி, பின்பனி, வேனிலொடு
காலைபின் மாலை எனலும்
கருதியே மாதம்ஆண் டூழியுக மென்னலும்
கருத்தி லாஎங் கணக்கு
கார்குழற் கற்றையினைத் தாங்குவஞ் சிக்கொடீ!
காலவா தீதை நீயே
கனிவுமிகு குழவியாய் உனையெண்ணு வோமெனிற்
கடைகெட்ட மூடரன்றோ?
ஆர்ப்பரித் தெழுகின்ற அலைகள்நின்ற பேராழி
அதனில்நாம் பரமாணுவாம்
ஆயினும் பேராசை கொண்டுனைச் சிறுமியாய்
அகத்தினிற் கொண்டு விட்டோம்
சீர்மிகும் செலவிளம் சிறுமையை மறந்துநீ
செங்கீரை ஆடி யருளே
சிவனையே பித்தாக்கும் முன்னையின் செல்வியே!
செங்கீரை ஆடி யருளே. 19

முன்னைப் பதியின் பெருவாழ்வே!
மூத்தோர்க் கெல்லாம் மூத்தவளே!
மூத்த கணபதி மடியேற
முத்தம் இட்டு மகிழ்பவளே!
பின்னைக் குமரன் வரக்கண்டு
பித்தாய் அவனை அணைப்பவளே!
பெரிய சிவனின் பெருமாட்டி!
பிறங்கு மாலுக் கருந்தங்காய்!
உன்னை மகளாய் இமவானும்
உத்தமி மேனையும் பெறும்பேற்றை
உரைத்தற் கெம்மால் எளிதாமோ?
உவமை கடந்த வடிவழகீ!
சின்ன மெய்கொண் டெம்முன்னே
செங்கீ ரைநீ ஆடுகவே
சிவந்த இதழில் அமுதூறச்
செங்கீ ரைநீ ஆடுகவே. 20

---

*19. கார்-மழைக்காலம், கூதிர்-பின்மழைக்காலம், வேனில்-கோடைகாலம், காலவாதீதை-(கால+அதீதம்) காலங்கடந்தவள், பரமாணு(பரமஅணு), அணுவைக் கூற செய்த மிகச்சிறிய கூறு, அகம்-உள்ளம்.*

*20. மால்-விட்டுணு, மெய்-உடல், இதழ்-உதடு.*

## 3.தாலப் பருவம்

பத்துத் தலையும் ஆணவமும்
பாரித் திட்ட இராவணனைப்
பகர்மூன் றுலகிற் கதிபதியைப்
பகழி கொண்டு துளைத்தபிராற்
பித்த னாகப் பிரமகத்தி
பிடித்தே அலைத்த போதினிலே
பக்தியிற் கலைத்த பிரானையெம்
பரிகாரஞ் செய்தவத் தினனாய்
முத்தி யருளும் முன்னையனை
முன்வந் தேத்தித் தொழுததனால்
முழுதாய் அதன்பிடி தளர்ந்ததுவும்
முழுமையும் உண்மைக் கதையாகும்
அத்தன் அவனின் ஆருயிரே!
அருளே! தாலோ தாலேலோ!
அஞ்சுகக் குதலை மொழியாளே!
அன்பே! தாலோ தாலேலோ! 21

மாலே பரம்பொருள் என்றுரைசெய்
மாபா தகத்தைப் புரிந்ததனால்
மாதே வன்முன் உயர்த்தியகை
மடியா துழன்ற வியாசற்குச்
சால உண்மை தனையுணர்த்திச்
சாபந் தீர்த்த அருளாளன்
சந்நிதி முன்னையில் அவனோடே
சரியா சனங்கொள் தயாபரியே!
ஓல மிட்டுச் சரண்டைவார்
உள்ளத் தொளிரும் ஒளிவிளக்கே!
ஒருமை மனத்தோர்க் குன்ஞானம்
உவந்தே அருளும் உன்னதியே!
காலம் யாவும் நாம்மகிழக்
கனியே! தாலோ தாலேலோ
காட்டும் வதனத் தண்மதியே
கதியே! தாலோ தாலேலோ. 22

---

21. *பாரித்தல்-சுமத்தல், பகழி-அம்பு, பிரமகத்தி- அந்தணனான இராவணனைக் கொன்ற பாவத்தின் வடிவான பிரமகத்தி,* ***இராவணன்*** *- கைகசி என்ற இயக்கிக்கும் விஸ்ரவசு முனிவருக்கும் மகன்,* ***அத்தன்*** *-தந்தை (சிவன்)* ***அஞ்சுகம்****-கிளி, குதலை-விளங்காச் சொல்.*

22. *சால-மிக தயாபரி-கருணையுடையாள்,* **ஒருமை**-*மனத்தை ஒருமுகப் படுத்திப் பரம்பொருள் ஒன்றே என்று உணரல்.* **வதனம்**-*முகம்.*

முன்னேச் சரனார் வடிவழகி
முதிர்ஞா னத்துக் கணநாதன்
முருகார் இளவல் இவர்கட்கு
முறையாய்க் கோயிற் றிருப்பணிகள் என்றும்
முட்டுப் படாவண்ணம்
ஏந்தல் குளக்கோட் டனென்னும்
இயல்சேர் சோழ மாராசன்
ஏத்திப் போற்றிப் புரிந்தனனால்
அன்றும் முன்னும் இன்றுமினி
அமையும் எதிர்கா லந்தனிலும்
என்றும் புகழோ டிருப்பவளே!
எவர்க்கும் இன்னருள் சுரப்பவளே!
நன்றுன் குழவி நலங்காண்போம்
நங்காய்! தாலோ தாலேலோ
நற்றாய் மேனை உளமகிழ
நலமே! தாலோ தாலேலோ! 23

ஆழியின் நடுவில் முத்தாக
அமைந்த இலங்கை நன்னாட்டில்
அரசன் பராக்ரம பாகுவெனும்
அண்ணல் முன்னைச் சீர்த்தியினை
வாழி அறிந்தே பத்திமிக
வளமார் நிபந்தம் பலசெய்து
மனமும் ஒன்றிட வழிபட்டு
மாட்சி பலவும் பெற்றிட்டான்
கேழில் பரம கருணையினாய்!
கேளிர் எனஎமைக் கொள்பவளே!
கேடில் இகபரச் செல்வமெலாம்
கிடைக்கச் செய்யும் தயாநிதியே!
பாழில் இருந்து காப்பவளே!
பரையே! தாலோ தாலேலோ
பாலகி! எங்கள் மனங்குளிரப்
பரிவாய் தாலோ தாலேலோ. 24

---

*23. **கணநாதன்**-விநாயகர், **முருகார்**-அழகுமிக்க, **இளவல்**-இளை யோனாகிய முருகன், **ஏந்தல்**-பெருமையிற் சிறந்தவன், **குழவி**-குழந்தை.*

*24. **ஆழி**-கடல், **அண்ணல்**-பெரியோன், **நிபந்தம்**-இறையிலியாய் வழங்கும்) நிலம் முதலியன, **கேளீர்**-உறவினர். **இகபரம்**-இம்மை, மறுமை, **சீர்த்தி**-சிறப்பு, **கேழில்**-(கேழ்இல்)-ஒப்பிலாத.*

ஆழக் கடலின் கரையினிலே
அன்றொரு நாள்நீ அரனுடனே
ஆடல் புரிந்த நிலைகண்டே
அருகில் வந்துனை அகப்படுத்த
ஏழை மீனவன் முயன்றிடநீ
எழிலார் சிலையாய் மாறினையே
எடுத்தே உன்னை அரசர்கரம்
அளிக்க அவரும் நம்பாமல்
ஆழச் சிந்தித் தமைத்தபல
அழகுச் சிலைகள் தம்மிடையே
அசையும் உன்பத அடையாளம்
அந்த மீனவன் கண்டுரைக்க
வாழ அரசன் கோயிலிலே
வைத்த நிதியே! தாலேலோ
வளரும் இளமதி! முன்னையளே!
வாழ்வே! தாலோ தாலேலோ. 25

பொன்றும் செல்வம் வெண்டாது
பொன்றாக் கல்வி விழைவாராம்
புகழ்சேர் அறிஞர்ப் புகலிடமாய்ப்
போற்றும் காஞ்சி மாநகரில்
மன்னும் மறைதேர் நாகேந்த்ர
மாண்பார் குருக்கள் மகனாராம்
மதிசேர் குமாரஸ் வாமிகுரு
மயங்கிக் கலங்க வந்தபிணி
தன்னைப் போக்கி அவர்மூலம்
தகைசால் கோயில் சமைப்பித்தாய்
தகைமை யாளர் வழிவந்தோர்
தாயே! உன்பணிக் காளானார்
கன்னற் கினிமை நலகுசுவைக்
கரும்பே! தாலோ தாலேலோ
கருதித் துதிப்போர்க் கரணாகும்
கண்ணே! தாலோ தாலேலோ. 26

---

*25. அரன்-சிவன்.*

*26. பொன்றும்-அழியும், பொன்றா -அழியாத, விழைவார்-விரும்புவார், மன்னும் நிலையாயுள்ள.*

காரிற் கறுத்த கருங்குழலும்
கணைவாள் நானும் இருவிழியும்
கவினார் கூனற் பிறைநுதலும்
காற்றுக் கொடியும் மெல்லிடையும்
தேரின் எட்பூ நாசியதும்
திகழுந் தாமரை மலர்முகமும்
திருவார் கொவ்வைக் கனிவாயும்
சீரார் பஞ்சுச் சீறடியும்
பாரில் வந்து முடிசாய்த்துப்
பணியும் வானோர் முடியழுந்தப்
பதைத்தே ஒல்கும் அனநடையும்
பார்க்கப் பார்க்கத் தெவிட்டாவாம்
ஏரார் முன்னைப் பதியுறையும்
எழிலே! தாலோ தாலேலோ
என்பை உருக்கி எமையாளும்
இன்பே! தாலோ தாலேலோ. 27

உத்தம சத்திய நித்தியர் நச்சிட
உடலினிற் பாதியளாய்
ஒத்து சதித்துவம் இத்தரை மக்களுக்[கு]
உணர்த்தும் வித்தகியாய்ப்
பத்தியை வித்தி விளைத்திடு நற்றவர்
பாங்கினில் ஓங்கியுயர்
பாரிய தாகவே வானுற நின்றிடு
பவித்திர நற்றருவாய்
எத்தனை வருணனை அத்தனைக் கும்அரி
தாகிவி ளங்கிடுவாய்
எழில்தரு பொழில்நிறை பழனவ ளம்உறை
இன்பருள் முன்னையளே!
தத்தை எனத்தரு சொற்கு தலைக்கொரு
சாமளை! தாலேலோ
சங்கரன் இங்கித துங்க மணித்திரள்!
தாலோ தாலேலோ. 28

---

*27. கார்-முகில், கவின்-அழகு, ஒடியும்-முறியும், ஒல்கும்-ஒதுங்கும், ஏரார் -(ஏர்+ஆர்) அழகுமிக்க, எழில்- எழுச்சி, அழகு, என்பை-எலும்பை, அனநடை-அன்னம் போன்ற நடை, (அன -இடைக்குறை)*

*28. நித்தியர்-நிலையானவர், என்றும் இருப்பவர்(சிவன்), நச்சிட - விரும்பிட, சதித்துவம்-(சதி-மனைவி) வாழ்க்கைத் துணைநலம், வித்தகி-திறமையாளி, வித்தி-விதைத்து, நற்றரு(நன்மை+தரு) நல்லமரம், பழனம்-வயல், இன்னிய -இனிமையான, தத்தை-கிளி.*

சீரும் செழிப்பும் சேர்ந்துறையும்
சிலாபம் சூழ்ந்த செறிகடலைச்
சேர்ந்தே முயங்கி வெண்முகில்கள்
சினைகொண் டின்பாய்க் கறுத்துமிகப்
பேரும் பின்னர் இடிமின்னிப்
பெரிய மழையைப் பொழிந்தோடிப்
பிறங்கும் மாயவ னாறாகிப்
பேரா தரிக்கம் அடியார்கள்
கூரும் அன்புடன் நீராடக்
கூபங் குளமாய் உருக்கொள்ளும்
குளித்துச் செபஞ்செய் இவர்களுக்குக்
கோயிலில் அமர்ந்தே அருள்பவளே!
காருண் அஞ்சன விழியாளே!
கதிரே! தாலோ தாலேலோ
கண்ணே! முன்னைப் பாவாணர்
கனவே! தாலோ தாலேலோ. 29

மட்டவிழ் மலர்கொடு விட்டுணு வழிபட
மகிழ்ந்தவர்க் காழி அருள்
மாமலை மேருவைச் சாபம் தாகவே
வளைந்திடு மாதேவன்
குட்டி அயன்சிறைப் பட்டிட வைத்திடும்
குமரனின் நற்றாதை
கொஞ்சி மகிழ்ந்திட வஞ்சியின் கொடி எனக்
கூடி உறைபவளே!
விட்டு விடுதலை பெற்றிட முன்னையில்
வேண்டிநிற் பார்களினை
வேதனை செய்பவ வாதனை போக்கிட
மிக்கருள் தருபவளே!
பட்டினும் மென்மைய தாகிய மேனியை!
பரையே! தாலேலோ
பாவவி நாசினி! வதனவி லாசினி!
பரையே! தாலேலோ. 30

---

*29. முயங்கி-கூடி, பேரும்-பெரும், பிறங்கும்-விளங்கும், கூபம்-கிணறு, அஞ்சனம்-கண்களுக்குத் தீட்டும் மை.*

*30. மட்டு -தேன், ஆழி-சக்கராயுதம், சாபம்-வில், தாதை-தந்தை, விநாசினி-அழிப்பவள், விலாசினி- அழகுடையாள்.*

## 4.சப்பாணிப் பருவம்

பாரினிற் சிறந்தநற் பழையபதி முன்னையிற்
பாலகி ஆக வந்து
பஞ்சினும் விஞ்சுகுளிர் தஞ்சமுற் றிடுபதம்
படிந்திட முழந்தாளினைச்
சீருற மடித்தெழிற் றொடையதும் மடங்கிடச்
செங்கம்ப லத்தமர்ந்து
செவ்விதழ்க் கமலநல வதனத்தில் முத்தெனச்
சிறுவியர் துளிசெய்திடக்
காரெனுங் குழற்கற்றை கிரணமாய் நுதல்விழக்
கண்களிற் சுடர் தெறிக்கக்
காதினிற் றோடுகதிர் நிலவுமாய் ஒளிகாலக்
களிமுறவல் காட்டியன்னே!
சாருமிந் திரனாதி தேவருங் களிகொளச்
சப்பாணி கொட்டியருளே
சங்சலம் விஞ்சுலகு கெஞ்சிடத் தஞ்சமெனச்
சப்பாணி கொட்டியருளே. 31

பற்றற்ற பரமர்தம் பற்றினைப் பற்றிடப்
பற்றருள் கோடதாகிப்
பழவினை களில்விழுந் தழுந்தாம லேதொழும்
பத்தருக் கருள்புரிந்து
சிற்பர வியோமமாய்ச் சிற்றம் பலத்திலே
சிவனுடன் கூடியாடிச்
செகதல மனைத்தையும் ஆட்டுவித் திங்கிதம்
செய்கின்ற எம்பிராட்டி!
கற்றதும் கற்பதும் தனையுந்தன் பதியையுங்
கருதிவழி படற்கேயலாற்
காசினியி லேபிற அறிவுறற் கன்றென்று
காட்டிடுந் தெய்வதீபம்!
சிற்றிளங் குழவியாய் எம்முனர் இன்போடு
சப்பாணி கொட்டியருளே
சீர்வளர் முன்னையிற் பேர்வளர் செல்விநீ
சப்பாணி கொட்டியருளே. 32

---

*31. கதிர்-சூரியன்*

*32. கோடு -கொழுகொம்பு, இங்கிதம்-இனிமை, காசினி-உலகம்.*

கான மயிற்கெழிற் சாயல் பயிற்றிடு
கவின்மிகும் அபிராமி!
கந்த மலர்முகத் தின்னளி தந்திடு
கரிய விழிக்குமரி!
தான மெனக்கிளி இன்மொழி வேண்டிடத்
தயைபுரி சொல்லழகி!
தண்ணிய தடமுறை அன்னமும் வெள்கிடத்
தகுநடைக் குரியாளே!
ஞான மிகுத்திடு மோன தவத்தினர்
நாடுமி ளம்பிணையே!
தஞ்ச மெனக்கொளும் அஞ்சுக மேசிறு
பஞ்சடி வஞ்சியளே!
கூனை நிமிர்த்திடு காழியற் கன்னைநீ
கொட்டுக சப்பாணி
குளிர்வள முன்னையில் அருள்தரு நாயகி!
கொட்டுக சப்பாணி. 33

ஊழி முடிவில் வடவைத்தீ
உருத்தெ ழுந்தே அண்டமெலாம்
ஒருசில நொடியில் நீறாக்க
ஓல மிட்டுக் கடல்யாவும்
பாழின் மீது பாய்ந்தோடிப்
பரிநா சத்தை ஆக்கிவிடப்
பரமன் சீற்றத் தோருருவாய்ப்
பயங்கர நாட்டம் பயில்கையிலே
யாழின் இனிய சொல்லுடையாய்!
யாமளை! யாதவற் கிளையாளே!
யமற்கும் யமனாம் சங்கரனின்
யார்க்கும் அடங்கா வெகுளியினை
வீழ வைத்தருள் மெல்லணங்கே!
விரும்பிக் கொட்டுக சப்பாணி
வேயனை தோளி! முன்னையர்நாம்
வேண்டக் கொட்டுக சப்பாணி. 34

---

33. *கந்தமலர்-மணமுள்ள மலர்(கந்தம்-மணம்), தடம்-குளம், மோனம்-மௌனம், பிணை-பெண்மான், காழியன்-சீர்காழியில் அவதரித்தருளிய திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார். இவரை முருகனின் அவதாரம் எனக் குறிப்பததும் உண்டு. ("வழுதி கூன் நிமிர்த்த பெருமாளே"-திருப்புகழ்)*

34. *வடவைத்தீ-வடவாமுகாக்கினி, உருத்து -கோபித்து, யாதவன்-யாதவ குலத்தினனான கண்ணபிரான், வெகுளி-கோபம், வேய்-மூங்கில்.*

கண்ணினைக் கூச வைத்திடும் ஒளியும்
காண்டிற் கரியதே யாகும்
கணந்தொறும் புதிய வடிவினைக் கொள்ளல்
கண்களுள் அடங்கிட வில்லை
பணங்கொளும் அரவைப் பணிகளாய்ப் பூண்ட
பாதிமெய் பயமிகுவிக்கும்
பாரெலாம் நிறைத்துக் கடந்தெழும் சோதி
பார்த்திடும் தகுதியிங் கில்லை
குணங்குறி யாவும் கடந்தஎம் தாயே!
குழவியாய் எம்முனர் வருக
கோதிலா உன்றன் குளிரெழில் நிலவிற்
குளித்திடல் எம்விழை வாகும்
பிணங்குத லின்றி முன்னையில் வந்து
கொட்டுக சப்பாணி
பேதையர் நாங்கள் உளங்களி கூரக்
கொட்டுக சப்பாணி. 35

குளிர்தரு நறுமலர்ப் பொழில்தரும் பெருமெழில்
குலவிடும் பழனங்கள்
கொழித்திடும் பெருவளம் மிகுநலத் திருதரும்
குவலயத் துயர்முன்னை
வளர்தரும் சிறுமியைக் கயிலையை விடுத்திங்கு
மகிழ்தரும் மகிமையளை
வரைகெழு மகளினை மனோலயத் துடன்மிக
வழிபடப் பரிபவளைத்
தளர்வுறத் தணைத்துநன் னலம்பல தருவதில்
தனக்கிணை ஒருவரில்லாத்
தகைமையிற் பொலிவுறும் தகையளை இமையவர்
தமக்குமுன் னிருப்பவளைக்
குழைவுறும் மனத்துடன் அழைக்குவம் அமுதமே!
கொட்டுக சப்பாணி
கோவலற் கிளையபெண் ணரசியே! மகிழ்வுடன்
கொட்டுக சப்பாணி. 36

*35. பணம்-(பாம்பின்), படம், பணிகள்-ஆபரணங்கள், பிணங்குதல்-மாறுபடுதல்.*

*36. இமையவர்-தேவர், கோவலன்-கண்ணபிரான்.*

வள்ளற் பசுக்கள் பால் சொரிய
வளர்ந்த தெங்கிள நீர்நல்க
வணப்பார் வயல்கள் நெல்மணியை
மலைபோற் குவிக்க எந்நாளும்
தள்ளா விளையுள், தக்கார்கள்,
தாழ்வில் லாப்பெருஞ் செல்வருமாய்த்
தழைக்கக் கடைக்கண் சாத்தியருள்
தயாநிதி! முன்னீச் சரத்தானே!
கொள்ளைநின் னழகைத் தம்விழியாற்
கொள்ளக் கூடும் அடியர்குழாம்
கூடும் அன்பாற் கூத்தாடிக்
குளறி உரோமாஞ் சலிகொள்ள
விள்ளற் கரிய இளமானே!
விழைந்து கொட்டுக சப்பாணி
மேலாம் மறைகள் துதிபாட
விளங்கிக் கொட்டுக சப்பாணி. 37

செருவில் அசுரன் சிரசு விழவே
செறுத்த மகிட மர்த்தனி!
சிறுமை பலவும் அழிய வகைசெய்
சிவனுக் குரிய பத்தினி!
கருவை உறுதல் குழவி பெறுதல்
கடந்த விமலி சமரிநீ
கடைக்க ணருளிற் படைத்தும் அளித்தும்
களிக்கும் அமிர்த வர்ஷனி!
புருவ நடுவில் விழியை உடைய
புயங்கன் அடியர்க் கரணும்நீ
புதுமை பழைமை இளமை முதுமை
புகுதற் கரிய அரணும்நீ
சருவ புவன அரசி! பரிவை
அருளிக் கொட்டுக சப்பாணி
சகல அவலம் முனையில் அகல
ஜனனி! கொட்டுக சப்பாணி. 38

---

*37. குழாம்-கூட்டம், விள்ளல்-எடுத்துரைத்தல்.*

*38. செரு -போர், மர்த்தனி-வதம் செய்தவள், மகிடன்-எருமை முக அசுரன், (மகிடம்-எருமை) விமலி-மலங்களற்றவன், சமரி-துர்க்கை, அமிர்தவர்ஷனி-அமிர்தம் பொழிபவள், (வர்ஷம்-பொழிவு), புயங்கள்-சிவன், சருவ -(சர்வ) அனைத்தும்.*

வரம்பிலாப் பெருமைகொள் முன்னீர் சரத்தினில்
வயங்குமா மண்டபத்தில்
மாபெரிய கலைவிழா இன்றதன் உச்சமாய்
மகிழ்நடனம் ஒன்றாமதில்
நரம்பிசைக் கருவிக்கு நாயகம் எனத்தகும்
நல்வீணை வாணிகொள்ள
நந்திமத் தளத்தினை முழக்கிட நாரணன்
வேய்ங்குழல் இசைக்கவேதா
அரம்பையோ டுருப்பசி மேனகைதி லோத்தமை
ஆடற்கு நட்டுவாங்கம்
இயற்றிட நாரதர் தும்புரு கந்தருவர்
இன்னிசைப் பதமிசைக்கச்
சரிந்துதலை அசைத்து நடம்சுவைத் துமேகுழவி
சப்பாணி கொட்டியருளே
சாற்றிரிய ஆற்றுலுறை மாற்றலர்க் கிடியேறு!
சப்பாணி கொட்டியருளே. 39

பாங்கரும் முன்னைப் பதியினிலே
பரன்பரை மகோற்சவக் கொடியேற்றம்
பரவசம் தொடர்ந்திரு பத்தேழ்நாள்
பழம்பெரும் அடியர்க்குக் கொண்டாட்டம்
தீங்குள் கொடுமைகள் பாதகங்கள்
செய்பவர் கட்கினித் திண்டாட்டம்
சேரிம்மைப் பயன்களை வேண்டுபவர்
தேவியின் அருளுக்கு மன்றாட்டம்
ஓங்கி எழும்பத்தி வெறியானார்
உடல்வளைத் தாடும்நற் கூத்தாட்டம்
உணர்வு மிகுந்தெழப் போற்றிசையால்
உருகி இசைப்பவர் பெருங்கூட்டம்
தேங்கிடா தலையெறி சனக்கூட்டம்
தேர்ந்துநீ கொட்டுக சப்பாணி
சிறுபதம் மடித்திருந் தம்மே! நீ
சீர்தரக் கொட்டுக சப்பாணி. 40

---

*39. வயங்கும்-விளங்கும், மாற்றலர்-பகைவர்.*

*40. பாங்கரும் - சிறப்புமிக்க*

## 4. முத்தப் பருவம்

கத்திக் கொழிக்கும் ஆழ்கடலிற்
களித்துத் திரிந்த நற்சிப்பி
கருவா யிருந்து வயிறுளைந்து
கவினார் ஒளியிற் றிளைக்குமொரு
முத்தை ஈனச் சுழியோடு
முயன்று பெற்ற அம்முத்தும்
மும்மத வேழ முகத்துமிக
முதிர்ந்த கொம்பிற் பெறுமுத்தும்
நத்தும் மூங்கிலில் விளைமுத்தும்
நல்லன் எனினும் நங்களது
நங்கை வடிவாம் பிகையுன்றன்
நகைமுத் தத்திற் கிணையாமோ?
சித்தம் களிவெளி கொள்ளஅருட்
செல்வி! முத்தம் தருகவே
சீரிய பவளச் செப்பிதழால்
தேவி! முத்தம் தருகவே. 41

எழிலி னிலகு தரள எயிறும் எமது தமிழொத் திலகிடும்
இனிய அரிய மகிமை மிகவும் இழைக்கும் கொவ்வையின் அழகதும்
வழியும் அமுத உமிழ்நீர் கமழும் மணமும் சுவையும் இதழுமென்
றிவையும் மருவி அருவி எனவே எமதுள் எமதிற் பெருகிடச்
சுழியும் கதுப்பிற் கனியு மழகிற் சுருண்டு மயங்கும் மதுகரம்
சுகங்கொள் வதென அகங்கொள் மகிழ்விற் செகத்தை மறக்கும் மறப்பதும்
ஒழியப் பிறிதொன் றறிவ திலதெம் அழகி! தருக முத்தமே
உயிரி னிலகிப் பயிலும் முனையின் ஒளியே! தருக முத்தமே. 42

---

*41. மும்மதம்-கன்னமதம், கபோதமதம், பீஜமதம் ஆகிய மும்மதங்கள், வேழம்-யானை, நத்தும்-விரும்பும் முத்து, முத்தம் என்பன முத்தையும், முத்தத்தையும் (முகர்தல், கொஞ்சுதல்) குறிக்கும்.*

*42. தரளம்-முத்து, இலகு -இலக்கு(ம்) எயிறு -பல், இழைக்கும் - ஆக்கும், மருவி-கூடி, சுழியும்-(கன்னத்தில்விழும்) அழகிச் சுழிகளும், மதுகரம்-வண்டு, முன்னையின் என்பது -முனையின் எனத் தொகுத்தல் விகாரம் பெற்றது. இனிவரும் இடங்களிலும் இவ்வாறே கொள்க.*

வெள்ளிப் பனிமலை மீதினிலே
வெள்ளை நீற்றன் மெய்புளகம்
மேவத் தழுவி அவனுக்கு
மேலாம் முத்தும் ஈபவளே!
துள்ளித் திரியும் வேழமுகன்
தூங்கும் கரத்தான் தனையென்றுந்
தள்ளற் கரிய பாசத்தால்
தழுவி முத்தம் தருபவளே!
கள்ளார் கமலத் தடமான
கவினார் சரவணம் சென்றங்கே
கந்த பாலற் கறுமுகமும்
களிக்க முத்தம் அருள்பவளே!
எள்ளல் வேண்டா முன்னையராம்
எமக்கு முத்தம் தருகவே
ஏழை யேமென் றிரங்கியெமக்
கினிதாய் முத்தம் தருகவே. 43

போர்முகில் வந்து திரண்டிருண் டேபிருள்
போர்த்திடு போதினிலும்
புன்மைகள் மேலெழுந் திழிவுக ளுள்ளே
புதைபடு போதினிலும்
சீர்மிகும் இந்தும காகடல் மத்தியிற்
றிகழ்ந்திடும் இலங்கையிலே
பேர்பெற நின்று பிறங்கிடு முன்னையின்
பேரும்பெயர் நாயகியே!
பேணிடு பைரவி! கெளரி! கௌமாரி!
பிஞ்ஞகன் பங்கினளே!
மூர்த்தி கரம்மிகு மாலவன் பின்னையே!
முத்தம் தந்தருளே
முத்துக் குமரனின் பத்திக் குரியாய்!
முத்தம் தந்தருளே. 44

---

*43. புளகம்-மயிர்க்கூச்சு (உரோமாஞ்சலி), கள்-தேன்.*

*44. புன்மைகள்-இழிவுகள், பிஞ்ஞகன்-சடாமுடிதரித்தவன்(சிவன்), பின்னையள்-தங்கை.*

மஞ்சு லாவி வளம்புல நல்கும்
மரக தமணித் தீவினைச் சூழ்ந்து
மகத்து வம்மிக்க மாகடல் இந்து
மணிகள் கொண்டு தரைமிசைச் சேர்க்கும்
பஞ்சு மெல்லாடிப் பாவையர் கூடிப்
பாடி ஆடிப் பரவசம் கொள்வார்
பகர்சி லாபத்தின் ஆழிமுத் தீனும்
பளிச்சி டும்அவை அணிகளில் ஏறும்
தஞ்சம் என்றுனை நாடிடும் தொண்டர்
தாழ்வி லாப்பெரும் பேறடை வார்கள்
தண்ண ளிக்குயர் லட்சியம் ஆவாய்
தாய்எ மக்குநீ சேயுமே ஆவாய்
விஞ்சும் அன்புடன் வீற்றிருந் தோநாம்
மேன்மை பெற்றிட முத்தமருளே
விழவு பற்பல வாற்பொலி முன்னை
மேவி னாயெமக்கு முத்தமருளே. 45

புண்ணி யம்முன்பு செய்தவரும்
புரையில் சூணத்திற் பொலிவாரும்
போற்றி உன்னடி பிடிப்பாரும்
பொருந்த உன்பணி செய்வாரும்
பண்ணிற் பாடிப் புகழ்வாரும்
பாரில் விழுந்து பணிவாரும்
பத்தி மிகவே வீதியினிற்
பலகால் உருண்டு வருவாரும்
நண்ணிக் காவடி எடுப்பாரும்
நதிபோல் முன்னை வருகின்றார்
நாகம் அணிவோன் நாயகியே!
நங்கள் உயிருள் உயிரேநீ
உண்ணீர் உண்ணீர் என்றழைத்துன்
உவகை முத்தம் அருள்கவே
ஓதும் வேதத் துட்பொருளே!
உனது முத்தம் அருள்கவே. 46

---

*45. மஞ்சு -முகில், மகத்துவம்-மேன்மை, பாவையர்-பாவை போலும் அழகிய பெண்கள், தண்ணளி-இரக்கம், கருணை, விழவு -விழாக்கள்.*

*46. புரை-குற்றம்.*

சத்தி இன்றேற் சிவமில்லைத்
தத்துவம் இதனில் வேறில்லை
சங்கரன் திரிபுரம் எரித்துதவும்
தகவில் கூற்றினை மாய்த்ததுவும்
மத்தம் மதம்மிகு யானையினை
மடுத்தே உரித்துப் போர்த்துதவும்
மாலும் பிரமனும் காண வொணா
மகத்துவ சோதியாய் எழுந்ததுவும்
அத்தனைப் பிரியா தவன்பாகம்
அமர்ந்தவுன் திருவிளை யாடல்களே
அக்கினி யுடனே சூடொன்றி
அகலா தமைந்தவுன் ஆற்றல்களே
உத்தமி மகிடனின் மர்த்தனியே!
ஒருகால் முத்தம் தருகவே!
உன்னத முன்னையில் ஓங்கியொளிர்
ஒளியே! முத்தம் தருகவே. 47

பாலா என்றும் பூரணி என்றும்
பவநா சினிஎன்றும்
பற்பல நாமம் பற்பல் வடிவம்
பாங்காய்க் கொண்டிடுவாய்
மாலா கிப்புவி மாயையில ஆழ்வார்
மயக்கம் போக்கிடுவாய்
மதிவலி யாலுறும் ஆணவம் அழித்து
மாண்பினில் வைத்திடுவாய்
"காலா உன்னைக் காற்றூசாகக்
கருதுவம்" என்பாரின்
கருத்தினிற் குறுதி நல்கிடும் வலிய
காலாந் தகியாவாய்
ஏலார் குழலி முன்னைய வேமெல்
லியலே! முத்தருள்க.
இசைவாய் இருந்தெம் இன்னல் களைஏந்
திழையே! முத்தருள்க. 48

---

*47. மத்தம் -களிப்பு (மதம்)*

*48. மாலாகி-மயக்கம் கொண்டு, காலாந்தகி (கால அந்தகி)-யமனுக்கும் யமனானவள், ஏலார்-(ஏலம் ஆர்)-மணம் ஊட்டப்பட்ட, குழலி-கூந்தலை உடையவள், ஏந்திழை- ஆபரணம் தரித்தவள், (வினைத் தொகைப்புற்றத்துப் பிறந்த அன்மொழித் தொகை), மெல்லியல்- மென்மையான இயல்பினள் (பண்புத் தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை)*

தாயில்லைத் தந்தை யில்லைத் தருஞ்சுற்றஞ் சூழவில்லைத்
தயவாய் நின்றே
தண்ணளிசெய் துதவநல் லரசில்லைத் தலைவரிலைத்
தக்கார் இல்லைப்
பாயுவிழி நீர்துடைத்துப் பரிவுசெய் ஒருவரிலாப்
பாவி என்போல
பதறிநெருப் பிடைநின்று துடிக்கின்ற பலபேரிப்
பாரில் உள்ளார்
பேயாகி நடைப்பிணமாய்ப் பித்தர்களாய்த் திரிவோரைப்
பேணிக் காக்கப்
பெருமுன்னீச் சரமமர்ந்த பெண்ணரசி உனையன்றிப்
பெரியர் யாரோ?
தாயான நீயுனது தயாவினைக்காட் டறிகுறியாய்த்
தருக முத்தே
தந்தெம்மைத் தழுவிவிழி நீர்துடைத்து முன்னையினிற்
றருக முத்தே. 49

பாலே! தேனே! கனியே கரும்பின்
பாகே! கற்கண்டே!
பரவிநின் றுயிரினுள் உயிராய் எம்மைப்
பாலித் திடுமயிலே!
காலே தீயே புவியே வெளியே
கசிநற் றண்ணீரே
காணும் இவையுன் னுடைமை எனவே
கருதித் துதிக்கின்றோம்
சேலேர் கண்ணி! சிவையே! உமையே!
சிறந்திடு சிற்பரையே!
சிம்மத் தூர்ந்தே சிறுமை துடைக்கும்
சின்மய முன்னையளே!
மேலே ஒருவர் இல்லா முதலே!
முத்தம் தந்தருளே
மின்னல் இடைச்சி! கன்னல் மொழிச்சி!
முத்தம் தந்தருளே. 50

---

*49. தயா -தயவு*

*50. சேலேர்-சேல்ஏர், (சேல்+ஏர்) மீனைப் போலும் அழகிய, சேல்-ஒருவகை மீன், ஏர்-அழகிய சின்மயம்-(சித்+மயம்) ஞானமயம், இடைச்சி-இடையை உடையவளே! கால்-காற்று.*

## 6. வாரானைப் பருவம்

நனையா விழியும் உன்னாமம்
நவிலா நாவும் நின்பாத
நளினம் பணியாக் கல்மனமும்
நாயேன் உடையேன் ஆயிடினும்
தினையி னளவு நலம்பிறராற்
செய்யப் பெற்ற பெரியோர்கள்
தேர்ந்தே அதனை உளங்கொண்டு
சிறிதாம் என்று மறவாதே
பனையின் அளவாய்க் கொள்வதுபோற்
பரையே! என்முற் பிறவிகளிற்
பத்தி சிறிது செய்தேனேற்
பாலித் திடஎன் முன்வருக
அனையே! வருகஅன் பே!வருக
அழகே! வருக வருகவே
அரணே! வருக முன்னைவளர்
அமுதே! வருக வருகவே. 51

உததி அனைய பிறவி தொடர
உலகில் அலைவை அடைவதோ?
உயிர்கள் வினைகள் பெருக இழிவுற்
றுலைதல் மிகவும் உறுவதோ?
பதவி பெருமை தலைமை எனவே
பரவும் இருளில் உழல்வதோ?
பகைமை மடைமை சிறுமை வறுமை
படர மலைவை அடைவதோ?
நிதமும் இவைகள் நினையும் அறிஞர்
நினைவில் உலவும் மகதியே!
நெடிய கொடிய இழிவு தொலைய
நிதமுன் னையினை அடைபவர்
கதியை அருளப் பெரிது வருக
கடையர் எமையுன் உடைமை யாய்க்
கருதிக் கடிது வருக வருக
கனியே! வருக வருகவே. 52

---

*51. நளினம்-தாமரை, அனையே-அன்னையே என்பதன் தொகுத்தல் விகாரம்.*

*52. உததி-சமுத்திரம், மகதி-பார்வதி, கடிது -விரைந்து.*

செம்பவள மேனியில் வெண்ணீறு சண்ணித்துத்
திகழும் மேனி
சிறியமதி கங்கையினைத் தரித்தசிவன் பக்கலிற்
செவ்வே ளோடு
அம்பொன்னின் அணையிலமர்ந் தகிலமெலாங் காக்கின்ற
அருளின் செல்வி!
ஆலயகண் டாமணியும் அந்தணரின் மறையொலியும்
அழைக்க வந்தே
"எம்பெருமான், பெருமாட்டி, குகா" என் றேத்த
இணைவார் தம்மை
எக்காலும் அவர்களினைக் கைவிடா திருக்குமோர்
எழிலார் முன்னை
எம்பொன்னே! நன்மணியே! முத்தே! எங்கள்
இதயக் கோயில்
எழுந்தருள நீவருக வருக அன்னே!
இனிது வருகவே. 53

அணுமுதல் இமயம் அனைத்திலும் உள்நின்
றருளுவை அவற்றினுக் கப்பால்
ஆகுவை உன்னை அகத்தினிற் கொள்ள
ஆகுமோ? அடியவர்க் கல்லால்
மணமிகு முல்லை சண்பகம் கமலம் மருக்கொழுந்
திணைமலர்த் தொடையாய்!
மதிவலர் தங்கள் திறத்தினிற் காணா
மாபெரும் ஒளிவளர் சுடரே!
உணஉணத் தெவிட்டா அமிர்தமே! உன்றன்
உவப்புறு முறுவலைக் காண
ஓடியே முன்னைவந் துள்ளனம் தாயேம்
ஓரேஒரு முறையதைக் காட்ட
அணங்குகொள் புவியில் அறிவொளி ஏற்ற
அம்மையே! வருகநீ வருக
ஆடல்வல் லானின் ஆகத்தினிற் பாகம்
அமைந்தனை! வருகநீ வருக. 54

---

53. *சண்ணித்தல்-பூசுதல், செல்வேள்-முருகன், சிவன், உமை, கந்தன் மூவரும் கூடி அமர்ந்தருளும் மூர்த்தம் சோமாஸ்கந்த மூர்த்தம், முன்னீச்சரத்தில் மகோற்சவங்களிலே சோமாஸ்கந்த மூர்த்தியும், சந்திரசேகர மூர்த்தியும் (சந்திரனைச் சடையில் தரித்த மூர்த்தமும்) எழுந்தருளுவதும் பூசைபெறுவதும் வழக்கம்.*

54. *அணங்கு -மயக்கம்.*

பொன்னைத் தீயில் உருக்கிமிகப்
புடம்போட் டதனிலுங் காணாத
பொன்னே! பூத்த புதுமலராய்ப்
பொலியும் முகார விந்தமுடன்
கன்னிப் பெண்ணாய் நினைக்காணக்
கருதிய சிவனும் பித்தானான்
கண்ணிற் காணச் சிறுதுரும்பாய்க்
காட்டிய உன்றன் பேராற்றல்
உன்னாத் தீயும் பெருங்காற்றும்
உன்னுடன் பொருது தோற்றனவே
உடனங் கிருந்த தேவர்களும்
உன்றன் மகிமையை அன்றுணர்ந்தார்
அன்னே! இறைஞ்சிப் பணிகின்றோம்
அணித்தாய் எம்முன் வந்தருளே
என்னே! முன்னையர் பெரும் பேறென்[று]
எவரும் வியக்க வந்தருளே. 55

மூடிருளாம் அமாவாசை எனக்கொள் நாளை
முற்றுமுன் நினைவிலபி ராமிப்பட்டர்
முழுநிலா நாளென்றார் மன்னன் கேட்டு
முற்றியபித் திதுவென்றே முடிவு செய்யத்
தோடினது பேரொளியை மதியாய்க் காட்டித்
தொண்டரைநீ காத்திட்டாய் மடைமை ஒன்றாய்த்
தொக்கமூ டன்நாவில் நாமந் தீட்டிப்
தொல்லுலகிற் கவிக்கோமான் ஆக்கி வைத்தாய்
கூடியுன தடிபரவி நின்றார் தம்முட்
குலவிடுமிம் மைப்பெருமை கூடார் யாரே?
கோலஞ்செய் குளிர்வதனக் கொடியே! தேனிற்
குழைந்தெடுத்த கனியமுதச் சுவையே! நின்னைப்
பாடியருள் நாடியினி தாடி ஒன்றாய்க்
கூடும்எமை நாடிநீ வருகஇன்றே
பரவசத்தில் ஆழ்ந்திடநீ வருக முன்னைப்
பாலகியே! ஓடிவந் தருள்க நன்கே. 56

---

55. *முகாரவிந்தம்-(முக+அரவிந்தம்) முகமாகிய தாமரை. "சக்தியின் ஆற்றல் அறியாது அவளை மதியாத தேவர்களின் முன்பு சிறுதுரும் பாய்த் தோற்றியருளி, தன்னை அழிக்க முடியுமானால் அழிக்க என அறை கூவ. வாயுவும் அக்கினியும் முயன்று தோற்றபின் சக்தியானவள் தன்னுடைய பேருருவினை அவர்களுக்குக் காட்டியருளினாள்" என்பர்., இறைஞ்சுதல்-வணங்குதல்.*

56. *அம்பாள் தன் நாமத்தினை அவனது நாவிலே தீட்டியதால் கவிச் சக்கரவர்த்தியானவன் காளிதாசன் என்பது கதை.*

அன்னத் தூவியில் மென்மையவாய்
அனிச்ச மலரினும் நொய்ம்மையவாய்
அமைந்த நலமிகு தாளிணையும்
அரவிந் தம்எனும் நகைமுகமும்
சின்னக் காந்தட் சிறுவிரலும்
செழித்த பதுமத் தங்கையும்
சீரார் பூங்கொடி மேனுலவும்
செறிந்த சுவந்தற் காடதுவும்
என்றுங் கருணை நிறைவிழியும்
இசைபோல் இசைக்கும் இன்மொழியும்
எங்கட் கென்றே கொண்டு வரும்
இளைய பிள்ளாய்! முன்னையளே!
ஒன்றி உன்னை ஓவியமாய்
உளத்தில் எழுத வந்தருளே
ஓசை ஒலியெல் லாமானாய்!
ஒருகால் எம்முன் வந்தருளே. 57

தத்துப் பித்தென அடிவைத்துத்
தரையிற் குழந்தைகள் நடத்தல்போல்
தாயே! நீயும் அசைந்துவரத்
தமியேம் செய்த தவம்என்னே!
முத்தாய் முளைகொள் பல்லழகும்
முறுவல் விளையும் இதழழகும்
மொய்க்கும் வண்டினை எக்குமொரு
மோகனக் குவளை விழியழகும்
பித்தங் கொளச்செயும் நுதலழகும்
பெட்பார் முழுமதி முகத்தழகும்
பெரிதாய் வளர்ந்த நறுங்சுவந்தற்
பின்னற் சடையின் மின்னழகும்
நத்திக் கிறங்க எமைவைக்க
நல்லாய்! எம்முன் வந்தருளே.
நாடிப் பணிவார் நிறைமுன்னை
நங்காய்! எம்முன் வந்தருளே. 58

57. தூவி-சிறகு, தாளிணை-இரு திருப்பாதங்கள், பதுமம்-தாமரை, காந்தள்- கார்த்திகைப்பூ.

58. தமியேம்-தனித்தவரான(ஆதாரமற்றவரான) நாம், நுதல்-நெற்றி, கிறங்கல்-தலை சுற்றி மயக்கம் உண்டாதல்.

பாசக் கடலிற் சிக்குண்டு
பவத்தளை இறுக்க அலைப்புண்டு
பாரில் தாயின் வயிற்றினிலே
பத்துத் திங்கள் சிறையுண்டு
நீச மாந்தர் பிறத்தல்போல்
நீயுதித் தாயோ? இலைமேனை
நேரில் தவத்திற் கிரங்கியெழில்
நிறைந்த முளரியில் வந்திருந்தாய்
தாசன் இமயனும் அவளு முனைத்
தங்களின் உயிராய்க் கொண்டதனால்
தரையிற் குழவியைப் போல்வளர்ந்தாய்
தாய்க்கே உரிய பாசத்தால்
நேசத் தோடே அவள்தருபால்
நீயுண் டிடவே வந்தருளே
நிசமாய் முன்னையர் வேண்டுகின்றோம்
நிர்மலி யே! நீ வந்தருளே. 59

வருகுவை என்றுன் வழிதனில் விழிகள்
வைத்தவை பூத்தன மாலின்
மனமலர் மலர்த்தும் மாண்புடைத் தங்காய்!
மலைமக ளாய்உதித் தவளே!
உருகுமெம் முள்ளம் உனைநினை போதில்
ஒருகணம் பிரிந்திட லாற்றோம்
ஒளிக்கதிர் தெறிக்கும் உன்விழிப் பார்வை
ஒன்றுக்கே அலந்திடு கின்றோம்
அருமையோ டுரிமை அளவிலா அன்பால்
அழைக்குவம் அலட்சியம் இனுமேன்?
அசைகரு முகில்கள் மழைக்குறி காட்ட
ஆடிடும் மயில்கள்போ லானோம்
பெருமைசேர் முன்னைப் பதியினர் நாங்கள்
பெண்ணுனைக் காணவந் தருளே
பேதையர் எங்கள் பித்தினைப் போக்கப்
பேணியே விரைந்துவந் தருளே. 60

---

*59. திங்கள்-மாதம், நீசமாந்தர்-இழிவான மக்கள், நேரில்-(நேர்+இல்) ஒப்பில்லாத, தாசன்-அடியவன்.*

*60. அலந்திடுதல்-வாடிவருந்துதல்.*

## 7. அம்புலிப் பருவம்

தாமரை மொட்டுநடு மலர்ந்தவெண் தாமரை
தகுமென்ன வான்தடத்தில்
தாரகைக் கணத்தினிடை எழில்பெற் றிலங்குமிகு
தண்ணளி நிறைவெண்மதி
போமுனது வழியினிற் பூவிலும் மென்மையொடு
பொலிந்திடுங் குழவிபலரைப்
போற்றிடும் யாழ்குழலின் இனியவிசை தோற்றிடப்
புறங்காண் வல்லபலரைக்
காமலர்கள் என்னநீ கண்டுகளி கொண்டதைக்
கருத்திலே வைத்துரைப்பாய்
காருலவு முன்னையிற் காணுமிவ் வழகினுக்
கழகிபோற் கண்டதுண்டோ?
காமமுறை யாதுண்மை கூறியவள் பக்கலிற்
களித்தாட ஓடி வாவே
கந்தரக் கடுவரிற் பந்தமுறு சுதந்தரி
களிக்கநீ ஓடிவாவே. 61

காதலர் வாழ்வினிற் களிப்பருள மண்ணினிற்
கதிரொளி வீசுமதியே!
காலாதி காலமாய்க் கவிவாணர் பாவினிற்
கருவாகி யுள்ளமதியே!
சீதளக் குளிர்மையாற் செகமெங்கும் இன்பினிற்
றிளைத்திடச் செய்யுமதியே!
சிவபிரான் முடிமீது திகழ்கின்ற தவத்தினைச்
செய்ததால் வாழு மதியே!
மோதிவரு கடலலைகள் அருச்சிக்க நின்றவை
முழுவெள்ளி யாக்குமதியே!
மோகனப் பேரெழிலி முன்னைப் பதியினாள்
முகமலர வைக்கவேண்டி
ஆதரத் தோடன்னை மேனைமையாள் அழைக்கின்றாள்
அம்புலி! ஆட வாவே
அரியபா லன்னமதை அவளோடு பகிரலாம்
அம்புலி ஆட வாவே. 62

---

*61. தாரகை-நட்சத்திரம், தோற்றிட -தோல்வி அடைய, கா -பூஞ்சோலை, காமம்-பக்கச் சார்பு, கந்தரம்-கழுத்து, கடுவர்-நஞ்சினர் (கடு -நஞ்சு, ஆலகால விடத்தை அருந்தியவர்.)*

*62. சீதளம் -குளிர்மை, எழிலி-அழகுடையாள் (அம்மை), ஆதரம்- அன்பு.*

அன்னையின் வுலகினுக் கன்னமிட் டளித்தருளும்
அன்னபூ ரணியென்பதோர்
அருத்தமிகும் உண்மையை அறிந்துளோம் ஆதலால்
அதிசயித் திடுகின்றனம்
அன்னையென இமவானின் பாரியெனு மேனையாள்
அமையஅவள் மடியின்மீதில்
அழகாய் அமர்ந்துளாள் அடஞ்செயும் பிள்ளையாய்
அன்னையளி பாற்சோற்றினைத்
தன்னரிய வாயினுள் ஏற்காது தள்ளிமிகு
தாரகை நிறைந்தவானில்
தண்ணொளி இறைத்துவரு வெண்மதி! உனையின்று
தன்னுடன் ஆடவரவே
உன்னியே விழிநீரை உகுக்கிறான் முன்னையாள்
அம்புலி ஆட வாவே
இவளினைப் போலுனக் கொருதோழி கிட்டுமோ?
அம்புலி ஆட வாவே. 63

பாலாழி மீதன்று பெற்றவமு தத்திலொரு
பருத்துளி நீயுமன்றோ?
பாலகி இவளின்முன் னவன் கடைந் ததுவென்று
பகருண்மை அறிவையன்றோ?
காலனின் காலனாம் கறைகண்டன் அமுதோடு
கடுவிடம் எழுந்தகாலை
கடிததனை உருட்டியே உண்டிருக் காவிடிற்
காண்டிடற் கின்றிருப்பையோ?
சாலவே இவையாவும் மீளநி நினைவையேற்
சட்டென்று வருதல்வேண்டும்
சகமெலாம் ஒளிசெய்து நீபெறும் புகழெலாம்
சங்கரியொா டிணைந்தாடலின்
சீலமோ டொப்பிடிற் சிறியநீர்க் குமிழியாம்
சிறியமதி! ஆடவாவே
சம்புவுக் கினியமுன் னையளையேய்க் காதுமே
சந்திரா! ஆட வாவே. 64

---

*63. பாரி-மனைவி, அடஞ்செய்தல்-பிடிவாதம் பிடித்தல்,*
*உகுத்தல்-சிந்துதல்.*

*64. பரு-சிறிய பருவின்(குரு) அளவான, முன்னவன்-தமையன்(திருமால்),*
*கறைகண்டன்-நஞ்சுக்கறை பொருந்திய கழுத்தினன் (சிவன்).*

முன்னவர் அறியொணா முன்னவன் முன்னையர்
முத்திக்கு வித்தானவன்
மூவர்க்கும் அரியவன் தேவர்க்கும் தெரிகிலன்
முழுமுதற் கடவுளென்றும்
தன்னிடப் பாகத்தில் மன்னிட வைத்திட்ட
தயாபரி சிறுமதலையாய்த்
தன்னையே ஒடுக்கிவந் திம்முன்னை உறைவதால்
தன்னிலை மறந்தாளென
உன்னினை போலும்நீ ஒளித்துவிளை யாடலால்
உனைப்பெரியன் என்பைபோலும்
ஒருகணம் இவள்பெருமை உனதுளத் தெண்ணிடில்
ஓடிநீ வந்திடாயோ?
அன்னையிவள் சீற்றத்திற் காளாகி மாளாமல்
அம்புலி ஆடவாவே
ஆனந்த ரூபிணி அனந்தகுண சோபினியொ
டம்புலி ஆடவாவே. 65

நல்லரைக் காக்கவும் தீயவரை மாய்க்கவும்
நல்லவருள் கொண்டுபுவியில்
நவியனைய கோசலை தயரதன் தவத்தினால்
நாரணன் இராமனாகிச்
சொல்லரிய அழகோடு வளர்கின்ற காலையிற்
சோதியுறு வானில்வந்த
சுடராகும் உன்னையொரு தோழனாய்ப் பெறஎண்ணிச்
சோறுண்ண மறுத்தபோதில்
வல்லனாம் சுமந்திரன் கண்ணாடி தன்னிலுன்
வடிவினைக் காட்டமகிழ்ந்தான்
வள்ளலவன் தங்கையாம் எள்ளலறு முன்னையாள்
மதியூகி ஏய்த்தலரிதாம்
அல்லிடை ஒளிதரல் போலஅவள் முகமொளிர
அம்புலி! ஆடவாவே
அவளிடை வருதலொன் றன்றிவழி வேறில்லை
அம்புலி ஆடவாவே. 66

65. மதலை-குழந்தை, அனந்த குண சோபினி-முடிவில்லாத குணங்களாலே ஒளிர்பவள் (அம்மை)

66. நவி-(நவ்வி என்பதன் தொகுத்தல் விகாரம்) பெண்மான், எள்ளலறு-(எள்ளல்+அறு) பரிகசித்திற்கு இடமே இல்லாத, மதியூகி-சிறந்த

இந்திர கோபமென இலங்குசெம் மேனியில்
இடைவிடா தொளிகான்றிடும்
இரத்தினம் தரளமொடு பொன்னணிகள் யாவையும்
இளநிலா எறித்துநிற்க
விந்தைமிகு மணநாறு கஸ்தூரி புனுகுசவ்
வாதுசண் ணித்து மிளிர
மேனியிற் பூசுசந் தனக்கலவை யுடன்நெற்றி
மேவுசிற் தூரதிலகம்
தந்திடும் பேரெழில் சிந்திடும் பரிமளத்
தரத்தினைச் செப்பலாமோ?
தன்னெழில் அறியாத தன்மையள் இன்றுனைத்
தன்னுடன் ஆடவேண்டல்
விந்தையிற் பெருவிந்தை ஆயினும் மறுக்காது
வெண்மதி ஆடவாவே
மேலான ஈசனது வேணியில் உறைகின்ற
வேண்மதி ஆடவாவே. 67

பன்னெடிய காலமாய் விண்வெளி யிலேயுனைப்
பார்த்தவர் மாய்ந்தொ ழிந்தார்
பழைமையொடு முதுமையும் பிணியுமுற் றுற்றதைப்
பரையறிவள் என்ற பயமோ?
உன்னுடைய வெண்ணிறம் காமாலை யென்றதை
உலகினுக் கொளிக்க நினைவோ?
உவையெலாம் உண்மையா மெனினும்நீ அஞ்சற்க
உனைப்போன்ற முதியோ ரையும்
பன்னரிய பெருமையள் எம்பிள்ளை வெறுக்கிலாள்
பாட்டன்என் றன்பு செய்யாள்
அன்னவாம் உண்மையினை உளத்தினிற் கொண்டிங்ஙன்
அம்புலி ஆட வாவே
அம்மையுளங் களிகொள்ள முன்னையம் பதியினில்
அம்புலி ஆட வாவே. 68

---

67. *இந்திரகோபம்-தம்பலப்பூச்சி, தரளம்-முத்து, சிந்தூர திலகம்-சிவப்புப் பொட்டு, பரிமளம்-நறுமணம்*

68. *அஞ்சற்க -பயப்பட வேண்டாம். பன்னிரிய -(பன்னுதற்கு அரிய) சொல்கடந்த, அன்னவாம்—அத்தகையனவான.*

அற்பனுக் குப்பவிசு வந்திடிற் பெரியோரை
அலட்சியம் செய்து தன்னை
ஆகாய உச்சியில் அமர்ந்தவன் போற்பெருமை
அளக்குவன் என்னு முண்மை
உற்பவித் ததுஉன்னி லோஎன்ற பேரையம்
உளத்தினிற் பிறக்க வைக்கும்
உலுத்தனே! தக்கனது சாபத்தி னாலுன்றன்
உருக்குலைந் ததும றந்தாய்
உற்றுநீ எம்பிரான் அடிபற்றி னாயின்றுன்
உருத்தேய்ந்தும் அழித லற்றாய்
உன்னதத் தவன்பன்னி முன்னையில் உறைகன்னி
உலகநா யகியு ணர்வாய்
அற்றவர்க் காதரம் ஆனஇவள் அழைப்பேற்பை
அம்புலி ஆட வாவே
அழுங்கெனப் பிடிவாதம் ஆகாது காணுடன்
அம்புலி ஆட வாவே. 69

"மதி, மதி" என்னுன்னை மதிப்புடன் அழைப்பினும்
மதித்திடா மூடமதியே!
மகத்தினில் நீபெற்ற மதுரசம் உன்றனை
மயக்கவும் நிலைமறந்தாய்
பதிந்துனில் நிலையாகக் கறையிருந் திடுவதும்
பாவலர் முயலென்றதைப்
பாடியுன் குறையினை மறைத்தலும் எமக்கெலாம்
பகிரங்க மானபோதும்
நதியினைச் சடையினில் வைத்தவன் பாகத்து
நாரியின் வேண்டுகோளால்
நாமுன்னைப் பலவா றிரக்கின் றனம்வானில்
அதிவிரைவி னோடுமவள் முகமலர வைக்கவே
அம்புலி ஆடவாவே
அரன்முடி யிலேயினும் இடம்பெறுதல் வேண்டுமேல்
அம்புலி ஆடவாவே. 70

---

*69. பவிசு -பெருமை, உற்பவித்து -பிறந்து, பன்னி-பத்தினி என்ற சொல்லின் திரிபு, மனைவி, அற்றவர்-துணையில்லாத அகதிகள், ஏதும் இலிகள்.*

*70. 1.மதி-சந்திரனே (விளி) 2.மதிப்புடன்- கௌரவமாக, மதித்திடா-மதிப்பளிக்காத, மூடமதியே-மூடமான புத்தி (மதி-புத்தி) உள்ளவனே, மகத்தினில் (முகம்-அத்து+இல், மகம்-வேள்வி) வேள்வியில், நாரி-பெண்.*

## ௮. அம்மானைப் பருவம்

ஆயிரத் தெட்டண்டம் கைப்பந்த தென்னவே
ஆடிடும் எங்கள் அன்னாய்!
அவையுன்றன் அணிபாதச் சிலம்பின்ஒலி என்னவே
அதிர்ந்திடச் செய்ய வல்லாய்!
★தாயிலைத் தந்தையில்லைத் தண்ணளிசெய் ஜனனிநீ
தாய்முலை சுவைக்கி லாதாய்
தந்திடுவை உன்னமுத கலசமத னாலுலகு
தழைத்துச் செழிக்கு மன்றோ?
பாயிருட் பட்டுலகு வாட்டமுறு வேளைதனிற்
பரிந்தருளை ஈய வல்லாய்!
பாலகி ஆனதெம் மேலதிற் கொண்டவருட்
பாலிப் பெனல்சத்ய மாம்
ஆயெமக் கென்றுமாய் முன்னைக்கு வந்தனை
அம்மானை ஆடி அருளே
அருளுளக் கருத்தெமக் கறிவித்து நின்றுநீ
அம்மானை ஆடி அருளே 71

ஐம்பொறி எனுந்தீயில் அர்க்கியம் ஆகவுயர்
அரள்ஞானம் அவிச தாக
அதனோடு ஞேயமாம் வத்துகளை இட்டுமே
அயர்விலா ஞானி செய்யும்
உம்பருஞ் செய்யொணா உயர்மகப் பாவனை
உத்தமச் சித்து நிலையில்
அறிவானும் அறிவதும் அறிபொருளும் என்கின்ற
அஞ்ஞானம் தீய்ந்து போகும்
இம்பரில் அம்மையே! உன்றனுக் காற்றிடும்
ஏற்றமார் ஸ்ரீ சக்கர
இயல்பமை பூசையின் உச்சமென் றிதனினை
இயல்புணர்ந் தார்உரைப்பர்
அம்பொனே! முன்னையில் இப்பூசை ஏற்றுநீ
அம்மானை ஆடி அருளே!
அரியயன் காணொணா அரனுடைய பன்னியே!
அம்மானை ஆடி அருளே. 72

---

*71.★ சிவபிரான் போலவே அம்மையும் அநாதி. எனவே அவளும் தாயும் தந்தையும் இல்லாதவளே. சாக்தர், பரம்பொருளாகக் கொண்டு வழிபடும் அவளுக்குப் புராணங்களே தக்கன், இமவான் ஆகிய தந்தையரைக் கற்பிக்கின்றன.* ***ஆய்***-*அன்னை,* ***அம்மானை***-*பெண்கள் எறிந்தாடும் கறங்கு போன்றதொரு கருவி.*

*72.* ***ஐம்பொறிகள்*** *-மெய்(உடல்), வாய், கண், மூக்கு, செவியாகிய ஐந்துறுப்புக்கள்,* ***அர்க்கியம்***-*நீர்வழிபாடு,* ***அவிசு*** *-வேள்வித்தீயில் இடப்படும் உணவு (அவிரப்பாகம், அவி எனவும் வழங்கும்)* ***ஞேயம்***-*நெய் வத்து-(வஸ்து) அவிரப்பாகத்துள் இடப்படும் பிறபொருள்கள்,* ***உம்பர்*** *-தேவர்* ***இம்பர்***-*இவ்வுலகம்,* ***ஸ்ரீ சக்கர பூசை*** *-அம்பிகையை ஸ்ரீ சக்கரம் என்ற யந்திரத்தில் வழிபடல்,* ***இயல்புணர்ந்தார்*** *-சாக்தர்.*

நிற்பதும்நீ நடப்பதும்நீ நிலைபே றின்றி
நிகழ்ந்துமுடி வனவெல்லாம் நினது தோற்றம்
நிர்விகா ரப்பொருளாய் நின்ற வண்ணம்
நீள்புவியில் விகாரங்கள் நிகழ்த்துவித்தே
அற்பமிவை எனக்காட்டி மறைப்பு நீக்கி
அருள்ஞானம் இறுதியிலே அளிப்பாய் நீயே
ஆதலால் உனையல்லாற் கதியொன் றில்லை
அறிதோறும் அறியாமை அகலச் செய்யும்
சிற்பரையே! சியாமளையே! சிந்தாகூலம்
தீர்ப்பவளே! ஜகத்ஜனனி! சிவனார் போற்றிச்
சித்திரமாய் உளத்தெழுதி அழகு பார்க்கும்
சவுந்தரியே! நிரந்தரியே! சம்புபாரி!
அற்பரெமக் கிரங்கியிளம் பாலையாகி
அழகாக அம்மானை ஆடநன்கே
அசைந்தசைந்து கைபரப்பி மேலெறிந்தே
அன்னாய்! நீ அம்மானை ஆடு நன்கே. 73

ஆன்மா என்றிடில் அஃதொன்றே
அதுவே நிலையாம் பராசக்தி
அன்றிமற் றுளவெலாம் அசத்தியமாம்
ஆகவே ஒன்றே பரப்பிரமம்
என்றும் உள்ளது வேறில்லை
உள்ளன இல்லன பிறவெல்லாம்
ஓர்ந்திடின் வானத் தாமரையென்
றுணர்ந்தே சாக்தர் உரைத்திடுவர்
உன்னிடு சத்துசித் தானந்தம்
ஒன்றிய சங்கமம் சக்தியலால்
உரைத்திடப் பிறிதொன்றும் இல்லையென
உணர்வதே உண்மையென் றிசைத்திடுவார்க்[கு]
இன்னிலை ஈந்திடு சிற்பரையே!
இனிதாய் ஆடுக அம்மானை
ஏரார் முன்னைப் பதிநிதியே!
இசைந்தே ஆடுக அம்மானை. 74

---

73. *நிர்விகாரம்-விகாரம்(பாதிப்பு) அடையாமை, விகாரம்-பாதிப்பு, மாறுதல், சிந்தாகூலம்-மனக்கவலை, ஜகத்ஜனனி-உலகத்தாய் (ஜனனி-தாய்)*

74. *சத்து, சித்து ஆனந்தம் -சச்சிதானந்தம்: உண்மை, அறிவு, தூயமகிழ்வு இவை மூன்றும் இணைந்த சச்சிதானந்த சொரூபிணியாக அம்மையைச் சாக்தர் கொள்வர், இன்னிலை-இனிமையான உயர்நிலை (முத்தி), பதிநிதி -(முன்னையாகிய), தலத்தின் செல்வம்.*

காலையிற் காயத் திரியாவாய்
கடுமதி யஞ்சரஸ் வதியாவாய்
மாலையிற் சாவித் திரியாவாய்
மாண்பார் ஒளியினில் திளைத்திதுவாய்
சால மிகுந்திடு பத்தியுடன்
சாற்றியுந் நாமஞ்சொல் லித்துதிப்பார்
சங்கடம் போக்கிநல் லின்புறுதல்
சரதம் எனபதற் கையமுண்டோ?
சால்புடை வேதாந்த தத்துவத்தின்
சத்திய நெறியது நித்தியமே!
சகமுயர் ஸ்ரீசக்ர மத்தியளே!
சாற்றுதற் கரியவெம் வித்தகியே!
ஆலென எமக்கெலாம் ஆகிடுவாய்
அன்னே! ஆடுக அம்மானை
உரையினைக் கடந்தவெம் முன்னையவளே!
ஒளியே! ஆடுக அம்மானை. 75

கோடுமே கோடினுங் கோடெனக் கோடுவர்
கோடத்திற் கலையெழில் காண்பர்
கோலது கோடிடி லோஅது கொடுங்கோல்
கொண்டிடா ததனைநல் லரசு
"காட்டிற் புலியோ டுறைந்திடல் நன்றாம்
கசிவிலா ஆட்சிசார் நாடு
கனிவளந் தரினும் துயர்க்கிட" மென்று
கருதியே உரைத்தனர் முன்னோர்
வீடெலாந் துறந்து மென்மைகள் இழந்து
வேதனைக் கடலிலாழ் வோர்க்கு
வித்தகி! முன்னை மேவிய எழிலே!
மீண்டும்நல் லின்பம் மேவிட
ஆடிட அருள அருகினில் வந்தே
அம்மானை ஆடிநீ அருளே
ஆதரித் திவரை அளிக்குவை அன்னாய்!
அம்மானை ஆடிநீ அருளே. 76

---

75. *சரதம்-உண்மை, நிச்சம் ஸ்ரீசக்கரத்தின் நடுவிலே அம்பிகை எழுந்தருளி அருள் பாலிப்பாள் என்பர்.*

76. கோடு -வரி(-) கோடினும் -வளைந்தாலும் கோடு என அதனையும் (கோடு என்ற சொல்லாலேயே), கோடுவர்-கொள்வர், கோல்- செங்கோல் (நடுவுநிலைக்கு அடையாளமாக உள்ள நேரியகோல்), கோடிடின் (நடுவிநிலைநில்லாது ஒருபக்கம் சார்ந்து) வளையுமானால் ஆடிட-மகிழ்ச்சிக்கு அறிகுறியான ஆடல்பாடல்.

உருவை மருவி அருவை ஒருவி வருவை சிறுமி அருகிலே
ஒருமை அருமை யுறநீசிறுகை தனிலே பொருவில் பெருமைகொள்
விரியு மெழிலம் மனையி னுடனெம் விழிகள் விரிய மகிழ்வுற
விரைவில் திருவும் கலையின் உருவும் விறலி னெழிலும் உடன்வர
எருவை உரிவை செறியு மருவ முரியன் களிகொள் ளிமவதி!
இரவு ஒருவ மருவு பகலில் முனைய ரிடையில் வருகுவாய்
தருவை அனைய நிழலைத் தருமொர் அருளில் மருவு பெரியைநீ
தயவு மிகவம் மனைய ளறிந்து தழைவோடாடி அருள்கவே. 77

பழவினை புதுவினை எவைஎவை உளஅவை
பாறிஅழிந் திடவே
பரங்க ருணைத்தடங் கடலென வந்திடு
பர்வத வர்த்தனியே
குழைவுடன் உன்னடி கொள்பவர் உள்ளினிற்
கோயில் கொள்பவளே!
குற்றம் இழைப்பினும் பெற்றவ ளாதலின்
குணமாய்க் கொள்பவளே!
விழவுகள் மிக்கிடு முன்னையில் என்றும்
வீற்றிருந் தருள்பவளே!
மெல்லடி மண்ணினில் வைத்து நடந்து
மிக்கம கிழ்வுடனே
இழையணி மேனியொ ளிக்கதிர் வீசிட
ஆடுக அம்மானை
ஈசன் உவக்கத் தேசு மிகுக்க
ஆடுக அம்மானை. 78

---

77. *உருவை-(தூல) உருவினை, மருவி-அணைத்து, அருவை-உருவற்றி நிலையை, ஒருவி-விடுத்து, சிறுமி-அம்பாளைக்குறிக்கும் பொருவில்-(பொரு +இல்) ஒப்பிலாத, அம்மனை -அம்மானை (மானை மனை எனக் குறுகிற்று) திரு-இலக்குமி, கலையின் உரு -சரசுவதி, விறலின் எழில் (வீரத்திருவான) அழகிய துர்க்கை (மலைமகள்), எருவை-புலி, உரிவை-போர்வை, மருமம்-மார்பு, இமவதி-ஹைமவதி என்ற வடசொல்லின் திரிபு (ஹிமவானின் மகள் ஹைமவதி) என்றாவதை வடநூலார் தத்திதாந்தம் என்பர்), முனையர்-முன்னையர் தொக்குமுனையர் ஆயிற்று, தரு-மரம், தழைவு-மகிழ்ச்சியோடு.*

78. *தடங்கடல்-பெரியகடல், இழைப்பினும்-செய்யினும், தேசு-ஒளி.*

பெற்றா மரைத்தடம் பொலிவுமிகு கோபுரம்
கொலிகின்ற மதுரை என்ற
புகழ்பூத்த நற்பதியில் அமிழ்தொத்த நற்றமிழ்
புரக்கின்ற கயற்கண் ணியாய்க்
கற்றவர் மிகுந்திடும் தொண்டைமண் டலத்தினிற்
காஞ்சிநன் னகர மதனில்
கனிவினொடு முப்பத்தி ரண்டாகும் அறஞ்செய்து
காட்டியருள் காமாட்சியாய்
நற்றவர்க் கினியஅருள் நாள்தொறும் நல்கிடும்
நளிர்கடல் நடு வணுள்ள
நலமிகும் நயினையம் பதியினில் அமர்ந்தருள்
நாகபூ ஷணிஅம் மையாய்
அற்றவர்க் கிரங்கிநன் முன்னையில் வடிவழகி
யாகவே நிலவுமம்மே!
ஆனந்த மாகவே ஞாலம் விளங்கநீ
அம்மானை ஆடி யருளே. 79

அகிலம் எங்கும் அமைதிபெற
அன்பும் அறமும் தழைத்தோங்க
அழிவுகள் கொடுமைகள் பாறிவிழ
அன்பில் செயல்கள் நீக்கமுற
இகலில் நீங்கி எல்லோரும்
இணைந்து சமமாம் வாழ்வையுறச்
இதயத்தூய்மை மிக்கோராய்
எதிலும் நலமே நினைவையுறச்
சகல வழியிலும் சத்தியமே
தழைத்துச் செழித்து மேன்மையுறச்
சாடும் பிணிநோய் துயரெல்லாம்
சற்றுந் தலைகாட் டாதொளிக்க
அகங்கொண் டெங்களின் முன்னையளே!
ஆடியருள்க அம்மானை
அவலம் நீங்கிப் புவியோங்க
ஆடிய ருள்க அம்மானை. 80

---

*79. புரக்கின்ற -காக்கின்ற, கயற்கண்ணி -கயல் போன்ற கண்களையுடைய மதுரை மீனாட்சியம்மை, நளிர்-குளிர்மை, பெருமை.*

*80. இகல்-பகை, சாடும்-தாக்கும், மோதும்.*

## 9. நீராடற் பருவம்

நெருப்பனைப் திருமேனி நீற்றினைப் பூசியெந்
நேரமும் வெப்பமிகவே
நிலவிடும் நிமலனின் ஆகத்தினிற்பாதி
நிலைகொண்ட எம்பிராட்டி!
பொருப்பினன் செல்வியாய் உருக்கொண்டு மலையினிற்
பொலிவுடன் வளர்ந்தகாலை
பொழுதெலாம் மழைபனி குளிர்வாடை யாலங்கு
புனலாட மறந்திருந்தாய்
ஒருப்படல் நீராட உனக்கு விழைவின் மையை
உணர்ந்தனம் எனினு மெங்கள்
உளமெனுந் தாமரைத் தடத்திலும் முன்னையின்
ஒருபுனித ஆறுதனிலும்
விருப்புடன் நீராடி அநுபவம் கொண்டஉனை
வேண்டநீ ராடியருளே
மிகுமணச் சுகந்தமளை குளிர்நீ ரிதாமிதில்
விரும்பிநீ ராடியருளே. 81

அம்மணர்கள் திகம்பரர் ஆதலால் அவர்போல
ஆடையணி யாத பேரை
அம்மணம் ஆகவே திரிகிறார் என்றுமுன்
அவமதித் திழித்து ரைத்தார்
அமையமை தோளியர் அவர்முனர் வாராமல்
அஞ்சிநா ணுற்றொ ளித்தார்
ஆயினும் குழவியர் மேனியினில் ஆடையை
அணியாமை எள்ளல் உண்டோ?
உமை!எம தினியநற் குழவிநீ அமுதம்நீ
உன்வெறும் மேனிகண் டுவப்போம்
ஒருமுறை எமதுமன் றாட்டினை ஏற்றுவந்
துளங்குளிர நீராடுவாய்
எமைமிகுத் தெய்த்திடா தெளிவந்து கணத்தினில்
இளையை!நீ ராடியருளே
இத்தரை யிலேநினது சித்தத்தை வைத்துமே
இனிதுநீ ராடியருளே. 82

---

*81. பொரும்பினன் -இமவான்(பொருப்பு -மலை), சுகந்தம் -நறுமணம்.*

*82. அம்மணம்-ஆடை தரியாமை, நிர்வாணம், அமை- மூங்கில், (மூங்கில் போல) அமைந்த, எய்த்திடல்-ஏமாற்றதல் (ஏய்த்திடலின் குறுக்ல விகாரம்)*

அஞ்சு தலைக்குரியார் நஞ்சுமிடற் றிறையார்
அம்பொன் மலைக்கவரே - பதியாவார்
அஞ்சொல் உரைத்திடென்னக் கஞ்சம் எனஅருகில்
கொஞ்சம் முகமலர்வாய் - உனைவேண்ட
நெஞ்சம் இளகியெழில் மஞ்ஞை! உரைத்திடுவாய்
தஞ்சம் தனையடையும் - நெறியாக
விஞ்சும் திறம்அமைந்த தந்த்ரம் மிகவிரிவாய்த்
தலைவர் உரைத்தவகை - தருவாயே
அஞ்சும் உளத்தினராய்க் கெஞ்சும் அடியவர்க்காய்
வஞ்சப் பவந்தொலைய - வழிகாட்டும்
அஞ்சொல் லினிலமைந்த செஞ்சொற் சிறப்பமைந்த
அற்றம் தவிர்க்கும்நெறி - அருள்வாயே
எஞ்சும் வினைதொலைய முன்னைப் பதியினிலே
எங்கள் அழைப்பிதனை - உவந்தேற்ற
ஏத்தித் தொழும்எமது பாசம் தொலைக்கவிந்த
இன்னீரில் நீராடி -அருள்வாயே. 83

ஐந்துமா கடலும் அலையெறிந் தார்த்தும்
அவனியை அழித்திடா தருள்வாய்
அலைத்துலைத் தெழுந்து சுழல்வளி வரினும்
அஞ்சிடோம், நீயரு குள்ளாய்
வெந்துகாய்ந் துலறி வெந்தழற் பிழம்பாய்
விளங்கிடும் பாலையிற் சோலை
மேவிடச் செய்வாய் மேலுமே பலவாய்
வியத்தகும் அருட்செயல் புரிவாய்
அந்தமொன் றில்லா அநாதியே! உன்றன்
ஆற்றலுக் கிறுதியும் உண்டோ?
ஆயினும் இன்று குழவியாய் மாறி
அடம்பிடித் தழுதிடல் நன்றோ?
எந்தமின் அன்புப் பணிப்பினை மறுக்கேல்
எழுந்துவா, நீராடி அருளே
ஏன்பிடி வாதம்? முன்னையின் தவமே?
இசைந்து நீராடி அருளே. 84

---

*83. திருப்புகழ் சந்தத்தில் அமைந்த காடல்-ஒவ்வோரடியின் ஈற்றுச் சீரின் ஈற்றசை இரண்டும் நேரசைகளாய் அமைக்கப்பட்டன. கஞ்சம்-ஹம்சம் (அன்னம்), மீண்டும் உரைக்க வேண்டினார் என்பது கற்பனை)* ***இன்னீர்*** *- இனிமை+நீர்*

*84.* ***சுழல்வளி*** *- சூறாவளி.*

பாலுடன் தயிர்பழம் நெய்யோடு சுகந்தநற்
பரிமளம் அளைந்த நீரிற்
பல்லாண்டு பல்லாண்டு பலகால மாகநீ
பரிந்துநீ ராட விலையோ?
சேலுறழ கண்ணியுன் திருவிழா நாள்களிற்
றிருமறையி னொலியி னுடனே
தேர்ந்தசிவா சாரியர் அபிடேகம் ஆட்டிடச்
சிலிர்த்துநீ மகிழ விலையோ?
மாலுறுத் தும்வசந்த சரத்தெனும் ருதுக்களில்
வருகின்ற நவராத்திரி
மகிமைபெறு மிருபெரிய விழவிலும் அபிடேக
மாட்சியிற் றிளைக்க விலையோ?
ஏலமார் குழலிநீ இன்றுபிடி வாதமேன்?
எழுந்துநீ ராடி அருளே
எத்திக்கம் முன்னையெனு முத்தமப் பதியினில்
இன்றும்நீ ராடி அருளே. 85

கண்ணனெனும் உன்னண்ணன் தாய்சொலைக் கேளாது
கடிதுமே தவழ்ந்து சென்று
கட்டிவை பசுத்தொழுவி லேயருண் டமுக்குடன்
காட்சிதரக் கண்ட அன்னை
உண்ணெகிழ்ந் "தென்னுடைய மைந்தனே! நீராட
ஓடிவா" என்ற ழைத்தால்
ஒருகாலும் வாராது மேலுமுருண் டிடுதலுன்
உதிரத் திலுங்கு லப்போ?
மண்ணினிற் புரண்டுநீ மாசுற்ற மேனியொடு
வருவதும் அழகா யினும்
மாயவன் ஆண்பிள்ளை நீயோபெண் ணாதலால்
மற்றவர் நகைக்க முன்னர்
எண்ணியெங் குட்டனே! இனியும் மறுக்காமல்
எழுந்துநீ ராடியருளே
எற்றுக்குச் சீற்றமோ? முன்னையர் செல்வமே!
இனிதுநீ ராடியருளே. 86

---

*85. சேல் - ஒருவகைமீன், ருதுக்கள் -(கால) பருவங்கள்*

*86. உதிரம் - இரத்தம், குட்டன் - சிறுபிள்ளை*

பொன்னினிற் செய்திட்ட பாத்திரத் திற்பல
புதுமண மலர்களிட்டுப்
போதாத தற்குநற் பன்னீர் கலந்திட்ட
புதியநீர் தன்னி லுன்னை
இன்புடன் நீராட்டிப் பட்டினா லேதுடைத்
தினியஅகிற் புகையு மிட்டே
எழிலான பாவாடை சட்டையிட் டேநெற்றி
இலங்கிட வெண் ணீற ணிந்து
பொன்னுதற் பொலிவுறப் பொட்டுமிட் டுப்பார்த்துப்
பூரிக்க அன்னை மேனை
பொழுதெலாங் காத்திருந் திருந்தஇட மீதினிற்
புற்றெழுச் சலித்து விட்டாள்
இன்னமும் வாரா திருந்திடில் என்செய்வாள்?
எழுந்துநீ ராடி அருளே
இன்னிய ராம்முன்னைப் பதியினர் ஏக்கமற
இன்று நீராடி அருளே. 87

எண்டிசைகள் எங்கணும் கண்டவர்கள் இடியேற்றை
ஏற்றரவு கொள்ளும் அச்சம்
எய்தியே உயிர்ப்புமிக் கொடுங்கிட் டொளிப்பிடம்
எங்கெனத் தேடி ஓடச்
சண்டர்முண் டர்எனுஞ் சண்டாளர் சென்றவர்
சாவினை அடைய வைப்பார்
சற்றுமே இரங்கிடா மாகொடிய பாதகர்
சகத்திலும் விண்ணி டத்தும்
மண்டியே செய்கொடுமை மாளாது மாளார்கள்
மாதேவி! உற்று ரைக்க
மட்டுவார் குழலிநீ அக்கொடிய பேரினை
மர்த்தனம் செய்த ருளினாய்
சண்டியே! நாங்களச் சண்ட முண்டர் அல்லர்
சற்றுநீ கடைக்க ணித்துச்
சகத்துயர் முன்னையில் எங்கட் கிரங்கியே
சார்ந்துநீ ராடி யருளே. 88

---

*88. அரவு -பாம்பு, சண்டமுண்டர்-சண்டன் முண்டன் என்ற கொடியோர் அவர்களை வதைத்தமையால் (மர்த்தனம்-வதை) அம்பிகையைச் சண்டி எனவும் அழைப்பர்.*

கரியநீர்க் கடலிடைப் படிந்திட வெண்முகில்கள்
கடிதெழும் தம்விடாய் தணிந்த
களிப்புடன் கறுத்துமிக இடித்துமின் னிச்சேய
காணுமலை களிற்ப டிந்தே
பெரியமழை பொழிவ தற்காயகோ லத்தினைப்
பேதையர் கண்டஞ் சுவோம்
பேசுதற் கரியதாம் குளிர்வாடை உன்றனைக்
கொடுகொடுத் திடச்செய் யமுன்
அரியநற் றவத்தளாம் உன்னன்னை மேனையாள்
அழைப்பினுக் கிரங்கி வாராய்
அன்னையின் வேண்டுதற் கிரங்காத பேரிந்த
அகிலத்தில் எவரும் உண்டோ?
பரிவுடன் ஓடிவந் தவளையும் எம்மையும்
பார்த்துநீ ராடி யருளே
பாலகி! ஞாலமிசை வந்துவிளை யாடுவாய்
பகவதி!நீ ராடியருளே. 89

சந்த மிகுத்திடு சிந்து மிழற்றிடு
சதங்கைகள் கல்கலெனச்
சங்கினிற் செய்வளை எங்கணும் எதிரொலி
தந்துநல் லோசையிட
வந்தனை தந்தவர் பந்தம தந்தமும்
வந்ததென் றுணர்வுற
வங்கம தற்களி தங்கொளி விளக்கென
வழிதுறை காட்டிடுவாய்
சிந்தனை கொண்டுனை எந்தம துளத்தினில்
சேர்ந்திடச் செயுருவில்
செந்தளிர் விஞ்சிடு கந்தம லர்ப்பதம்
சிறந்தெமைக் காத்திடநீ
அந்தமில் முன்னையில் வந்தனை இன்புற
ஆடுக நீரினிலே
அஞ்சொ லிளங்கிளை! மஞ்சணி குழலினை!
ஆடுக நீரினிலே. 90

---

*90. சந்தம்-இன்னோசை, சிந்து-பாட்டு, அந்தம்-இறுதி, மஞ்சணி-(மஞ்சு அணி) மேகமென அழகிய, வங்கம்-கப்பல், ஒளி விளக்கு-கலங்கரை விளக்கம்.*

## 10. ஊஞ்சற் பருவம்

சொலற்கரிய ஒளிதவழுஞ் சிவந்தபவ ளங்கொண்டு
துவன்றிட இயற்று தூண்கள்
தொகுநான்கி னவற்றுமிசை தூயவொளி வைரத்திற்
சுடருநல் விட்ட மிட்டு
நிலையவாய் மாணிக்க மணிகள்கொண் டமைத்திட்ட
நேரிய பலகைமீதில்
நிலவுமெழி லிரத்தினக் கம்பளம் விரித்ததின்
நிலைபெற வீற்றிருந்து
நிலவினொளி தவழுமுக மதியினிற் குவளைபொரு
நீள்விழி மலர்த்தி இன்பில்
நிலைத்துமிக வெளிப்படுவ தெனநித் திலவரிசை
நேரிலா எயிறு சிறிதே
புலப்படக் கொவ்வையிதழ் பூத்துமே நன்கிலகப்
புன்னகை புலப்ப டுத்திப்
பொன்னரின் இன்பினிய முன்னைப் பதிக்கரசி
பொன்னூச லாடி அருளே. 91

நீலநிறை வைரவன் மாகாளி சீதரன்
நின்னருகு வந்து நிற்க
நிழல்போல அவருடன் திருமகள் வாணியெனும்
நேரரிய தெய்வ மாதர்
சாலநின் னூசலினை ஆட்டுதற் கமைந்ததாம்
சால்புடைக் காட்சி ஓரிற்
சகமீது கவிகின்ற ஆகாய மீதிலொளிர்
சகஉடுக் கூட்ட மெலாம்
ஆலமன் றுண்டமிர்த மாக்கினா னவனுடன்
ஐங்கரன் ஆறு முகனாம்
அரியபெரு கடவுளர் சூழ்ந்திடுந் காட்சியினுக்
காருவமை கூற வல்லார்?
போலவென் றெவற்றையும் காட்டிடற் கில்லைஅவர்
பூரித்து நிற்கவேஎம்
பொன்னரின் இன்பினிய முன்னைக் கரசிநீ
பொன்னூசல் ஆடியருளே. 92

---

91. *துவன்றிட-பொலிந்திட, மிசை-மேலே, விட்டம்-மேற்றடி, பொரு-போன்ற, பொன்னர்-பொன் போலும் மேனியரான (பொன்னம்பல வாணரான) சிவபெருமான்.*

92. *சீதரன்-திருமால் மார்பிலு தரித்த திருமால் (ஸ்ரீதரன்-ஸ்ரீ (சீ எனத் தமிழ் வடிவம் பெறும்)-இலக்குமி) ஓரில்-ஆராய்ந்தால், சக உடுக் கூட்டம்-கூட்டாளிகளான நட்சத்திரக் கூட்டம் (உடு-நட்சத்திரம்)*

காமாட்சி நிறைகாஞ்சிக் காமாட்சி யாயுலகு
காத்திடப் பல்லறங்கள்
கருதியருள் செய்தநின் கடைக்கணருள் வேண்டியே
ககனத் திருந்துவந்து
நாமாட்சி மிக்கநற் கவிவாணர் சூழ்ந்துன்னை
நாள்தொறும் பாடியுருகும்
நல்லபதி முன்னையில் குழுமியுளர் அவர்பாரம்
நாகத் தலைநெரிக்கும்
கோமாட்சி யாற்பெருமை கொண்டநற் குளக்கோட்டன்
குலவுபராக் கிரமபாகு
கோடில் கீர்த்திஸ்ரீ ராஜசிங்க கன்முதல்
கூட்டுப்பணி யாலுயர்ந்து
போமாட்சி என்றொன்று மின்றியே நின்றுலவு
புகழாட்சி யாலுயர்ந்த
பொன்னரின் இன்பினிய முன்னைக் கரசிநீ
பொன்னூசல் ஆடியருளே. 93

கார்முகில் இதுவென றுன்னிய கடல்தன்
கடனினைத் திருப்பென அதனைக்
கைகளாம் அலைகள் விரித்தழைத் திடவாம்
கருங்குழற் கற்றைமிக் கொளிகால்
ஏர்மிகு மதியம் இதுவென விழுங்க
எழுந்தவாள் அரவது நாணி
ஏங்கிட அமைந்த பேரெழில் வதனம்
இவைமலர்க் குவளையென் றெண்ணி
ஆர்வமாய் மதுவை நாடியே வந்த
அளிக்குலம் ஏய்ப்புறு விழிகள்
அருஞ்சுவைக் கனியைக் கொந்திடும் ஆர்வத்[து]
அணுகுபுள் எலந்திடுங் கதுப்பு
போர்க்கள ஆர்ப்பிற் புலம்புறு சிலம்பாற்
பொலிந்திடு பாதபங் கயங்கொள்
பொன்னரின் இன்பினிய முன்னைக் கரசிநீ
பொன்னூசல் ஆடி அருளே. 94

---

93. காமாட்சி-(கா+மாட்சி)பூஞ்சோலையின் சிறப்பு, நாமாட்சி-நா+மாட்சி -நாவின் சிறப்பு (நாவன்மை), நாகம்-(பூமியைத் தாங்கும்) ஆதிசேடன் என்ற நாகம், கோமாட்சி-அரசன் என்ற சிறப்பு, கோடில் -கோடு்இல்-(வளையாத, தாழாத), கீர்த்தி-மிகுபுகழ், போம்+ஆட்சி-(போமாட்சி) ஆட்சி போகும் என்ற அச்சம்
94. கடலானது தன்னிடம் முகந்த நீராகிய கடனைத் திருப்பித் தா என்று கார்முகிலைத் தன் அலைகளாகிய கைகளை நீட்டிக் கேட்பது, உண்மையிற் கார்முகிலை அன்று கார்முகில் போன்ற காட்சி தந்த அம்மையின் கூந்தலைக் கார்முகில் என்று மயங்கியதால் விளைந்த விளைவு என்பது கற்பனை, மது - தேன், அளிக்குலம் - வண்டுக்கூட்டம்

முப்பத்து முக்கோடி தேவரொடு கந்தருவர்
முற்றமுள கின்னரர்கள்
மூவாத மலவாதை தாவாத நந்தியொடு
முதன்மைபெறு சிவகணங்கள்
பப்பத்தெனும் நெடிய பலவாண்டு பெருந்தவம்
பலசெய்த முனிபுங்கவர்
பகர்ஞான நெறிநின்று நினையருவ நிலையினிற்
பதித்தவுளப் பெருமையாளர்
செப்புற் கரியநற் பத்தியிற் றினைத்தேபேர்
ஸ்ரீசக்ர பூசை செய்வோர்
சேல்நெடுங் கண்ணி!யுனை வேதநெறி தவறாது
வியன்பூசை செய்யு மறையோர்
பொற்பதுமை யாயுனைக் கண்டுமே வணங்கிடப்
புகுகின்ற வர்களிக்கப்
பொன்னரின் இன்பினிய முன்னைக் கரசிநீ
பொன்னூசல் ஆடியருளே. 95

செங்கதிர் பொங்கொளியின் வெய்யவர் பலகோடி
சேரினும் பொருவி லாத
செவ்வொளி முகத்திலகு பவ்வியத் திருவொளியைச்
சிறிதாய் ஒடுக்கி அடியார்
பொங்கிமல ரப்பொலியும் அங்கருணை தங்கியுறை
புவனஈச் சரியெ மன்னாய்
பூப்புனை ஆரமும் புகழ்புனை ஆரமும்
பொலியுமெம் ஆதாரமே!
துங்கமணி மின்னுமுடி தங்கமொளிர் கங்கணமும்
தொக்கபல வைரவணியும்
தோயுமெழி லுக்கழகும் ஏயவல வென்றமையும்
ஜோதிஸ்வ ரூப மதலாய்!
பொங்கிவரு கடலலைக் கொன்னவுன் திருநாமம்
போற்றிசெய் ஓலிமிகுக்கும்
பொன்னரின் இன்பினிய முன்னைக் கரசிநீ
பொன்னூசல் ஆடியருளே! 96

---

*95. கந்தருவர், கின்னரர் - தேவ உலக இசைவாணர், பப்பத்து-நூறு (நூற்றுக்கணக்கான)*

*96. வெய்யவர்-ஆரியர், பொருவிலாத - ஒப்பிலாத, பவ்வியம்-புனிதம், மென்மை, ஆரம்-மாலை, துங்கமணி -தூய இரத்தினம், கங்கணம்-காப்பு, ஏயும் -ஒக்கும்.*

முக்கணார் நெற்றியின் விழியெனுந் தீயிலே
மூவிரு முகங்களுங் கொண்டு
முத்தைய னானவன் மூடனாஞ் சூரனின்
மோகபா சங்களை அழித்தான்
சொக்கமாந் தங்கநற் றமிழினைப் புரந்தனன்
'சொற்றனில் உயர்தமிழ்ச் சொல்லே'
தூய்கலை வாணரும் அச்சொலாற் புனைந்துமே
துதித்திடச் சூழ்ந்துநிற் கின்றார்
தக்கணந் தன்னிலே மிக்கதாம் மேன்மையில்
தரித்திடும் அம்மொழி யினிலுன்
தயைமிகு பெருமை இயைந்திடப் பான்தேன்
தந்திடச் செவிமடுத் தருந்தப்
புக்களம் பாவாய்! புரமெரி மடுத்திட்ட
புல்லியர்க் காய்ந்தவ ரான
பொன்னரின் இன்பினிய முன்னைக் கரசிநீ
பொன்னூசல் ஆடி யருளே. 97

செந்தா மரைக்கெழில் தருமுகச் செல்வியுன்
திருமுனர் ஆடிடார் யார்?
செயம்செயமென் றுன்னடிச் சிலம்புகள் நனிமிகச்
சேர்ந்துமே கலக லென்ன
மந்தா கினிச்சடையர் தொந்தோ மெனப்பதம்
மண்ணிற் பதித்தும் ஆட
மாலுடன் திசைமுகனும் ஐங்கரன் தன்னினொடு
வள்ளிமண வாள னாடக்
கந்தார் மலர்க்குழற் பூமகள் நாமகளும்
கலைக்கரசி கூடி ஆட
கனிவிழி பொழிநந்தி சுரருடன் நாரதர்
கந்தருவர் பலரும் ஆடப்
பொந்தார் அரவி னொடு மஞ்ஞையும் குருகுகளும்
பூரித்து மிகவும் ஆடப்
பொன்னரின் இன்பினிய முன்னைக் கரசிநீ
பொன்னூசால் ஆடி யருளே. 98

---

*97. முக்கணார்-மூன்று விழிகள் உள்ள சிவன், சொக்கம்-அழகு சொற்றனில்-சொல்தனில், சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே-பாரதி, தக்கணம்-தட்சணபீட பூமி, தென்னிந்தியப் பிரதேசம், மடுத்து - அழித்து.*

*98. நனிமிக -மிகமிக (நனி -மிகுதியைக் குறிக்கும் உரிச் சொல்), மந்தாகினி -கங்கை, பொந்து -புற்று, மரத்தடியில் உள்ள (துவாரம்) துளை.*

இல்லா மருங்கினில் மேகலை இலங்குவ[து]
எவ்வாறென் றயிர்க்க வைக்கும்
இருக்கும் எழிலமுதம்! நீயூச லாடுகையினில்
இருங்குழல் இல்லையென் றார்க்கும்
பொல்லாத புருவவில் விழிகள்கணை வேலெனிற்
பொருந்திநாம் நோக்க லாமோ?
புன்னகை புரியினும் பற்களின் தரளவொளி
புகுந்துவிழி கூச வைக்கும்
மல்லார்ந்த திண்டோளர் ஆனவுன் மணவாளர்
மறைந்திடப் பணித்த துண்டோ?
மாபெரிய தாயின்று மழலையுரை குழவியாய்
மாறியது யார்கு றித்தோ?
புல்லியுன் அடியிணைகள் பிடிக்க விழைஎங்களைப்
புரிந்துநீ காட்சி தந்தே
பொன்னரின் இன்பினிய முன்னைக் கரசிநீ
பொன்னூசல் ஆடி அருளே. 99

நலிவுசெய் தீமைகள் கொடுமைகள் நீங்கிநாம்
நன்மையில் திளைக்க என்றும்
நாய்களாய் அச்சமிகு கோழையாய் உலகினில்
நகர்ந்திடா திருக்க என்றும்
கலியுகம் விலகிநற் கிருதயுகம் உதித்திங்கு
களிப்பெமக் காக என்றும்
கடமையைப் புரிந்துபயன் உனது கடனென்னவே
களித்துநா மிருக்க என்றும்
பலியினுக் கிடவளர் கடாக்களாய் மாந்தர்கள்
பதைத்திடா திருக்க என்றும்
பாரினில் வாய்மையோ டன்பருளென் றின்னவை
பண்டுபோ லமைய என்றும்
பொலியுமருள் நிறைந்தபெண் ணமுதமே! எங்களது
புகலிடம் ஆன பொருளே!
பொன்னரின் இன்பினிய முன்னைக் கரசிநீ
பொன்னூச லாடி அருளே. 100

---

*99. மருங்கு - இடை*

*100. நலிவு - துன்பம்*

## முனீஸ்வரம்
## வடிவழகியம்மை ஆசிரிய விருத்தம்

[கொக்குவில் சி. சிலம்புநாதபிள்ளை பாடியது]

பூமேவும் அளகமுந் திலகமிடு நுதலும்
புனைந்த பொற் குழையின டிகும்
புனிதமுறு நாசிகாபரணமும் புன்னகை
பொலிந்த செம்பவள வாயுந்
தூமேவு முத்துமணி வச்சிரப் பதக்கமும்
துலங்கு பட்டாடை யுடையும்
சுடர்விடு சிலம்பினோடு தண்டைகளிசைத்திடும்
துய்ய மலரடி யிணைகளும்
மாமேவு மரகதம் போலொளிரு மேனியும்
மகிழபய வரத கரமும்
வளர்ருட் பார்வையுங் கொண்டடிய னேனுனது
வடிவினைக் காண வருவாய்
தேமேவு பூவன நெருங்கு தெங்கம் பொழில்
திகழ் முனிச்சரத் தமர்ந்தென்
சித்தமிசை குழகொண்ட வடிவழகியம்மையே
சிற்சக்தி யான வுமையே.

***

# முனீச்சுரம் வடிவழகியம்மை பதிற்றந்தாதி

**[கொக்குவில் சி. சிலம்புநாதபிள்ளை பாடியது]**

வேதமு தற்பொருளே வடிவழகி விளங்கு சிவ
போதக மாய்மலைப் பச்சைக் கொடிமுனம் பூந்தமுதற்
பாதமலர்தலை வைத்தொரந் தாதிப்பதிகத்தினால்
மாது வடிவழகாகிய தேவியை வாழ்த்துவனே. 1

வாழ்த்துவனே யெனக்கீதோர் பிறவியும் வந்ததைத்தான்
பார்திடி லோவது மால்விடையேறும் பரமனிட
மாய்ந்திகழ் கன்னி முனீசுரத்தாளென் வடிவமதி
யாய்த்துணைக் காட்பட்டிருப்பது வேயடியன்னுளமே. 2

உள்ளவளேயென்று மன்பரல் லார்கட் கொழித்தவளே
கள்ளவளேயுன் கடைக் கண்படாத கடையவனை
யள்ளலிலே நின்றழுந்தாத வண்ணமறிந்தடிமைக்
கொள்பவளே யினித் தாழாயகற்றக் கொடு மலமே. 3

மலராசனுந் திருமாலுந் தேவரு மாதவரும்
பலகாலுந் தேடியுங் காணாதே ழித்த பராபரையே
தலமீது முன்னீ சுரத்தில பயர் தமது விழிப்
புலனாற்றெரிந்து தொடி நின்றருள் செய் புராதனியே. 4

புராதன மாயுலகெங்கு நிறைந்தருட் பூரணமாய்
நிராமய நின்மல நிற்குணமான நிரஞ்சனத்தே
யிராசததாமத சாத்துவிதங் கொண்டி யங்கவைகித்
தரா தலமேமுத லண்டமெல்லாந் தருந் தற்பரையே. 5

பரையே முனீசுர நாயகியே தான் படுங்கவலைத்
திரையார் வறுமைக் கடறாண்டி யுன்னருட் செல்வமெனுங்
கரை கானவே முன முன்னருட்டுறை கண்டிலனே
தரைமீதினி யென்ன செய்வே னுனநம்பித் தானிருந்ததே. 6

இருந்துணை யாயென் னுடல் பொருளாவிக் கினித் துணையாய்த்
தருந்துணையாய்த் தொழுந் தெய்வமு மாய்ந்தற் சமயத்திலே
வருந்துணையாக முனீசுரமேவு வடிவழகீ
பெருந்துணை பெயன்றுவந் துன்மலர்ப் பாதம் பிடித்தனனே.7

பிடித்தே னெனக்குத் துணையாகவே யிப்பிற்பினிலுன்
னடித்தாமரை திருமந்திரமாக வணுதினமும்
படித்தே யினியிவ்வருட் பாடலை யிந்தப் பாரில்வரும்
மிழப்பே யெலாந்தூரப் பேன்வேறு மந்திரம் வேண்டிலனே. 8

வேண்டே னினியொரு தெய்வத்தை யென்று வெறுத்துவிட்டேன்
ஈண்டே யெனையுமென் சந்ததி தன்னையு மெய்பொழுதும்
ஆண்டே யருளென் றுனக்கே யினியடிமைத் தொழும்பு
பூண்டேயிச் சாதனஞ் செய்து தந்தேனில் பொறுப்பினியே. 9

இனியான் வடிவழகிக் கடியானென் நியம்பிடுதிற்
சனியாதி நியரு நோக்கார் யமன் கட்டத் தானணுகான்
நனி நோயகலும் வறுமைக்கலியஞ்சி நாணிநிற்கும்
பனிமாலிமைய மகளே யருட்கண் பதித்தருளே. 10

***

# முனீஸ்வர வடிவழகி பதிகம்

[புழுதிவயல் ஆர். எஸ். தம்பு]

## விநாயகர் வணக்கம்

### வெண்பா

சத்திய மாய்ச் சித்த மதிற் தாரகமாய்க் கொண்டோற்குச்
சித்தி தரு மானை முகச் செஞ்சுடரே - நித்தமுனைப்
போற்றி வடிவழகி பூரணத்தை யாண் பாடத்
தோற்ற மிங்கு காட்டுவையோ சொல்லு.

திருவேங்கு முனீஸ்வரத்தின் சிறப்பை நாளுஞ்
சிதையாது வைத்தருளுந் தெய்வமாகி
யருளோங்கு வடிவழகி யாகித் தோற்று
மன்னை தனைச் சித்தமதி லணிந்து நாளுந்
தருவோங்கு விண்ணுலக போக நாடத்
தானறியா மிடியோரைத் தணத்தலின்றி
யிருள் போக்கி யருள் காட்டு முமையே சிந்தை
யெண்ணினரை யாளுகின்ற இன்பத்தாயே. 1

தாயாகி முனீஸ்வரமாந் தலத்தில் நாளுந்
தரிசனைக்கே வருவாரைத் தவமே மிக்க
சேயகக் கருணை புரி பரையே யன்பர்
சித்த மதிற் தெவிட்டாது நின்றே யூரிச்
சாயாத வின்பமெலாந் தரவே நல்ல
தருண மிகு வடிவழகி யாகித் தோற்றி
நாயேனை யெடுத்தருளு முமையே சிந்தை
நாடினரை யாளுகின்ற நாமத் தாளே. 2

தாழாது பிறவியினா லென்னைத் தாங்கித்
தவி புரியுஞ் சிவக் கொழுந்தாய்த் தரணி மீதே
பாழாக்கு புலன் வழியே செல்லு வோனைப்
பரிந் தெடுத்துப் புத்துயிரை வழங்கி நாளு
மாளாக்கு வடிவழகி யம்மை யாகி
யகில மெலாம் புகழ் படைத்த தலத்தில் நாளுங்
கேளாக வந்தருளு முமையே ஞானக்
கிஞ்சுகமே தஞ்சமெனக் கிட்டி னேனே. 3

கிட்டாத பெருங்கலையும் பொருளு மீந்து
கேடுகளைத் தினந்தோறுங் கிழநித் தள்ளி
நட்டாளைத் துதியாத புலைய னேநின்
ஞான மிலா விருட்டகத்தை நாடி வந்து
தொட்டாளை வடிவழகித் தொன்மை யாளைத்
தோளாத மணியாளைந் துன்பந் தீரக்
கட்டாயப் படுத்துமொரு கருணை வாழ்வைக்
கண் மணியைத் தான் துதிக்கிற் கவலை போமே.
4

பிறந்துலகி லிருந்து சுகம் பெறவே யுன்னிப்
பெரும்பாவ மைந்தியற்றிப் பெரியோர் நேசந்
துறந் தலைந்து வழி தவறுந் தறுக ணானைத்
தூக்கி யெடுத் தருள் சுரக்குந் தொன்மை நீதி
நிறைந்த தவப் பெரு வாழ்வே நிறைவே யன்பர்
நினைவு தொறுத் தெவிட்டாது நின்றே யூறி
யறைந் தழைக்க வரு முமையே முனீஸ் வரத்தை
யண்டினற்கே யருள் புரியு மருட் குன்றாளே.5

குன்றாத பெருநிதியே மதியே மண்ணிற்
குலவு கின்ற போக மெலாங் கூட்டி யூட்ட
மற்றாடு பெருமானைப் பாதி யாக்கு
மரகதமா மணியொளியின் வனப்பை நாயேன்
நன்றாகப் பதித் துளத்திற் கொண்டு மாறா
நாட்டமின்றி வாழுதற்கு ஞான மோங்குங்
குன்றான முனீஸ்வரத்தி லருளே காட்டிக்
கூடினரை யாளுகின்ற குணக்கன் றாளே. 6

பஞ்சு புலன் வழி மனமே செல்ல விட்டுப்
பாரிலுள் பொருளி லெலாம் பற்று வைத்துக்
கொஞ்சமுமே மனச் சாந்தி கூடா னாகிக்
குவலயத்தை விட்டொழிக்குங் கொள்கை யோனை
யஞ்ச லெனத் திருக்ரத்தா லணைத்து மாறா
அவல மெலாஞ் சிதைந் தொழிய வருளைக் காட்டு
மஞ்சு தவழ் முனீஸ்வரத்தின் மருந்தே சீவ
மாமணி யுனை மறக்க மாட்டே னானே. 7

ஆரமுதே யருட்கடலே யென்னை யாளு
மகிலாண்ட நாயகியே யறமே மூலப்
பாரதியே பணியணியும் பதமே யின்பம்
பதிந் திலங்கு திருமேனி பாதி யாக்கு
சீர்ருளே முனீஸ்வரத்தின் திருவே யென்றுஞ்
சிங்க மதி தான் சிறக்கத் தேரி லேறும்
பேரருளே யுனை விடுத்துப் பிறிதோர் தெய்வம்
பேசுவதற்கு முறையுளதோ பேசு வாயே. 8

உன்னருளே யானறியா துலக மூடே
யொழி தலிலா வாசையினா லுலர்ந்து வாடி
யன்னமிலா திருந்து பல நினைவே கொண்டு
அகமுடைந்திங் கயருமெனை யாற்ற வந்த
மின்னிடையே முனீஸ்வரத்தின் விளக்கே ஞான
மெல்லியவே சிவபோக விளைவு காட்டு
மின்னமுதே யுனைவிடுத்துப் பிறிதோர் தெய்வ
மியம்பு தற்கு முறையுளதோ வியம்பு வாயே.9

உணருகின்ற மெய்யடியா ருள்ளத் தூடே
யொழி தலின்றி யூற்றெடுக்கு மமுத மாகிப்
புணருகின்ற வாருதியே சிவத்தை யீன்ற
பொருளாகு முதற் பொருளே பொல்லா நெஞ்சைத்
தணரு கின்ற தவப் பொருளே யிருளே போக்குந்
தன்மையுள்ள பேரொளியே தவமே யில்லார்
அணவு தற்கிங் கறியாத உமையே யும்மை
யண்டாத ரிப் பிறப்பால் அலைவுற்றாரே. 10

# ஸ்ரீ முன்னேஸ்வர க்ஷேத்திர
# ஸ்ரீ வடிவாம்பிகா தேவி அந்தாதி

[நாயன்மார்கட்டு திரு க. சொக்கலிங்கம் [சொக்கன்] பாடியது]

**காப்பு**

எட்டினிற் பாரதம் மாமுனி சொல்ல எழுதுதற்குன்
கோட்டினில் ஒன்றினைக் கொண்டவ னேயெழிற் குஞ்சரமே!
பாட்டினில் உன்றன தன்னையைப் போற்றப் பரிந்தருள் வாய்
வேட்டைத் திருமடத் தேயமர்ந்தாய் நல்ல விநாயகனே.

**நூல்**

ஒலிக்கும் பிரணவத் துள்ளொளி யாய் நின்றுர் வருளி
நலிக்கும் பவப்பிணி நண்ணிடிற் போக்கி நமைப் புரந்து
சலிக்கும் பொழுதெங்கள் சஞ்சலம் மாற்றிச் சந்தான வரம்
பலிக்கும் படிக்கருள் பாவாய் வடிவெழிற் பங்கயமே. 1

பங்கயச் செம்மலர்ப் பாதங்கள் கொண்டிந்தப் பாரிடத்தே
நங்கையெப் போதுமுன் நாயக னோடு நடமருள்வாய்
தெங்கயற் றோட்டத்திற் செங்கயல் பாய் சீத நீர்த்தடங்கள்
எங்கணும் மல்குறு முன்னேஸ் வரத்தின் எழிற் கொடியே! 2

எழிற்கொடி எம்முளத் தேபடர் வஞ்சி இளங்கொடியே!
அழற்பட முப்புரஞ் செற்றவன் பாகத் தணை கொடியே!
கழற்படு பேரொலிக் கீடுசெய் நூபுரக் காற் கொடியே!
விழற்படு வாழ்வை விலக்கிட வேயருள் மேலவளே! 3

மேலவள் நூலிடை மீன்விழி முல்லை விளங்கு நகை
பாலவள் இன்மொழி பாதிப்பிறை நூதல் பாற் கலசம்
போலவள் கொங்கைகள் பூத்த புது நிலாப் போன் முகத்தாள்
ஆல்மர் தெய்வத் தருந்துணை யாகும் அணங்கிவளே. 4

அணங்கிவட் காரிணை யாதரித் தாண்டிடும் அன்னையன்றோ
குணங்களின் குன்றிவள் கூத்தனும் ஏத்திடுங் கோதையிவள்
இணங்கிடும் நெஞ்சத் திருந்தருள் பாலிக்கும் இன்முகத்தாள்
பிணங்கினுங் காக்கும் பெருந்தகை யாளினைப் பேணுமினே. 5

பேணுமின் நும்முயிர்ப் பேணிட வெண்ணிலிப் பேதை திறம்
காணுமின் அன்னையின் காண்டற் கரிய கவினை யெலாம்
தாணுமின் தீமைக்கு நன்மைகள் வேண்டுவீர் நாவிடத்தே
தாணுவின் பாதியை ஓதிடு வீர் நலந்தான் வருமே. 6

வருமே அவள்துணை வாய்ப்பின் இறை நலம் வாய்த்திடுமே
தருமே தனங்கனம் தையவர் காதலும் தக்கவராம்
பெருமே னிலையுடன் பேதமை போக்க நற்பேரறிவும்
கருமே கக்குலந் தோற்றிடுங் கை வணக் காரிகையே. 7

காரிகை நாமுமெக் காலத்தும் ஓதுமின் காதலுடன்
பேரிகை கொட்டிப் பெருவிழாக் காணுமின் பெண்மை நலக்
காரிகை நோக்கிக் கடுந்தவஞ் செய்ம்மினக் கையசையின்
பாரிதிற் குன்றமுந் தூசாய்ப் பறந்திடும் பார்த்திடுமே. 8

பார்த்திடும் போதினில் மாயங்கள் சாலங்கள் பற்பலவும்
ஆர்த்திடும் கிண்கிணி அன்னையே செய்குவள் அற்புதமே
போர்த்திடும் பொய்ம்மைகள் கீழ்மைகள் நீக்கிப் பிறக்குமின்பம்
போர்த்திடும் உந்தமைப் போற்றிடுவீர் பாதப் போதுகளே. 9

போதுக ளாமிணைச் சீரடி ஆயிரம் பொற் கதிரென்
றோதுக மாயினும் ஒப்பிடற் கொண்ணா ஒளி நலத்த
ஏதுக ளால்மொழி யாலவள் சீரெழில் ஏதறிவோம்?
வாதுகள் செய்துண்மை நாட்டிட யார்க்குண்டு வல்லமையே. 10

வல்லமை யற்றவர் வையத்தி லாணவ மாசினிராய்க்
கல்லமை தோளர்கள் நாமென மார்பினைக் காட்டிடுவார்
அல்லமை மேனியன் ஆனந்தபைரவி ஆற்றிலின் முன்
புல்லென வீழ்குவார் போதம் அடைந்திலர் புல்லியரே. 11

புல்லியர் ஆழ் நர கத்திடை வீழ்ந்திடப் போத முணர்
நல்லவர் சக்தியின் பாதநற் போதுகள் நண்ணிடுவர்
பல்லவம் மெல்லவ ணுங்கிடு பாதபங் பேருகத்தாள்
வல்லமை முன்னை வடிவாம் பிகை சொல வாக்கிலையே. 12

வாக்கிலை முன்னேஸ் வரியெழில் சொல்லிட வன்மையிலை
தேக்கும் விழியெழில் கண்டவச் சங்கரன் தேய்ந்துருகிப்
பார்க்கும் பொழுதுடல் பாதியும் ஆயினன் பாரியிவள்
பூக்கும் எழில் முற்றும் காணுலகில் மெய்பொய்யாப் போக்குவளே.
13

போக்குவ னேயரன் மேனியைப் பாதியாய்ப் பூங்கொடியும்
ஆக்குவ ளேயுடற் காருயிர் அன்னவற் கேயளிப்பாள்
சூக்கும மாயண்ட கோளங்கள் யாவினுஞ் சோதியுயிர்
ஆக்கியும் பூரணி யாயிவள் நிற்ப ததிசயமே. 14

அதிசய அற்புத ஆனந்த வாரிதி ஆதியந்தம்
இதுவென யாரறி வாரிவள் இருப்பவளே
பதிசதி யாஞ்சிவ சக்தியென் றேத்துதல் பான்மையிலை
இயத்தி லொன்றே பரம் பொருள் சக்தியென் றெய்திடுமே. 15

எய்திடும் எழைகள் சஞ்சலம் போக்கி இகத்தினிலே
பெய்திடு மன்பாற் மழையினில் ஆடிப் பெருஞ்சுகங்கள்
பொய் கெடப் பெற்றுப் புகழ் பெறு வீர் எழிற் பூம்பொழிலிற்
கொய்திடு பூவினில் நெஞ்சகப் பூவைக் கொடுத்திடுமே. 16

கொடுத்திடும் அன்பினைக் கொள்ளையாய் இன்பம் குவிந்திடுமாம்
எடுத்திடும் அள்ளிப் பருகிடும் விக்கல் எடுத்திடுமேல்
தடுத்திடும் உச்சியைத் தடுத்திடுந் தாயின் தயவினுக்கு
விடுத்திடும் நெஞ்சினை வேறுளதோ வெற்றி மேலுறுமே. 17

மேலுறு காதலிற் சேலுறு கண்களை மேலுயர்த்திக்
கோலுறு மேருவில் வாசுகி நாணுறக் கொண்டு புரம்
காலரத் தீத்திடு வான் சிவன் தன்னைக் கடைக் கணித்துப்
பாலுறு நற்சுவை போறகலாந் தின்பளி பார்வதியே. 18

பார்வதி சாம்பவி ராஜராஜேஸ்வரி பைரவியே
ஆர்வலர்க் கின்பருள் அம்பிகை கௌரி அருந்துணையே
பார்தனைக் காத்திடும் நாயகி காளி பராபரையே
ஏர்தனக் குன்றியாய் முன்னேஸ் வரத் தெழில் ஏந்திழையே. 19

ஏந்திழை பாகத் திருப்பவன் நெற்றிச் சுடரிடத்தே
சேந்தனைத் தோற்றிடச் செந்தழல் போல் நிறச் செம்மலுமே
பூந்தடத் தேவிளை யாடிய போதொன்று செய்தவனை
ஏந்தியே ஆறுமுகத்திலும் முத்தங்கள் ஈந்தவளே. 20

ஈந்தவளே அண்டம் யாவையு மங்கள இன்னுயிரும்
போந்தவளே முன்னை யாம்பதி தன்னிடைப் புண்ணியங்கள்
சார்ந்தவளே தமிழ் சிங்கள மக்கள் முஸ்லிம்களெலாம்
காந்தம தீர்த்திடு நல்லிரும் பாக்கிய காரிகையே. 21

காரிகை பாதந் தொழுதிட வேவந்து காதலுடன்
வாரியைப் போல் மக்கள் சேருதல் கண்டிவ் வனிதையுமே
ஆரியச் சங்கதம் செந்தமிழ் சிங்களம் ஆய்ந்து தரும்
சீரிய தோத்திரப் பாடற் கருளினைச் சேர்க்குவளே. 22

சேர்க்குவள் சித்தத்தை ஈர்க்குவள் சித்திகள் செய்திடுவாள்
பார்க்கிவள் போலளி நலகிட வல்லவர் பார்க்கில்லை
ஆர்க்கும் அருளுமில் வன்னையே அன்னை அகில மெலாம்
மூர்க்கம் தவிர்த்தின்பம் மொண்டனர் எங்களின் முன்னவரே.23

முன்னவர் யாவர்க்கும் முன்னவளே முதலானவளே!
அன்னை அருட்கட லேயரன் பாகத் தணைந்தவளே!
கன்னவி னின்னிய சொல்லின ளேகதி காட்டிடுவாய்
மன்னிய முன்னேஸ் வரத்தினில் வாழும் மடவரலே! 24

மடவர லாங்கங்கை யேறிய மாமுடி மன்னவனாம்
அடவர வாகத் தணித்தவ னாகத்திலன்பதனால்
இடவர மீந்த வளே இம வானின் எழில் மகளே!
கடலனை நீள்விழிக் காரிகை உன் கடன் காத்திடலே. 25

காத்திட அண்டங் களாயிரத் தெட்டையுங் கண்ணிடத்தே
பூத்திடு நல்லருள் பொங்கித் ததும்பிடும் பூங்கொடியே
ஈத்திட வேண்டு மென் றேமையோம் சந்நிதி எய்தி நின்றால்
பார்த்திடு வாய் முன்னை மீதமர் பச்சைப் பசுங்கொடியே. 26

பசுங்கொடி பாலகி யாகினை மீனவன் பாங்கிலுற்று
நிசம் பெறு வார்க்கருள் நிடிட மன்னவன் நெஞ்சியுலுற்றுத்
தசும்புறு நற்றன பாரத்தி னாற்றளர் வாய்தனாரார்
விசும்புளர் மண்ணுளர் ஏத்திட முன்னை விளங் கெழிலே. 27

எழிலே எதுவெனில் அன்னை முகத்தொளிர் இன்னெழிலே
பொழிலே உடலெனப் பொங்கும் புதுவெழில் பூண்டிருப்பாய்
ஒழியே லுனதுள உள்ளொளி உள்கி உடனணைந்தோம்
பழியே லெமையளி செய்திடு பற்றறுப் பாய்பரையே. 28

பரையே பரம்பொரு ளாகிய பாதாம் புயத்தழகி
விரையே மிகுத்திடு பூக்கொண் டுனதடி வேட்டிடுவோம்
கரையே யிலாப்பவக் காராழி நீங்கக் கருணை செய்வாய்
உரையே யிறந்திசை ஓங்குமுன் னேஸ்வரத் துத்தமியே. 29

உத்தமி தாட்சா யணிசோ டசி அன்ன பூரணியே
வித்திகி ஞானத்து ரூபிணி வேத விழுப் பொருளே
சத்தளி சித்துரு வான தாட்சாயணி சந்ததமும்
பத்தருக் கின்னருள் பாலிக்க நின்றருள் பாலகியே. 30

பாலகியே யன்று பத்துத் தலையுடைப் பார்த்திவனை
ஞாலமும் விண்ணதும் போற்றவே மாய்த் திட்ட நல்லவனாம்
கோலமுஞ் சீலமும் கொண்டவி ராகவன் கும்பிடவே
சால அவன் குறை போக்கிய சங்கரி சாமளையே! 31

சாமளை யேகதிர்க் கான்முளை தாபித்த சத்துருவாம்
ஏம்மார் நல்லிங் கத்தரு கேயம ரேந்திழையே!
கோமள மேயெழில் கொஞ்சிடு மேனிக் குயின் மொழியே!
தேமந்து ராகனிக் சோலை சூழ் முன்னைச் செழுஞ்சுடரே! 32

செழுஞ்சுட ராயொளிர் செல்வியுன் தெய்வ சிறப்புகளைப்
பழமரம் நாடும் பறவைக ளொத்து நாம் பற்றி நிதம்
அழதிடு வோம்பாடி ஆர்த்திடு வோமகம் நைந்துருகித்
தொழுதிடு லோந்துயர் புற்பனி யாகத் தொலைந்திடுமே. 33

தொலைந்திடுந் தீமை எழுந்திடுஞ் ஞானந்துகளறுமே
அலைந்திடும் புன்மை அடங்கிடும் அன்பதும் ஆர்த்தெழுமே
மலைந்திடும் ஆணவம் மாய்ந்திடும் மாயை மறுக்கிடுமே
குலைந்திடு மேகக் குழற்களி நெஞ்சிற் குறித்திடினே. 34

குறித்திடு கொள்கைக் கோவர ராமன் குலத்தொளியாம்
உறைந்திடு சிந்தைக் குளக்கோட்ட னென்னுமோர் உத்தமனும்
நிறைந்திடும் மன்பின னாகிமுன் னாலயம் நீடு பெற
இறைந்துணை சோரா தியற்றின னற்பணி இன்னமுதே. 35

இன்னமு தேபின ராறாம்ப ராக்ரமன் ஏற்ற பணி
உன்னுவ மாயின் உயர்ந்த தென்றேயுளத் தோர்ந்திடுவோம்
மன்னவன் கீர்த்தி கொளி ராசசிங் கேறும் மகிழ்ச்சியுடன்
பன்னருந் தொண்டுக ளாற்றிநின் அன்பிற் படிந்தனனே. 36

படிந்தன மாயவ னாறளி நீர்க்குளம் பாங்குடனே
மடிந்தன குன்றனை மாயை யிழைத் திட்ட மாயமெலாம்
கடிந்தனங் காம வெகுளியென் றின்னன காலறவே
விடிந்தன வாழ்வுகள் மெய்ம்மையும் மேலாய் விளங்கிடுமே. 37

விளங்குஞ் ஸ்ரீசக்ர மீதொளிர் ஞான விழுப் பொருளே!
துளங்கும் உடலினில் துங்கமார் நல்லருள் தோய்ந்தவளே!
களங்குறு காய்நிறக் கார் முகிலே கந்தத் தாரணிவோய்!
இளங்கிளை யாய்த்திரு வாணியை யேற்றரு ளெம்முதலே! 38

எம்முதலாகி இலகிடுவாய் சக்தி ஈறறியாய்.
தம்முத லென்றுநால் தேவமுழங்கு தாட்சாயணியே!
பம்மு மிருந்தன பாரத்தி னாய்க்கன்னல் பாரத்தருள்
எம்மவ ளேலவி தாம்பிகை யேயுளை ஏத்துவமே. 39

ஏத்துவ மாயிரப் போதுள தாமரை ஏற்றருளும்
பூத்த மலர்முகப் பொன்னவிர் மேனிப் பொலி வழகைக்
காத்திட வேகலை யேட்டினைத் தாங்கிக் கரத்தினிலே
சீரத்திடு நற்செப வாரச் சிறுமியைச் சேர்க்குவமே. 40

சேர்க்குவ மேகாற்றில் வேகமாய்ச் சென்றிடுஞ் சீர்பரியில்
ஊர்குவ ளாகிய அஸ்வரு தாவினை உண்மையுடன்
தேர்குவ மிவ்வுல கெங்கனும் பாவித்தித் தீப்பசியை
நேர்குவ ளேயன்ன பூரணி யாகிய நேரிழையே. 41

நேரிழை உச்சியிற் றாமரை நீண்மதி நேரரிய
தாரிழை செம்மைப் பசுங்கிளி தோளதிற் றாங்கியவள்
வாரிழை கச்சினள் விணையள் வானத் தமுதனையாள்
ஒரிழை போலும் நுடங்கிடை ராஜமா தங்கியளே. 42

தங்கிய தாமரைப் போதினள் தண்ணளியாள் நுதலில்
பொங்கிய நல்லரு ளேவிழி யாகப் பொலிமுகத்தள்
எங்கணு மேத்து கலைத்திற வேடெழுத் தாணியுடன்
சிங்க மெனத் திகழ் வாகவா கிளி யாஞ் செழுஞ்சுடரே. 43

செழுஞ்சுட ராம்பரை சத்து சித் தானந்தச் சேர்க்கையினாள்
தொழுந்தொறுந் துய்மனத் தொண்டர் தம் துன்பம் துடைத்திடுவாள்.
விழுந் தொறுந் தாயெனக் கைம்மலர்த் தாங்கும் விழுமியவள்
அழுந் தொறுங் கண்ணீர் துடைத்திடும் அன்பின் அணங்கிவளே.44

அணங்கிவ ளேன முகத்தினள் எட்டெனுங் கையுடையாள்
பிணங்கு மனத்திருள் போக்கும் வராகி பிறை நூதலாள்
உணங்கு மனத்தினர் உள்ளொ ளிராத் திற வுண்மையினாள்
பணங் கொள் அரற்கருள் இன்பப் பரையிசை பாடுமினே. 45

பாடுமின் நாற்புற டார்த்தமு முற்றப் பரிந்து களித்
தாடு மினாம் புவனேஸ்வரி தாளிணை தாங்கிடுவீர்
கூடு மின் விண்ணவர் கோவென் றழுதிடக் குன்றணையாள்
பீடுறு சிங்கம தேறி மகடன் சீர் பேர்த்தனளே. 46

பேர்த்தவள் தீமைகள் சிங்கே றமர்க் தவள் பீடுடையால்
ஆர்த்த துயர்க்கடற் காதவன் வாழ்விற் கரும்புணையாம்
சீர்த்தவர் நெஞ்சினைச் சிங்கா சனமெனச் சேர்ந்திடுவாள்
கூத்த மதித்திறல் கொண்டணை யேலிந்தக் கோதையையே.47

கோதையைச் சண்டியைக் குன்றெறிந் தானின் குலமுதலை
மாதவர்க் கன்பினை மாயிருண் ஞால மணி விளக்கை
யாதவன் சோதரி யாளினை எத்திடும் யாவரையும்
போதகர் என்றவர் பாத நற் போதுகள் போற்றிடுமே. 48

போற்றிடு வீர்முன்னை புக்கருந் தாள் பிடிப் போதகந்தை
மாற்றிடு வீர்விதி மாய்வினில் நீங்கி மகிழ்ந்திடுவீர்
ஏற்றிடு வீரவள் பாதங்கள் உம்முளத் தோற்றிடிலோ
காற்றிடு மூச்சினி ஏனிமக் கன்னையின் காப்புளதே. 49

காப்புள தென்றுன்னி முன்னையின் தேவியின் கால்பிடித்துத்
தீப்புக் கழிகின்ற விட்டிலைப் போற்செகத் தீமைகளை
நாப்புக் குரைத்தும் நயந்து மிழி வினை நண்ணுகிவீர்
ஒர்ப்புக் குரியதவ் வுத்தமி பேரேன் றொலித்திடுமே. 50

***

# முன்னேஸ்வரம் ஸ்ரீ வடிவாம்பாள் கும்மி

[திரு கா. பெரியசாமிப்பிள்ளை பாடியது]

### காப்பு விருத்தம்

அன்னை கௌமாரியே அரன் பாரி அம்பிகா
உன்னை என் இதய மதில் உருகியே கூவினேன்
முன்னை வினைதீர வருவாய் வடிவழகியே
என்னை உன் பாலனாய் ஏற்பதுன் பாரமே.

கும்மியடி பெண்கள் கும்மியடி - தினம்
கூடிக் கும்மியடியுங்கடி
எம்மையாளும் வடிவாம்பிகை பாதத்தை
ஏற்றிக் கும்மியடியுங்கடி (கும்) 1

எத்திக்கிலும் வாழும் மக்களெல்லாம் - கூடி
ஏங்க வாடி மனம் கசிந்து
பக்தி பாசத்துடன் அம்பிகை பாதத்தை
பார்க்க வென்று சிரமே பணிந்து (கு)ம் 2

கோச்சி மோட்டார் சைக்கில் தன்னிலேறி - மக்கள்
கோடான கோடி சிலாபம் தன்னில்
நேர்த்தியதாகவே வந்திறங்கி - நன்றாய்
நின்று இளைப்பாறி கால் நடையாய் (கும்) 3

பக்தி மனத்தோடு ஸ்நானங்கள் பண்ணியே
கற்பூரம் காளாஞ்சி தானெடுத்து
சுத்தி வலம் வந்து தேவி வடிவாளை
தோத்தரித்து கும்மி கொட்டுங்கடி (கும்) 4

ஊரார்கள் செய்திடும் ஒவ்வேர் உபயத்தை
ஊகித்து நின்றோதும் பார்ப்பாணர்கள்
ஆராதனை செய்து அம்மையை அப்பனை
அன்புடன் பூரதம் மீதேற்றி (கும்) 5

ஆண்களும் பெண்களும் ஒன்று கூடி - மிக
ஆரவார மேள தாளத்துடன்
மான் மழுவேந்தும் மகிமை பிரதாபனை
மந்தை வலம் சுற்றி கோவில் வந்து (கும்) 6

வெளி வீதி உள்வீதி சுற்றிப் பவனியே
வேதாகம விதி ஓதிச் செய்து
விடியும் வரை கலைக் கூத்துகளாடிடும்
வேடிக்கை பாரத்து கைகொடுங்கடி (கும்) 7

பார்த்து மகிழ்ந்தும் பொழுது விடிந்தும்
பாங்குடன் குளித்து பட்டுடுத்தி
பண்புடன் காளாஞ்சி தானெடுத்து - அம்மை
பத்ரகாளி கோவில் தன்னை நாடி (கும்) 8

அரசு கருங்காலி தேங்கு நிழலிலே
அன்னையைத் தஞ்சமென்றே பணிந்து
ஆயி பத்ர காளி பூசை கண்டு - அன்ன
தானமும் சீருடன் வாங்கி உண்டு (கும்) 9

கொக்கரக்கோவென சேவலும் கூவிட
கோடி சனங்களும் கேட்டெழுந்து
பக்தி ரசத்துடன் கும்மி தனைப் பாடி
பாவையரே கும்மி கொட்டுங்கடி (கும்) 10

மாட்சி மிகுந்திடும் காட்சி தன்னைப் பார்க்க
மங்கையரே ஓடி வாருங்கடி
ஆச்சி வடிவியை தோத்திரம் பண்ணியே
அன்பு திருவிழா பாருங்கடி (கும்) 11

தேரோடும் திருநாளைப் பார்த்து அனைவரும்
தீர்த்தக்கரை தனை நாடி நின்று
சீருடன் பால்பழம் சக்கரை அவல் சேர்த்து
சிவனாரின் பூசைகள் தான் சிறக்கும் (கும்) 12

மானேந்தியே கொன்றை மாலையணி சிவன்
மாயவனாற்றில் தீர்த்த மாடி
வானோர் மகிழ்ந்திட சுவாமி ரதேமேறி
வந்திடும் மகிமையை பாருங்கடி (கும்) 13

சாலோக சாமீப சாரூப சாயுட்சயம்
தந்திடும் முன்னேஸ்வர நாதன்
லோகத்துடன் மேளதாளத் தோடு
நாலா திக்கும் மக்கள் சூழ்ந்துவர (கும்) 14

சாந்தம் நிறைந்த சிலாபம் நகர் நடுச்
சந்தியில் சுவாமியை தனா நிறுத்தி
காந்தம் பொருந்திய ஒலி பெருக்கி வைத்து
கண் தெரியார் பாடும் பாட்டிசைத்து (கும்) 15

பாட்டுகளை கேட்டு நாட்டமுடன் - கெட்டிப்
பாலத்தின் அக்கரை புல்வெளியில்
ஆட்டக்கரகமும் ஆகாய வானமும்
அண்டமதிர்ந்திடும் பாருங்கடி (கும்) 16

மூன்று மணி நேரம் முற்றம் வெளி தங்கி
முக்கண்ணன் சுவாமி ரதம் திரும்பி
பியாண்டு கிளாரி நெட் நாயண வாத்தியடும்
பேரிகை நாட்டு முரசொலிக்க (கும்) 17

யாழ் நகர் சீமான்கள் தோரணம் கட்டியே
பால் பழம் வைத்துமே பூசை செய்து
வேல் முருகன் தந்தை வீதிவலம் வரும்
வேடிக்கை கும்மியைக் கொட்டுங்கடி (கும்) 18

வித்தகர் போற்றிடும் பெற்தேருமே வந்து
முத்து வேலர் கடை முன்னே நின்று
பத்தியாய் கற்பூர ஆராதனைத் தீபம்
பூசைக் கிரியைகள் தான் முடித்து (கும்) 19

ஆடல் பாடலோடு நேர் கிழக்கே வந்து
ஆலமரத்தடி சந்தி நின்று
தேடல்மிகு திரு ஐயனார் கோவில் முன்
திவ்ய திருப்பூசை தான் செபித்து (கும்) 20

பத்திரகாளி கோயில் லெச்சுராமன் குலப்
பாலகர்கள் தேவியை தான் தொழுது
பேரோங்கிட தீப ஆராதனை கொண்டு
பெண்களும் ஆண்களும் பூசைகண்டு (கும்) 21

ரத்தின கைலாச நாத குருக்களின்
நற்கரத்தால் அபிசேகம் செய்து
சித்த மகிழ வடிவாம்பாள் பாதத்தை
சேவிக்கும் கும்மியை பாடுங்கடி (கும்) 22

சிங்காரமாய் மேள தாளம் முழங்கிட
செப்பும் பெரிய சாமி தமிழ் பாடிட
மங்காப் புகழ் முன்னை நாதர் வடிவாம்பாள்
மங்களக் கும்மியை வாழ்த்துங்கடி. (கும்) 23

***

# முன்னேஸ்வரம் வடிவழகி

['கலைமகள்' ஆசிரியர் திரு கி. வா. ஜெகநாதன் பாடியது]

பிறவிப் பணிபோக்கும் பேரின்பம் ஆக்கும்
திற முற்றிடும் வாழ்வு சேர்க்கும் - அறம் வளர்க்கும்
முன்னேச் சுரத்து முதல்வி வடிவழகி
தன்னேரில் தாமரைத் தாள்.

சந்தாபந் தீர்க்கும் தவத்தின் பயனளிக்கும்
நொந்தார்க்கு வேதனையை நூக்கிவிடும் எந்தாயாம்
அன்னை முன்னீசுரத்து ளாரும் வடிவழகி
பொன்ன லரும் தாள் என்னும் பூ.

மும்மலமும் போக்கியின்ப முத்தியினை நல்கி என்றும்
செம்மை பெற வைக்கும் திருவருளார் - அம்மை
வடிவழகி முன்னேச் சரத்தில் வாழ் மாதா
அடி மலரி லே புகுந்திட்டால்.

தன்னே ரில்லாக் கருணையினால்
தழைக்கும் அழகுக் குவமையிலாள்
பொன்னேர் மேனி இறைவனெஞ்சம்
புகுந்து குழையச் செயுமன்னை
எந்நேரமும் நான் மறையொலிக்கும்
எழிலார் சிலம்பத் திருவடியாள்
முன்னிச் சரத்தில் வடிவன்னை
முன்னர் பணிந்தேற்றுகன் குறையே.

அடியின் அழகும் இடையழகும்
அருளே பாலாச் சுரந்த முலைப்
படியும் அழகும் கையழகும்
பதும மனைய முகத்தழகும்
நெடிய விழியின் திரு வழகும்
நிலவும் முடியின் பேரழகும்
வடிவன்னை தன் பாற் கண்டார்
மற்றும் பிறவிப் பிணியடையார்.

கண்படைத்த பயனென்னே எனக் கேட்பின்
யான் சொல்வேன் கருகிக் கேண்மின்
கண்படைத்த பொழிலிலங்கைத் தீபகத்தில்
முன்னேசுரம் தன்னிற் சென்று
விண்படைத்த இந்திரனும் தொழுகின்ற
திருக்கோயில் விரைந்து சென்று
பண்படைத்த புகழ் சான்ற வடிவழகு
திருமேனி பார்த்துய் வீரே!

மனம் நெகிழக் கண்களினீர் யிகவாரப்
புகை மிக மலரச் சென்று
வனமலியும் முன்னேசுரத் திருத்தலத்தை
யடைந்தங்கே வளருங் கோயில்
தினமலியும் அன்பர் பணி செய்யக் கண்டு
வடிவழகி திருத்தாள் நோக்கின்
முனமலியும் வினையெல்லாம் இரவி முன்பு
பனியென்ன முடிந்து போமே!

முன்றான் முளைத்த முழுநீல
முதல்வி தன்னைத் திருப்பொறியில்
நன்றாய் விந்து வினின்ற
நங்கை யவனை வடிவழகி
பொன்னா துயர்ந்த கோமளத்தைப்
பொருவில் முன்னீச் சுரத்தினிலே
என் தாய் என் தாய் என்றுருகி
இருகண் களிக்கக் கண்டேனே!

வேத மிசையிருக்கும் வேதச் சிலம்பொலிக்கும்
வேத மனுமணத்தின் வீறுபெறும் - வேதம்
முடிய அறி கில்லாத முன்னீச் சுரத்தில்
வடிவழகி நற்றாள் மலர்.

வேதப் பரிமளப்பூச் சூடி விளங்குரன
நாதக் கழலணியும் நல்லெழில் கொண்டாதரஞ்சேர்
அன்பர் மனப் பொங்கை அலரும் திருவுடைய
மனவடிவன் னைதான் மலர்.

***

60

# முன்னேஸ்வரம் வடிவாம்பிகை

வடிவழகி எங்கள் அன்னையே
வந்த குறை அன்று தீர்த்தவளே
வாழ்வினிலே வழி பிறக்க
வந்து அருள் தந்தவளே
அன்னையாய் எமக்கிருந்து
அன்றும் என்றும் காத்திடுவாய்
குல தெய்வமே இங்கு நீயம்மா
குறை என்றும் எமக்கு இல்லையம்மா
இங்கு உண்டு உன் புதுமை
எண்ணிலடங்காதம்மா
உற்சவ தினங்களெல்லாம்
ஒய்வில்லை இங்கு பக்தரம்மா.

***

## முன்னைநாதர் வடிவாம்பாள் திருக்கோலக் காட்சி
## திருக்கோலக் காப்பு விருத்தம்

[ஹிக்கொட, உந்துகொட திரு. பெரியசாமிப்பிள்ளை பாடியது]

### ஆசிரிய விருத்தம்

அன்னை கௌமாரியே அரன்பாரி அம்பிகா
உன்னை என் இதயமதில் உருகியே கூவினேன்
முன்னை வினை தீர வருவாய் வடிவழகியே
என்னை உன்பாலனாய் ஏற்பதுன் பாரமே.
பூமேவும் மாந்தர் தொழும் பழம்பெரும் ஸ்தலமான

பேர்தங்கும் முன்னேஸ்வரம் வாழ்
பூரணி புராதனியும் புவனி சொருபினியும்
பொன்வடி வாம்பிகையும் நீ
நாமேவும் நற்கலா வல்லியும் நீ எனது
நலங்காக்கும் தாய்தந்தையும் நீ

நாதவித் தாந்தமுத வானமுன்னை நாதர்
நாடுஞ் சிவகாமியும் நீ
பாமேவும் பண்டித சிரோன்மணி மனோன்மணியும்
பலவும் நீதானென்றுணையே
பன்னாளும் துதிப்பாடிப் பணிபுரிகின்ற நின்

பாலன் பக்கத்திலிருந்து
காமேவும் கருணைதந் தெனையாளு மம்பிகா
கைலாசற் கினித்த முகமே.
கங்காளி பைரவி கன்னி திரி சூலியெனும்
கண்டகண்ட தேவி உமையே

தக்கோர் தொழும் பதி யென்னுமுன் னேஸ்வரச்
சன்னி தானத்தி னழகும்
தடம் பெரும் வாவிசூழ் தாமரைத் தடாகமும்
தகுமாய வாற்றி னெழிலும்
மிக்கதோர் வர்ணனை காட்டி எது சொல்லினும்

மிகையாகி டாதஸ் தலமாய்
மிதவைகள் நாற்புறமு மதில்வளரு மிருநாளம்
மிகுதி கைச்செண்டு எனவும்
பக்கமெல்லாம் வயல் பிரம்பு நிறை தேஞ்சோலை
பொங்குகடல் ஒலிகள் பலவும்

பகலிரவு பார்த்திருந்தாலும் வாடாத
பதிவாழும் அம்பிகா என்
சிக்கறுந் திதுவேளை எனையாள வந்திடும்
சின்மயா னந்த னுறுவே
சிங்கார வீதியில லங்காரத் தேரில் வரும்

சுடர் முத்து வடிவாம்பிகையே
பண்டு ராவணனைச் சங்காரஞ்செய் தேராமர்
புட்பக விமான மதிலே
பாரதம் நோக்கி வரும் மார்க்க மிங்ஙனம் வந்து
பிரம்மகத்தி பிரிந்தகன்று சொல்லக்

கண்டு இதில் மகிமையுண் டென்றே இறங்கிடக்
கலச கோபுர மிலங்கும்
காட்சி கண்டேராமர் ஆச்சி வடிவாம்பிகை
கங்காளர் தன்னைப் பணிய
நின்று ராமசிவ லிங்கமதைப் பூசித்து

நீ செல்லல் நன்று என்று
நிமலனுரைத் திடநெடிய மாலான ராமர்பணி
நிறைத் தலப் பெருமை தன்னை
விண்டு சொல் லிடவொரு நாவிலெளி தாவதோ
வேத நான்கினை வகுத்த

வியாசமுனியும் மஞ்சி வணங்குமுன் னேஸ்வரம்
வாழ்வடி வாம்பிகை சமேத நாதா
தஞ்சமென்றே ராமர் சாட்சாத் மகேசனைத்
தரிசித்து சிவனே இந்த
சாயாரு பம்பிரம கத்தி இன் னுமெனைத்

தொடருமே என்றி றைஞ்சி
மிஞ்சிய வினையிருந்தாலும் ராமா நீகேள்
முந்தல மாயிலங்கும்
முன்னேஸ்வ ரம்திருக் கேதீஸ்வரம்
மதில் சிவலிங்கம் வைத்துப் பணிந்து

மஞ்சுநிகர் மாயவாற்றுக்கு வட பாகத்தில்
மானவரி என்ற தலம் பண்டு
மகிமைப் படவுன்பே ரால்ராம லிங்கமென
வைத்ததைப் போற்றி செய்து
விஞ்சைகொண் டிலங்குசிவ தலந்தெரி சித்தாலே

வினை ஏதுமிலை என்ற
விமலன் வடிவாம்பிகை வீற்றிருக்கும் தலம்
விளங்கும் நலமூர்த்திஸ் தலமே
இமய மலைச் சாரலில் துவாபர யுகத்தினில்
இருடிகள் கூடியாகம் செய்கையில்

இதிகாசம் முணர்ந்தவே தவியாச ரங்ஙனம்
எழுந்தது கண்டவர்கள் வணங்கி
சமயமிது சுவாமி நீ வீர்வந் தெங்களோர்
சந்தேகம் தீர்த்த ருளுவீர்
சகலவுல கர்த்தா அரனா அரியாவெனச்

சாற்றியதைக் கேட்ட வியாசர்
அமைய நீவீரற்ப ஞானமில் லீர்போல
அறிய வந்தீர் கேளுங்கள்
ஐயனென் ஹரியேதான் எனவலக் கரந்தூக்கி
ஆட்டியதைக் கண்ட ரிசிகள்

நமது இரு தயசுத்தி பெறவிது போல் காசி
நாதர் சன்னதியின் முன்பு
நாடிச்சொன்றிடவேணு மெனசௌன, காதியர்முன்
நன்று நான்றென வியாசர்
கங்கையில் நீராடி அங்கத்திரு மண்பூசி

காசி ஷேத்திர மடைந்து
கன இறு மாப்போடு பலரும்பார்த்திடமுன்போல்
கரம் சிரம் மேலுயர்த்தி
பொங்கு புவனகர்த்தா விஷ்ணுவன்றி வேறு
பரத்தொன்று மில்லை எனவே

பகர்ந்ததைக் கேட்டநந் தீஸ்வர்ர் வெகுண்டுமே
பரம விரோதமாக
இங்கு சிவ தூசனை செய்து நீட்டியகரம்
இருந்த வாறிருக்க வென்றே
இரு சாபம் கண்டுஹரி அங்குபிர சன்னமாய்

ஏ! வியா சாநீ கேட்பாய்
எங்கும் நானேகர்த்தன் என்பது உண்மையே
எனக்குக் கர்த்தன் சிவனே
என ஓதி மறைந்த விஷ்ணுந்தொழுமுன்னேஸ்வரம்
அமர்ந்தவடி வாம்பிகை சமேத நாதர்

நரஹரி நாரணா என ஓதி வியாசர்
நந்தி பெருமானை அணுகி
நாதனே இச் சிவதூசனை செய்த பாவத்தை
நானெங்கு தீர்ப்பே னெனன்
துரதிர்ஷ்ட மெவர்க்கும் முண்டுவியா சாஇந்தத்

தோஷம் நீங்கிட வென்றாலே
தென்னிலங் கையிலுள்ள முன்னேஸ் வரம்சென்று
தீர்ப்பா யென்றருளிச் செய்ய
சிரமேற்கொண் டவ்வாறே சீடர்கள் வியாசரை இத்
தீர்த்த மகிமை கேட்கவே

அரனை அரியை மதிக்காமல் ஒரு காலத்தில்
அனைத்து நாமென்னும் அகந்தையாலே
அடைந்த தவநிலைக்கற்பு அழிந்தகதையால் வந்த
ஆறே இம்மாய னாறு
முன்னாளில் தாருக வனத்தவ சிரேஷ்டர்கள்

மமதையை அடக்க வென்றே
மாயன் மோ கினியாய்ம கேசன்பிச் சாடனாய்
வடிவு கொண் டங்கு சென்று
துன்னத வாய்ச்சிவன் தவமாத ரைக் கொடுத்
திட மாயன் ரிசிகளைத் துவளைவைத்து

திருவிளையாடல் புரிந்த தரியரனும் கூடியதில்
செனித்தங் கொடுதிருக் குமரனாக
மின்னும் அரனே எனக் கூடியன தரித்திட்ட
மகனரி ஹரபுத்ரன் வாழ்தலத்தில்
மேலுமெனை வந்தனைய வேணுமென அரிசிவனை

வேண்டியதற்கிணங்க என்றும்
நன்னுமா யவனாராய நீ பிரவா கித்திரு
நாம் வருடதோறும் வந்து
நிறை பூரனை அன்று சுபவேளை யுங்கண்டு
நின்று விளையாடி மகிழ்வோம்.

***

66

# ஸ்ரீவடிவாம்பிகா நவரத்ன மாலிகை

[கோப்பாய் பிரம்மஸ்ரீ ப. சிவானந்த சர்மா பாடியது]

கைலாச நாதனடி நான் தொழுது முன்னை நகர்
கைலாச மென்றெண்ணிக் கைகுவித்தேன் - கைலாச
நாதனங்கு நாயகியின் நன்முகத்தில் தான் லயித்தே
வேதமுறைக் கின்றான் விழை.

சப்தசதி பாடும் சதுர்வேதம் தாம் முழங்கும்
செப்புமருட் கத்தங்கள் தினமோதும் - ஒப்பரிய
பஞ்சதச அக்ஷிரங்கள் பண்பாய் ஒலித்தெங்கும்
விஞ்சுபதி முன்னேஸ்வரம்.

முப்பத்து முக்கோடி தேவர் முயன்று தொழ
எப்பக்கம் என்று தெரியாதிருக்க - இப்புவியில்
செப்புமொரு முன்னைநகர்ச் சக்கரத்தில் சேர்ந்துறைவாய்
அப்பனருள் தானே அது.

கசிந்துருகும் பக்தருக்கு காசியினி லேதினமும்
வசந்தமென வந்துலவி வாழ்வளிப்பாய் - வசந்தமெனும்
நவராத் திரிநாளில் நாடுமொரு யாகமதில்
உவந்தருளும் உத்தமியே வா!

முன்னைப் பழம்வினைகள் மூண்டெரிய நற்கருணை
என்னும் நெருப்னைய ஏந்திழையே - முன்னை
வடிவாம் பிகைஎன்னும் வாருலக நாயகியே
முடியாதுன் மாநோக் கருள்.

துயர்யாவும் தூசாய் போக்கிவிடும் காற்றாகி
உயர் வாழ்வு கூட்டுமொரு சுந்தரியே - மயல்கொண்டேர்
நியமங்கள் தவருது நித்த முனைத் தொழவே
கயல் விழிசாய்த் தென்முகத்தைக் காண்

என்னைப் படைத்தவள் நீ ஏழுலகம் காப்பவள் நீ
சின்னத் துயர்களையும் தொலைப்பவள் நீ - முன்னை
வடிவாம் பிகையாகி மணிகண் - டனை மறைத்தாய்
அடியேனைப் பார்த்தே அருள்.

சாந்தம் முகம் தவழும் கருணை விழிதவழும்
ஏந்தும் கரத்தான் இருஞ்சோகம் - நீந்தும்
அடியார் இதயத்தில் இன்பம் தினம் தவழும்
முடிவாமே துன்பப் பயம்.

பொல்லாக் கொடும் அரக்கர் போய் ஒழியப் போர் நடத்த
வல்லாய் உனதரிய வீரம் - நில்லா(து)
அழிந்து விடும் கோபம் அழகு நகை சித்தும்
எழுந்தருளும் அற்புதமே ஏர்!

முற்றும்.

# அருள் நிறை வடிவாம்பிகை திருப்பதிகம்
[முன்னேஸ்வரம் திரு லெ. நடராஜா பாடியது]

திருச்சிற்றம்பலம்

**வயல் பிள்ளையார் காப்பு**

அம்மையும் அப்பனும் உலகமென்றான்
அம்மையப்பன் அருள் பெற பாடென
அம்மையும் அப்பனும் எனக்குள் அவனாகி
அம்மையப்பனாக வயலகப்பன் அமர்ந்தானே.

**கலைமகள் காப்பு**

சிலை அழகாம் முன்னேசுர புகழோங்கும்
மறை பொருளாம் உருவடிவான வடிவழகி
திரை அகலும் அருள் திருப்பதிகம்
கரையிலா கலையழகியும் காப்பாயே.

திருவே என் செல்வமே செல்லக் கிளியே
தேனே அமுதே எழில்மிகு
உருவே என் உறவே என்னுள்ளமே
உடலியங்குமுயிரே உயிரில் கலந்த
கருவே என் கற்பகமே கண்ணே
மணியே மணியினொளியே வேதப்
பொருளே முன்னேசர் பாகங் கொண்ட
வடிவழகி அம்மையே உன் பாதம் பணிந்தேனே.

குறிஞ்சிப் பூவால் மாலை கட்டி
மருவும் மரிக்கொழுந்தும் சேர்த்து சாத்தி
பெஞ்சீர் மங்கள வரிசை வைத்து
முக்கனி அருங்கனி படையல் வைத்து
கருங்கண் கருங்குழலிகள் தீபமேந்த
அவள் முகச் சாயலிலே இருபிள்ளை ஆட்ட
பெரும் நவராத்திரி நன்னாள் ஊஞ்சல் கண்டு
வடிவழகி பொற்பாதம் போற்றுவேனே.

நவராத்திரித் திருநாளில்
அபிஷேக மண்டபத்தில்
அவனே அருகில் நின்று
உனை சீராட்டுதல் போல்
கோமான் தன் மகவு தானென்று
நீராட்டக் கண்டேன் கண்டு
பாமாலை சூட்ட முன்னைநகர் வந்து
வடிவழகி பொற்பாதம் பாடி நின்றேனே.

பூவழகி பொட்டழகி
சிந்தாமணிப் பல்லழகி சித்திரத் தேரழகி
பூங்கொடி இடையழகி
மல்லிகை சிரிப்பழகி மரகத ஒளியழகி
பூசும் நிறமுகி வானழகி
மண்ணழகி பாவையர் பாட்டழகி
பூத்தூவிடும் பக்தர் குளாம் கழழகி
மாதரசி வடிவழகி பொற்பாதம் பணிந்தேனே.

நீலமணி மிடர் ஈசன்
உடல் சரிபாகம் கொண்ட சோதியே
ஆலவிசமுடை நாகம்
மணிக்குடையாக உன் முடி மீதிலே
வாழ வழிதந்து பாட அருள் தந்து
உயர வைத்தாய் பாரிலே
காலனின் பிடிதன்னிலே எனை
மீட்ட வடிவாம்பிகையே.

முப்புரம் எரித்தான் முன் செல்ல
முத்தவள் வந்தான் பின் தேரினிலே
எப்புரமும் காணாத காட்சி கண்டேன்
யான் கண்ட காட்சி கண்டால்
அப்புறம் செல்லுமே மலம் மூன்றும்
தேவி போற்றியென அவள் நாமம்
செப்பியம்ப முன்னேசர் அருள் புரிவார்
கற்பகத் தருவழகி பாதம் காண்பீரே.

திருமாலும் நான்முகனும் ஆதியெனயேத்தும்
பதியுறை மாயவனாற்றங் கரையில்
ஒரு நாளும் குறையா அருள் நிறைந்து
சிவபூமியில் நவனாள் சிறந்த
பெருமானுறையும் இந்திரபுரியடைந்தேன்
நீங்காத நெறிதந்த சிவமான செல்வரை
கருவாகக் கொண்டு வடிவழகி பாதம்பாட
முன்னேசர் வரந்தந்தானே.

விண்ணாண்ட தேவர் முக்காலமுணர்ந்த
முனிவர் துதித்துப் புகழ்பாடும்
மண்ணாண்ட மைந்தர் பலர் செல்வனே
செப்பமிட்டு மானியங்கள் தான் கொடுத்து
சொல்லாண்ட வித்தகர் கைலாசநாதர்
தேனே அமுதே என உனைப்பாட
பல்லாண்டெனும் பதங் கடந்த ஈசன் பாதம்
கொண்ட வடிவழகி பாதம் பணிந்தேனே.

வேத நாயகியே போற்றி
விண்ணும் மண்ணும் துதிக்கும்
நாத ஒளியே போற்றி
மங்கள விளக்கே போற்றி
மேக மழையே போற்றி
மாணிக்க மரகதமே போற்றி
பாகங் கொள் முன்னேசர்
வடிவாம்பிகை பாதம் போற்றி

சிவ லோக அரசியே செங்கமல
பொற்பாதம் போற்றியென்னும்
தவலோக நாதர் போற்றும் தவமே போற்றி
மலையரசன் தவப்பயன்பெற
பூலோகம் உதித்தாய் போற்றி
உமையவளே உனை நீங்கள்
சாலோகம் கொடுப்பாய் போற்றி சர்வ
தயாபரி வடிவாம்பிகையே போற்றி

திருச்சிற்றம்பலம்.

# வல்ல வடிவாம்பிகா மாலை

(திருமதி செல்வம் கலியாணசுந்தரம்)

**விநாயகர்துதி**

நல்ல விநாயகனே ஞானமுதற் பொருளே
அல்லல் தொலைப்பவனே அன்புக்கருள்பவனே
வல்லவடிவாம்பிகை மாலை தொடுப்பதற்கு
சொல்லுக்கதிபதியே சொல்வளமீந்தருளே.

1. முன்னை நாதர் மகிழும் மூலம் பெருங்கனலே
என்னை இயக்கிநிற்கும் இன்பப் பெருமுதலே
அன்னை அருள்வடிவே அன்பினிருப்பிடமே
உன்னை உணரவைக்கும் உணர்வே வடிவாம்பிகே.

2. வெருமனே வருதல்வேண்டா விளம்பிடு சரிதமதை
நறுஞ்சோலை நல்வயல்கள் நற்கரும்பு கனிமரங்கள்
செறிந்தோங்கி நின்றதுவும் செம்மைநலமுற்றவும்
புறம்பெயர்ந்த பாழ்விதியை எழுதுவதோ வடிவாம்பிகே.

3. எழுதுவதால் ஆவதென்ன என்றேங்கி முனகுகையில்
பழுதடைந்த பக்திமையால் பறங்கியர்கள் பழிதொடுத்தார்
பழப்பதையைப் புரிந்து கொண்டால் புத்திவரும் பக்திவரும்
இழந்தபதி திரும்பிவரும் எழுதெக்ராய் வடிவாம்பிகே.

4. உலகுக்கு உயிராக உறைந்துநிற்கும் உன்னருளால்
உன்வருப்பை எழுதுகின்றேன் உனக்கேதான் உடமையம்மா
என் வசத்தில் ஒன்றுமில்லை என்னிதயத்துறை பொருளே
பன்மலரில் பிரிமளிக்கும் பக்திமையே வடிவாம்பிகே.

5. வெற்றித் திருவுருவே வேத விழுப் பொருளே
பற்றத் தொடரும் வினை பாறிமுடிப்பவளே
குற்றம் குறை களைந்து கோதில் மனமருளி
பற்றிப் பிடிததென்னைப் பாடுவிக்கும் வடிவாம்பிகே.

6. முன்னைப் பெரும்பதியின் மூலத்திருவுருவே
பின்னைப் பெரும்புலையர் போதுக்கீசர் இடித்த
பென்னம் பெரிய கோவில் கோபுரம் கொள் நிலமும்
தன்னந்தனி அரசும் திருப்பிடம்மா வடிவாம்பிகே.

7. இராவணனைக் கொன்ற பழி இராம பிரானைத் தொடர்ந்து
இராம பிரான் நல்லிதயம் இறுக்கிப் பிணிக்குகையில்
கேபுரத்தைக் கடக்கவுமே பிரம்மகத்தி அகன்றிடவே
இராம பிரான் இறங்கித் துதித்தார் வடிவாம்பிகே.

8. இராம பிரான் இன்புற்று இராமலிங்கம் கண்டு சென்றார்
பராபரனின் அருள்வேள்ளம் பரவிநின்ற முன்னை நகர்
தராதலத்தில் மிகவரிய திருத்மராமாய் விளக்க நின்று
வரமளிப்பாய் வாழ்வளிப்பாய் வளமளிப்பாய் வடிவாம்பிகே.

9. எத்தனையோ மகரிஷிகள் தவம்புரிந்தார் இத்தரத்தில்
அதன் அருள் சுரந்து பல அற்புதங்கள் தாம்புதிந்தார்
வித்தகத்து மாமுனிவன் வியாசனருள் பெற்ற தலம்
மெத்தவருள் சித்தர்மடம் கண்டு சென்றான் வடிவாம்பிகே.

10. நோய் நெடிகள் தீர்த்து வைப்பாய் நேர்திகளைப் பூர்த்தி செய்வாய்
பேய் பிசாசு உபத்திரவம் போயகலப் பார்த்து நிற்பாய்
தாய்க்கரத்தை நீட்டி எமைத்தாங்கி நிற்கும் தவக்கனலே
சேய்கள் எமை அணைத்துவக்கும் செந்திருவே வடிவாம்பிகே.

11. வண்ணமலர் பூப்பதுவும் வளர் தரங்கள் காய்ப்பதுவும்
எண்ணமெல்லாம் நின்னழகில் நிலைத்துநின்று களிப்பதுவும்
நண்ணரிய நற்பலன்கள் நாநிலத்தில் நிலைப்பதுவும்
பண்ணிரிசை பாடலும் நின்பரிசன்றே வடிவாம்பிகே.

12. உள்ளக் குகையதனில் ஒன்றி நிற்கும் ஒளி வடிவே
கள்ள மனக்குழறும்படி கனக்கவுன்டு கலியுகத்தில்
துள்ளுமனம் நின்னருளைத் துய்த்து நிற்றலெப்போது
அள்ளி எமைத்தாங்கி நிற்கும் அன்புருவே வடிவாம்பிகே.

13. மன்னுகுளக்கோட்டு மன்னன் மாதவமாய்ச் செய்த பணி
உன்னிலுள்ளம் உருகுதம்மா உலகறியக் கூறுவதோ
செந்நெல்வயல் களனியேங்கும் செப்பனிட்டுப் பத்துமைல்
அன்பருக்கும் அமுதளிக்க ஆக்கிவைத்தான் வடிவாம்பிகே.

14. மன்னனவன் செய்தபணி மாதவந்தோர் வியந்ததுண்டு
கன்னல் கனி சோலைகளும் கரும்புநிறை காணிகளும்
அண்ணலவன் திருப்பணிக்கு அன்புநிறை தொண்டுகளும்
எண்ணியவன் குடிமனைகள் இயங்கவைத்தான் வடிவாம்பிகே.

15. கோணேசர் திருப்பணிகள் கோதகல முடித்த பின்னர்
முன்னேஸ்வரம் வந்து முனைந்து பல தொண்டியற்றி
இன்னாருக்கின்ன தொழில் இவையென்றெழுதிவைத்து
பொன்னாரும் பொற்கோவில் புனரமைத்தான் வடிவாம்பிகே.

16. கோவிலும் கோபுரமும் கொள்மதிலும் சுற்றிவைத்து
கோவிலிற் பூசை செய்யும் குருக்கள்மாரும் சேவகரும்
கோவிலினருகினிலே குடியிருக்கும் வகை செய்து
கோமகனார் குடியடிமை கொண்டார் வடிவாம்பிகே.

17. கலிபிறந்து தலியப்பகம் ஐஞ்நூற்றிப் பன்னிரண்டில்
நலிவகலக் குளக்கேட்டான் திருப்பணிகள் தொடக்கிநின்று
குலகுருவாம் நீரகண்டர் மனைவி விசாலாட்சி வேதவித்துக்கள்
குல மோங்கும் புத்திரர் சகிதம் குடமுழுக்கு முடித்தான் வடிவாம்பிகே.

18. ஆனகலை அறுபத்து நான்காம் வளரவைத்து
ஆனவரைக் கொண்டுவந்து ஆங்காங்கே குடிவைத்து
ஆன கிராமங்கள் அறுபத்தாறும் செய்து
ஆன கிரமவிதி ஆக்வைத்தான் வடிவாம்பிகே.

19. ஆக்கிவைத்த நெல்வயல்கள் ஆனவிளைவு காண்பதற்கு
ஆக்கிவைத்தான் விதிமுறைகள் முன்னைநாதர்க்காய பங்கு
தேக்கமறச் சோர்ப்பதற்கு திறைசேரி முறைமுடித்து
தாக்கதற்ற திருத்தொண்டு தான் புரிந்தான் வடிவாம்பிகே.

20. கொண்டு வைத்த குடிமனைகள் தொண்டுதொட்டு நிலைப்பதற்கு
தொண்டுமுறை தீட்டி வைத்து தண்டனையும் தேடி வைத்து
கண்டு கொண்டு விட்டகுறை கொண்டுசமான் செய்வதற்கு
பண்டு கொண்ட விதி முறைகள் பண்ணிவைத்தான் வடிவாம்பிகே.

21. வாழைமரச் சோலைகளும வாழ்வழிக்கம் காடுகளும்
வேளை தறாமல் ஓத வேதியரும் வேள்விள஌ம்
காளையரும் கன்னியரும் முன்னை நாதர் தொண்டியற்ற
ஆளணிகள் ஆயநிலை அமைத்து வைத்தான் வடிவாம்பிகே.

22. தொழும்பாலர் தொண்டு சற்றும் குறைவுபடா விதியமைக்க
தனியுண்ணாப் பூபால மன்னனுக்கு முடிசூட்டி
முன்னைநாதசுவாமி புனித ஆலையபரிபாலனத்தை
துன்னவிடா வகைமுடித்து விடைபெற்றான் வடிவாம்பிகே.

23. தனியுண்ணாப் பூபாலன் பரிபாலன முறை அமைத்து
பன்னிரு வேளாளர் பரம்பரையைத் தேர்ந்தேடுத்து
முன்னவர்க்கு சந்திரசேகர முதலிப்பட்டம்
பின்னவருக்கு பட்டங் கட்டிக் கோரளை பட்டம் சூட்டினான் வடிவாம்பிகே.

24. இருவருக்கும் இருப்பிடம் முன்னேஸ்வரமென்றிட்டு
பெரிய "கபடா"உத்தியோகம் இருவருக்குமீந்து
பிரகாரம் இரண்டிலும் சுவாமி எழச் செய்தல்
உரிய அவர் மரபினர்க்கு வழங்கினான் வடிவாம்பிகே.

25. எஞ்சிய பதின்மருக்கு அத்துக் கோறாளைப் பட்டம்
தம்பகல் கொக்காவில் பம்பளை தகப்பவை கருவயல்
மண்டலானை பள்ளமை மினிக்குளம் உகப்பிட்டி
இன்ன சில கிராமங்களில் இருத்தினான் வடிவாம்பிகே.

26. அன்னவரின் கடமை வேளாண்மைக்குதவுதல்
முன்னைநாதர்க்குறிய பங்கு பத்துக்கிரண்டு அறவிடுதல்
நன்நயமாய் ஊரவரை ஊக்கி வழி நடத்தல்
சொன்னபடி உற்சவத்துக் குதவலென்றான் வடிவாம்பிகே.

27. அகம்படி வேளாளரை எலிவெட்டி காக்காய்ப் பள்ளி
கணங்கட்டி கரவெட்டி மானாவாரி விலத்தலை
பிரப்பங்குளி மருதங்குளம் ஒல்லித்தளுவை மூங்கில் வெட்டு
இன்னபல கிராமங்களில் இருத்தினான் வடிவாம்பிகே.

28. இருத்தியவர்களுக்கு இட்டபணி ஏதென்னில்
நெற்குத்தல், சங்கூதல், திருவிளக்கு விளக்கிவைத்தல்
மலர் வகைகள் மாவிலைகள் தென்னம்பூத் தேர்ந் தெடுத்தல்
அலகிடுதல் மெழுக்கிடுதல் உற்சவத்திற்குதவல் வடிவாம்பிகே.

29. பண்டாரி மூலைதனில் பண்டாரக் குடியமர்த்தி
வண்டாடும் மலர்ச்சோலை நந்தவன முண்டாக்கி
கொண்டாடும் ஐயனுக்குக் கொய் மலர்கள் தொடுப்பதற்கு
பண்டாரத் தொண்டாற்றப் பண்ணிவைத்தான் வடிவாம்பிகே.

30. தீபமேற்றப் பூத்தொடுக்கப் பூசாபாத்திரம் விளக்க
தேவார திருவாசகப் பண்ணிசைகள் பாடுதற்கு
வீரமுட்டிப் பண்டாரத்தை பண்டாரி மூலையிலும்
திருப்பணி பழுதுபார்க்கும் சிற்பியரைத் தெற்கிலும் வைத்தான் வடிவாம்பிகே.

31. இரும்பு வேலை செய்யும் கொளல்லர் கலவெட்டியிலே
மர வேலை செய்யுத் தச்சர் வங்காதனையிலே
பாத்திரம் விளக்குப் பழுதுபார்க்கும் கன்னார் பாலாகுளத்தில்
வாத்திய நடனகாரர் சிலாபம முன்னேஸ்வரம் வடிவாம்பிகே.

32. குயவர் வடகாலையில் சுண்ணவாணியர் மர வெளியில்
கோடரிக்காரர் பகளகமம் திமிலர் திமிலையில்
சாணார் மணற்குளம் சங்கூதி காக்காப்பள்ளி
கருப்பட்டிக்காரர் இனிக்கொடவெளி இருத்தினான் வடிவாம்பிகே.

33. இத்தனையும் தோம்புகளில் இருக்கும் விதி இன்று முண்டு
அத்துக்கோறளைப் பெயர்கள் இன்னுமுண்டு எம்மத்தியில்
பத்துக்கரண்டு பாகம் பகிர்ந்தளிக்கத் தவரியதால்
பத்தும் பறந்த பாழ் விதியாச்சு வடிவாம்பிகே.

34. சிவதீர்த்தம் சித்தாமிர்த தீர்த்தம் எல்லாம் செப்பனிட்டு
கூபம் குளம் பாசிய கலச் சுத்திசெய்து சுகம் பெருக்கி
படித்துறைப் படிகளெல்லாம் பக்குவமாய் பழுதுபார்த்து
முடித்துவைத்தான் முன்னைநாதர் திருத்தொண்டு வடிவாம்பிகே.

35. சிவதீர்த்தம் விஷ்ணுதீர்த்தம் விநாயகதீர்த்தம் வைரவதீர்த்தம்
துவஷ்டாதீர்த்தம் மெலாம் துலங்கநின்ற முன்னேஸ்வரம்
பவம் போக்கி அவம் போக்கி அகிலமெலாம் பயனடைய
தவமோங்கித் தமிழோங்கிக் தலமோங்கி நின்றதம்மா வடிவாம்பிகே.

36. முன்னைநாதர்குறிய முன்னைப்பதி நிரங்களெல்லாம்
பின்னைநாளில் பிரதம குருக்கள் ஆட்சி வந்ததம்மா
அன்னார் அரன்பேரில் குடியாட்சி செய்து நின்றார்
குருட்டுக்காசு தங்க நாணயம் கொண்டு நின்றார் வடிவாம்பிகே.

37. குளக்கோட்டான் கூட்டிவைத்த கிராமங்கள் எங்கே!
இழப்போமோ சிவசொத்து இருப்போமோ திக்கற்று!
எழும்பாயோ குளக்கோட்டா எங்கள் குறைதீர்க்க,
தொழும்பாலர் தொண்டு முறை திருப்பம்மா வடிவாம்பிகே.

38. கோட்டை மன்னன்குரிசில் ஆறாம் பராக்கிரமன்
கேட்டறிந்தான் உன் பெருமை கேடில்லாக் குருக்களிடம்
போட்டான் சிலாசாதனம் முன்னைநாதர் தம் பேரில்
ஏட்டில் எழுதவொண்ணா புகழ் கொண்டான் வடிவாம்பிகே.

39. பிரதம குருக்களுக்குக் கிராமங்கள் பல தந்தான்
நிரந்தர பூசைக்கெனத் திரவியங்கள் மாசாமாசம்
அரண்மனைக் களஞ்சியத்தில் வரவொன்று விதி செய்து
பரமனுக்குப் பக்தியுடன் பரிசளித்தான் வடிவாம்பிகே.

40. ஒன்பதாம் பராக்கிரமன் உகந்தமகன் இளவரநன்
மின்னலால் உண்டான உபத்திரவம் தீரவென்று
முன்னேஸ்வரம் வந்து விஷ்ணு மூர்த்தியைத் தொழுது
அந்நோய் அகன்றிடவே அளித்தான் பலகாணி வடிவாம்பிகே.

41. பதினாறாம் நூற்றாண்டில் வந்த இழி பறங்கியர்கள்
இது காறும் செய்த தொண்டை இடித்துப் பழிகொண்டார்
பொதுவாய மறை தேய்த்துப் பொனகொண்டு மண் கொண்டு
கொதியாயக் களவாடிக் கேடுண்டார் வடிவாம்பிகே.

42. போர்த்துக்கீசர் செய்தபழி பாரில் யாரும் செய்தில்லை
போர்துக்கல் தேசம் இன்னும் பெருமை பெற்றய்ந்ததில்லை
ஆத்தனருள் ஆலயங்கள் அழிந்த பெருங் கேடதனில்
பார்த்திருக்கப் பழி கொண்டார் பண்பற்றார் வடிவாம்பிகே.

43. சீருற்ற சிவதொண்டு சிதறுண்டு சிதைவுபட
வேரற்ற மரங்களென வெத்து பட்டார் திருத்தொண்டர்
சீரற்ற பாவிகள் சிதறடித்த சிவதொண்டை
சீராக்கமுற்பட்டான் இராஜவிங்கன் வடிவாம்பிகே.

44. பேர்படைத்த பெருமன்னன் கீர்த்திமிகு இராஜசிங்கன்
திருப்பணிகள் செய்யவல்ல சிற்பிகளை வரவழைத்து
திருக்கோவில் கட்டுவித்துத் திருப்பணிகள் நிறைவு செய்து
பெரும் பேறு பெருங்கீர்த்தி பெற்றுய்ந்தான் வடிவாம்பிகே.

45. நித்திய நைமித்தியங்கள் நிறைவாக நடப்பதற்கு
சொத்துக்கள் உவந்தளித்துக் குருக்களுக்கு மானியமும்
பத்தியொடு எழுதி வைத்து பக்திமிகு பரவசனாய்
நித்திய வாழ்வு பெற்று நிறைந்தான் வடிவாம்பிகே.

46. இராஜசிங்கன் தொண்டு செய்து இஷ்ட சித்தி பெற்றதலம்
பராமரிப்புக் குன்று பட்டு பங்கமுற்றிருக்கையினில்
பிரம்மசிறி குமாரசுவாமிக் குருக்கள் கனவில் தோன்றி
நீரிழிவு நோய் நீங்கி முன்னேஸ்வரம் வரச்சொன்னாய் வடிவாம்பிகே.

47. நீரிழிவு வியாதி முற்றிக் குருக்களவர் குமுருகையில்
நித்திரையில் சோதியுரு சொன்ன சொல்லுக் கேட்டெழுது
பத்தினிக்குப் பகன்றிடவே பக்திமையே உருக்கொண்ட
பக்தினி சகிதம் குருக்கள் முன்னைப்பதி வந்தார் வடிவாம்பிகே.

48. கொழும்பிலிருந்து வந்த குருக்கள் குணமடைந்து தேறிய பின்
கிலமந்த கற்பக்கிருகம் அர்த்த மகாமண்டபமும்
கற்பணியாய்த் தன் செலவில் நற்பணியாம் தொண்டு செய்து
அற்புதமாய்க் குடமுழுக்கு ஆற்றிவைத்தார் வடிவாம்பிகே.

49. குருக்களவர் செய்த தொண்டு குவலயத்தில் நிலைத்திருக்க
குருக்கள்மார் அர்ச்சகர்கள் அனைவருக்கும் அறிவுறித்தி
ஆறுகாலப் பூஜைமுறை அனவரதம் நடப்பதற்கு
ஊறுபடா விதிமுறைகள் இயற்றிவைத்தார் வடிவாம்பிகே.

50. உலக வாழ்வு பெருமையாயை,உறவுமுறை தலைகேடு,
நிலவு வளர்ந்து தேய்வது போல், நிலைமைகளும் படுகேடு,
பூவுரகில் தோன்றுபவை தொன்று தொட்டு நிலைப்பதில்லை.
பேயுலகம் பேய்வம்சமாய் ஆச்சுதம்மா வடிவாம்பிகே.

51. அன்னையும் பிதாவும் பின்னடிக்கிடைஞ்சலென்றார்
போன்னையும் பொருளையும் பக்தியுடன் போற்றுகிறார்
ஆன்னியரின் பண்புகளை அனைத்து மிக மிக மதிக்கின்றார்
உன்னையன்றி உற்றதுணை உலகிலில்லை வடிவாம்பிகே.

52. ஓடுகிறார் ஆடுகிறார் அங்குமிங்குமெங்கும் அலைந்து பட்டு
சாடுகிறார்,சாத்திரத்தைச் சரித்திரத்தை மாற்றுகிறார்,
போடுகிறார் போதைவஸ்து போட்டபின்பு மாறுகிறார்
தேடுகிறார தேசமெங்கும் தேடுவது தெரியாது வடிவாம்பிகே.

53. எங்கு வந்தோம் ஏன்வந்தோம் என்னசெய்ய இங்குவந்தோம்
கங்குல்பகல் கவலை வசம் காண்பதெல்லாம் பொய்த் தோற்றம்
பாங்கெதுவும் இல்லாமல் பண்பு கெட்டு அலைகின்றார்
ஏங்கி நாம் தவிக்கின்றோம் எங்களைக்கார் வடிவாம்பிகே.

54. கந்பதுநாம் கற்கவில்லை கற்பதெல்லாம் பேய்க்கல்வி
ஊற்றநற் பண்பேல்லாம் உதறிவிட்டு அலைகின்றோம்
கற்பெனும் திண்மையைக் காற்றில் பறக்க விட்டோம்
பொற்பெதுவுமின்றிப் புரம்புகிறோம் வடிவாம்பிகே.

55. மரம் செடிகள் மிருகங்கள் மற்றுமுள பிராணியெல்லாம்
தரமிழந்து தாழ்ந்ததில்லைதம்மைத்தாம் அழித்ததில்லை
தரம் கெட்டு மடிகின்றோம் தவமிழந்து தவிக்கின்றோம்
உரம் கெட்டு உளம் கெட்டு உழலுகிறோம் வடிவாம்பிகே.

56. வெள்ளையர் ஆட்சியினில் வேறுபட்டு டிமையானோம்
ஊள்ளதெல்லாம் இழந்து உத்தியோகம் கேட்டலைந்தோம்
பள்ளிப்படிப்பதெல்லாம் உத்தியோகம் பார்ப்பதற்கே
புள்ளிகள் பெற்றாலன்றிப் பதவியில்லை வடிவாம்பிகே.

57. இயற்கை பொழிலினிலே இன்பச் சுரய்கமுண்டு
மயக்கப் படுகுழியில் மாய்ந்து பட்டு மடிகின்றோம
இயக்கப்படுகின்றோம் இயங்க மறுக்கின்றோம்
எடுக்கவிரைகின்றோம் ஏங்குகின்றோம் வடிவாம்பிகே.

58. ஒன்று பட்டால் உண்டு வாழ்வு துண்டுபட்டால் உண்டு தாழ்வு
தொன்று தொட்டு வாழ்ந்தமுறை தூர எறிந்து விட்டோம்
என்று வரும் பதவியென்று ஏய்கிமிக வாடுகின்றோம்
கன்று பிரி கறவையெனக் கவல்கின்றோம் வடிவாம்பிகே.

59. பதவி தேடிப் பவுசு கெட்டோம்- பட்டமரக் கதையானோம்
பசித்திருக்கத் தனித்திருக்க விழித்திருக்க மறுத்துவிட்டோம்
புசித்திருக்கும் போகவாழ்வை ருசித்து சுகம் கெட்டுவிட்டோம்
பசித்திருப்போர் அவழவாழ்வை நினைக்கவில்லை வடிவாம்பிகே.

60. குண்டுமாரி கண்டபின்னும் கொண்ட ஆசை போகவில்லை
தொண்டு செய்யும் நோக்கமில்லை தூய சேவை மார்க்கமில்லை
கண்டுகொண்ட பாவனையில் கொண்டகோலம் மாறவில்லை
பண்டு கண்ட விதிமுறைகள் பாழடித்தோம் வடிவாம்பிகே.

61. சந்தைப் பொருளாதாரம் சங்கை கெட வைக்குதம்மா
மந்தைக் கடாக்களென மானிடர்கள் தாறுகிறார்
எந்தவித முன்னேற்றம் எங்குமே இல்லாமல்
பொந்து பொறி வாழ்வில் புதைகிறோம் வடிவாம்பிகே.

62. கோயிலில்லா ஊரினிலே குடியிருக்கவேண்டுமென்று
ஆயி எங்கள் ஔவைசொன்ன சேதியின்று மாறாச்சு
கேயிலிலே சுகமுமில்லை கொண்டாட்டம் குறைவுமில்லை
கோயிஅலல்லாம் குண்டுபட்டுக் குலையுதம்மா வடிவாம்பிகே.

63. அகதிகளாய் அங்குமிங்கும் அலைந்துபட்டு மாயுகிறோம்
மிக அரிய இளமுயிர்கள் மிக எளிதாய் மடியுதையோ
அகமுடைந்து ஆழ் துயரில் அமிழ்ந்துவதே விதியதுவாய்
கிலமடைந்த கோயிலெனக் கிடக்கின்றோம் வடிவாம்பிகே.

64. ஆதரிக்க யாருமில்லை ஆறிநிற்க நாதியில்லை
வேதனையில் வெந்துபட்டு நெந்துகெட்டு நிற்கின்றோம்
சந்ததமும் சஞ்சலத்தில் சாகின்றோம் வேகின்றோம்
பஞ்சு படாப் பாடுற்றுத் துஞ்சுகிறோம் வடிவாம்பிகே

65. அஞ்சி நின்று கெஞ்சி நின்று மிஞ்சியது ஒன்றுமில்லை
வெஞ்சமரில் வெற்றியது நிச்சயமென்றுள் மனது
விஞ்சுகுது மிஞ்சுகுது விம்மி நெஞ்சு பொங்குகுது
தஞ்சமென்றுன் அடிபணிந்தோம் தாயே வடிவாம்பிகே.

66. அன்னைசொன்ன வாக்கண்டுஅமிழ்தமதில் தேக்குண்டு
பின்னுமன்பு நோக்குண்டு பிழையறியாய்ப் போக்குண்டு
தன்னையறியத் தவமுண்டு தனித்திருக்க வழியண்டு
என்னை எனக்கறிவித்து இன்பம் தந்தாய் வடிவாம்பிகே.

67. ஒலி உ௬ருவாய் ஒளியுருவாய் உலகெங்கும் பொலியுருவாய்
கலி உருவாய் கலையுருவாய் கவினுருவாய் கமல்கின்ற
தனியுருவாய் திகழ்கின்ற தாயுருவாய் நிறைகின்ற
கனியுருவாய் கவியுருவாய் காட்டி நிற்கும் வடிவாம்பிகே.

68. பணக்காரப் பாவிகளின் பாதையைப் பாராது
குண்க்காரர் கூட்டத்தில் கூடிநிற்கக் கூட்டுதியே
சுணக்காமல் சுகவாழ்வு சுத்தசுக சன்மார்க்கம்
பிணக்காமல் பெருவாழ்வு பேறருள்வாய் வடிவாம்பிகே.

69. எந்நேரமும் பணமே உயிராகக் கண்டு கொண்டு
பொன்னேர் புவிவாழ்வு புதைக்கின்றார் பாவமதில்
முன்னேரம பின்னேரம் முழுதும் பணநினைவில்
தம்வாழ்வு கழிக்கின்றார் தவிக்கின்றார் வடிவாம்பிகே.

70. வந்தவழி தான்மறந்து வாழ்வை அழிக்கின்றார்
சொந்தநிலை பேணாது சொத்துசுகம் சேர்க்கின்றார்
சந்ததமும் சந்தேகப் பேயுடனுறவாடுகின்றார்
அந்தோ மதியிழந்து மாழ்கின்றார் வடிவாம்பிகே.

71. அன்பை விட அருஞ்சொத்து அகிலமதில் உண்டாமே!
அன்புதரும் ஆநந்தம் அறியாதார் ஆருமுண்டோ!
அன்பு தருவாய் நீயிருப்பதறியாது மலைகின்றார்
அன்பையே தேடுகிறார் அலைகின்றார் வடிவாம்பிகே.

72. வழிநெடுக முளளுகளும் வகையறியாத் தொல்லைகளும்
பழி பெருக்கும் பண்புகளும் பாழடைந்த நெஞ்சுகளும்
குழி பறிக்கும் குணக்கேடும் கொன்றொழிக்கும் நிலைப்பாடும்
அழிவு தரும் அவலங்களும் அகற்றிடம்மா வடிவாம்பிகே.

73. அறிவு பெற இங்கு வந்தோம் அன்பு செய்ய இங்கு வந்தோம்
நிறைவுபெற இங்கு வந்தோம் நேர்மை வழி நிற்க வந்தோம்
குறைவகலக் குணம் பெருக்கி குறைவுபடாப் பக்தி செய்து
திறம் பெருக்கித் தவம் பெருக்கித் தெய்வ நிலை கிட்டவந்தோம் வடிவாம்பிகே.

74. பிரபஞ்சம் முழுவதுமுன் பிரதிபிம்பமாயிருக்க
பரவிவரும் படுகொலைகள் பாவங்கள் தெடருவதேன்
கரவு நெஞ்சில் கலிபுகுந்து களியாட்டக் குழி பறித்து
இரவு தரும் இளைப்பாறல் இழந்து பட்டோம் வடிவாம்பிகே.

75. எங்கெங்கு பார்த்தாலும் எல்லைபற்ற துன்பங்கள்
அங்குமிங்கும் எங்கும் அறம் நலிந்து தறம் மலிந்து
பங்கம் செய்பாடுகளும் பாவக் குவியல்களும்
எங்களண்டை வாராது பாத்திடுவாய் வடிவாம்பிகே.

76. பணம் பெருக்கும் பேயாட்டம் பாரினிலே சூதாட்டம்
பணம் பெருக்கிப் பண்பு கெட்டு பாழடைந்த போராட்டம்
மணம் பெருக்கும் இல்வாழ்வு மாசடைந்து மாண்டுபட்டு
குணம் நலிந்து குலம் நலிந்து கிடக்கின்றோம் வடிவாம்பிகே.

77. கெட்டவிதமேதென்று கேட்டறிய நாதியற்று
கெட்டமதி கெட்டவிதி கெட்டசதி கேடுகண்டு
கெட்டவழி பின்தொடர்ந்து முட்டப்பகை முன்நெடுத்து
கெட்டகதை தொடராமல் காத்திடம்மா வடிவாம்பிகே.

78. சிந்தனை செய்யாது செத்துமடிகின்றார்
வந்தனை செய்துன்னை வாழ்த்தி வணங்கினால்
பந்தமற்ற பதவிவரும் பக்திமிக்கப் பெருகிவரும்
வெந்தகதி மாறிவிடும் வெற்றிவரும் வடிவாம்பிகே.

79. இதயக்கதவுகளைத் திறந்துவைக்கும் திறப்பைத்தா
புதையல் பெரும் பொருளைக் காணவைக்கும் திறனைத்தா
சிதைவற்ற வாழ்வுபெறச் சிந்தனையைப மாற்றிவிடு
கதையைத் திருப்பி வழிகாட்டம்மா வடிவாம்பிகே.

80. உலகைப் படைத்தவள் நீ உயிரைப்படைத்தவள் நீ
உவகைப் பூங்காவில் உலாவிவர விட்டவள் நீ
உரகநியதி பொய்த்து உண்மை தடம்புரண்டு
உயிர்கள் மடியுதிய்கே உனக்கிதமோ வடிவாம்பிகே.

81. ஓலமிட்டு கூவுகின்றோம் ஒருக்கால் நீ மனமிரங்கி
ஞாலமுற்றும் நிறைந்த நின்றன் நற்கருணை வாரிதியில்
சால எமைத் தோய்த்துத்,துவட்டிச்,சுகமருளி,
ஏலவே வாழ்ந்தநிலை எய்தத் தகைமையருள் வடிவாம்பிகே.

82. தொன்று தொட்டு வந்தநெறி பூவுலகில் நிலைப்பதற்கு
ஒன்றுபட்ட வாழ்வருளி ஒருமைநெறி உள்ளிருத்தி
வென்றுகட்ட சீரருளி வேற்றுமைகள் தொலைத்தருளி
மன்று நின்று தொண்டுசெய்ய வரமளிப்பாய் வடிவாம்பிகே.

83. தன்மை மாறும் சமுதாயம் தாழ்வு பட்டு மடிந்துவிடும்
தன்னையறிந்தின்பமுறத் தன்னுள் அடங்கலுற்று
தொன்மைநிலை தேர்ந்துணர்ந்து தெய்வப் பொலிவுமுற்று
இன்பமடைந்திங்கிருக்க அருள்வாய் வடிவாம்பிகே.

84. ஆணவத்தை அகழ்ந்தெடுத்துன் அரவணைப்பில் ஒன்றுபட்டு
வீணவாவைக் கொன்றொழித்து வீடுபேறு வேணடடி நின்று
காணவந்த தூயவாழ்வு காசினியில் கண்டுகொண்டு
பேணவந்த பெருந்தொண்டு பெறஅருள்வாய் வடிவாம்பிகே.

85. தலைசிறந்த தவவாழ்வு தாரணியில் தகைமை பெந
கலைசிறந்த கவிவாழ்வு கவினுறவே காட்டி நின்று
நிலை சிறந்த மாதவத்தோர் நிலையடையும் வகைசெய்து
மலையசைத்த வலிவுபெற விதியருள்வாய் வடிவாம்பிகே.

86. விதைநெல்லு விழலாச்சு வித்தின்றிப் பதராச்சு
பதைபதைக்கும் உறவாந்து பக்தியற்ற பகையாச்சு
எதை நம்பி இனிவாழ்வு எதிர்காலம் இருளாச்சு
கதைமாரக் கருவேங்க கருணைசெய்வாய் வடிவாம்பிகே.

87. புகலிடமாய் நீயிருக்க புதைகுழியை நாடுவதோ
அகல்விளக்கு உள்ளிருக்க அரநு இருள் கூடுவதோ
பகலிரவு பரவெளியில் படருவது பார்ப்பதுண்டோ
இகபரசுரம் தர இரங்கம்மா வடிவாம்பிகே.

88. தறிகெட்டுப் போகும் வழி தகர்த்தெறியத் தரம் வேண்டும்
நெறிகெட்டு நிலைகெட்டு நிற்கும் நிலை விடுபட்டு
குறிகெட்டுக் குணம் கெட்டு குலைபட்டு நிற்பும் வழி
மறிபட்டு விடுபட்டு மாற அருள் வடிவாம்பிகே.

89. உள்ளதெல்லாம் ஒன்றென்றும் உன்னருளே உண்டென்றும்
கள்ளமிலா அன்புணர்ந்து கபடுபடா உளங்கொண்டு
விள்ளவொண்ணாத் துரியநிலை விளைவுண்டு களியுண்டு
தள்ளவொண்ணாத் தவவாழ்வு தந்திடம்மா வடிவாம்பிகே.

90. யோகமதே போகமாக யோகியரே நேயமாக
தோகையரே தாயராக தொண்டுமுறை தவமதாக
தேகமதே கோயிலாக தெய்வமதே குருவராக
வாகைசூடி வாழ்ந்திடவே வரமருள்வாய் வடிவாம்பிகே.

91. விடுதலையே வேட்கையாகி வீடுபேறு நோக்கதாகி
சுடுதலையே சுட்டெரித்து சுத்தசுக சோதிகண்டு
நடுநிலையே நாட்டமாகி நமனையுமே போக்கதாகி
விடுதலையே பெற்று வெற்றி மேவஅருள் வடிவாம்பிகே.

92. கடும் இரவு கழிந்துபட கண்களென்றும் திறந்துபட
கொடும் கலியின் கேடுகளும் கெட்டொழிந்து மாண்டுவிட
தொடும் இன்பத் திருக்கோணி ஊறுபட்டப் பெருக்கெடுக்க
நடுவுநிலை நண்ணிவர நலமருள்வாய் வடிவாம்பிகே.

93. பட்டதுயர் மாறிவர பண்புகளும் தேடிவர
விட்டதுகள் விழுது பட தேவவாழ்வு திரும்பிவர
கெட்ட விதி கெட்டுவிடக் கேடுபடாப் பணி தொடர
கிட்ட எமைக் கூட்டி அணை,அருளே வடிவாம்பிகே.

94. உள்ளொளிக்குள் உள்ளொளியாய் ஊறுபடா உணர்விலுறை
உன்னுருவம் என்னுருவம் எல்லாமே சில்லுருவம்
பன்மலரில் பல உருவம் பார்த்திருக்க ஒரு உருவம்
இன்ன பல உண்மைகளை உணர்ந்தேன் வடிவாம்பிகே.

95. வடிவாம்பிகை மாலை வகைதெரிய வாழ்வுயரும்
கோடிதான வினைப்பயனும் கோடிநிலை கண்டுவிடும்
முடிவான முத்திவரும் மோனநிலை கூடிவரும்
மிடிபிணியும் முடிந்துவிடும் மேதினியில் வடிவாம்பிகே.

96. சொன்னபடி செய்து விட்டேன் சொந்த நிலை பெற்றுவிட்டேன்
எல்லவரும் இந்தநிலை எய்திடவே வேண்டுகிறேன்
மன்னவரும் மாதவரும் மாநிலமும் மாதகர்களும்
இன்பநிலை பெற்றுயர இரங்கிடம்மா வடிவாம்பிகே.

97. கொள்வனவும் கொள்நிலையும் கொள்பவளும் நீயேதான்
விள்பனவும் விண்வெளியும் வியாபகமும் நீயேதான்
எண்ணுவதும் எண்ணமதும் எண்ணெழுத்தும் நீயேதான்
கொள்ளுதலும் கூடுதலும் அற்றநிலை கூட்டம்மா வடிவாம்பிகே.

98. அள்ளத்தருபவளும் ஆக்கி அழிப்பவளும்
கொள்ளக் குவிப்பவளும் கோதில் திருக்குறிப்பும்
மெள்ளக் களிப்பவளும் மேவி முடிப்பவளும்
அள்ளி அணைப்பவளும் நீயே வடிவாம்பிகே.

99. சொன்ன சொல்லு பொய்க்காது சோகமொன்றும் நிற்காது
என்னை என்னுள் இருத்தி என்றும் இன்பம் துய்த்தல் மெய்பாடு
அன்பு என்றும் தலைக்காவல் ஆட்சி எங்கள் நிலைப்பாடு
மன்ன புகழ் தவவாழ்வு தழைக்கவருள் வடிவாம்பிகே.

100. சொன்னபாடல் சுவையும் நீ சுத்த சாந்த சொருபம்
உன்னை உன்னும் உணர்வு நீ ஊறுகாதல் உறவு நீ
என்ன சொல்லி ஏத்துவேன் எங்கும் நிறைந்த இன்பம் நீ
அன்னை அன்பின் வடிவம் நீ ஆயி எங்கள் வடிவாம்பிகே.

**முற்றும்**
**ஓம் தத் சத்.**

Printed by : Mathi Colours Nallur 021 2229285